OFFICE OF THE CURATOR
GOVT. ORIENTAL MANUSCRIPTS LIBRARY
1985

# வட்டார வழக்குச் சொல்லகராதி

கி. ராஜநாராயணன்



# வட்டார வழக்குச் சொல்லகராதி

*கி. ராஜநாராயணன்*

அன்னம்

அன்னம் 25

● வட்டார வழக்குச் சொல்லகராதி /
© கி. ராஜநாராயணன்/முதற்பதிப்பு டிசம்பர் 1982/அச்சும் அமைப்பும் அகரம் சிவகங்கை / வெளியீடு அன்னம் (பி) லிட். சிவகங்கை-623 560/அட்டை பி. ஞானவேலு/ பக்கம் 18 + 330 / விலை ரூபாய் முப்பது

சேகரம்:

●

S. S. போத்தையா
கி.ராஜநாராயணன்

# நன்றி

சொற்கள் சேகரித்து உதவியும்
விபரங்கள் கூறியும், அகரவரிசைப்படுத்தி உதவியும்
படிஎடுத்து உதவியும் செய்தவர்கள்.

◻

திரு S.S.போத்தையா,
தங்கம்மாள்புரம்.

எழுத்தாளர் பூ. மாணிக்கவாசகம்
(''பூமணி'')

திரு S. மாரீஸ்வரன் B.Com.,
(படங்கள் வரைந்தது, போட்டோ, படி எடுத்தது )

திரு R.முருகன் B.A.,
கோவில்பட்டி.

திரு கே. உதயசங்கர் B.Sc.,
கோவில்பட்டி.

திரு போ.குமாரசாமிநாயக்கர்,
தங்கம்மாள்புரம்.

திரு P.பெருமாள், ஆசிரியர்,
தங்கம்மாள்புரம்.

திரு A.மாணிக்கம், ஆசிரியர்
தங்கம்மாள்புரம்.

எழுத்தாளர் அ.முத்தானந்தம். ஆசிரியர்,
சூரங்குடி

திரு P ஐயரப்பன், முன்னாள் ஊராட்சிமன்றத்தலைவர்,
சூரங்குடி.

திரு A.கிருஷ்ணபிள்ளை ,,
திரு A.இராமசாமி ,,
திரு வில்லாயுதஆசாரி ,,
திரு L.பேச்சிமுத்தாச்சாரி ,,

திரு P. இராமசாமிப்பாண்டியன். ஆசிரியர்,
மேல்மாந்தை.

திரு மாடசாமி, ஆசிரியர்,
வாதலக்கரை.

ஆசிரியர் முகவரி:

**கி. ராஜநாராயணன்**

ராஜபவனம்

இடைசெவல் - 627 716

# அறிமுகம்

தமிழில் 'அகராதி' என்று ஒருவனைச் சுட்டிக்காட்டிச் சொன்னால் 'அதிகப்பிரசங்கி' அல்லது, மெத்தப் படித்தவன் என்று அர்த்தம்.

'அவனு அவன் பெரிய அகராதியில்லா' என்பது வட்டார வழக்கு. அந்த வட்டார வழக்கிற்கே ஓர் அருமையான அகராதியை உருவாக்கியுள்ளார் இடைசெவல் தந்த இலக்கியச் செல்வர்.

○

மிகப்பெரிய அகராதிகள் எல்லாம் தனி மனிதர்களால் உருவானவை அல்ல. பல்கலைக்கழகமோ அரசாங்கம் நியமித்த அறிஞர் குழுவோ தான் அகராதிகளை உருவாக்கியுள்ளன. பிரெஞ்சு அகராதியை உருவாக்குவதில் ஈடுபட்டது, ஓர் அறிஞர்குழு. அக்குழு 40 அறிஞர்கள் கொண்டது. அந்தப் பணியை முடிக்க அதற்கு 59ஆண்டுகள் (1635-1694) ஆனது; 51,000 சொற்கள் கொண்ட அகராதி உருவானது.

கைம்மாறுகருதாது, தம்மை வருத்திக் கொண்டு, இத்தகைய சாதனையை முதலில் நிகழ்த்திக் காட்டியவர் ஆங்கில மொழிக்கு அகராதி தந்த டாக்டர் சாமுவேல் ஜான்சன். இத்தனைக்கும் அவர் பல்கலைக் கழகத்துப் படிக்கட்டை மிதித்ததோடு சரி, பட்டதாரி ஆனவர் அல்லர். சேக்ஸ்பியருக்கு அறிமுகம், (Preface to Shakespeare) கவிஞர்களின் வாழ்க்கை (Lives of the Poets) முதலிய நூல்களை இயற்றியுள்ள போதிலும் ஆங்கில மொழிக்கு அவர் அளித்த அகராதி என்னும் அருங்கொடைக்காகவே அவர் ஆங்கிலேயர் நினைவில் நிறைந்து நிற்கின்றார்.

அவர் அளவில் அல்லது அவர் அன்றைக்கு வாழ்ந்து கொண்டிருந்த நிலையில் இருக்கக்கூடிய எவரும் அத்தகைய அருஞ்சாதனை புரிய முடியாது. ஒரு புத்தக வியாபாரியின் மைந்தரான அவர் எப்போதும் வறுமை

யில் வாடியவர். வறுமை மட்டுமா, பிணியும் அவரை வாட்டியது. ,பார்வையிலும் பழுது, நரம்புப்பிறழ்ச்சித் தொல்லேவேறு. இவை எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டு பல்வேறு குழுக்கள் செய்த பணியைத், தாமே தனி ஒருவராக எட்டுஆண்டு (1747-1755) காலத்தில் செய்துமுடித்துஆங்கிலமொழிக்குப் பெருமை சேர்த்தார். பல்வேறு மொழிகளின் சொற்களேத் தன்னகத்தே கொண்ட அந்த மொழிக்குச் சொற்பிறப்பியல் (Etymology) கண்டு சொல்லி, சொற்பொருள் மாற்றம் (Semantics) நிகழ்ந்தவற்றுக்குச் சரியான பொருள்சுட்டி ஒவ்வொரு சொல்லுக்கும் விளக்கங்களும் மேற்கோள் களும் காட்டி அவ்வகராதியை அமைத்துக்கொடுத்தார்.

அதிலும் குறைகள் இல்லாமல் இல்லே. தம்முடைய சொந்த விருப்பு, வெறுப்புக்களை ஓரிரண்டு இடங்க ளில் அவர் காட்டாமல் இல்லே. அரசியல் என்பதற்கு 'அயோக்கியர்களின் கடைசிப் புகலிடம்' என்பார். அவருக்கு ஸ்காட்லாந்தியரைப் பிடிப்பதில்லே. அதனல் 'ஓட்ஸ் என்பது இங்கிலாந்தில் குதிரையும், ஸ்காட்லாந் தில் மக்களும் உணவாகக் கொள்ளுவது' என்பார். கோவர் என்பது ஒரு பிரபுவின் பெயர். அச்சொல்லுக்கு ஒன்றிலிருந்து இன்னென்றுக்குத் தாவிச் செல்பவர் (Go-over அடிக்கடி கட்சி மாறுகிறவர்) என்று கேலி செய்திருக்கிறர்.

○

தமிழில் இதுவரை ஏறத்தாழ 200 அகராதிகள் வெளி வந்துள்ளன. அவற்றுள் ஜான்சனேப் போலத் தனி மனித முயற்சியில் வெளி வந்தனவும் அடங்கும்.

வீரமாமுனிவர், பரபிரிசிரியசு, ராட்லர், வின்சுலோ, யாழ்ப் பாணம் சந்திரசேகரபண்டிதர், யாழ்ப்பாணம் கதிரை வேற்பிள்ளே, ந சி. கந்தையாபிள்ளே, பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார்போன்ருேரதுஅகராதிகளும் அடங் கும். விரிவான முதல்அகராதியை உருவாக்கியவர்யாழ்ப் பாணத்துச் சந்திரசேகரபண்டிதர். இது 58,500 சொற் களேக் கொண்டது. ஆனல் அகராதிகளுக்கெல்லாம் முன் ேேடியாய் அமைந்தது சதுரகராதியே. பெயரகராதி. பொருள் அகராதி, தொகையகராதி, தொடையகராதி ஆகியநான்கும் அமைந்திருப்பதால் இப்பெயர் பெற்

றது. இதனை இயற்றிய வீரமாமுனிவரே ''வட்டார வழக்குத்தமிழ் அகராதி'' ஒன்றைத் தனியே வெளியிட்டுள்ளதாகத் தெரிகிறது.

இந்த வட்டார வழக்குச் சொல்லகராதியும் தனி மனித முயற்சியாகவே வெளிவருகிறது. அதாவது அரசாங்கம் நியமித்த எந்தக் குழுவோ பல்கலைக்கழகமோ இதைச்செய்யவில்லை. கி.ராஜநாராயணனும் அவரது நண்பர்கள் போத்தையா போன்றவர்களுமே இந்த அகராதியில் அடங்கியுள்ள சொற்களைத்திரட்டியவர்கள். அவற்றிற்கு அகராதி உருக் கொடுத்தவர் கி.ராஜநாராயணன்.

பெரும்புகழ் பெற்ற பின்னரும் கிராமத்திலேயே வாழ்ந்து கொண்டிருந்தவர் வி.ச. காண்டேகர்; அது போலவே தகழி சிவசங்கரன்பிள்ளை கேரளத்தில் கிராமத்திலேயே வாழ்ந்து கொண்டிருப்பவர். அவர்களைப்போல் கிராமத்தில் வாழும் ராஜநாராயணனுக்கு நகரத்தின் ஆரவாரங்களில்நாட்டம் இல்லை; 'கிராமியம்' என்பதில் தான்ஆர்வம்அதிகம். அவரது எழுத்தோவியங்கள் எல்லாம் இவ்வுண்மையைப் புலப்படுத்துகின்றன. வட்டார வழக்குச் சொல்லகராதியோ இதனை முற்ற முழுக்க மெய்ப்பிக்கிறது. இந்த அகராதியை ஒருமுறை படித்த பின்னர் நாமும் ஏன் ''சுத்தப் பட்டிக்காட்டானாக இருந்திருக்கக்கூடாது'' என்று ஓர் ஆதங்கம் உண்டாகிறது.

O

எழுதப் படிக்கத் தெரியாத கிராம மக்களுக்கும் விவகார அறிவு(நடைமுறை அறிவு)அதிகம் என்பது இவ்வகராதி மூலம் தெரிகிறது. ''இடசந்து'' என்பதற்கு இரண்டு வீட்டுக்காரர்களும் ஆளுக்கு ஒன்றரை அடி போட்டுக் கட்டுவது என்றுபொருள் தந்திருக்கிறார் கி.ரா. இப்படிச்செய்ய இருவரில் ஒருவர் மறுக்கும்பொழுது விவகாரம் நீதிமன்றம் போகிறது. ''ஈரங்கி'' (Hearinq) என்பதற்கு'' ஆர்கியூமெண்ட் வாய்தா'' என்று அவ்வளவு சரியாகப் பொருள் சொல்லியிருப்பதை நீதிமன்றம் சம்பந்தப்பட்டவர்களே நிச்சயம்மெச்சுவார்கள்.

அந்நிய ஆட்சியின்காரணமாக ஆங்கிலம் இங்கே ஒட்டிக் கொண்டது. படித்தவர்களிடம் ஆங்கிலம் ஆங்கிலமாகப்

புழங்கியது என்றால் கிராமவாசிகளிடம் அது தமிழான உட பூண்டது. தமிழ்ச் சொல்போலவே ஆனது. Opinion, ஒப்பினியம்என்றும் Blank பிளாங்கி என்றும்Phonograph Box பூனைக்காரப் பெட்டி என்றும் ஓசைப்படாமல் உரு மாறியுள்ளன. இவை போன்றனவே பெண்டு (Bend) எடுத்திட்டான், மேஜர் (Major) ஆயிட்டாள் என்பனவும்.

வரலாற்றிற்கு உதவும் கல்வெட்டுக்களில் காணப்படும் சொற்களும் கிராமங்களிலேயே புழக்கத்தில் உள்ளன. 'எதிரா' என்பதற்கு இங்கு ''வரும் ஆண்டு'' எனும் பொருள் தரப்பட்டுள்ளது. சோழர் கல்வெட்டுக்களில் ''எதிராம் ஆண்டு'' என்ற சொற்றொடர் காணப்படு கிறது. யாழ் மக்களும் எதிராம் என்பதற்கு 'அடுத்து வரும்' என்னும் பொருளில் பயன்படுத்துகின்றனர். (இலங்கை வானொலியில் 'எதிர்வரும்' ஞாயிற்றுக்கிழமை இன்ன நிகழ்ச்சிநடைபெறும் என்று அறிவிக்கிறார்கள்.)

o

இந்த வட்டார வழக்குச் சொல்லகராதி நெல்லை—கரிசல் காட்டுப் பகுதியில் புழக்கத்தில் உள்ள சொற்களைக் கொண்டது. பிறபகுதிகளிலும் இத்தகைய சொற்கள் வழக்கில் உள்ளன. நெல்லையில் ''அக்குத் தொக்கு இல்லை'' என்றால் முகவையில் ''பிக்குப்பிடுங்கல் இல்லை'' என்பார்கள். நெல்லையில் அட்டமணியம் என்றால் முகவையில் மொட்டைடயதிகாரம் என்பார்கள். உசுப்பு என்பது எழுப்பு என்னும் பொருளில் இரண்டு பகுதி களிலும் புழக்கத்தில் உள்ளது. அதுஉயிர்ப்பு என்பதன் மரூஉவாகலாம்.'உறங்குவதுபோலும் சாக்காடு உறங்கி விழிப்பது போலும்பிறப்பு' என்ற குறட்கருத்தின் அடிப் படையில் உருவான சொல்லாயிருக்கலாம். ''மிராட்டிப் பய'' என்னும் வசைச் சொல்லுக்கு ஈடாக 'கொங் கணப்பய' என்று திட்டுவது குறிப்பிடப்படுகிறது. கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா—என்ற வரியையும் முகவைப் பகுதியில் ''கொங்காப்பயல்' என்று இன்றுவரை சொல்வதையும் ஒப்பிட்டுச் சுவைக்க லாம். 'காலம் இப்போது எவ்வளவோ மாறிவிட்டது, ஆனாலும் வசவுகள் அப்படியேதான் இருக்கின்றன' என்று ஆச்சரியப்படுகிறார் கி.ரா.

சிலசமயம் ஒருபொருளைச் சொன்னால் மட்டும் முழுமை பெற்றதாகக் கருதாவிடத்து, அதுஇன்ன பொருள்அல்ல

என்பதையும் இந்த அகராதி தெளிவுபடுத்துகிறது. அண்டங்காக்கையின் நிறத்தைக் கருப்பு என்று சொல்லி விட்டுவிடலாம். இன்னும் விளக்கிச் சொல்ல வேண்டு மானால் நனைந்த பனை போன்றது, வெள்ளை சிறிதும் கலவாக் கருப்பு அதன் நிறம் எனலாம். அதுபோல ''பத்தடி பத்தடியா'' என்பதற்கு ''அடுத்தடுத்து'' எனப் பொருள் சொல்வதோடு ''பத்தடி என்பது பத்து அடிகளைக் குறிப்பது அல்ல'' என்று பொருள் சொல்லும் Negative approach பாராட்டுக்குரியது. இந்த எதிர் மறை அணுகல் ஆழ்ந்த பொருள்காண உதவும்.

சில சமயங்களில் சொற்கள் எவ்வாறு சிதைந்து பொருள் கொள்ளப்படுகின்றன என்பதற்குப் பார்ப்பனர்கள்பயன் படுத்தும் நல்ல தமிழ்ச் சொற்களை சான்ருகக் காட்ட லாம். 'இல்' என்பதை 'அகம்' என்று இலக்கியம் குறிப் பிடுகிறது. 'அகத்திற்குப் போகிறேன்' என்று சொல் வதை 'ஆத்துக்குப் போகிறேன்' என்று சொல்லிச் சிதைத்துவிடுகின்றனர். அதுபோல்தான் அம்மாஞ்சி என்பதும். அம்மாஞ்சி என்ருல் ஒன்றும் தெரியாதவன் 'சுத்த அம்மாஞ்சி' என வழக்கில் உள்ளதை இந்த அக ராதி சுட்டிக் காட்டுகிறது.

உண்மையில் அது அழகான, அர்த்தமுள்ள தமிழ்ச் சொல். அம்மாவின் உடன்பிறந்தார் அம்மான். ''அம்மான் சேய்'' மாமன் மகன் என்பதன் மரூஉ. (ரா ராகவையங்கார் தம் மாமன் மகன் மு.இராகவை யங்காரை அம்மான் சேய் என்று குறிப்பிடுவார்)

'எவர்ணமான சிறை' என்பதற்கு யௌவனமான பேரழகி என்றுபொருள் காணும்போது இன்பமாக இருக் கிறது. சிறை வைத்துப் பாதுகாக்க வேண்டிய அழகு என்பதற்காகச் சிறை என்று கிராமத்தார் குறிப்பிட்டிருக் கலாம். கர்ப்பிணியைக் குறிப்பிட 'ஈருசுரு' என்பதும் பொருள் பொதிந்த சொல் அல்லவா? சொலவம் என்று பழமொழியையும் நாட்டார் பாடல்என்று 'நாட்டுப் பாடலையும் குறிப்பிடுகிருர் கி.ரா. இது பிறபகுதிகளில் அறியப்படாததாக இருக்கலாம். அகராதியைத் தொடர்ந்து பயிலும்போது புரியும்.

நம் பாட்டியார், தாயார் காலத்து நகைகள் இன்று இல்லை. அவற்றின் பெயர்களை இந்த அகராதிமூலம்

அறிந்து கொள்ள முடிகிறது. கிராமத்து அணிகலன் களையும் வங்கி(குத்துவாள்)தரங்கு (வேல்கம்பு) போன்ற ஆயுதங்களையும் கண்டுகொள்ள முடிகிறது.

கால்நடை பராமரிப்புத் துறையினருக்குக்கூட இந்த அளவு தெரியுமோ என்னவோ ...கி.ராவும் போத்தை யாவும் மாடுகளைப்பற்றி எவ்வளவு தெரிந்து வைத்திருக் கிறார்கள். மாடுகளில் இத்தனை நிறங்களா, இத்தனை நோய்களா, இன்னின்னவை ஆகாதவையா ... ...அறிய அறிய நாம் ஆச்சரியப்படுகிறோம்.

அகராதிகளில் விளக்கமான சொற்றொடர்களில் பொருள் தரப்படுவதில்லை. பொருளை விளக்கும் மேற் கோள்கள் (Illustrative idioms) கொடுக்கப்பெறுவ தில்லை. இக்குறை இதில் இல்லை.

ஒவ்வொரு சொல்லுக்கும் தேவையானபோது விளக் கமோ ஒரு பழமொழியோ கதையோ தரப்படுகிறது. ''அத்தர்பானஸ்கோல்'' என்பதற்குத் தந்திருக்கும் கதைபோல ''அத்திரிபாச்சா கொழுக்கட்டை'' என்று ஒருகதை முகவைப் பகுயில் உண்டு.

கொட்டை நூற்றல் என்பதற்கு 'நூல் நூற்றல்' என்ற பொருள் சொல்லிஅதனோடு''கப்பல்ஓடிக்கெட்ட குடியை கொட்டை நூத்துத்தேத்தப் போறாராக்கும்'' என்ற பழ மொழி இணைத்துக் காட்டப்படுகிறது. கப்பல் விட்ட பண்டை நாட்டவர் வழிவந்தவர் நாம் என்ற வரலாற்று உண்மையைப் பறைசாற்றும் பழமொழி அல்லவா இது? நாடகக்கலைஞன் கலை அரங்கில் மக்கள் தொகையையும் கூலிவேலை செய்பவன் சூரியன் விழும் வேளையையும் கணக்கிடுவதில் கருத்தாயிருப்பதை கிராம மக்கள் கேலி செய்து சொல்வதைப் படம் பிடித்துக்காட்டும் பழமொழி, ''கூத்தாடிக்குக் கீழே கண்; கூலிக்காரனுக்கு மேலே கண்''என்பது. இத்தகைய பழமொழிகள் பல பிற் சேர்க்கையாகத் தரப்பட்டுள்ளன. பழமொழிகளைப் போலவே நல்ல பழங்கதைகளை கி. ரா. நடுநடுவே கூறு கிறார். ''வாயுள்ள பிள்ளை பிழைக்கும்'' என்பதற்கு இவர் தந்திருக்கும் தெனாலிராமன் கதை சுவையானது. இன்னும் பெண்களுக்குள் தனியாகப் பேசிக்கொள்ளும் சுவையான பேச்சுக்கள் எல்லாம் இவர் எழுத்தில்

உருவம் பெற்றுள்ளன. ஆக, பொருட்சுவை தர வந்த அகராதியில் அகச்சுவையும் உண்டு.

○

''தனி'' என்பதைத் ''தனீ'' என்று நீட்டும்போது உச்சரிப்பின் மூலம் தனித்தன்மையான பொருள் காண்பவர் கி. ரா. அவருடைய இந்த எழுத்துருப்பெற்ற பேச்சுத் தமிழ் அகராதியும் தனீ அகராதிதான்.

''பெரிய என்பதைப் ''பெரிய்ய'' என்று குறிப்பிட்டு அந்தச் சொல்லுக்குக் காட்சிரூபம் தருபவர் கி.ரா. அவருடைய இந்த அகராதி பெரிய்ய சாதனை தான்.

பல்கலைக்கழகப் பட்டம் பெறாத ஜான்சனுக்கு ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் அளித்தது—அவருடைய அகராதிக்காக; அரிய சாதனைக்காக ... ...

தற்போது தமிழ்நாட்டில் பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. கி.ரா.வுக்கு எந்தப் பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் அளிப்பதில் முந்திக் கொள்கிறது என்று பார்ப்போம்.

மீரா
31—12—82

# முன்னுரை

இதைத் ''தமிழ்நாடு வட்டாரவழக்குச் சொல்லகராதி'' என்று சொல்லமுடியாது.

தமிழகம் பூராத்தையும் உள்ளடக்கிய—இன்னும் தமிழ் உலகம் பூராவும் உள்ளடக்கிய—ஒரு பூரண வட்டாரவழக்குச்சொல்லகராதி தமிழில் இனிமேல்த்தான் வரவேணும். அதுக்கு இதை முன்னோடி என்று வேணுமானால்க் கொள்ளலாம். அப்படி ஒரு மாபெரும் காரியம் செய்ய என்ஒருத்தனால்மட்டும் முடியாது.

இந்த அகராதிக்கான சொற்களைச் சேகரம்செய்து முடித்து, ஐந்துவருசங்கள் மூலையிலேயே தூங்கிக்கொண்டிருந்தது. இதை அகரவரிசைப்படுத்தி முடிக்க என்னாலும் முடியலை; எனக்கு வேண்டியவர்களாலும் செய்துகொடுக்கமுடியலை. இந்தச் சள்ளைபிடிச்ச வேலையை, ஒரு ''சிறுபையன்'' நாஞ்சி என்று செய்துதர முன்வந்தார்.

ஒருநாள் மத்தியானம், கோவில்பட்டியில் மூடிய ஒருகடையின் நடைவாசலில் அப்பாட என்று உட்கார்ந்திருந்தேன். தற்செயலாக அந்தப்பக்கம்வந்த ''மாரீஸ்'' என்பக்கம் வந்து பேச்சுத்துணைக்கு உட்கார்ந்தார்.

பலவிஷயங்கள் பேச்சில்வந்த போது, இப்படிக்கஷ்டப்பட்டுசேகரிக்கப்பட்ட இந்தச்சொற்கள்,ஒரு அகரவரிசைப் படுத்தநாதியில்லாமல்க் கிடக்கிறது என்றுசொல்லி வருத்தப்பட்டேன். ''அதுஒண்ணும் கஷ்டமில்லெ; நான்செய்து தாரேன்'' என்றார். எத்தனையோ பேர் இப்படிச் சொல்லி, செய்யாமல் இருந்தாலும் இதையும் நம்பினேன்.

நினைக்கவே ஆச்சர்யமாக இருக்கு இப்பவும்; தனது இரு சகாக்களுடன் ஒருநாள்க்காலை இடைசெவலுக்கே வந்து விட்டார் மாரீஸ். இவர்கள் மூவரும் இப்போதுதான்

படித்து முடித்த, பட்டதாரிகள். S.மாரீஸ்வரன், B.com., R.முருகன். B.A., கே.உதயசங்கர்.B.Sc.,

ஒரு வாரத்தில் ஒரு தற்காலவேலை கிடைத்ததால் உதயசங்கரும், அதன்பிறகு ஒருவாரம் கழித்து முருகனும் போனபிறகும், இரண்டு மாசங்கள் தொடர்ந்து என்னோடு இந்த வேலையைச்செய்து முடித்துத் தந்தார் அன்பர் மாரீஸ்.

எழுதும் வேலைகள் மட்டுமல்ல, இதற்காகப் படங்களும் வரைந்துதந்தார், போட்டோவும் எடுத்து உதவினார். இவைகளெல்லாம் அவர் காலத்தினால் செய்த உதவிகள். இப்படியெல்லாம் மாரீஸ்மட்டும் எனக்குச் செய்து தந்திராவிட்டால் இப்போது இப்படி ஒரு புத்தகத்தைப் பார்க்கமுடியாது.

ஐந்தாறு வருசங்களுக்கு முன்னால் மதுரை பாத்திமாக்கல்லூரி மாணவிகளுக்கு மத்தியில் நான் பேசிக் கொண்டிருந்த போது அவர்களுடைய கேள்விகள் என்னை, ஒரு ''கரிசல் வட்டார வழக்குச் சொல்லகராதி''யைத்தயாரிக்க வேண்டும் என்கிற உந்துதலை ஏற்படுத்தியது. அதோடு வெளிநாடுகளில்த் தமிழ் கற்கும் அந்நியமொழி மாணவர்களுக்கும் இது உபயோகப்படுமே என்று முக்கியமாகப் பட்டது.

திரு ப.கங்கைகொண்டான் அவர்கள்தனது,''சாதனை'' பத்திரிகையில் இந்த சேகரிப்பில்க்கொஞ்சம் வெளியிட்ட போது சிலநண்பர்கள், இதிலுள்ள சில வார்த்தைகள் கரிசல் வட்டாரத்தில் மட்டும்புழங்குபவை அல்ல என்று எனக்குச் சுட்டிக்காட்டினார்கள். ''அதுக்குநான் என்னசெய்ய; எங்கள் வட்டாரத்தில் வழக்குச் சொல்லாக அது இருக்கே!'' என்று சொன்னேன்.

தமிழிலுள்ள அனைத்து வட்டாரச் சொற்களும் சேகரிக்கப்பட்டு ஒருநல்ல''வட்டார வழக்குச் சொல்லகராதி'' ஒருகாலத்தில்வெளிவரத்தான் போகிறது. இந்தக்காரியத்தைநமது அண்டை வீட்டாரான மலையாளிகள், கன்னடர், தெலுங்

கர்கள் எப்பவோ செய்து முடித்துவிட்டார்கள் என்று நான் கேள்விப்படுகிறேன்.

'இலக்கியமல்லாத' இந்தக்காரியத்தை நான்முனைந்து செய்ய வேண்டும் என்று இருந்திருக்கும் போலிருக்கிறது. முன் மாதரிக்குக்கூட எனக்குப் பார்க்க ஒன்றும் கிடைக்க வில்லை.

இங்கிலீஷ் மொழிதெரிந்த பலரைஅணுகி, இங்கிலீஷில் வெளி வந்திருக்கும் வட்டார வழக்குச் சொல்லகராதியைப் பார்த்திருக்கிறீர்களா; எப்படி இருக்கும் அது? என்று கேட்டபோது அவர்கள் கையைவிரித்தது ஏமாற்றமாக இருந்தது எனக்கு. ஒருவேளை அப்பேர்ப்பட்டவர்களைப் பார்த்து நான் கேட்கவில்லை போலும்; இந்த குக்கிராமம் அப்படிஒரு வசங்கெட்ட இடத்தில்வந்து அமைந்து கொண்டது. ஆகவே எனக்குத் தெரிந்தவிதத்தில் இதை அமைத்திருக்கிறேன். எனக்குத் தெரிந்தது இவ்வளவு தான்.

சில வார்த்தைகளுக்கு எவ்வளவு விளக்கம் சொன்னாலும் வாசகர்கள் மனசில்ப்பதியாது. இயற்கை நிறத்தில்ப் படம் பிடிக்கும் வண்ணக்கேமரா கொண்டு படம் எடுத்து இந்த அகராதியில்ச் சேர்த்தால் எப்படி இருக்கும் என்று நினைத்துப் பெருமூச்சு விட்டிருக்கிறேன்.

ஆரல் என்கிற வார்த்தைக்கு, வீட்டைச்சுற்றி எழுப்பப்பட்ட மண் காம்பவுண்ட் சுவர் மழைக்கு நனையாமல் இருக்க அந்தச்சுவரின் தலையில்நெடுக ஒரு சின்னக்கூரை வேய்வது. ஆரல் வார்த்தைக்குப் பக்கத்தில் அதன் சிறிய போட்டோப் படத்தையும் பிரசுரித்தால் எப்படியிருக்கும் என்று நினைத்துப் பார்த்து மகிழ்கிறேன்!

## வட்டார வழக்குச் சொல் என்றால் என்ன?

இருமல் என்கிற வார்த்தையை எல்லாத் தமிழர்களும்

அறிவார்கள். தொறத்தல் என்று சொன்னாலும் இருமல் தான் என்பது பல பகுதித் தமிழ் மக்களுக்குத் தெரியாது. இப்படிக் குறிப்பிட்ட ஒரு வார்த்தை ஒரு குறிப்பிட்ட அர்த்தத்தில் ஒரு குறிப்பிட்டவட்டாரத்தில்ப் புழக்கத்தில் இருக்குமானால் அதைத்தான் வட்டார வழக்குச் சொல் என்று சொல்லுகிறது.

''நெஞ்சுத் தடுமம் பிடிச்சிப் புகைச்சல் அகோரமாயிப் பழுப்பு விழுது''

என்று ஒருத்தர் சொன்னால் புரிகிறவர்களுக்குத்தான் புரியும். புகைச்சல் என்றும் இருமலுக்குச் சொல்லுகிறார்கள். பழுப்பு என்பது சளி; இதை நான் முதலில் நாஞ்சில்நாட்டில்த்தான் கேள்விப்பட்டேன்.

இப்படி கொங்குநாட்டுத் தமிழ், சோழ தேசத்துத் தமிழ், திருநெல்வேலிச்சீமைத் தமிழ், கரிசல்க் காட்டுத் தமிழ் என்று அனேகம் இருக்கிறது. அவ்வளவு தமிழும், நம் தமிழ் அன்னை அணிந்துள்ள பல்வேறுவகை ஆபரணங்களே.

தூக்குறது என்ற வார்த்தையைக் கேட்டதும் அதிர்ந்து போனார் ஒருத்தர்!

''அதுதானேய்யா பெருக்கிறது, கூட்றது, எல்லாம்'' என்றேன்.

இங்கே சிரட்டை என்பது தஞ்சையிலே கொட்டாங்கச்சி. இங்கே நிறையப்பணம் என்று சொல்லுவதை நாஞ்சில் நாட்டில் பயங்கரப் பணம் என்று சொல்லுகிறார்கள்.

இந்தச் சேகரிப்பில் சொற்களோடு மட்டும் நிறுத்திக் கொள்ளாமல் பிரயோகங்களையும் சேர்த்திருக்கிறேன்; சில நேர் சொற்களும் உண்டு. நேர் சொற்களுக்கு உதாரணம் சிட்டம். செங்கல்க்காளவாசலில் அளவுக்கு மீறிய உஷ்ணம் ஏற்படும்போது மண் உருகி செங்கல்கள் பல சேர்ந்து ஒட்டிக்கொண்டுவிடும்; பிரிக்க முடியாத, உருகி இறுகிய உலோகம்போல். இதுக்கு சிட்டம் கட்டிவிட்டது என்று சொல்லுகிறது.

மக்கள்பேச்சில் பிரயோகங்கள் சர்வசாதாரணமாகவந்துவிழும். இதையெல்லாம் கவனித்து அனுபவிப்பவர்களுக்குத்தான் தெரியும். ''ஓம் புளிப்பையும் பாத்துருவோம்'' என்று சொல்லுகிருர் ஒருத்தர். இவரைப் பார்த்து அவன் ஒரு சபதம் போடுகிருன் அல்லது சவால் விடுகிருன்; அத னுடைய தாத்பரியம் ஒனக்கு நான் இந்தக் கெடுதியைச் செய்கிறேனு இல்லையா என்று பார் என்பதே. அதற்கு இவர் சொல்லும் பதில் ஓஹோ அப்பிடியா; ஒனக்குத் திறம் இருந்தால்ச் செய்து பார், அல்லது எங்கே நீ அதை நிறைவேற்றுதல் செய் பார்ப்போம் என்று சவாலை ஏற் றுக்கொண்டு சொல்லுவதே ''ஓம் புளிப்பையும் பாத்துரு வோம்'' (அந்த விஷயத்தில் உன்னுடைய 'சாமர்த்தி யம்' எப்படி என்றுதான் பார்த்துவிடுவோமே என்பது)

இன்னும் சிலபிரயோகங்கள் அந்தந்தச்சமயத்தில் சொலவடை யாகவே அல்லது அதுபோலவே இருக்கும். பாமரர் பேசு கிற மொழியழகு ஏட்டுத் தமிழில்ப் பார்க்கமுடியாது; ஏட் டில் இயல்பு கிடையாது; அது மணமும் இயற்கை அழகு மில்லாத வெறும் காகிதப் பூ.

மக்கள் சொலவடையை சொலவம் என்றே குறிப்பிடுகிருர்கள். ''என்னமோ சொலவம் சொன்னுப்லெ இருக்கே.....'' என்று சொல்லிவிட்டு ஒரு சொலவடையை மேற்கோள் போல்ச் சொல்லுவார்கள்.

ஆகவே நானும் சொலவடைகளை சொலவம் என்றே குறிப் பிடுகிறேன்.

நாட்டார் பாடல் என்பதும் தெரிந்ததே. இதற்கு இங்கே ''காட்டுப்பாடல்'' என்று பேர். இதை ஊருக்குள்ப் பாடக்கூடாது என்றும் ஒரு கொள்கை வைத்திருக்கிருர் கள்!

நான் மட்டும் வட்டார வழக்குச் சொற்கள் சேகரிக்க ஆரம் பித்தபோது அது கிடைக்கும் அளவைப் பார்த்து அடே யப்பா எவ்வளவு சொற்கள் சேகரித்துவிட்டோம் என்று பெருமைப்பட்டுக்கொண்டேன். என்னைப்போல் யாருமே

சேகரிக்க முடியாது என்று பூரித்துப்போனேன். ஆனால் தங்கம்மாள்புரத்திலிருந்து எனது பிரிய நண்பர் போத்தையா அனுப்பியதைப் பார்த்து மலைத்துப்போனேன்.

இந்த இடத்தில் நண்பர் S. S. போத்தையா பற்றி நாலு வார்த்தைகள் சொல்லவேண்டும். தமிழுக்குக் கிடைத்த அரும் தொண்டர் இவர். இவருடைய சேகரிப்புகள் நா. வானமாமலைக்கு எப்படி உபயோகப்பட்டதோ அதைப்போல, அதிகப்படியே எனக்கு உபயோகப்பட்டிருக்கிறது இதில். எவ்வளவு பாராட்டினாலும் தகும் இவரை. கோபுரத்துக்குக் கீழே — தரைக்குக் கீழே — உள்ள அஸ்திவாரக் கற்களை யார் நினைவு கூர்வார்கள்?

நண்பர் பூமணியும் தனது ''அணில் உதவி''யை வார்த்தைகள் சேகரித்துக் கொடுத்ததின் மூலம் நிறைவேற்றியுள்ளார். இவருக்கும் நான் நன்றி சொல்லணும்.

ஐந்து வருஷங்களாக ஊறுகாய்ப்பானையில் கிடந்த இந்த ''வட்டார வழக்குச்சொல்லகராதி''யை 'அன்னம்' புத்தகமாகக் கொண்டுவர சந்தோஷமாக முன்வந்திருக்கிறது. இதுக்கெல்லாம் சூத்ரதாரியான அந்த உண்மைத் தமிழ்ப் பேராசிரியரை எப்படிப் பாராட்டுகிறது என்றுதான் தெரியலை எனக்கு.

இதில் நான் புரிந்துள்ள தவறுகளையெல்லாம் தமிழ்ப் பெரியார்கள் மன்னிப்பார்களாக.

''அறையும் ஆடரங்-
குபம்படப், பிள்ளைகள்
தரையில்க் கீறிடில்த்
தச்சரும் காய்வரோ...''

''ராஜபவனம்''
இடைசெவல்—627 716

கி. ராஜநாராயணன்

# வட்டார வழக்குச் சொல்லகராதி

## அ

அக்கி எழுதுறது: நெருப்புக் கொப்பளங்களைப் போல் திடீரென்று படைபடையாக மனித உடம்பில்த் தோன்றிவிடும். இதற்கு மந்திரிக்கத் தெரிந்தவரிடம் போய் அக்கி எழுதச் சொல்லுவார்கள். அவர் கொப்பளங்கள் இருக்குமிடத்தில் சாம்பிராணிப் புகை காட்டி பிறகு காவிக்கட்டியை குளிர்ந்த நீரில் கரைத்து மெல்லிய இறகினுல் அக்கி வெடித்திருக்கும் பொக்களப் படையின் மேல் சிங்கத்தின் முகம் போன்று ஒரு படம் காவிமண் கரைசலைக் கொண்டே வரைந்து முடிப்பார்.

அக்கினி நட்சத்திரம்: ''சித்திரை பின்னேழு வைகாசி முன்னேழு'' என்று சொல்லப்படும் வருஷ உஷ்ணத்தின் கொடுமுடி.

சித்திரை மாசத்தின் கடைசி ஏழு நாட்களும், வைகாசி மாசத்தின் முன் ஏழு நாட்களும் கொண்ட இந்தப் பதினாலு நாட்களில் எந்தச் சுப காரியங்களும் செய்வதில்லை. இதை மீறி ஒருவன் படப்பு மேய்ச்சல் போட்டானும். அன்று உச்சி வெயிலில் அது தானுகத் தீப்பிடித்துக் கொண்டதாம்!

இந்த பின்னேழு முன்னேழு போக, அதை ஒட்டி பின்னே ஒரு ஏழு நாட்கள் பாவங்களும் தோஷங்களும் கொண்ட நாட்கள் என்று கருதப்படுகிறது. ஆக அக்கினி நட்சத் திரத்தின் ஆதிக்கமும் வீச்சும் 21 நாட்கள்.

**அக்குசு:** கவனம். அக்கறை.
''பையன் முந்தி மாதிரி இல்லே; இப்பொ ரொம்ப அக் குசு!''

**அக்குத்தாப் பேசுறுன்:** அக்கிரமமாய் பேசுகிறுன்.

**அக்குத்தொக்கு இல்லே:** அனுதை. பாசத்தைப் பெறவோ செலுத்தவோ யாருமே கிடையாது. ''நாதியில்லே; நாத் தங்காலுமில்லே.'' என்பது மாதிரி.

**அக்குரும்பு:** அடுத்தவர்களே இம்சைப்படுத்திப் பார்த்து ஆனந் திக்கிறது.

**அக்குருவம்:** அக்ரமம். ''அக்குருவம் புடிச்ச பய.''

**அகட்டி:** அகலித்து. அகலமாக வைத்து.
''காலே அகட்டி அகட்டி நடக்கா.''

**அகணி:** பனேமட்டையின் உள்ப்புறம் உரிக்கப்பட்ட தோல்.

**அகணிநார்:** நார்க்கற்ருழையில் கிழிக்கப்பட்டது; கட்ட உப யோகிக்கிறது கயிறு போல.

**அகணி வடஉழவு தும்பு:** பனே அகணியில் திரித்து செய்யப் பட்டது. மலிவானது. நனேந்தாலும் பலமாகவும் மிருது வாகவும் இருக்கும்.

**அகணி வடம்:** பனேநாரினுல் திரிக்கப்பட்ட கயிறு.

**அகப்பத்தியம்:** ஆண் பெண் சேர்க்கை இல்லாமல் இருப்பது. (உடல் உறவு இன்றி இருப்பது.) வீரியமுள்ள சில நாட்டு மருந்துகள் கொடுக்கும் போது இது அவசியமாகிறது.

**அகப்பைச் சிலம்பு:** சிலம்பு வித்தையை மிச்சம் வைக்காமல் சொல்லிக் கொடுத்த குருவையே ஜெயிக்க ஒரு மாணுக் கன் வருகிறுன். இதைத் தெரிந்து கொண்ட குருவுக்கு ஒரு யுக்தி தோன்றி நீளமான காம்பு கொண்ட ஒரு அகப் பையை எடுத்து வந்து சிலம்புபோல் சுழற்றுகிருர். இந்த

சிலம்பு ஆட்டத்தை நமது குரு சொல்லிக் கொடுக்க வில்லையே என்று பயந்த மாணுக்கன் குருவிடம் சரண டைந்து விடுகிருன்.

**அகப்பைநோய்:** பட்டினி. சாப்பாடு இல்லாமல் மெலிந்து நோயாளியைப் போல காணப்படுதல்.

**அகராதி:** ரொம்பத் தெரிந்த மாதிரி, ஆனல் ஒண்ணும் தெரியாது.

தனக்கு நிறைய்யத் தெரியும் என்று காட்டிக் கொள்கிற வர்.

''சுத்த அகராதி பிடிச்சவன்.''

''அவனு, அவன் பெரிய அகராதியில்லா!''

**அகலக்கால் வைக்கான்:** ஆரம்ப சூரத்தனம். தொடங்கும் போதே விவரம் தெரியாமல் அகலமாகக் காரியங்களை ஆரம்பிக்கிறது. நடக்க ஆரம்பிக்கும் குழந்தை அகலமாகக் காலை வைத்தால் கீழே விழுந்து விடும்.

**அங்கணம்:** திறந்த வெளிக் குளிப்பறை. பாத்திர பண்டங்களைப் போட்டுக் கழுவும் இடம். சாப்பிட்டு கை கழுவும் இடம்.

**''அங்கணம்'':** வீட்டினுள் அங்கணம் போன்று ஏற்பாடு செய்யப்பட்ட கழுதை கட்டுமிடம். ''கழுதைத் தொழு.''

**அங்கணம் கெட்ட கழுதை:** தொழுவம் இல்லாமல் அலைந்து திரியும் கழுதை. பாதுகாப்பற்ற பெண்டிரைச் சுட்டும் சொல்ப் பிரயோகம்.

**அங்கனக்குள்ள:** அந்த இடத்தில்.

''அங்கனக்குள்ள தான் வச்சேன்.''

**அங்கனெ:** அவ்விடத்தில். ''அங்கனெ வச்சிப் பார்த்தனே ஒன்னை.''

**அச்சட்டை பிச்சட்டையா வருது:** நோயாளிக்கு வரும் நிலை கொள்ளாத தவிப்பு உணர்வு.

**அச்சலாத்தி:** நிறைவில்லாத தவிப்பு. ''ரெம்ப அச்சலாத்தியா இருக்கு.''

அச்சானியம்: அவம். அவசூசகம். ''அச்சானியமாப் பேசு தான்.''

அச்சுக் குலேயாமல்: ரொம்ப நாளேக்கு முன்னல் பார்த்த ஒன்று இப்போதும் துளிக்கூட மாருமல் அப்படியே இருப்பதைப் பார்த்ததும் வியந்து கூறுவது.
''அச்சுக் குலேயாம அப்பிடியே இருக்காளே!''

அச்சுத் தெரட்டுதல்: தேய்ந்து போன வண்டி அச்சை உலேயில் வைத்து (வேண்டிய இரும்பைச் சேர்த்து)முன் போல புதுப்பித்தல்.

அசத்திட்டான்: ஆத்திட்டான். அமுக்கிக்கிட்டான்.

அசத்துரது: அமுக்குதல், ஆத்துதல்.
''புஸ்தகங்களே அசத்துகிறதில் சமர்த்தன்.''

அசப்ப: ஒருகோணம். ''ஒரு அசப்புல பாக்குறதுக்கு நல்லா இருப்பாள்'', ''ஒரு அசப்புலெ பாக்குறதுக்கு அவனேப் போல இருப்பான்.''

அசமந்தம்: மந்த புத்தி. ''சுத்த அசமந்தம்ங்கே''

அசல்: அயல். அந்நிய. ''அசவீடு'', ''அசலூர்.''

அசலூர்: வெளியூரைச் சேர்ந்த ஆள்.

அசாத்தியம்: ஆயாசம். கிறக்கம். ''அசாத்தியமா வருது.''

அசேசம்: முழுவதும். அவ்வளவும். ''அந்த விசேசத்துக்கு ஊரு அசேசமும் வந்துட்டது.''

அசை: படுக்கை தலேயணேகளே வைக்க தொங்க விடப்படும் மரத்திலைான சட்டக்கோர்வை.

அசைச் சிமிழ்: மாட்டின் சிமிழ்-திமில்-அசைந்தால் குறை உடையது; கூடாது.

அசைவுச் சுழி: மாட்டின் சிமிழுக்கு உச்சியில் ஒரு சுழி இருந்தால் அது அசைவுச் சுழி. இது குற்றமுடையது.

அஞ்சடிச்சி போய்: அருள் கெட்டு.

அஞ்சரப் பெட்டி: அடுப்பங்கூடத்தின் பொக்கிஷப்பெட்டி! ஐந்து அறைகள் கொண்ட மரப்பெட்டி. மூடியை இழுத்து உருவித்தான் திறக்கும்படியாய் இருக்கும். நான்கு சிறிய மரச்சக்கரங்கள் கொண்டது. சில அஞ்சரப்பெட்டிகள் செய்நேர்த்தி பிரமாதமாய் இருக்கும், அருங்கலைக் காட்சியில் வைக்கும் படியாக. பெண்டுகள் இதைப் பேணுதலாய் வைத்துக்கொள்வார்கள். குடும்பத்தில் சில்லறைக் காசுகள் தட்டுப்பாடு ஏற்படும்போது இந்தப் பெட்டிதான் கை கொடுக்கும். ஒரு குடும்பத்தின் செழுமையை அறிந்து கொள்ள இப்பெட்டியின் மூடியை உருவி, உள்ளடக்கத்தைப் பார்த்துத் தெரிந்துகொண்டு விடலாம்.

மஞ்சள், கடுகு, சீரகம், வெந்தயம், பூண்டு முதலிய பல சரக்குச் சாமான்கள் இதில் அடக்கம்.

அஞ்சல்: வேகம். ''போய்ட்டுஒரு அஞ்சல்ல திரும்பிருவேன்."

அஞ்சு சுழி மாடு: மாட்டின் முன் மண்டையிலிருந்து வால் வரை நடு முதுகை ஒட்டி ஐந்து சுழிகள் இருப்பது விசேஷம்.

''அஞ்சு சுழி மாடு கெஞ்சினாலும் கிடையாது.''

அஞ்ஞா: அம்மா. ஒரு குறிப்பிட்ட வகுப்பினர் அம்மாவை அஞ்ஞா என்றே அழைக்கின்றனர்.

பசுக்கள் 'அம்மா...' என்பதைப் போல எருமைகள் 'அஞ்ஞா' என்று சத்தங் கொடுக்கும்.

அட்டக்கரி: அடை சேர்ந்து போன கருப்பு.

அட்டஞ்சுளிக்க முடியுமா?: யாரும் எதுவும் அண்ட முடியாது, பேச முடியாது. "அட்டஞ்சுளிக்காம அய்க்காத்து வீசாம" — குமரு இருக்கும் பாங்கைப் பற்றிச் சொல்லும் நாட்டார் பாடல்.

அய்க்காத்து— வேத்தும்னுச வாடை

அட்டமணியம்: சம்பளம் வாங்காமல் செய்யும் அதிகாரம். பையன் ஒருவன் மற்றப் பிள்ளைகளைப் படுத்தும் தாள முடியாத அட்டகாசத்தின்போது அவனைப் பார்த்து ''ஏலெ, என்ன ரொம்பத்தான் அட்டமணியம் பண்ணிக் கிட்டு அலையுதெ?'' என்று சொல்லுகிறதுண்டு.

அட்டியல்: நகை வகையில் ஒன்று. அடுக்கடுக்காக. ''மூடைகளை அட்டியல் போட்டு அடுக்கி இருக்கு.''

அட்டியில்லாமெ: மறுப்புச் சொல்லாமல். தடங்கல் இல்லாமல்.

அட்டு: தரித்திரமும் அழுக்கும் நாற்றமும் கொண்ட. ''அட்டு பிடிச்ச ராட்டு.''

அட்டை: மாட்டின் மீது ஒட்டிக் கொண்டிருக்கும் ஒரு வகை ஈ. மிக அழுத்தமாயிருக்கும். கையால் நசுக்கினால் நசுங்காது.—''நாஒட்டை''

அடங்கல்: கிராம அதிகாரியிடமுள்ள நிலக்கணக்கு.

அடங்கலும்: முழுவதும்.

அடங்கிருச்சி: (வேட்கை அடங்குதல்; சினையாகி விட்டது.) ''காளைக்குக் கதறிக்கிட்டே இருந்தது; போட்ட பிறகு அடங்கி இருக்கு.''

அடபட மாட்டேங்கு: நிர்ணயிக்க முடியவில்லை. நிதானப்படவில்லை. யூகிக்க முடியவில்லை. ''ஒண்ணுமே அடபட மாட்டேங்கு.''

அடபாட்டம்: பனைச் சொத்தை ஒரு தொகையைப் பெற்றுக் கொண்டு இத்தனை வருஷங்களுக்கு என்று பேசி விடுவது. அந்த வருஷம் கழிந்ததும் சொந்தக்காரரிடம் விடப்படும்.

அடம்: புஷ்டி. திடம். ''அழுத்தம்'', ''மாடு நல்ல அடமா இருக்கு.''

அடிக்கும் பிடிக்கும் சரியாப் போச்சி: லாபமும் இல்லை, நஷ்டமும் இல்லை.

அடிச்ச அடி நாக்கு தள்ளிப் போச்சி: அடியின் பயங்கரத்தைச் சொல்லுவது.

''அடிச் சக்கன் குண்டு'': பாராட்டுச் சொல்.

அடிச்சக்கைகண்ணுனும்: வியப்பும் மகிழ்ச்சியும் கலந்த செய்தியைக் கேள்விப்பட்ட உடனேயே சொல்வது. மனந்திறந்த பாராட்டுச் சொல்.

அடிச்சாண்டா பாதர் வெள்ளே: பகதூர் வெள்ளே. கட்டபொம் மனின் தளபதி பெற்ற பாராட்டை இப்போதும் கெட்டிக் காரர்களைக் கண்டதும் சொல்லப்படுகிறது.

அடிசால் பிடிசால்: விதை விழுவதற்கு உழும் சால்க்குடி அடி சால். விழுந்த விதையை மூடும்படியாக உழுவது பிடி சால். (பட்டம் போடுதல்).

அடிசிங்கேரு: பாராட்டுச் சொல். ''அடிச்சான் பாதர் வெள்ளே'', ''அடிரா சக்கைன்னும்'', இந்த மாதிரி.

அடித்திரும்ப: சூரியன் உச்சியை விட்டு மேற்கே நகர. இறங்கு வெயில். ''இப்பொ ரொம்ப வெயிலா இருக்கு, அடிதிரும்ப போவோம்.''

அடிதண்டம்: நிர்பந்த அபராதம். (செய்யாத ''குற்றத்'' துக்கு)

அடிதண்டா: கதவைத் திறக்க முடியாமல் இருப்புப்பட்டை யால் போடப்படும் அடைப்பு; திருக்கு, திறப்புக் கொண் டது.

அடிதொடியா: தொடர்ந்து; தொடர்ச்சியாக; உடனே.

அடி மண்டி: இன்னும் ஏராளமான வசதி. ''இவ்வளவு தான்னு நினேச்சிராதே,பயலுக்கு அடி மண்டிக் கிடக்கு.''

அடியான்: வசவு.

அடிரு தப்பல்ஞும்: சந்தோஷம் மிகுந்த பாராட்டுச் சொல். குஷியான ஒரு செய்தியைக் கேள்விப்படும்போது சொல் வது. ''அடிரா சக்கை'' மாதிரி.

அடுக்களே: அடுப்பாங்கரை; அடுப்புக்கூடம்; சமயல்ப்புரை.

அடுக்களேத் தாலி: வீடு புகுந்து வலுவந்தமாய்க் கட்டும் தாலி.

அடுப்பும் துடுப்புமா: அவசரத்தோடு கூடிய சமையலறைக் காரியம்.

அடைக்க: ஒன்று கூடப் பாக்கியில்லாமல். பூராவும். ''ஊர டைக்கச் சொல்லீரு.''

**அடைக்கலம் காத்தான்:** குருவியில் ஒரு இனம். வீட்டின் வேய்ந்த கூரை இடுக்குகளில் குடி இருக்கும். மனுசரை அடைக்கலம் கொண்டிருப்பதால் இதைக் கொல்வதோ கறி சமைப்பதோ இல்லே. ''ஊக்குருவி''—ஊர்க்குருவி.

**அடைக்கெத்து:** கோழி அடை காக்கும் நாட்களில் மலம் கழிக்கவும் இரையெடுக்கவும் வெளியேறும்போது எழுப்பும் ஒலி. ''அடைக்கெத்து கெத்துது''

**அடைப்பான்:** மாட்டுக்கு வரும் நோயில் ஒன்று.

**அடைபோடுதல்:** எடுத்த காரியத்துக்கெல்லாம் தடுதல் செய்வது.

**அண்டகிடாரம்:** அளவில்லாத. ''கோபம் அண்டகிடாரம் முட்டிப் போச்சி.''

**அண்டங்கரி:** அண்டங்காக்கையின் நிறம் போன்ற கறுப்பு.

**அண்டப் புளுகு:** பெரிய்ய பொய்.

**அண்டல்:** ஈடுசெய்தல். ''அததுக்கு ஒரு மாதரியா அண்டல் பண்ணி வைச்சிருக்கு.''

**அண்டி:** 'வெளிக்கு' உட்காரும் போது குதத்திலிருந்து உள்ச்சதை நீளுதல்; வாழைக்கன்றின் செந்நிறக்கிழங்கு. முந்திரிக் கொட்டை இப்படி வெளித்தள்ளியிருப்பதால் அதுக்கு 'அண்டிப் பருப்பு' என்றும் ஒரு பேர்.

**அண்டி சவலே:** சின்னஞ்சிறிய குழந்தைகள். ''அண்டியும் சவலேயுமா விட்டுட்டுப் போய்ட்டா.''

**அண்டிப் பருவம்:** புருவின் இறக்கை முளைக்காத இளங்குஞ்சின் பருவம்.

**அண்ணு மறுநாள்:** அன்றோ மறுநாளோ.

''அண்ணு மறுநாள்ல வந்து கேட்டிருக்கணும்; கெடப்புல போட்டுட்டு இப்ப வந்து கேட்டா எப்படி?''

**அணுக்கடற மாட்டான்:** இம்மி பிசகமாட்டான் ''சொன்ன சொல் அணுக்கடற மாட்டான்.''

**அணைச்சி:** ஏமாற்றுகிறதே தெரியாமல் ஏமாற்றுவது. சலுகை. ''பயலே மெள்ள அணைச்சிக் கூப்பிட்டுவா; பெறகு நா'ம் பாத்துக்கிறேன்.'' ''அவனை அணைச்சித் தான் வச்சிக்கிடணும்.''

**அணைச்சேலை:** தூளிச்சேலை. ''பிள்ளை இல்லாதவ அணைச்சேலையை மோந்து மோந்து பாத்தாளாம்''—சொலவம்.

**அத்த:** அன்று. அன்றய. அத்த வேலை—தின வேலை.

**அத்த குத்தம்:** அன்ருட வேலை. அவ்வப்போது செய்ய வேண்டிய வேலை. சின்னச் சின்ன வேலை.

**அத்தக்கூழு:** கேப்பை மாவை புளிக்க வைக்காமல் காய்ச்சும் கூழ்.

**அத்தக்கொத்து:** அன்றன்றைக்கு வேலை செய்து வாங்கும் தானியம்.

**அத்தப் பட்டினி:** அநேகமாய் தினம் தவருமல் பட்டினி. ''அத்தப்பட்டினிக்காரன் ஒத்திக்கு நிலம் கேட்டானும்!'' —சொலவம்.

**அத்தம்:** கடேசி. எல்லை. எல்கை. முடிவு. ''அத்தத்துலெ கையெ விரிச்சிட்டான்.''

**அத்தர்பான்ஸ்கோல்:** ஆங்கிலத்தில் சரளமாகப் பேசும் ஒருத்தனை ஒரு பாமரன் பார்க்கிருன். ''தஸ் புஸ் இஸ்'' என்று ஏதோ சொற்கள் அவன் காதில் விழுகின்றன. ஆங்கிலம் பேசுபவன் தன் எதிரில் நிற்பவனேடு சண்டை போடுவது போல கற்பித்துக் கொள்கிருன். அவன் சொன்னதுபோல், தானும் சொல்ல நினைக்கிருன். ஒரு சொல் பிரயோகத்தை அந்த பாணியில் உருவாக்குகிருன்; ''அத்தர்பான்ஸ்கோல்'' உருவாகிறது!

தடாபுடா என்று கூச்சல் போடுகிறவனைக் குறிப்பிட ''அத்தர் பான்ஸ்கோல்'' சொல் பயன்படுகிறது.

''அத்தர் பான்ஸ்கோல் சூத்தைக் கத்திரிக்காய்'' என்று அதட்டுகிருன் மந்தை நாடகங்களில் வரும் கோமாளி.

O

ஊருக்குத் திரும்புகிற வழியில் அத்தை வீட்டுக்குப் போகி

ருன் ஒரு மருமகன். அங்கே 'கொழுக்கட்டை' என்கிற பலகாரம் தின்னக் கிடைக்கிறது.கொழுக்கட்டையே அறியாத மருமகன் ருசித்துத் தின்று அதன் பெயரைக் கேட்டுத் தெரிந்து கொண்டு வழியெல்லாம் மனசுக்குள் அதையே சொல்லிக்கொண்டு வருகிருன். ஓர் இடத்தில் சகதியைத் தாண்டும் போது ஒருவன் ''அத்தர்பான்ஸ் கோல்'' என்று சொல்லித் தாண்டுகிருன். இவனும் அதையே சொல்லித் தாண்டுகிருன். இப்பொழுது கொழுக்கட்டை என்ற உச்சரிப்பை மறந்து 'அத்தர் பான்ஸ்கோல்; அத்தர் பான்ஸ்கோல்' என்று சொல்லிக் கொண்டே வந்து மனைவியிடம் ''அத்தர் பான்ஸ்கோல் செய்து தா'' என்று கேட்கிருன். அப்படி ஒரு பலகாரமே கிடையாது என்று சொன்ன மனைவியை கம்பால் அடிக்கிருன். பக்கத்து வீட்டுப் பெண் ஒருத்தி வந்து ''இப்படியா அடிக்கிறது;எப்படி வீங்கி இருக்கு பாரு கொழுக்கட்டை மாதரி'' என்று சொல்லவும், ''அதுதான் அதுதான், அந்த கொழுக்கட்டையை செஞ்சி தரும்படிதான் கேட்டேன்'' என்ருனும்!

**அத்தாசம்:** அந்தரத்திலே. ''ஒசக்கே அத்தாசமா நிக்கி.'' லேசாய். ''அத்தாசமா தூக்கீட்டுப் போயிட்டான் அவனெ!''

**அத்தாந்தரமாய்:** நடுவில். நடு வழியில் ''அம்போன்னு, அத்தாந்தரமா விட்டூட்டுப் போய்ட்டான்.''

**அத்தாளம்:** ராச் சாப்பாட்டுக்கு மேல் ருசியாகத் திங்கும் பட்சணங்கள். ''பயலுக்கு அத்தாளம் கேக்கு''— இப்போ உதை விழப்போருன். (உதை விழுந்தால் தான் ஒழுங்குக்கு வருவான் என்பது.)

**அத்து:** கட்டுப்பாடு; வரம்பு; இல்லாமல்.''ஆளே அத்துப் போச்சா'', ''ஊர் அத்துண்ணு ஒண்ணு இருக்கிய்யா; அதெ மீறிஞ எப்பிடி?''

**அத்துக்கு:** ஒரு பேச்சுக்கு. ''ஒரு அத்துக்கில்லா சொல்ல வந்தேன்.''

**அத்துவானக் காடு:** யாருமே இல்லாத ஒரு தனிக்காடு. பயம் தரும்படியான வனம்.

**அத்துவானம்:** கொடுமை. ''ஐயோ அந்த அத்துவானத்தை ஏங் கேக்கே.''
நாதியில்லாத. ''நா யாருமில்லாத அத்துவானமாப் போய்ட்டேன்.''

**அதாட்டியம்:** வல்லமை.

**அதிகத்தோரணை:** வேண்டாத விஷயத்தில் போய் தலையிடுதல். ''உமக்கு என்னத்துக்குவேய் இந்த அதிகத் தோரணையெல்லாம்?''

**அதிகப் பிடிச்சவன்:** மற்றவர்களை தரக்குறைவாக நினைத்துக் கொண்டு தான் ரொம்ப படித்தவன்போல் நடிப்பது, நடப்பது. ''அதிகப்பிடிச்ச குரங்கு.''

**அதுஅது உக்காந்த நேரம்:** நெடுநாள் குமரிருப்பவர்களை பற்றிக் கூறுவது. ஆளான நேரம்.

**அதுஅது பாட்டுக்கு:** ஏவாமல் முறைப்படி. ஏற்பட்டுள்ளபடி. ''அது அது பாட்டுக்கு சோலிகள் நடக்கணும், அப்பத் தான் நிம்மதி.''

**அதுக்காகச்சுட்டி:** அது காரணமாக.
''அதுக்காகச்சுட்டி நீ அவனை அடிக்கலாமா?''

**அதுக்கு நீ யென்ன பூசாரி?:** சம்பந்தமில்லாமல் பரிந்து பேசிக் கொண்டு வருகிறவனைப் பார்த்துச் சொல்லுவது.

**அதுக்குள்ளே:** ''என்ன அவசரம்? இருந்துட்டு சாவகாசமாய் போகலாமே; அதுக்குள்ளே என்ன'' என்கிற அர்த்தம் கொண்டது.

**அந்தப் பருப்பு இங்கே வேகாது:** இந்தத் தண்ணீரில் அந்தப் பருப்பு வேகாது—உனது சாகசங்களும் சாமர்த்தியங் களும் என்னிடம் பலிக்காது என்பது.

**அந்த மானைக்கி:** அதோடு. அப்போதே. ''அந்தானக்கி,'' ''அந்த மானைக்கி விடு பேச்செ,'' ''அந்தமேனிக்கி.''

**அந்தாக்குல:** பிறகு. ''நா அப்பிடியே போய்க்கிட்டே இருந் தேனு... அந்தாக்குல அவளும் வந்து சேந்தா...''

**அந்தாப் போரான்:** சூரியன். ''அந்தா போராம் பாரு அவனுக்குத் தெரியும் என்ன நடக்குண்ணு.''

**அந்தி:** மாலைநேரம். ''அந்திப் பனி சீவனும்.''

**அந்திசந்தி:** இருட்டு நேரங்கள். ''பிள்ளெ ஒத்தையிலெ இருக்கு; அந்திசந்தியிலெ வந்து எட்டிப் பாத்துக்கோ.''

**அந்நா:** அதோ. ''அந்நா பாருங்க ஏரோப்ளேயம் போறத!"

**அப்பச்சி:** ஐயா. மரியாதைச் சொல். ''அப்புச்சி''

**அப்பத்தா:** அப்பனுக்கு ஆத்தாள். தகப்பனைப் பெற்றவள்.

**அப்பதெ:** அப்பொழுதே. ''அப்பதெ பிடிச்சி சொல்லிக்கிட்டு இருக்கேன்.''

**அப்பம்:** அல்பம். ''சுத்தஅப்பம்'' ''அப்பக்காரப் பய''

**அப்பரத்தட்டு:** எதிர்பாராமல் சுமக்க வேண்டிய குற்றச் சாட்டு. தப்பிதம். பழி. ''நல்ல வேள, பெரிய்ய அப்பரத் தட்டு வந்து விழத் தெரிஞ்சது.''

**அப்பல:** அப்போ. அப்போது. சற்று முன்பு. ''அப்பல வந்து எட்டிப் பாத்துட்டுப்போனது நீதானே?''

**அப்பிக்கிட்டான்:** எடுத்துக்கிட்டான்; சேர்ந்துக்கிட்டான்.

**அப்பு:** ஐயா. ''அப்பு, உங்களைத்தானே'' ஒரு பகுதி. ''அப்பாப் பேந்து போச்சி'' ''அப்பப்பா பேந்து விழுது'' —அப்பப்பா பகுதி பகுதியாய்.

**அப்புக்கட்டை:** உழவு மேக்காலுக்கு மேல் வைத்து அடிப்பது, பிறழாமல் இருப்பதற்காக.

**அப்புண்டு:** உலகம் தெரியாமல் செல்லமாக வளர்க்கப்பட்டவன்.

**அப்புராணி:** கல்மிஷமில்லாத சாது.

**அப்பைக்கப்ப:** அப்போதைக்கப்போது.

**அம்பலம்:** அதிகாரம். ''இல்லாத அம்பலம் பண்ணிக்கிட்டு அலையுதான்.'' ''நாய் இல்லாத இடத்திலே நரி அம்பலம்''—சொலவம்.

**அம்பாரம்:** பெரிய்ய குவியல்.

**அம்பு:** வசதி. ''கையில அம்பு வேணுமில்ல.''

**அம்புட்டுக்கிட்டான்:** அகப்பட்டுக் கொண்டான். வசமாகத் தப்பிக்க முடியாமல் மாட்டிக் கொண்டான். பட்டுக்கிட்டான். ''அம்புட்டுக் கிட்டானே விட்ல பட்டன்.''

கலியாணத்தின் போது மணமகனைப் பார்த்து கேலி செய்கிறவர்கள், முக்கியமாக கவுண்டர் ஜாதியில் உறுமி மேளத்தின் சொற்களுக்கேற்ப ''டவுண்ட வேண்டி அம்புட்டுக்கிட்டான்; டவுண்ட வேண்டி அம்புட்டுக்கிட்டான்'' என்பார்கள். (ஒரு பெண்ணிடம் அவன் அம்புட்டுக்கிட்டானும்!)

**அம்புட்டும்:** முழுவதும். பூராவும். ''அம்புட்டும் எனக்குத் தான்.''

**அம்மக்காப்பு:** மஞ்சளும் வேப்பிலேயும் சேர்த்து அரைத்தது. அம்மைக் காப்பு.

**அம்மா கோயில்:** மாரியம்மன் கோயில், உமையம்மன் கோயில் போன்றவற்றை 'அம்மன் கோயில்' என்றும் 'அம்மா கோயில்' என்றும் கூறுவர்; உரிமையோடும் பயபக்தியோடும் சொல்வது.

**அம்மாச்சி:** தாயைப் பெற்றவள்.

**அம்மாஞ்சி:** ஒன்றும் அறியாதவன். ''சுத்த அம்மாஞ்சி!''

**அம்மாடி:** ஆசுவாசம். ''அதெ முடிச்சதுக்குப் பெறவுதான் அம்மாடீண்ணு இருக்கு.''

**அம்மாடீ!:** பயத்தோடு கூடிய ஆட்சேபணை. ''அம்மாடீ! நா மாட்டேம்மா!''

**அம்மா விளையாடீட்டிருக்கு:** அம்மைப் போட்டிருக்கிறது.

**அம்மானு:** அம்மான்—மாமன், மாமா என்ற உறவு முறைக்கு அம்மானு, அம்மான் என்று சொல்வது. அம்மாவின் உடன் பிறந்தான் அம்மான்.

**அமட்டுது:** 'ஒமட்டுது' என்றும் கூறுவர். வாந்தியெடுக்க

வருவது போலிருக்கும். சீக்காளிக்கு சில பொருள்களைப் பார்த்தாலே பிடிக்காது. ஓங்கரிக்கவரும். இப்படி சமயத்தில் அமட்டுது என்பார்கள்.

**அமத்து:** நிறுத்து, ''பசியமத்து,'' ''தீயெ அமத்து,'' ''அம்மா, குழந்தை அழுகையெ அமத்து,'' ''அந்தப் பொட்டல்லெ நிக்கிற மரத்துக்குக் கீழே கொண்டு போயி ஆட்டை அமத்து.''

**அமந்த குணம்:** சாந்த குணம். ''பையன் நல்ல அமந்த குணம்.''

**அமரிக்கை:** அடக்கம். ''நல்ல அமரிக்கையான பொண்''.

**அமளை:** மானுவாரியில் விழும் பசளி போன்ற ஒருவகைக் களை.

**அமுக்கடி:** கிடைத்ததை விடமாட்டான். ''அமுக்கடி ஆசாமி,'' ''அமுக்கடிக்காரன்.''

**அமுசு:** அழகு. அம்சம். அம்சங்கள் நிறைந்த.
''ஐக்கோடு தீராத அதிக வழக்கெல்லாம்—நீங்க
அமுசுடையார் தீர்ப்பாரெனு—வாசலிலே
அண்டிருப்பார் கோடிச்சனம்......'' —நாட்டார் பாடல்

**அமைப்பு:** விதி, நியதி. எதுஎது எப்படி நடந்து முடிய வேண்டுமென்று இருக்கிறதோ அது.

**அய்:** ஆடு, மாடு ஈன்ற உடன் குட்டியின் மேல் ஒட்டிக் கொண்டிருக்கும் வழுவழுப்பான ஈரப்பசைக்கு 'அய்' என்று பெயர். ''ஈண்டு அய் உணரல அதுக்குள்ளே... என்ன தலப்பறட்டுப் பண்ணுதான்''—'ஐ'

**அயத்து:** மறந்து. ''அயத்துப் போனேன்''

**அயன்:** தரமான. உயர்ந்த. கலப்பில்லாத. அசல். ''நல்ல அயனான சரக்கு.''

**அர்ஜுனன் பேர் பத்து:** இடி இடிக்கும் போது இப்படிச் சொன்னால் அது மேலே விழாது என்பது. இந்துவாக இருந்து மதம் மாறியவர்கள் கூட இடி பயத்தால் இப்படிச் சொல்வதுண்டு.

**அரக்கு:** ''அந்தக் கொப்புல உள்ள முள்ளை நல்லா அரக்கு.'' அதாவது முள்ளை மட்டுமே சீவு என்பது.

**அரங்கன்:** செய்திகளை வெளிப்படுத்தாத அழுத்தமான ஆள். சாமான்களை அரங்கு வீட்டுக்குள் பந்தோபஸ்து படுத்திர மாதிரி செய்திகளை மன அரங்குக்குள் போட்டுப் பூட்டி விடுகிறவன்.

**அரங்கு வீடு:** கூரை வீட்டினுள் தீ விபத்திலிருந்து பொருள் களைக் காப்பாற்றித் தரும் மண் தட்டட்டி போட்ட அறை.

**அரசல் புரசலா:** தெரிஞ்சும் தெரியாமலும்.
''அரசல் புரசலாக் காதிலெ விழுந்திச்சி.''

**அரணிப்பு:** அரண் போல வளர்ந்திருத்தல். காடுகளில் பயிர் கள் உயரமாகவும், பெருக்கமாகவும், பச்சைப்பசேல் என் றும் காணப்பட்டால் சந்தோஷத்தோடு இப்படிச் சொல் வார்கள். ''பாத்தியா, அரணிப்பு எப்படி இருக்குன்னு.''

**அர வண்டி:** வில் வண்டி. கூடார வண்டி.

**அர வீடு:** மச்சு வீடு. உள் வீடு. அரங்கு வீடு.

**அரி:** கைப்பிடி அளவு. ''நடப்போற நாத்துக்களை அரி அரி யாக் கட்டுங்க.''

**அரிக்கஞ் சட்டி:** அரிசி அரிக்கும் சட்டி.

**அரிசிக்குழை:** ஒரு வகை களை.

**அரி;சித்தரி:** ஆரம்பம். ஏட்டுப் பள்ளிக்கூடத்தில் அரி,சித்தரி என்றுதான் பாடம் தொடங்குவார்கள்; ஆனா ஆவன்னா மாதிரி.

ஆரம்பித்த காரியம் எப்படி இருக்கிறது என்று கேட்டால் இப்பொதானே அரி சித்தரி தொடங்கியிருக்கு என்பார் கள்.

**அரிப்பான்:** சலிப்பான்.

**அரிவேதனை:** ஒருவகை சிரங்கு. சொறி சிரங்கு. பசபசவென அரிக்கும். அரிப்பு தாங்காமல் சொரியச் சொல்லும். பிறகு தாங்க முடியாத வேதனை உண்டாகும். இதுவே 'அரிவேதனை.'

பிள்ளை, அம்மாக்ககாரியை சும்மா தொடர்ந்து தொந்தரவு செய்தால், ''அரிவேதனைப் படுத்துறயே'' என்பாள்.

**அருக்கு:** ஏதோ ஒலி கேட்பதாக ஒரு தோற்றம். ஏதோ ஒன்று தெரிவதாக ஒரு தோற்றம். ''மன அருக்கு.''

**அருகி:** குறைந்து. ''அந்த வம்சம் அருகிப் போச்சி.''

**அருகு:** ஒருவகைக் களை. பிரச்னைக்குரியகளை.

**அருகெடுப்பு:** சம்சாரியின் நில வருமானத்தில் கணிசமாக செலவு ஏற்படுத்தும் அம்சம். அருகை நிலத்திலிருந்து ஆழமாகத் தோண்டி அதன் வேர் போகுமிடமெல்லாம் தேடி எடுத்து முடிக்க வேண்டும். இதுவே ஒரு வேலையாக இயக்கமாக நடத்தி முடிக்கப்படுவது. அருகின் பிடியிலிருந்து நிலத்தை மீட்டல்.

**அருச்சல்:** சிறிய வயதில் விபரம் தெரிந்தும், தெரியாமலும் இருக்கும் போது நடந்தது அல்லது பார்த்தது. சரியாகத் தெரியாது; அரைகுறையாகத் தெரிந்தது. ''அந்த விசயம் நடந்தது உங்களுக்குத் தெரியுமா?'' ''அரிச்சலாத் தெரியும்''

**அருசம்:** அபூர்வம். ஒரு தாய் தின்பண்டம் வாங்கிக் கொண்டு வருகிறுள். இதையறிந்த அவள் குழந்தைகளில் ஒன்று, ''யம்மா, யம்மா'' என்று கை நீட்டுகிறது. அதுக்கான பங்கைக் கொடுக்கிறுள். இன்னும் வேண்டும் என்கிறது குழந்தை. 'நீ மாத்திரம் தானு; மற்ற குழந்தைகளுக்கும் தர வேண்டாமா?' எனும் அர்த்தத்தில் இப்படிக் கேட்கிருள் தாய்: ''நீ மாத்திரந்தான் அருசமா?''

**அருசுகம்:** வினேதமான பொருள். அபூர்வம். அதிசயம். ''ஆங்! ரொம்ப அருசுகந்தான் போ!''

**அருணுக் கயிறு:** அரைஞாண் கயிறு.

**அருதிக்கிரையம்:** மிகக் குறைந்த கிரையம். ஈனக்கிரையம். உடையதாரியின் நெருக்கடி நிலையைப் பயன்படுத்திக் கொண்டு நியாயமான விலைக்கும் மிகவும் குறைத்து வாங்குவது.

**அருந்தல்:** அபூர்வம்.

**அருப்பம்:** இளமீசை. அப்போதுதான் அரும்பியது.

**அருமாந்த:** பிரியமான. செல்லமான. ''அருமாந்த பிள்ளை''

**அருவாகி:** தீர்ந்து. காலியாகி. ''அருவாகிப் போச்சி.''

**அருவாட்டம்:** அருவம்—மெல்லிய ஓசை. ''அருவாட்டத்தையே காணோம்.''

**அருள்கெட்டு:** லக்ஷ்மிகரம் மங்கி. களையற்று. அருள்கெட்ட. அருள்வாங்கிய.

''ஆங்கங்கெட்ட கோயிலுக்கு அருள்வாங்கின பூசாரி'' —சொலவம்.

''அந்த வீடே இப்பொ அருள்கெட்டுப் போச்சி.''

**அரைச்சிவன்:** ஆள் மெலிந்து போனதை அனுதாபத்தோடு சொல்லும் வார்த்தை. ''ஆள் எப்படி இருந்தான்; அரைச்சீவனா போய்ட்டானே!''

**அரையாப்பு:** பொம்பளை சீக்கு.

**அல்லறை சில்லறை:** அங்கே கொஞ்சம், இங்கே கொஞ்சம் இப்படிப் பல இடங்களில் அப்போதைக்கப்போது வாங்கிய சில்லறைகள். ''அல்லறை சில்லறைக் கடன்களையெல்லாம் கொடுத்து முடிச்சாச்சி.''

**அல்லாடி:** கஷ்டப்பட்டு. ''காட்டுல இந்நேரவரைக்கும் அல்லாடிட்டு வாரேன்.''

**அல்லாவித்தை:** தெருவில் வித்தை செய்து காட்டுபவர்களில் பெரும்பாலோர் முஸ்லீம்கள். அவர்கள் 'அல்லா' என்று கடவுள் பெயரைச் சொல்லிவிட்டு ஆரம்பிப்பதால் இப்பெயர் வந்தது.

**அல்லி:** அலி.

**அல்லும் சில்லுமாய்:** முழுத் தொகையாக இருந்து சில்லறையாக—கணக்கு சொல்ல முடியாமல்—செலவழிந்து போய் விட்டது.

**அலக்கலக்கா:** ஒன்றோடு ஒன்று சேராமல்.

**அலகு:** தாடை. ''அலகுலெ அடிச்சிப் பல்லைப் பேத்துருவேன்.'' வண்டிச் சக்கரத்தின் பட்டைக்கும், ஆரக்கால்களுக்குமிடையில் இருப்பது.

**அலந்து:** ஏங்கி. ஏமாறி. ''கறிக்கு அலந்து போனான்.''

**அலப்பறை:** வீண் உழைப்பு. கஷ்டம். தொந்தரவு படுதல். ''அலப்பற பண்றான்.''

**அலமாரி:** உழும்போது கலப்பைக்குத்தியில் ஒரு கல்லை—கனமான கல்லை வைத்துக் கட்டி இருப்பார்கள். அதே வசத்தில் ஒரு குச்சியை இணைத்து வைப்பார்கள்; சாலடிக்கும்போது அகலத்திற்காக. கொழுவிற்கு மேல் செடி அல்லது தட்டையை வைக்கிறதும் உண்டு.

**அலர:** கொஞ்சம்கூட ஈரம் இல்லாமல். ''அலரக் காயப் போடணும்.''

**அலவர:** பனங்கதிர் (அலவரை)

**அலவாக்கரை:** கடற்கரை. அலைவாய்க்கரை. அலைக்கரை.

**அலவாக்கல்:** குளத்தின் அலைகள் மோதி மோதி கரையை அரித்து விடாமல் பாதுகாப்புக்காக கரையின் உள் பக்க வாட்டில் சுவர்போல் பதிக்கும் கற்கள்.

**அலாக்கா:** துண்டாக. தனியாக. ''அலாக்காய்த் தூக்கு.''

**அலுக்கு:** பெண்களின் காதணி. மிகைப்படுத்தும் பெருமை. ''அவளுக்கு வந்த அலுக்கு!'', ''அலுக்கிக்கிட்டுத்தான் அலையுதா!'', ''என்ன அலுக்கு என்ன குலுக்கு!''

**அலுக்குறது:** அசைத்தல். ''காதுல போட்டுக்கிட்டு அலுக்கிக்கிட்டு அலையுதா.''

**அலுப்பத்த பாடாப் போச்சி:** நிம்மதிப் பெருமூச்சு விட்டுச் சொல்லும் வார்த்தை; 'அப்பாட.' நிம்மதியான நிலை.

**அலுப்பில்ல:** தொந்தரவு விட்டது. சள்ளை நீங்கியது. நிம்மதிப் பெருமூச்சுவிட்டுச் சொல்லும் வார்த்தை.

**அலைகொம்பு:** மாட்டுக் கொம்பில் ஒருவகை. இது ஆகாது என்பார்கள்.

**அலேமோதிக்கிட்டு:** ஒரு காரியத்துக்கு நிற்கும் விடாப்பிடி. அலையைப் போல் விடாமல் மீண்டும் மீண்டும் தொடர்வது. ''அலேமோதிக்கிட்டு வாரான்.''

**அலேயக் குலேய:** ஆசை தீர. ''அலேயக் குலேயத் திங்கலாம்''— ஆசைதீர சாப்பிடலாம்.

**அவ்வா:** பாட்டி. (அவ்வா என்பது தெலுங்குச் சொல்; தமிழில் அவ்வை.)

**அவக்காச்சி:** தாளமுடியாத ஆசை. ''அவள்மேலே அவனுக்கு அப்படி ஒரு அவக்காச்சி'', ''அவக்காச்சி கொல்லுதா?''

**அவக்கென்று:** அவசரமாக. ''அவக்கெண்ணு வாயிலெ போட்டு'', ''அவக்கு தொவக்குண்ணு சாப்பிட்டு எழுந்து.''

**அவயம்:** கூப்பாடு. ''அவயம் போடாதலெ''. தஞ்சம். ''அவயம்னுட்டு அவ காலடிலெ கிடக்கான்.''

**அவரு சோலி முடிஞ்சது:** அவர் இந்த உலகத்திற்கு வந்த வேலே முடிந்தது; புறப்பட்டார். (இறந்து போய் விட்டார்.)

**அவ(ள்) ஆவியே ஆகாது:** அவளுடைய தொடர்பே வேண்டாம். நெருக்கம் எதுவுமே வேண்டாம்.

**அவ(ள்) வாயிலேயே விழப்படாது:** அவளோடு வாக்கொடுக்கப் படாது, அவ்வளவு மோசமான ஆள்! (வாக்கு – வாய்)

**அவன் பொழப்பே அவ்வளவுதான்:** அவன் கூறே அவ்வளவு தான்.

**அவனேத் தூக்கிச் செம:** புத்தியுள்ள பிள்ளேகளேத் தூக்கி சுமந்தாள் புத்தி வரும் என்று வயிற்றெரிச்சலோடு இடித்துக் கூறுவது.

**அவிய:** மரியாதைச் சொல். அவர்கள். ''அவியளேக் காணமே''

**அவுக:** அவர்கள். அவர்.

**அவுகசெண்ணு போனுக:** அவுக இறந்து போனுக.

**அவுசாரி:** ஒழுக்கம் கெட்டவள்.

**அவுதானமாய்; அவதானமா:** திடீரென்று. எதிர்பாராமல். அநியாயமாய். ''அவதானமா வந்திட்டது சாவு அவனுக்கு.''

**அழண்டு:** அழுகி.

**அழவங்காட்றது:** அழகு காட்டுதல். வக்கணை காட்றது.

**அழி:** தெரியும்படியாக ஆனால் உள்ளே நுழைய முடியாத மறைப்பு. ''அழிப்பாய்ச்சின வீடு.''

**அழிச்சாங்காட்டினு...சாமி...தொழிச்சாங்காட்டாது:** விளையாட்டில் ஒருவன் தவறு செய்து விட்டான். அதாவது கிந்தான் போன்ற விளையாட்டில் கோட்டை மிதித்துவிடுகிறான் என்று வைத்துக் கொள்வோம். அப்படி மிதித்து விட்டு உடனே தன்னைச் சரிசெய்து கொள்கிறான்! எதிரி இதைச் சுட்டிக்காட்டி உன் ஆட்டை போய்விட்டது என்கிறான். தவறு செய்தவன் தான் தவறே செய்யவில்லை யெனச் சாதிக்கிறான். குற்றம் சாட்டியவன் வேறு வழியின்றி ஆட்டையை தொடரவேண்டுமென்பதற்காக எதிரியின் அழிச்சாட்டியத்தைப் பொறுத்துக் கொண்டு தொடர்ந்து விளையாட அனுமதிக்கிறான்.

எதிரி விளையாட்டை தொடர்ந்த மறுகணம், மறைக்க முடியாத அளவுக்கு ஆட்டத்தில் தவறு செய்து விடுகிறான். அப்போது குற்றம் சாட்டியவன் ''அழிச்சாங்காட்டினு... சாமி தொழிச்சாங் காட்டாது.'' என்கிறான். அதாவது 'நீ என்னை ஏமாற்றினாய், உன்னைக் கடவுளே ஏமாற்றி விட்டார்' என்று இடித்துக் காட்டுகிறான்.

**அழிச்சாட்டியம்:** வம்புத்தனம். அழித்தல்.

**அழிம்பு:** அழிமானம். ''ஆட்டுக்காரங்க அழிம்பு தாங்க முடியலை.''
வம்பு. ''குடிச்சிட்டு வந்து அழிம்பு செய்றான்.''

**அழிமாட்டம்:** பயிர் பச்சைகளுக்கு ஆடுமாடுகளால் ஏற்படும் சேதம். ''தோட்டத்திலெ ஆடுகளே விட்டு அவங்க செய்யிர அழிமாட்டம்.''

**அழிமானம்:** அழிக்கப்பட்ட அழிவு. செய்த நாசம். சேதம்.

அழுதபிள்ளை சிரிச்சதாம்; கழுதப்பாலைக் குடிச்சதாம்: சிறிய காயங்களுக்காக அழுபவர்களை திருப்திப்படுத்தியபின் அவர்கள் சிரிக்கும்போது சொல்லிக் கேலி பண்ணுவது.

அழுதழுதும் அவதானே பெக்கப் போறு?: அவர்களே செய்து தீரவேண்டிய காரியத்தை அவர்கள்தான் செய்யவேண்டு மென்பது.

அளி: சகதி. நாற்றம் கொண்ட சேறு.

அறத்தடம்: வண்டிச் சக்கரங்கள் உருண்டு உருண்டு சென்று மண்ணை அறைத்து பாதை உண்டாகிய இடம். வண்டிப் பாதை.

அறமுடி: அரசிலை. சிறு பெண் குழந்தைகளுக்கு அரை ஞாண் கயிற்றில் போடும் மறைப்பு. 'அரைமூடி'

அறவம்: அரவம்: உருவம் தெரியாமல் வரும் மெல்லிய ஒலி.
''ஏதோ அரவங்கேக்குதேண்ணு எந்திரிச்சிப்பாத்தா ஒண்ணையும் காணோம்!''
''ஊர் அறவம் ஒடுங்கிப் போச்சி.''

அறுதப்பய: விதவையின் மகன். ''அறுதப் பயபுள்ள.''

அறுதலி: ஒரு வசவு. (தாலியறுத்தவள்) ஆணைச் சுட்டியும் இந்த வசவு வரும்.

அறுந்தல்: அபூர்வமாய். தட்டுப்பாடு. ''கத்தரிக்கா அறுந் தலாப் போச்சி''

அறை: கால்நடையின் பெண்குறி.
''அறை குளுர்ச்சியா இருக்கதைப் பார்த்தா சினேண்ணு தான் தோணுது.''

அன்னநடை: நாகரிகமாக நடப்பதாக நினைத்து நடக்கும் நடை, ஒயிலாக நடந்து செல்வது போன்ற நடை.
''அன்னநடை நடக்க தன் நடையும் போச்சி.''

அன்னம் பிடிச்சிருக்கு: கதிர் மணியில் பால் கோக்கும் பருவம்.

அன்னவஸ்திரம்: பெற்றோர்களுக்கோ, தள்ளி வைக்கப் பட்ட மனைவியருக்கோ கொடுக்கப்படும் ஜீவனும்சம், நிலம் அலலது தானியமும் பணமுமாக.

அனையம்: பலவிதம். அநேகம். ''நீ அனையம் கண்ட போ.''

# ஆ

**ஆக்க:** உடல்க்கட்டு. ''ஆக்க விட்டுருச்சி ஆளு.'' ''ஆமா வயசாகுதில்லெ''

**ஆக்கங்கெட்ட:** விருத்தி கெட்ட. ''ஆக்கங்கெட்ட மூதி'' ''ஆக்கங்கெட்ட பொம்பிளெ சந்தைக்குப் போச்சுதாம், அங்கேயும் ஆம்பிளெக்குப் பஞ்சமாப் போச்சுதாம்!.''—சொலவம். ''சுத்த ஆக்கங்கெட்ட பயல்''

**ஆக்கம்:** சிறப்பு. லட்சுமிகரம். ''ஆக்கம் பொங்குது!''

**ஆக்கை:** விளாறு. ''புளியாக்கை''

**ஆகமா:** நன்றாக. சரியாக. கொஞ்சங்கூட. ''ஆகமாக்கூட எழுதல்ல, பேனவை அதுக்குள்ள ஒடிச்சிட்டான்.''

**ஆகாசப் புளுகு:** ஆகாயம் அளவுக்கு பெரிய புளுகு. அண்டப் புளுகை விடப் பெரியது.

**ஆகாது:** பகை. ''அவுஹெ ரெண்டுபேருக்கும் இப்பொ ஆகாது.''

**ஆகாமல்:** பொருந்தாமல். உறவு இல்லாமல். ''இல்லாதது பொல்லாததைச் சொல்லி ரெண்டு பேருக்கும் ஆகாமச் செய்திட்டாங்க.''

**ஆங்காப்பூட்டை:** பயிர் உழவுக்கு முன்பு தோன்றக் கூடிய முதல்க் கதிர்; பயன் தராதது.

**ஆஸ்:** வில்வண்டிக் கூண்டிற்கு அமைக்கும் மரத்தாலான வளைவு. தாங்கல். ''மேசை ஆடாமல் இருக்க அந்தக் காலுக்கு ஒரு ஆஸு வை.''

**ஆச்சிக்குட்டி:** கிடையின் பொதுவிலிருந்து தானமாக வழங்கப்படும் ஆட்டுக்குட்டி.

**ஆச்சி நூக்கிறது ஐயரு பூணூலுக்கு எட்டாது:** புருஷன் வருமானமில்லாத செலவாளி; பெண்சாதி சம்பாதிக்கும் சிறு வருமானம் அவனுக்கு எந்த மூலே! அதோடு, ''அவள்

செய்கிற காரியம் புருஷனுக்கு எவ்வித பிரயோஜனமும் இல்லே'' என்பதும்.

ஆஞ்சி ஓஞ்சி: பிரயாசைப்பட்டு, முடியாமலாகி. முயன்று ஓய்ந்து. ''ஆஞ்சி ஓஞ்சி போயி'', ''ஆந்து சோந்து''

ஆட்டாளி: நடத்துகிறவர். பொறுப்பானவர். ஆட்டுவிப்ப வன். சூத்ரதாரி. ''அதுக்கெல்லாம் நா ஆட்டாளி இல்லப்பா.''

ஆட்டுக்கறிக்கு நோணிக்கறின்னு சொல்லுவான்: சம்பந்தா சம்பந்தமில்லாமல் ஒன்று கிடக்க ஒன்று சொல்வது.

ஆட்டுக்கால் முடிச்சி: முடிச்சுகளில் ஒருவகை. கட்டுக் கயிற் றில் தும்புக்கு அடிப்பாகத்தில் போடப்படுவது. தோற் றத்தில் இது ஆட்டுக்காலைப் போன்றிருக்கும்.

ஆட்டுக்குடில்: ஆட்டுக் குட்டிகளை அடைக்கும் கூடு.

ஆட்டுக்குத் தீர்ந்தது குட்டிக்கும்: ஒரே குற்றம் புரிந்த பலரில் ஒருவருக்கு விதிக்கப்பட்ட தண்டனையே மற்றவர்க்கும். (குட்டிக்கு என்று தனி விலே கிடைக்காது; ஆட்டின் விலே யோடு அதுவும் சேர்ந்ததே.)

ஆட்டைத்தூக்கி குட்டியிலெ போடுகிறது குட்டியைத் தூக்கி ஆட்டுல போடுகிறது: பிரயோஜனம் இல்லாமல் ஏதாவது மாற்றிமாற்றிச் செய்துகொண்டே இருப்பதைக் குறித்துச் சொல்லப்படும் பிரயோகம்.

ஆடுகாலி: வசவு. ஒரு இடத்தில் நிலேகொண்டு நில்லாத வளைக் குறிப்பிடுவது.

ஆடுதின்னுப்பாளே: கரிசலில் முளேக்கும் செடி. களே. சிரங் கிற்கு மருந்தாக அரைத்துப் போடுவர்.

ஆடுபாரம்: வண்டியில் பாரம் வைக்கும்போது முன்பாரமாக இல்லாமலும் பின்பாரமாக இல்லாமலும் ஆடுபாரமாக (சம பாரமாக) வைத்தல்.

ஆடெளும்புர நேரம்: கிடையிலிருந்து ஆடுகள் மேய்ச்சலுக்குக் கிளம்புகிற நேரம். பகல் 10-30 விருந்து 11 மணிக்குள் ளாக.

**ஆண்டபண்டம் அறுபதும்:** வீட்டிற்கு வேண்டிய எல்லாச் சாமான்களும்.

**ஆண்டுமாறி:** ஒரு சமயம் அதிகாரம் (அட்டகாசம்) செய்து பின் துரத்தப்பட்டுக் கீழ் நிலை அடைந்தவன். ''ஆண்டு மாறின பய'' வசைச்சொல்.

**ஆண்முறி:** இரண்டாக உடைந்த கண்ணுள்ள தேங்காய் மூடியை—முறியை— பெண்முறி என்றும் மற்றதை ஆண் முறி என்றும் குறிக்கப்படும்.

**ஆத்தமாட்டாத:** இயலாத. ''ஆத்தமாட்டாத பயலைப் போகச் சொல்லு.'' தக்கவைத்துக் கொள்ளாதவன்.

**ஆத்தலாய்:** மெதுவாய். எந்தவித படபடப்போ அவசரமோ இல்லாமல் ''அப்படியே ஆத்தலா ஒருநடை போய்ட்டு வருவமா?''

**ஆத்தா அக்கான்னு:** கெட்ட வார்த்தைகளைக்கொண்டு அர்ச் சிக்கப்படும் படுவசவு.

**ஆத்தாடி:** ஆசுவாசம். நிம்மதி. ''ஆத்தாடி! இப்பத்தான் கொஞ்சம் தேவலை.''

**ஆத்தானம் பூத்தானம்:** இருவர்களுக்குள் பேச்சுவார்த்தை இல்லாமல் இருந்து திடீரென்று கொண்டாடுதல் ஏற்பட் டால் மற்றவர்கள் சொல்வது. ''இப்ப அவுகளுக்குள்ள ரெம்ப ஆத்தானம் பூத்தானம்!''

**ஆத்துதல்:** அமுக்கிக் கொள்ளுதல். ''கொடுத்த ரூபாயை ஆத்தீட்டான்.''

**ஆதாளி:** குதித்துக்கொண்டே சுற்றிச் சுற்றி வட்டமிடுவது. அருள் அல்லது சந்தோஷமிகுதியால் குதியாளம் போடு வது.

**ஆதிகாலத்துப் பூடு:** வயது இவ்வளவு என்று தெரியாத வங் கிழடுகளை குறிப்பிடுவது.

**ஆந்துசோந்து:** அசந்து சோர்ந்து. ''ஆந்து சோந்து வந்தா, வந்ததும் வராததுமா ஆரம்பிச்சிட்டியா ஒங்கதைய.'' ''ஆந்து சோந்து அக்கா வீட்டுக்கு போனா,அங்கே அக்கா

தூக்கி இவளை மச்சான் மடியிலெ போட்டாளாம்'' —சொலவம்.

ஆந்து போச்சி: முளைத்து மேல்மழை இல்லாமல் கருகிப் போவது.

ஆப்புட்டுக்கிட்டான்: அகப்பட்டுக் கொண்டான்.

ஆப அநியாயம் பாத்து: நியாய அநியாயம் கவனித்து.

ஆமாஞ்சாமி: ''ஜால்ரா.'' எது சொன்னாலும் ஆமாம் போடு கிறது. ''அவனு; அவன் சரியான ஆமாஞ்சாமி!''

ஆய்ஊய்ங்கான்: வெத்து மிரட்டல். ஓசை எழுப்பியே பயப் பட வைக்க நினைப்பது.

ஆய்தல்: இலை தழை பறித்தல். சேகரித்தல். மிதத்தல். ஆயி-பறி. ''இந்தக் கீரையை சீக்கிரம் ஆயி.'' நீரில் நீந்திக் கொண்டு நிற்றல். (நிலைநீச்சு). ''மீன் குஞ்சுக நீரிலெ ஆயிது'' ''தலையிலெ பேனு ஆயிது.''

ஆயக்கால்: சப்பரம் நிற்கும்போது தாங்கி நிறுத்த உதவும் கம்பு. ஆள் புஜத்தின் உயரமிருக்கும்.

ஆயி: அம்மாள். ஆத்தாள்.

ஆயிரத்தை காலே மாகாணி ஆக்குறது : இருப்பதன் அருமை தெரியாமல் செல்வத்தை விரயம் செய்தல். முன்னோர் களின் சம்பாத்தியத்தைத் தொலைப்பது.

ஆயுசு நூறு: ஒருவரைப்பற்றி நினைத்தவுடன் அவர் எதிர்ப் பட்டாலோ, அவரைப் பற்றிய பேச்சை எடுத்தவுடனே அந்த இடத்திற்கு வந்தாலோ ''ஆயுசு நூறு உனக்கு'' என்பது வழக்கு.

ஆரச்சுவர்: ''ஆரைச் சுவர்''—காம்பவுண்டுச் சுவர்.

ஆரம் வக்கிறது: லொட லொட்டையாகிப் போன வண்டிச் சக் கரத்தைப்பிரித்து செம்மைசெய்து திரும்பவும் பொருத்து தல்.

ஆரல்: வீட்டைச் சுற்றிலும் பாதுகாப்பாகக் கட்டப்பட்டிருக் கும் மண்சுவர், மழையில் கரையாமல் இருக்க தட்டை யினால் சிறிய கூரைபோன்று வேய்ந்து பின்னப்படுவது.

**ஆராச்சும்:** ஆராகிலும்—யாராவது. ''ஆராச்சும் வாங்க''

**ஆரிக்கம்:** ஆரோக்கியம். (திடாரிக்கம்—திட ஆரோக்கியம்)

**ஆரிய வித்தை:** லேசில் யாராலும் செய்ய முடியாத வித்தை. ''ஆம, இது பெரிய்ய ஆரிய வித்தியாக்கும்!''

**ஆரைய அளக்கையிலேயே கோரைய அளப்பான்:** ஒரு வேலே செய்து கொண்டிருக்கும்போது மறைவாக லாபம் தேட முயல்வது.

**ஆலவட்டம்:** கவன ஈர்ப்பு.

"வட்ட வட்டப் பாறையிலெ
வரகரிசி தீட்டயிலெ
ஆர்கொடுத்த சாயச் சீலே
ஆலவட்டம் போடுதடி''

— நாட்டார் பாடல்.

**ஆலாத்தி:** ஆரத்தி.

**ஆலாப் பறக்கிறது:** ஒன்றை அடையத் துடிக்கும் பேராவல். ஆலாப்பூச்சி தன் உணவுக்கு பறக்கிற பறப்பு மாதிரி.

**ஆலி:** சிறு தெய்வங்களின் கோயில் முன்பு செய்து வைக்கப் பட்ட பெரிய்ய உருவம். ஒட்டப்பிடாரம் உமையம்மன் கோவில் முன்பும், மேல்மாந்தை, தரைக்குடி அம்மன் கோயில்களின் முன்பும் ஆலி உள்ளது.

**ஆவலாதி:** புகார். குற்றச்சாட்டு. ''ஒம்பேர்ல ஒரே ஆவ லாதியா இருக்கு.''

**ஆவி:** சகவாசம். ''அவன் ஆவியே ஆகாது.''

**ஆவிச்சிக்கிட்டான்:** அபகரித்துக் கொண்டான்.

**ஆவிச்சேத்துக் கட்டிக்கிட்டான்:** ஆரத் தழுவிக்கொண்டான்.

**ஆவியேஆகாது:** நெருக்கம் வேண்டாம் என்பது. ''அவன் ஆவியே எம்மேலெ படப்படாது.''

**ஆவுதுணே:** ''ஆவுதுணேக்கு ஆளில்லே.''

**ஆள் அவுட்:** தீர்ந்து போயிட்டார். சோலி முடிந்தது.

ஆள்பாதி ஏர்பாதி: இரண்டும் திருத்தமாக இருக்கவேண்டும் என்பது.

ஆள்வார்: படப்பில் பொதிக்கு இருபுறமும் இருக்கும் இடம்.

ஆளங்கால்: சாமான்கள் வைப்பதற்காகப் போடும் பலகையைத் தாங்க சுவரில் பதிக்கப்படும் மரமுளைகள்(''ஆலாங்கால்'').

ஆளம்பருசம்: ''அந்தக் குழி ரெண்டாளம் பருசம் இருக்குமே.'' இரண்டு ஆளின் பெரிசு: இரண்டாளம் பருசு.

ஆளாயிட்டா: பூத்துட்டாள். சடங்காகிவிட்டாள். மனுஷியாகி விட்டாள். மேசராயிட்டாள். உக்காந்துட்டாள். குத்த வச்சிட்டாள்.

ஆளு அரைச் சீவனுப் போனுன்: மெலிந்து போனுன். பாதி உடம்பாகி விட்டான்.

ஆளுக்கு ஆள் ஆசைப்படுகிறது: ஆணுக்கு ஆண் அல்லது பெண்ணுக்குப் பெண் பார்த்தவுடன் மோகம் கொள்ளும் படியான அழகு. அவ்வளவு நிறைந்த அழகு.

ஆளும் பேருமா: எல்லோரும்.

ஆன சொகமில்லே: சரியான சுகமில்லே. நல்லபடியான சுகமில்லே.

## இ

இங்கனக்குள்ளெ: இந்த இடத்திற்குள்ளே. ''இப்பொதான் பார்த்தேன் அவனெ; எங்கேயும் போயிருக்க மாட்டான். இங்கனக்குள்ளெதான் நிப்பான்.''

இங்ஙனெ: இவ்விடத்தில். ''இங்ஙனெதானெ வச்சேன்.''

இசுவல்: இடைஞ்சல். இடுக்காட்டம். தொல்லே. ''இசுவல் இல்லாம இருக்கணும்.'' ''அந்த இசுவல்ல யாரு போயிக் குடியிருப்பா.''

இசை: சேர்தல். கச்சிதம். பொருத்தம். பொருந்துதல். ''அந்த ரெண்டு பலகைகளும் ஒண்ணுக்கொண்ணு இசை சேராம தென்னிக்கிட்டிருக்கே.''

**இஞ்சுக் கணக்கு:** ''இஞ்சிக் கணக்கு.'' ரொம்பக் கராலான கணக்கு.

**இட்டகுடி:** பெண் கொடுத்த குடி.

**இட்ட குறி:** வைத்த குறி. கொண்ட லட்சியம். ''நா இட்ட குறி தப்பாதுலே''

**இட்டடி முட்டடி:** எதிர்பாராமல் தோன்றிவிடும் நெருக்கடி. ''ஒரு இட்டடி முட்டடிக்கு அவரு ரொம்ப உதவியா இருப்பாரு.''

**இடக்கு:** ''எடக்கு'', ''எடக்குப்பேசுறது'', ''எடக்கு செய்யிறது'' முறையாகப் பேசாமல் வித்தியாசமாகப் பேசுவது. அந்த வித்தியாசத்தில் கொஞ்சம் நையாண்டி கலந்திருக்கும். ''கோயிலுப்பட்டிக்கு எப்பப் போறே?'' இது கேள்வி. ''கோளுப்பட்டிக்கா...... போணும் போணும்'' இது பதில்! ''ஏலெ, கோயிலுப்பட்டிக்கு எப்பொப் போறேண்ணு கேட்டா எடக்கா பேசுதெ.''

**இடங்கல் முடங்கலா:** சிக்கலாக. ''இடங்கல் முடங்கலாப் போயி ஆப்புட்டுக்கிருவான்.''

**இடசந்து:** வீட்டைக் கட்ட ஆரம்பிக்கும் போது ஏற்பட்ட இடத்தில் ஒன்றரை அடி இடத்தை கழித்து விட்டுத்தான் கட்டுவார்கள். அதே போல், அடுத்த வீட்டுக்காரர் வீடுகட்டும் போதும் ஒன்றரை அடி போட்டுத்தான் கட்டுவார். இதனல் அந்த இடத்தில்—இடையில்—ஒரு மூன்றடி அகலமுள்ள சந்து ஏற்படும். இதற்கு இடசந்து (இடைசந்து) என்று பெயர்.

**இடிதடியன்:** இடித்து தள்ள முடியாத முரட்டு ஆசாமி. ''ஆள் சரியான இடிதடியன் மாதிரியில்ல இருக்கான்.''

**இடி மேல் இடி கொடை மேல் கொடை:** மாட்டுச் சுழி. இது மாட்டின் நெற்றியில் கீழும் மேலுமாக இரண்டு சுழிகள் கொண்டது. இந்த மாட்டை வாங்கியவனுக்கு துன்பத்துக்கு மேல் துன்பமாக தொடர்ந்து வரலாம்; அல்லது செல்வத்துக்கு மேல் செல்வமாக வந்து குவியவும் செய்யலாம்.

**இடியாப்ப உழக்கு:** சேவை பிழியும் கருவி, நாங்கிள் உழக்கு.

**இடும்பன் சாமி:** காவடி எடுத்து ஆடுபவரோடு சேர்ந்து கொண்டு ஆடும் துணைச்சாமி.

**இடும்பு:** வம்பு. வேண்டுமென்றே செய்வது. ''இடும்பனுக்கு வழி இருக்கிறவன் தலைமேல்''—சொலவம்.

**இடைதரிசு போட்டு உழுதல்:** நிலத்தை ஒழுங்குபடச் சேர்த்து உழாமல் சிறிது சிறிது இடைத்தரிசுபோட்டு உழுவது சில சமயங்களில் நல்லதாக அமையும். முக்கியமாக பருவ உழவு இல்லாமல் இருக்கும்போது, மழைபெய்து பக்கு வப் படட்டும் என்று நினைக்கிறபோது, இப்படி. ''எட் டேரு கட்டி உழுக இடைத்தரிசு போட்டுழுக'' என்கிறது நாட்டார் பாடல்.

**இடைவார்:** ''பெல்ட்''; தோலினால் ஆனது.

**இண்டம் புதர்:** இண்டு என்று ஒருவகை முள்ச்செடி. புதராய் மண்டி வளர்ந்திருக்கும். அதனுடைய முள் அமைப்பு ஒரு வினோதமானது. கையை உள்ளே விடும்போது ஒன் றும் செய்யாது; வெளியே இழுக்கும்போது விடாது. தூண்டிலை விழுங்கிய மீனின் கதைதான். இந்தப் புதருக் குள் ஒருவன் தலையைக் கொடுத்துக் கொண்டால் அவன் பாட்டைச் சொல்ல வேண்டாம்.

புருஷனைப் பறி கொடுத்துவிட்டு தக்க துணையும் ஆதரவும் இல்லாமல் துன்புறும் பெண் தன் நிலையை இப்படிச் சொல்லி அழுகிறாள்.

''இண்டம் புதங்காடு—நீங்க
இனம் பெருத்த ஐக்கோடு—உங்க
இனமெல்லாம் ஒண்ணல்லோ—நான்
ஏலக்காய் துண்டுபட்டேன்.'' —ஒப்பு. (புதம்-புதர்)

**இண்டாவி:** சக்தி. ''அங்கே போயிச் சேர்றதுக்குள்ளே நம்ம இண்டாவி அத்துப் போயிரும்'' (வெண்டாவி)

**இண்டு இடுவல்:** இண்டம் புதரின் இடுக்கு, இடை.

**இணுக்கு:** கிள்ளி வைக்கப்பட்ட ஒரு பகுதி. ''வெத்திலை ஒரு இணுக்குக் கொடு.''

**இணுங்குதல்:** கிள்ளிப் பறித்தல். ''காதை இணுங்கிருவேன்.''

**இத்தப் பெரிய:** இம்புட்டுப் பெரிய. இவ்வளவு பெரிய. ''இத்தப் பெரிய பிள்ளெ அழலாமா?''

**இத்தாம் பெருசு:** அளவில் பெரியதைக் குறிப்பிடும் சொல். ''இத்தாம் பெரிசு இம்மாம் பெரிசு'' என்று சொல்லி கைகளை அகலித்துக் காட்டுவார்கள், முக்கியமாகப் பாம்பைப் பார்த்து விட்டால்!

**இத்தினிக்காணு:** இவ்வளவுபோல. ரொம்பச் சிறிய்ய. இம்புட்டுப் போல. இத்துனூண்டு. கடையில் பண்டம் வாங்கித்திங்க பிள்ளைக்கு பருத்தி ஒரு கூறு கொடுக்கிறாள் தாய். ''ஆம இத்தினிக்காணு; வேண்டாம் எனக்கு'' எனச் சொல்லி நிராகரிக்கிறாள் மகள்.

**இத்து:** நைந்து. கெட்டு. ''கயிறு இத்துப் போச்சி.''

**இதம் பதமா:** முரட்டுத்தனமாயில்லாமல் நடந்து கொள்வது- வேலை, மனம், பொருள், சம்பந்தப்பட்ட விஷயங்களில். "கொஞ்சம் இதம்பதமா நடந்துகிடனும்டா ஐயா அவகிட்டெ!''

**இதுக்குள்ளெ:** இதற்குள்ளாக. இந்த நேரத்திற்குள்ளாக.

**இந்தமானைக்கு:** இப்போ. ''இந்த மானைக்கி எனக்கு எப்படித்தான் வந்துட்டுப் போகுது.'' இப்படியே. ''இந்தமானைக்கு இப்படியே போனா அங்கெ ஒரு சுமைதாங்கி வரும். அதிலெருந்து வடக்காமல்த் திரும்பினா அந்த இடந்தான்.''

**இந்தவாட்டி:** இந்தத் தடவை.

**இந்தோர்ர:** கனமான பொருளை தம்பிடித்து தூக்கும்போது சொல்லும் வார்த்தை. ''இந்தோல்.'' இந்தச் சொல்லைத் தாளம் தப்பாமல் அனைவரும் சொல்லிக்கொண்டே பலம் கொடுத்து ஒன்றுபோல்த் தள்ளும்போது அசையாத பாரங்களும் அசைந்து நகர ஆரம்பிக்கும்.

**இம்புட்டா:** சுருங்கி. சிறியதாக. "முகம் இம்புட்டாப்போச்சி''

**இம்புட்டு:** இவ்வளவு. ''இம்புட்டுத்தான் இண்ணைக்கி.''

**இமைதட்டாம:** ''நெமை தட்டாமெ.'' இமைதட்டாமல் காரி

யத்தை முடிக்கிறது. பார்த்துக் கொண்டிருக்கும்போதே அது எப்படி நடந்து முடிந்தது எனத் தெரியாமல் காரியத்தை நடத்தி முடித்து விடுவது.

இரங்கொத்தி: ஒரு தொகைக்கு குறிப்பிட்ட வருடங்களுக்குப் புஞ்சை எனப் பேசி விடுவது. அந்த வருடங்கள் முடிந்தவுடன் புஞ்சையை புஞ்சைக்காரனுக்கு விட்டுவிட வேண்டும்.

இரண்டுல ஒண்ணு: இரண்டில் ஒன்று — வெற்றி அல்லது தோல்வி. சாவு அல்லது வாழ்வு.

இரவு: இரவல். ''இரவு கொடுத்த நாச்சியா இருந்து அழ விடமாட்டா'' —சொலவம்.

(ரெண்டு பெண்கள் இழவு வீட்டுக்குப் போனார்கள். ஒருத்திக்கு நல்ல சேலை இல்லை. மற்றவள் தன்னுடைய சேலைகளில் ஒன்றை இவளுக்கு இரவலாகக் கொடுத்தாள். இரண்டு பேருமே இழவு வீட்டில் போய் அழுதார்கள். மூக்கைச் சிந்திச் சிந்தி தனது சேலையில் துடைப்பது மற்றவளுக்குப் பிடிக்கவில்லை. சரியாக அழவிடாமல் சீக்கிரமாக இவளைக் கூட்டிக் கொண்டு வந்து விட்டாள் அந்த இரவு கொடுத்த நாச்சியா.)

இரவைப் பட்டை: பனைஓலைப் பட்டையால் கிணற்றில் தண்ணீர் சேந்துவது—வாளியால் கிணற்றில் நீர் இரைப்பது போல். இந்த இரவைப்பட்டை சுமார் நாலு லிட்டர் வரை கொள்ளக் கூடியது.

இரவை மரம்: ஓணி, பள்ளத்திலிருக்கும் தண்ணீரை மேட்டுக்கு ஏற்றும் ஒரே ஆள் இயக்கும் மரத்தினாலான கருவி. பெரிய்ய கரண்டி போன்று இருக்கும். இது கூம்பாக நிறுத்தப்பட்ட மூன்று கம்புகளின் மேலிருந்து தொங்கும் கயிற்றில் கட்டப்பட்டிருக்கும்.

இருக்குத்தான தரை: நிலத்தின் தன்மை. பொட்டலுமில்லாமல் தொய்வுமில்லாமல் இரு சீராய் இருக்கும் தரை.

இருட்டுக் கசம்: மேகங்கள் அடர்ந்து நட்சத்திர வெளிச்சங்கூட இல்லாத, எதையும் காணமுடியாத கடும் இருட்டு. (கசம்—ஆழங்காண முடியாத.)

இருதாழ் சங்கிலி: வண்டிப்போலேயும் மேக்காலேயும் இணைக்கும் சங்கிலி. ''விருதாச் சங்கிலி.''

இருப்பு இருந்திருச்சி: இருப்பு இறங்கிவிட்டது. அஸ்திவாரம் இல்லாத வீடு ஒரு பகுதி தரைக்குள் இறங்கிக் கொள்வதைக் குறிப்பிடுவது.

இருப்புச் சட்டம்: வண்டியோட்டி உட்காருவதற்கான மூங்கிலில் ஆன சட்டம்.

இருவாய்: மலம் இறங்காமல் இறுகிப் போதல்.

இருளடிச்சிருச்சி: சிறு குழந்தைகள் தண்ணீரிலோ, கண்ணாடியிலோ தங்கள் உருவத்தை பார்த்து பயந்து போனால் கால்கை விளங்காமல் போய்விடும் என்பது.

இலங்குது: விளங்குதல். இகழ்ச்சி பாவமாகவும் இந்த வார்த்தை பிரயோகமாகும். ''மூஞ்சி இலங்குது.''

இல்லி: [சிறிய. ''இல்லிக்கண்ணு வட்ட சொளகு'' (சொளகு: முறம்) யானையைப் பார்த்துக் குழந்தைகள் இப்படிச் சொல்லும்.

''இல்லேண்ணு எம்பேர மாத்திக் கூப்பிடு''

''இல்லேண்ணு ஒருபக்கத்து அருப்பத்தை எடுத்துருரேன்''

''இல்லேண்ணு... சொடக்குப் போட்டுக் கூப்பிடு''

''இல்லேண்ணு... நான் ஒருத்தனுக்கு பெறக்கலே''

இந்த நான்கு பிரயோகங்களும் எதிராளிக்கு சவால் விடும்போது கூறுவது.

இவுக: இவர்கள்.

இழவு கொடுக்க மாட்டேனுட்டா: கட்டி அழவில்லே. தன்னோடு கட்டி அழ இசையமாட்டேன் என்று விட்டாள். (பெண்டுகளுக்குள் குறை சொல்லி சடைத்துப் பேசிக்கொள்வது.)

இழவு கொடுப்பாள்: இழவு வீட்டில் கட்டி அழ இருகைகள் நீளுகின்றன. இஷ்டமில்லாவிட்டாலும் அதை ஏற்றுக்கொள்கிறதுதான் 'மருவாதி'. இது ஒரு செல்ல வசவும் கூட. ''என்ன இளவு கொடுப்பாளைக் காணுமே!''

இழுத்துக்கெட்டு: கிளித்தட்டு விளையாட்டில் தள்ளிநின்று எதிரியை மறிக்குமாறு கூறுதல். 'தட்டை இழுத்துக் கெட்டு'

இழுபறி தலைச்சுமை: எதுவும் முடியாமல் காரியம் இழுபட்டுக் கொண்டே போவது.

இளக்காரம்: லேசாக நினைத்தல். ''ஆளோட இளக்காரத் தைக் கண்டுல்லே ஆவரையும் பீவாரியடிக்கி.''

சலுகை. செல்லம். ''பயலுக்கு நீ ரொம்ப எளக்காரம் கொடுத்திட்டெ.''

இளங்கொடி: ஈனுதலைத் தொடர்ந்து கால் நடைகள் இடும் நஞ்சுக்கொடி.

இளமதியம்: 11 மணி உத்தேசம்.

இளவட்டக்கல்: பாரமும் உருண்டையுமானகல். சுமார் 150 முதல் 200 கிலோவரை எடை கொண்டது. பொது இடத் தில் கிடக்கும் அந்தக் கல்லை ஒரு இளவட்டம் எடுத்துத் தோள் ஏற்றி பின்பக்கமாகத் தள்ளி விட்டுவிடவேண்டும். பலத்தைச் சோதித்துப் பார்க்கும் கல்.

இளவட்ட வெத்தலை: மூனுமாச விருந்து உண்ட புதுமாப் பிள்ளை இளவட்டக் கல்லைத் தூக்கமுடியா விட்டால் அவரி டமிருந்து வசூலிக்கும் வெற்றிலை.

இளிச்சாக் கொம்பு: மாட்டுக்கொம்பின் ஒரு அமைப்பு.

இளிப்பு: சிரிப்பைக் கண்டு வெறுத்துச் சொல்லுவது.

''என்ன இளிப்பு மானம் வேண்டிருக்கு.'' ''இளிக் காதே.'' ''இளிச்சிட்டா எப்படித்தான் இருக்கு; பூளல்லெ மிளகாய் வச்சமாதிரி.''

இளுகுதல்: கவனமில்லாமல் தேய்த்தல். வெற்றிலைபோட்டு முடித்து கைவிரலிலுள்ள மீதிச்சுண்ணம்பை எங்காவது பசக்கென்று தேய்த்துவிட்டுப் போய்விடுதல்.

''சமர்த்தன் தயிரையும் குடிச்சிட்டு இருந்தவன் வாயி லெல்லாம் இளுகிட்டுப் போய்ட்டானும்!'' — சொலவம். இருந்தவன் — தூங்கிக் கொண்டிருந்தவர்கள்.

''இறங்கு துறையிலேயே நீச்சலடிச்சா?'': ஒரு காரியத்தை ஆரம்பிக்கும் போதே பெரிய இடைஞ்சல்கள் ஏற்பட்டால் இப்படிக் கூறுவது.

ஆற்றைக்கடக்க இறங்குகிறோம். முதலில் கரண்டைக் காலளவு தண்ணீர். அப்புறம் முழங்காலளவு, இடுப்பளவு மார்பளவு, கழுத்தளவுவரை நடந்து கடந்தபின் நீந்தியும் கடக்க வேண்டியதிருக்கலாம். அதுவல்லாமல் இறங்கிய உடனேயே நீச்சலடிக்க வேண்டிய நிலையேற்பட்டால் எப்படி கடக்கப் போகிறோம் என்ற மலைப்பே ஏற்படும்.

இறுக்கான்: கதிர் வெளியே தள்ள முடியாமல் நின்று விடும் ஒரு நோய்.

இறுக்கு: குத்து. ''இந்த மானிக்கி ஒரு இறுக்குவிட்டா அம்புட்டுத்தான்.''

இறுமான்: பெருச்சாளியில் ஒருவகை. படப்புக் காட்டில் நாற்றுத் தட்டையை வெட்டிப் போட்டுவிடும். தோட்டத்தில் பயிர்களையும் வெட்டிப் போட்டுவிடும்.

இனங்கனமா: இனம் — செல்வப்பெருக்கு.
கனம் — நல்ல ஓங்குதாங்கு. (உயரமும் கனமும்)
''ஆள் இப்பொ நல்...ல இனங்கன மாயிட்டாரு''

## ஈ

ஈ ஓட்டுதல்: தொழில் மந்தமாகி விடும் போது சொல்கிற வழக்கு. ''தம்பி யாவாரம் தொடங்கினனே எப்பிடி இருக்கு?''

''அத ஏங்கேக்கீக; ஈ ஓட்டிக்கீட்டு இருக்கான்!''

ஈக்கி: தட்டையில் உரித்த (அல்லது) உரிந்த தோலின்பகுதி.

ஈக்குடி: உளுந்தங்காயிலும், நெல்ப்பயிரில் தானியமணி பால் கோர்க்கும் போதும் ஒரு வகை ஈ வந்து ஊட்டி விடும். அதாவது சாரத்தைக் குடித்துவிடும்.

ஈச்சாங்கத்தி: நீளமான கம்பில் இணைக்கப்பட்ட பாளையறு வாள் போன்ற கத்தி. உடைமரம் போன்ற மரங்களில் எட்டநின்று கொண்டு மணிகைத் தண்டி கொப்பைக் கூட அறுக்க உதவும்.



ஈசானியமூலை: உழவு, களையெடுப்பு போன்றவை இங்கு ஆரம்பிப்பது. (வடகிழக்கு)

ஈடு சோடான ஆளு: ஈடும் ஜோடியும் இல்லாத, வாட்டசாட்டமான ஆள்.

ஈத்தளையுது: மாடு ஈனுவதற்கு வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறது.

''எருமை ஈத்தளைச்சிக்கிட்டிருக்கும் போது கிடா பயிராக வந்து நிண்ணுச்சாம்!'' — சொலவம்.

ஈப் பூந்திருக்கு: ஆடு மாடுகளின் குதம் வழியாக ஈ உட்புகுதல். உட்புகுந்த ஈ சாகும்வரை ஆடு, மாடுகள் நிலை கொள்ளாமல் தவிக்கும்.

ஈயப் பாத்திரம்: அலுமனியப் பாத்திரம்.

ஈயமாத் துடிச்சிட்டான்: ஈயம் கொதிக்கும் போது தெரியும் துடிப்பை வலியால் துடிப்பவனுக்கு ஏற்றிச் சொல்லல்.

ஈயாப்பத்தி: ஈவதே இன்றிப் பற்றுவதால் ஈயாப்பத்தி. வாங்கிக் கொள்வான்; கொடுக்க மாட்டான்.

''எங்க வீட்டுக்கு வந்தால் என்ன கொண்டு வருவாய்?; உங்க வீட்டுக்கு வந்தால் என்ன கொடுப்பாய்?'' என்பவன்.

ஈரக்குழல்தட்டை: குழல் மூங்கில்த்தட்டை. பெரிய சோளத் தட்டையை விட கொஞ்சம் பெரியதாயிருக்கும்.

ஈரங்கி: ஆர்க்கியூமெண்ட் வாய்தா. (HEARING—ஈரங்கி)

ஈரச்செமிச்சுப் போனான்: ஒரு பேரிழப்பான விஷயத்தைக் கேள்விபட்டவுடன் வாய்விட்டு அழ முடியாமலும். மனதைவிட்டு மேற்படி துயரச் செயலை நீக்கிக் கொள்ள முடியாமலும், மனதிலேயே வைத்து வேதனைப்பட்டு, அந்த வேதனையே அவனை அணுஅணுவாய் சிதைத்துச் செயலற்றவனாக்கி விடுவது.

ஈரடிக்காய், ஈரடிப்பழம்: கோலி விளையாட்டில் இரண்டு காய்களை ஒரே தடவையில் அடித்து விட்டால் சொல்வது.

ஈராங்கம்: வெங்காயம். ''ஈராங்காயம்.''

ஈரு: பேன்முட்டை. ''ஒய்யாரக் கொண்டையாம் தாழம் பூவாம் உள்ளேஇருக்குமாம் ஈரும் பேனும்''—சொலவம்.

ஈருசு: மானம் ''கொஞ்சமாவது ஈருசு வேண்டாம்."

ஈருசுரு: கர்ப்பிணி ''ஈருசுருக்காரி''

ஈருவலி: தலையில் ஈரு உருவ உதவும் மரத்திலான கருவி (ஈரு வாங்கி)

ஈருள்ளி: வெங்காயம். உள்ளி.

ஈரெட்டாச் சொல்றுன்: சந்தேகமாகச் சொல்றுன்,

ஈவு சாவு: நீக்குப் போக்கு. விட்டுப் பிடித்தல்.

ஈளக்கம்: இழுத்தாற்போல் தயக்கமான பேச்சு. ''இந்த ஈளக்கம் தாளக்கந்தானே உதவாதுங்கெ''

ஈளவத்தி: ஈரு பற்றியவள். வசவு. ''ஈளவத்தி முண்டை.''

ஈறுக்கை: இரண்டு ஆக்கை. இரண்டு நார்களைச் சேர்த்து முடிந்திருப்பது.

ஈனக்கிரையம்: மிகமிகக் குறைந்த விலைக்கு கிரையம் செய்தல்.

## உ

உக்களம்: காட்டில் காவல் இருப்பவர்கள் படுத்துக்கொள்ள வும் உட்காரவும் காற்றுக்கு மறைவாக இருக்க ஒரு ஓலை வரிசையில் நிறுத்தி வைத்திருப்பது.

உக்கார்ந்திட்டாள்: சமைந்துவிட்டாள்.

உக்கி: முட்டுக்கால் தரையில் ஊன்றிப் போடப்படும் தோப் புக்கரணம்.

உங்கபேரைச்சொல்லி: மரியாதைச்சொல். ''என்ன, எப்படி இருக்கீங்க?'' ''என்னமோ இருக்கோம், ஒங்க பேரைச் சொல்லி.''

உச்சாணிக்கொப்பு: உச்சிக் கொப்பு.

உஸ்சுண்ணு உக்கார: வேலையின் கடினத்திலிருந்து மீண்டு, கொஞ்சம் அலுப்புத்தீர மூச்சிழுத்துவிட. ''சோலியெல்

லாம் முடித்து இப்பத்தான் உஸ்சுண்ணு உக்காந்திருக்கேன்.''

உச்சுவா: விடுமுறை. ''லீவு.''

உசத்தி: உயர்ந்த பெரிய. ''என்னைவிட அவன் என்ன உசத்தி!''

உசுக்காட்ருன்: ஏவி விடுகிருன். ''பன்றிமேல் நாயை உசுக்காட்டினுன்.''

உசுப்பிராணி: உயிர்பிராணி.

உசுப்பு: எழுப்பு. எழுப்பிவிடு.

உசுரமாய்ச்சுக்கிருவேன்: தற்கொலை செய்து கொள்வேன்.

உட்கடை: ரெவின்யூ கிராமங்களில் ஒரு தாய்க்கிராம எல்லைக்குள் பல கிராமங்கள் அடங்கியிருக்கும். பத்திரம் எழுதும்போது ''உச்சிநத்தம் கிராமம், கொக்கிரங்கோட்டை உட்கடை'' என்று எழுதுவார்கள்.

உடக்காய்ச்சல்: சூடு பிடித்துக்கொண்டு மூத்திரத் தாரையில் காந்துதல். நீர் கடுப்பு. உடைக்காச்சல்.

உடம்பு எப்படி இருக்கு... பிடிச்சி விடணுமா?: எதிரியை எச்சரிப்பது.

உடாஸ்த்து: மீறி. வல்லுரட்டியாக.

உடுமாத்து: மாற்றி உடுத்துக்கொள்ள இருக்கும் துணி.

உடையடித்தல்: காய் அடித்தல். உடை=கால்நடையின் விரை.

உடையதாரி: சொத்துக்கு உடையவன்; உரியவன்.

உண்டாகியிருக்கிருள்: ஆரம்ப கர்ப்பநிலையைக் குறிக்கும் சொல்.

உண்டாதல்: திடப்படுதல். ''ஆள் நல்லா உண்டாகணும்,''

உண்டியப்பெரட்டு: உண்டியல் புரட்டு.

உத்தரன்: தாங்கும் சக்தியுடையவன்,(உத்திரம் என்பது வீட்டைத் தாங்கும் கட்டை) ''அதுக்கெல்லாம் நான் உத்திரனில்லை.''

உத்தி: சமஜோடி. ''உத்திக்கு உத்தி போட்டுப் பார்த்திருவோம்."

உதவி: கால்நடையின் வயிற்றுக்குள் இருந்து அசைபோட வாய்க்கு வரும் பொருள். 'ஒதவி'

உதாரம்:திடம். ''உதாரமாகப் பேசு''

உதுத்தகழுதை: மானம் ரோசம் வெட்கம் யாவற்றையும் உதிர்த்து விட்டவன். ''உதுத்த கழுதை ஊருக்கெல்லாம் பெரிய கழுதை.''

உதைப்பு: குறைதல். ''என்னப்பா, கணக்குலெ நாலு ரூபா உதைக்கே?'

உப்பங்காத்து: தென் கிழக்கிலிருந்து வீசும் கடற்காற்று. செடிகளுக்கும் ஜீவராசிகளுக்கும் ''டானிக்'' போன்றது.

உப்பு: எல்லே. விளையாட்டில் வெற்றிபெறும் எண்ணிக்கையை இத்தனை உப்பு இத்தனை எல்லே என்று கூறுவது.

உப்புக்கண்டம்: மிஞ்சிய மாமிசத்தை உப்பிலும் மஞ்சளிலும் தோய்த்துக் காயவைத்து 'பொடீசாய்' நறுக்கி திரும்பவும் காய வைத்து வேண்டியபோது எண்ணெயில் பொரித்து உணவுக்கு வெஞ்சனமாக உபயோகப்படுத்துவது.

உப்புக்கல்லு பெறமாட்டான்: ஒன்றுக்கும் உதவமாட்டான்.

உப்புச் சாக்கு: உபயோகமில்லாதவன். உப்பு இருந்த கோணிச் சாக்கு ஒன்றுக்கும் உதவாமல் கெட்டுப்போய்விடும்; உபயோகத்துக்கு ஆகாது என்பது.

உப்பு-பழம்: எல்லே. உப்புவைத்தல் என்றொரு விளையாட்டு உண்டு.இரு கட்சிகளாகப் பிரிந்து எதிர் எதிர்த் திசையில் போய் மறைவிடங்களில் மண்ணுல் சிறுசிறு குப்பலாகவைப்பார்கள். இதற்கு உப்பு என்று பெயர். ஒரு கட்சி வைத்து முடிந்தவுடன் முடிந்தது என அறிவிக்க, ''கல்கல்கல்'' என்று ஒலி எழுப்புவார்கள்.எதிர்த் தரப்பினரும் இச்சத்தத்தைக் கேட்டு ''கல்கல்'' என்று சப்தத்தோடு வருவார்கள். ஒருவர் வைத்த உப்பை மற்றவர்கள் கண்டுபிடித்து அழிப்பர். அழியாமல் விட்ட உப்பை எண்ணி யார் ஜெயித்தது என்று பார்ப்பார்கள். ''நாலு உப்பு வச்சிருக்கோம்.''

உப்பு மூலை: தென் கிழக்கு மூலை.

உம்மை செய்வியா: சத்தியம் செய்தல். ஒரு பொருளை எடுத்த தாகவோ. அல்லது வித்தியாசமாகப் பேசியதாகவோ சந்தேகம் ஏற்படும்போது சந்தேகம் சாட்டப்பட்டவன் தான் நிரபராதியாக இருந்தால் தெய்வ சன்னதியில் 'நா இப்படிச் செய்யலே அல்லது நா இப்படிச் சொல்லலே, என்று சொல்லி' எரியும் சூடத்தை அணைத்து விடுதல்.

உயிர்த்தழைவு: நாற்று அல்லது நெல் அறுத்தபின் தளிர்ப்பது. மறுதாம்பு.

உரப்பட்டி: குத்தும்போது அரிசி சிந்தாமல் இருக்கும்படியாக உரலின் மேல் வைத்துக் கொள்வது; உரல்ப்பெட்டி.

உரி: களை. அவிழ். ''நடுத்தெருவிலெ வச்சி வேட்டியெ உரிஞ்சிட்டா.''

உருக்குத்தி: அம்மை குத்திக் கொள்வது.

உருட்டுப்பொதி: உத்தேசமாக. தோராயமாக. சுமாராக. குத்துமதிப்பாக.

''இந்த அம்பாரத்திலெ இருக்கிற பருத்தி எத்தனைபொதி இருக்கும்?'' ''உருட்டுப் பொதியாச் சொல்றது கஷ்டம்''

உருண்டைச்சோறு: சோற்றுக் கலயத்தினுள் நீத்துப் பாகத்தில் மிதக்கவிடும் தேங்காய்ப் பருமனுள்ள கம்மஞ்சோற்று உருண்டைகள்.

உருத்து: அக்கறை. தனிகவனம்.

உருத்துது: அழுத்துது. நெருடுதல். ''அந்த விஷயம் என் மனசை உருத்திக்கிட்டே இருக்கு.''

உருப்பட்டாப்லெதான்: உருப்படாது என்பது.

உருப்பட்டுப்போனான்: ஒப்பேற மாட்டான் என்று கைவிடப் பட்டவன் திருந்தி சரிப்பட்டு விடுதல்; குணம் ரீதியாக.'' ''ஆளு உருப்பட்டுப் போனான்;'' உடம்புரீதியாக.

உருமால்: வலைபோன்ற துணியால் கட்டும் தலைப்பாகை. முக்கியமாக திருமணத்தின்போது ஆண் கட்டுவது.

**உருவாஞ்சுருக்கு:** எளிதில் அவிழ்த்துவிடும் முறையில் போடப் படும் சுருக்கு.

**உருவிவிட்டது போல:** ஒரே சீராக.

**உரையேறுது:** சபையில் அல்லது நாலுபேருக்கு மத்தியில் ஏற்றுக்கொள்ளப் படாது. எடுத்துக்கொள்ளப் படாது. ''நாம சொல்றது உரையேறுமா?''

**உலக வழக்கம்:** மனிதச் செயலுக்கு என்று ஒரு போக்கு இருக் கிறது. சமயத்தில் மனிதனுக்கே அது புரிவதில்லை. அப் புறம்தான் புரிகிறது இதுதான் உலகத்தின் வழக்கம் என்று.

**உலகாசாரம்:** உலக வழக்கம். ''ஒரு தடவை தப்பு பண்ணினுல் உலகாசாரம்.''

**உலயங்கெட்ட:** உபயோகம் இல்லாத.

**உலுப்புதல்:** பிடித்து ஆட்டுதல் அல்லது குலுக்குதல். ''பழம் உலுப்புருன்.'' ''தலை மயிற்றைப் பிடித்து உலுப்பி னுன்''

**உலை வச்சிட்டான்:** காரியம் அனைத்தையும் கெடுத்திட்டான்.

**உவத்திரியம்:** உபத்திரவம். ''உவத்திரியம் புடிச்சபய.''

**உவர் மண்:** சலவை செய்ய உபயோகிக்கும் மண்.

**உழக்குலேயும் குத்தி செருப்பிலேயும் குத்தி:** ஏதாவது ஒரு பக்க மாக நிற்காமல் இரண்டு பக்கத்துக்கும் பேசுதல்.

**உழவு:** மாட்டின் வயதைக் குறிக்கும் சொல். ''நாலு உழவு இருக்குமா?'' ''இல்ல, ரண்டு உழவுதான் இருக்கும்.''

**உழவு தும்பு:** உழும்போது நுகந்தடியோடு மாட்டைப் பிணைக் கும் கயிறு.

**உழவு வடம்:** உழும்போது, நுகந்தடியையும் ஏரையும் சேர்த் துக் கட்டுவதோடு, ஏரையும் மேழியையும் கலப்பைக் குத் தியையும் ஆக இந்த நான்கையுமே சேர்த்து இணைக்க உதவும் ஒரே கயிறு. எருமைத் தோலினுலும், பனை நார் அகணியினுலும், தேங்காய் நாரினுலும், ஆக, மூன்று விதமான உழவுவடங்கள் உண்டு.

உள்வாய்: சக்கரம் உருளும்போது குடத்தினுள் அச்சு உராயு மிடம்.

உள்வாய்ப் பூண்: சக்கரத்தின் குடம் உருளும்போது அச்சினுல் ஏற்படும் தேய்வைச் சமாளிக்க குடத்தினுள் வைக்கப் படும் பூண்.

உளத்துதல்: அமைதியில்லாச் சலனம். விடுவித்துக்கொள்ள முயலுதல். பிடிக்குள் அமைய மறுத்தல்.

ஆரோக்யம் மிகுந்த குழந்தைகள் பிடிக்குள் இருக்க மறுத்து உளத்திக்கொண்டிருப்பார்கள்.
சேர அணைக்கும்போது ஊடல் காரணமாக உளத்துதல்.

உளிக்கொம்பு: மாட்டுக்கொம்பில் ஒரு வகை.

உளுக்குதல்: கை-கால் சுளுக்குதல்.

உறக்கச் சடைவு: தூங்காததினுல் ஏற்படும் அசதி. தூக்கம் தொடங்கிவிட்டதன் அறிகுறி.

உறக்காட்டுதல்: உறங்கச் செய்தல்.

உறம்: கைக் குழந்தைகளுக்கு ஏற்படும் நோய். காதைப் பிடித்துப் பார்த்தால் குழந்தை அழும். இதுதான் இந் நோய் அறியும் முறை. குழந்தைக்கு மாமன் முறை உள்ளவர் கட்டி அவிழ்த்துப்போட்ட வேஷ்டியில் குழந் தையைப் போட்டு உருட்டுவார்கள்.

உறுதல்: உறுதி. ''கலியாணம் உறுதலாய்ட்டது.''

உறுப்பாங்கட்டி: நல்ல கரிசலில் மழைபெய்து சேருகிவிடும். அதில் நடந்து நடந்து அந்தக் களிமண் உலர்ந்து சிறு சிறு கட்டிகளாகிவிடும். பதமிருக்கும்போது மெதுவா யிருந்த களிமண் உலர்ந்தவுடன் சிறு சிறு கட்டிகளாக— கடுமையானதாக கால்களை உறுத்தும். அந்தக் கட்டிகள் லேசில் உடையாது.

உறுமிப்பு: வேக்காடு. புழுக்கம்.

உறுமி மேளம்: வளைந்த குச்சிகொண்டு ஒரு பக்கத்தில் தேய்ப்பதால் எழும் உறுமல் ஓசை கொண்ட மேளம்.

கவுண்டர்களின் கம்பளத்தார்களின் நல்லது பொல்லது களில் இசைக்கப்படும் தனீ வாத்தியம்.

உன்னி: ஆடு மாடுகளுக்கு பற்றும் பேன்.

## ஊ

ஊக்குருவி: ஊர்க்குருவி.

ஊசாட்டம்: ஒற்று அறிவது. ''மெல்ல வந்து ஊசாட்டம் பாக்கான்.''

ஊசிக்கால்: கமலேயில் நட்டிற்கு நிற்கும் கம்பு.

ஊட்டி: பன்றி. கழுத்து. ''ஊட்டியைத் திருகி விடுவேன் ஏதாவது சொன்னயாளு.'', ''ஊட்டி தெறிக்க திங் கான்ல்ல...''

ஊட்டு கொடுக்கிறது: காவு கொடுத்தல். பலிகொடுத்தல் இரத்தமாக.

ஊடதடுக்க : ஊடே ஊடே. எப்பவாவது.

ஊடாமாட: காரியத்துக்கு இடைஞ்சலாக. ''இவன் ஒருத் தன் ஊடாமாட வந்து விழுந்துக்கிட்டிருக்கான்.''

ஊண்டி: ஊன்றி. ஊணி. ''கையெ ஊண்டி எந்திரி.''

ஊணு கம்பு: கட்டை வண்டியில் தடுக்குகள் நிற்பதற்குஆதார மாக வண்டியின் சட்டத்தின் துவாரங்களில் நிறுத்தி வைத்திருப்பது.

ஊப்பரை: உதவாக்கரை. ''ஊப்பரைப்பய''

ஊமை அடி: ''ஊமக்காயம்''—ரத்தம் வராத அளவில்படும் பலமான அடி.

ஊமைக் குசும்பு: நல்ல பிள்ளைபோல் இருந்துகொண்டு வத்தி வைத்தல்.

ஊமைக் குழலு: ஒத்து. நாதஸ்வரத்துக்காக ஊதும் ஒத்து வாத்யம்.

ஊர் ஒடுங்கீரிச்சி: ஊர் தூங்கிவிட்டது. ''ஊர் அருவம் ஒடுங் கீரிச்சி''

ஊர் ஒடுங்குற நேரம்: ஊர் தூங்கச் செல்லும் நேரம். உத்தேச மாய் 9 மணி.

ஊர்க்கட்டு: ஊர் ஒழுங்குமுறை. ஒற்றுமை.

ஊர்க்காவல்: ஊர்க்கெல்லாமான பொதுக்காவல். கொண் டிக்காவல்.

ஊர்க்கால் மாடு: மேய்ச்சலுக்காகத் திரட்டப்பட்ட ஊர்மாடுகள் அனைத்தும் கொண்ட மந்தை.

ஊர்சாட்டுதல்: கிடுகெட்டி அடித்து ஊருக்குச் செய்தி அறி வித்தல்.

ஊரக்கருவாடு: கீறி உப்பு வைத்துப் பதப்படுத்தப்பட்ட கரு வாடு.

ஊராங்கி: ஊர்கோலம். கல்யாண ஊர்வலம்.

ஊரடைக்க: ஊர் அசேசமும்—ஊர் முழுவதும்.

ஊரத்தண்ணி: கழனித் தண்ணீர். கழுநீர்.

ஊரத்தாழி: மாட்டுக்கு ஊறல் தண்ணீர் காட்டும் தாழி. சுட்ட மண்ணால் ஆனது.

ஊராவீடு: அயல் வீடு. ஊராவீடு × நம்மவீடு.

ஊரோடெ ஒக்கோடெ நாமளும் அதோடெ: ஊரின் போக்கோடு நாமும் இணைந்துகொள்ள வேண்டும் என்பது.

ஊழங்கெடுத்தல்: உடனிருந்தே கெடுத்தல். ஊடாடிக் கெடுத் தல்.

ஊழியிலெழுத்து: தலையெழுத்து. விதி. ''நீ என்னெ செய்வெ என் ஊழியிலெழுத்துக்கு!''

ஊளை: ஊதை. ஊளைக்காத்து. ஊதைக்காற்று. மூக்கிலி ருந்து வடியும் சளி. காதிலிருந்து வடியும் சீள்.

எக்கச்சக்கம்: கணக்கிலடங்காத. ஏராளமான. ''கூட்டம் எக்கச்சக்கம் வந்துட்டது பாத்துக்கிடுங்கெ!''

எக்கண்டம்: இகழ்ச்சி. கேலி. கிண்டல்.

எக்குத்தப்பா: தவறுதலாய். எதிர்பாராமல். ''ஏதாவது எக்குத்தப்பா நடந்திருச்சின்னு ஒண்ணும் செய்ய முடியாதப்பா, சொல்லிட்டேன்.''

எக்குப்போடுது: மாட்டின் திமிர் மிகுந்த செறுக்கு. ''காய்க்காளை எக்குப் போடுது.''

எக்கொள்ளுதல், ஏற்றுக்கொள்ளுதல்.

எகத்தாரு: ஏராளம்.

எகத்தாளம்: சந்தோஷத்தில் எடுத்தெறிந்து பேசுதல்.

எகனை: பொருத்தமாக, ''எகனையா வந்தா மாட்டை குடுத்திட வேண்டியதுதான்.''

எகுறுறுன்: தரையில் நில்லாமல் மேல் எழுவதுபோல் குதிப்பது. ''பயல் எகுறுக்கிட்டுதான் அலையுதான்!''

எங்க பாவத்திலே விழுந்துராதே: எங்களுக்குக் கிடைப்பதில் வந்து கை வைத்து விடாதே. எங்கள் விஷயத்தில் வந்து தலையிட்டுக் கெடுத்துவிடாதே.

எங்க விழுந்து சாவோமிண்ணு: புகல், போக்கிடம் இல்லாமல் அலைவது. அடுத்தவர்களுக்குத் தாள முடியாத பாரமாய் இருப்பது. ''எங்க விழுந்து சாவோமிண்ணு அலையிருன்.''

எச்சி இளைச்சி: மெலிவு. தயிப்பு. ''ஆளு எச்சி இளைச்சிப் போனான்.'' ''எச்சி இளைச்சிப்போயி வந்திருக்கான்.''

எச்சி துப்ப இடமில்லே: கூட்டம். நெருக்கம்.

எச்சுக்கலே: மிஞ்சியதைத் தின்பதற்கு ஏங்கிக்கொண்டிருப்பது.

எசக்கு: 'உடம்பிலே எசக்கில்லே'—உடம்பு இற்றுப் போனவனை பார்த்து.

எசகு பிசகு: விபத்து. எதிர்பாராத தப்பிதம். ''ஏதாவது எசகு பிசகுலெ கொண்டுபோயி நம்மளை மாட்டிவிட்டுராதே.''

எசலிப்பு: போட்டி. சிநேகமான போட்டி.

எசவு: தோது. இசைவு. 'எசவு இல்ல'—தோது இல்லை.

எஞ்சிவனேன்னு: ஒன்றும் நினைக்காமல் செய்யாமல்.

எட்டாக்கையி: மிகவும் தூரம்.

எட்டாங்கட்டு: குட்டு. அந்தரங்கம். ''அவனோட எட்டாங் கட்டை அவுத்தாத் தெரியும்.''

எட்டாளந்தட்டு: கிளித்தட்டு போலொரு விளையாட்டு.

எட்டு: காலடி. தப்படி. ''எட்டாவது மாசத்திலெ எட்டெ டுத்து வைக்கும்'' (ஆரோக்கியமான குழந்தை).

எட்டுக்குத்துக்கு இளையவன்: மிகவும் இளையவன்.

எட்டுக்கும் கூடுவான் எழவுக்கும் கூடுவான்: கொள்கை இல்லா தவன். எதிலேயும் சேர்ந்து கொள்கிறவனைப் பார்த்துச் சொல்லப்படுவது.

எடாத எடுப்பு: செய்யாத காரியம். ''எடாத எடுப்பு எடுத்தா படாதபாடு படனுமில்லா.''

எடுத்துக்கட்டி உழுதல்: ஆழமில்லாமல் உழுவது.

எடுத்துப்போட: நல்லடக்கம் செய்ய. ''உன்னை எடுத்துப்போட யார் நாதி?''

எடுத்து விடுதல்: முலையூட்டுதல். ''குழந்தை அழுது; எடுத்து விடு.''

எடுத்து வைச்சாலும் குடுத்து வைக்கணுமில்ல: அடைந்தும் அனுபவிக்க முடியாமல் ஆகிவிடும்போது சொல்லப்படு வது.

எடுத்தேறி: அதிகப்படி பிரயாசை. மெனக்கெட்டு இதுக் கென்றே. ''எடுத்தேறிப் போகணும் அங்கெ.''

எடுப்பு உழவு: விதைப்பதற்கு முன்பு உழும் உழவு. ''எட்டு உழவு போட்டாலும் ஒரு எடுப்பொழவு போடுற துக்குக் காணாது''—சொலவம்.

எடுப்புத் தண்ணி: நடுகைக்கு அடுத்த முதல்த் தண்ணி.

எடுபட்ட: அழிந்துபோன, தொலைந்த. ''எடுப்பட்ட சிறுக்கி'' (வசவு) ''அந்த வர்க்கம் எடுபட்டுப் போச்சி''.

எண்ணெய் முந்துதோ திரி முந்துதோ: புருஷன் மனைவியாக உள்ள கிழத்தம்பதியில் யார் முதலில் இறப்பார்கள் என்று சொல்ல முடியாதுதானே! நிச்சயமாகத் தெரியாத ஒரு காரியத்தைப் பற்றி சொல்லப்படுவது.

எத்துங் குத்துமா: ஒழுங்கில்லாமல். ஒரே சீராக இல்லாமல். "என்ன எளவுடா பாதை ஒரே எத்துங்குத்துமா இருக்கு" ''அவ பல்லு என்ன அப்பிடி இருக்கு எத்துங்குத்துமா.''

எத்துவாளி:வேலை செய்யாமல் ஏய்த்துக்கொண்டே அலைவது. எத்து-ஏமாற்றுதல். ''எத்துவாரை எத்தி நா எலி பிடிச் சிக்கிட்டு வாரேன், நீ கேப்பாரைக் கேட்டு நாழி கேப்பை திரிச்சி வைன்னுறும்!"—சொலவம்.

எதாச்சும்: என்னமாவது. ஏதாவது. ''எதாச்சும் இருக்குமா சாப்பிட?''

எதிரா: வரும் ஆண்டு. ''எதிராக்குப் போவோம் அங்கே.''

எதுக்களிக்கி: சாப்பிட்ட சோறு மீண்டும் வாய்க்கு வருதல்.

எதுப்பில: எதிரே. முன்னால். ''எதுப்பிலெதான் இருக்கும் பாரு''

எந்தடத்துல மிதிச்சாலும் அந்தப் புத்தி வராது:தனது நேர்மை பற்றி அசைக்க முடியாத நம்பிக்கை; அதே போல்த் தன்னைத் தொடர்கிறவர்களும் அப்படியே நடப்பார்கள் எனும் உறுதி.

''விவரந்தெரியாத வயசிலே ஒரு பையன் ரொம்ப நல்லவனாக இருந்தான். திடீரென்று ஒருநாள் கெட்டவனாகிவிட்டான். காரணம் யாரோ ஒரு கெட்டவன் நடந்துபோன காலடித் தடத்தில் இவன் மிதித்து நடந்ததுதான்; ஆனால் அது இவனுக்குத் தெரியாது. கொஞ்சநாள்க் கழித்து திடீரென்று நல்லவனாக மாறிவிட்டான். காரணம் யாரோ ஒரு நல்லவன் நடந்துபோன காலடித் தடத்தின்மேல் இவன் காலடி பட்டதுதான். இதுவும் இவனுக்குத் தெரியாது!

எப்படித்தான் வாயிலே வந்துட்டு போகுது: ''எப்படித்தான் வாயிலே வந்துட்டு போகுது...தம்பி இல்லே இருக்காக... இல்லேண்ணு நல்லாக் கேப்பேன்''. நாக்கு நுனி வரை வந்துவிட்ட ஒரு (கெட்ட) வார்த்தையை சமூக மதிப்பு காரணமாக வெளியிடாமல் அடக்கிக்கொள்வது.

எம்டன்: அசகாய சூரன். தந்திர சாமர்த்தியன். கெட்டிக் காரன். முதல் உலக மகா யுத்தத்தில் 'எம்டன்' என்ற ஜெர்மானியக் கப்பல் சென்னை மீது குண்டு வீசியதாம். அதைக்கொண்டு தமிழ் மக்கள் அப்பெயரை கெட்டித் தனத்திற்கு பயன்படுத்துகின்றனர்.

எம்புட்டு: எவ்வளவு. ''எம்புட்டு திமிர் உனக்கு.''

எம்போகி: அகதி, பரதேசி. ''ஏழை எம்போகி இனிமெ வாழ முடியாது.''

எம்மாத்திரம்னு நினைக்கான்: 'எவ்வளவு காணும் பய' லேசா நினைக்கான்.

எமகாதகப் பய: பொல்லாதபய. எமன் + கிராதகன் = எம காதகன்.

எய்யாது: நிலைக்காது. ''ஓடையில தண்ணி எய்யாது''.

எரசல்: தூவானம்.

''எரசலடிக்குது கூதலடிக்குது
தள்ளிப்படு மாமா—கொஞ்சம்
தள்ளிப்படு மாமா''
—பெண்வேஷப் பாடல் (தள்ளி-அருகே)

எரவாரம்: தாழ்ந்த தாழ்வாரக் கூரை. ''ஏட்டைச் சுத்தி எரவாரத்திலெ சொருகு.''

எரிச்சாம்பல்: அடுப்புச் சாம்பல்.

எருதிணிக்குழை: ஒரு வகைக் களை.

எருமை மாடு மிதிச்சிட்டது: பெண் ஆசையே இல்லாதவனை இப்படிக் கூறுவர். 'அவனுக்கு மாடு மிதிச்சிட்டது.'

எல்லை: சடுகுடு விளையாட்டில் இரண்டு கட்சிகளுக்கும் மத்தியில் உள்ள கோட்டின் பெயர்.

எலியிருக்கிற கட்டி என்ன கட்டியின்னு இருக்கு?: (என்ன கட்டி—எந்த கட்டி) யார் மனசுல என்ன இருக்குண்ணு யாருக்குத் தெரியும்? எலி தன் வளையிலுள்ள எறைக் கானைக் கட்டியால் மூடி வைத்து இருக்கும். கட்டிகள் நிறைந்துள்ள காட்டில் எந்த கட்டி எறைக்கானை மூடி இருக்கும் கட்டி!என்று சொல்ல முடியாதல்லவா?

எலைகொலையாக: பதட்டமாக. ''எலையும் கொலையுமாத் துடிச் சிக்கிட்டு வாரான்.''

எவர்ணமான சிறை: எவர்ணம்-யெளவனம். சிறை-பேரழகி.

எழுதாக்'குறைக்கு அழுதாத் தீருமா?: அவன் தலையில் பிரமன் நல்லபடியாய் எழுதவில்லையே என்று இனிச் சொல்லிச் சொல்லி 'அழுது' என்ன பயன்?

எழுந்திருத்தாகுது: சாமி சப்பரத்தில் வருகிறது.

எளக்காரம்: லேசு. ரொம்ப லேசு. தொக்கு. ''ஆளோட எளக் காரத்தைக் கண்டுல்லோ ஆவரையும் 'பீ' வாரி அடிக்கி!'' ''என்னைக் கண்டா அவனுக்கு ரொம்ப எளக் காரம்''

எளந்தரம்: ஆண்குறியிடம். ''எளந்தரத்திலே மிதிச்சுட்டான்''

எளவாங்கி: தைக்கும் ஊசி.

எளுப்பி அடித்தல்: மழை பெய்தவுடன் இரட்டைக் கலப்பை யால் உழுதல்.

எளைய குடியா: மனைவிகளில் இளையவள். இளையவடியா.''ஏகா தசி தோசையும் இளைய குடியாள் மாகையும்''—சொல வம்.




எறைக்கான்: எலி வளையில் உள்ள கள்ள வழி. அபாயம் நேரிடும் போதோ வேட்டை யாடும்போதோ தப்பி ஓடிவிடப் பயன்படுவது. இவ்வழியின் மேல்புறம் மட்டும் மூடி இருக்கும். வெளிக்குத் தெரியாது. அபாய காலத்தில் இதன் வழியே புடைத்துக்கொண்டு தப்பி விடும். ''பொண்டான்' (படத்தில் அ, ஆ, இ.)

**என்ன சொல்ல வாயிருக்கு...:** "நம்ம பிள்ளேயே இப்படிச் செஞ்சிருச்சி... என்ன சொல்ல வாயிருக்கு?".

**என்னண்ணு என்ன?:** இரு குடும்பங்களுக்குள்ளிருந்த பகை இப்போது குறைந்து விட்டது. இடைப்பட்டவர் ஒருவர் கேட்கிறுர். "என்ன இப்ப...பேசிக்கிடுவியளா.?" அவரது பதில், "என்ன பேச்சி...சும்மா...என்னண்ணு என்ன...அவ்வளவு தான்."

**என்னேரமும் கண்ணுல விளக்கெண்ண விட்டுக்கிட்டு:** அக்கம் பக்கம் முகம் திருப்பாமல் ஒன்றையே கூர்ந்து கவனித்துக் கொண்டே இருப்பதற்கு சொல்லும் பிரயோகம். களவு போய் விடுமோ என்ற பயத்தில் என்னேரமும் எச்சரிக்கையாயிருந்து தீரவேண்டிய நிலே.

**எனக்கா வேர்த்து வடியுது:** "இது உன் காரியம்; உனக்கே இதில அக்கரை இல்லேண்ணு எனக்கென்ன வந்தது?"

**எனம்:** வசதி. "எனமான ஆளு"

**எனவன்:** தன் இனத்தவன்.

## ஏ

**ஏகக்குடும்பம்:** கூட்டுக்குடும்பம். ஒரே குடும்பமாக.

**ஏகதேசம்:** எப்போதாவது

**ஏகப்பட்ட:** கணக்கில் அடங்காத.

**ஏகாலி:** வண்ணன். சலவைத் தொழிலாளி.

**ஏங்கல் தாங்கல்:** இந்த சமயத்தில் நமக்கு யாரு கை கொடுக்கப்போரு என்று தவித்துக் கொண்டிருக்கும் போது வந்து உதவுகிறது; அப்படி ஏங்கிக் கொண்டிருக்கும் போது வந்து தாங்கிக் கொள்வது.

**ஏங்நேய்:** "ஏங்நேய்." "ஏங்நேய், எப்பொ வந்தங்நேய்?" சமவயதொத்த நண்பர்கள் சொல்லிக் கொள்வது.

**ஏச்சாங் காட்டுதல்:** கொடுப்பதைப் போல அல்லது வேலே முடித்துக் கொடுப்பது போல நம்பச் செய்து ஏமாற்றல். விளேயாட்டில் ஒரு பிள்ளேயை, கண்ணேத் துணியால் கட்டி

மற்றவர்களைத் தொடச் செய்யும் போது கண்கட்டப்பட்டவளைச் சுற்றி எச்சரிக்கையாக எட்ட நின்றுகொண்டு கையைமட்டும் நீட்டி, 'இந்தா இந்தா வாளப்பழம். இனிச்சி கெடக்கு வாளப்பழம்' என்பர். குரல் பக்கத்தில் இருப்பதைக் கொண்டு கண் கட்டப்பட்டிருப்பவள் நம்பிக்கையோடு கையைத்துழாவிக் கொண்டு நகருவாள். மற்றவர்கள் ஒதுங்கி விடுவார்கள். இப்படி அவளை நம்பச் செய்து பின் ஏமாற்றுவது. இது ஏச்சங் காட்டுதல். 'மாட்டை பாய்ச்சங் காட்டுதல்' என்பார்கள். பாயாத மாடுகள் கூட இப்படி செய்வதால் பாய ஆரம்பித்துவிடும்.

ஏச்சு: வசவு.

ஏசு: வை. ஏசுதல்—வைதல்.

ஏஞ்செத்தோம் ஏன் அழுதோமின்னு இருக்கும் இவன் வேலே. பூராம்: வேலையில் ஒட்டாத மனசு. எந்த வேலே செய்தாலும் சிலர் மட்டும் இப்படி. இவன் அழவேண்டுமே என்பதற்காக 'அழுவதைப்' பார்த்து அந்த செத்தவனுக்கே ஏன் செத்தோம் என்று ஆகிவிடுமாம்!

ஏட்டம் கிடக்கு: ஏர்க்கால் மேக்காலில் ஒரு ஓரத்தில் ஒதுங்கியிருந்தால் ஏட்டம் கிடக்கு என்பர்.

ஏட்டுப்பள்ளிக்கூடம்: திண்ணைப் பள்ளிக்கூடம்.

ஏடாசி: வேடிக்கைப் பேச்சு.

ஏடு தொடங்குதல்: திண்ணைப் பள்ளிக்கூடத்தில் ஒரு மாணவன் புதிதாகப் படிப்பைத் தொடங்குதல்.

ஏண்டமட்டும்: இயன்ற மட்டும்.

ஏண்டுக்கிட்டு: ஏற்றுக் கொண்டு. ஒருவருக்காக வேண்டி. ''அவனுக்கு ஏண்டுக்கிட்டு ஏங் கூட இவன் சண்டைக்கு வாரான்''

ஏணைக்கோணையா: ஏட்டிக்குப் போட்டியா. ''எப்பப் பாத்தாலும் ஏணைக் கோணையா பேசிக்கிட்டிருக்காதெ''

ஏத்தகுடி: பெண் எடுத்தகுடி.

ஏத்தம்: உபரி. ''பயலுக்கு ஏத்தம் கிடக்கு.'' வேண்டிய ஐவேசு.

ஏத்தாப்பு: மேல்த்துண்டை ஒரு பக்கமாய்த் தோளில்போட்டுக் கொள்ளுதல்.

ஏத்துமீன்: தண்ணீர்ப் போக்கை எதிர்த்து ஏறும் மீன் கூட்டம். ''மாசி மழை பேயாதோ மலைவெள்ளம் சாயாதோ ஏத்துமீனு ஏருதோ எங்கபஞ்சம் தீராதோ''—நாட்டார் பாடல்.

ஏத்து மேய்ச்சல்: கம்மந்தட்டையைக் கொண்டு திண்ணமாய்ப் போடும் மேய்ச்சல். ஏத்து மேய்ச்சல் × சல்லி மேய்ச்சல்.

ஏதுகாரங்கள்: அவசிய ஆரம்ப ஆயத்தங்கள்.

ஏதொண்ணுக்கும்: எதுக்காவது. ''ஏதொண்ணுக்கும் இதெ வச்சிக்கோ கைவசம் இருக்கட்டும்''

ஏப்பசாப்ப: மிதமாய். லேசாக. வாய்த்தாட்டியம் இல்லாத எளியவன்.

ஏப்ராசிப்பய: ஒருவசவு.

ஏர்வை: 'முள் ஏர்வை' முள்ளை ஒன்றன் மேல் ஒன்ருக ஏற்றி வைப்பது. 'கவை'

ஏராங்கடேசி: ஆகக் கடைசி.

ஏரான்: முதலில் வந்தவன். திண்ணைப்பள்ளிக் கூடத்துக்கு அதிகாலையில் வரும் முதல் மாணவன்.

ஏல்க்கை: வசதி. செல்வம். ''நல்ல ஏல்க்கையான குடும்பம்" ''ஏற்கை.''

ஏல ஒப்படைப்பு: ஒரு சொத்து கடனுக்காக கோர்ட்டில்'டிகிரி' ஆகி ஏலத்திற்கு வந்துசொத்தை வாளித்து விடுகிருர்கள். இதனை 'ஏல ஒப்படைப்பு' என்பர்.

ஏல மாட்டாத: காரியம் செய்ய இயலாத—இயல மாட்டாத—ஏல மாட்டாத.

ஏலேய்: அடேய். ''ஏலேய் அய்யா ஒன்னைத்தானெ''

ஏழாம் பொருத்தம்: சதா வாய்ச் சண்டை போட்டுக் கொண்டிருப்பவர்களுக்குச் சொல்வது. ''ரெண்டு பேத்துக்கும் ஏழாம் பொருத்தம்!''

ஏழு பல்லுகட்டை: மாட்டிற்கு, பொதுவாக முன்பற்கள் எட்டு இருக்கும். ஏழு இருந்தாலாகாது.

ஏழு வழியாக்கிட்டான்: ஒற்றுமையைக் குலைத்து விட்டான்.

ஏழை எம்போகி: எம்போகி = ஆதரவு அற்றவன்.

ஏழைக் குறும்பு: தனது சக்திக்குத் தாழ்ந்தவர்களிடம் செய்யும் குறும்புத்தனம்.

ஏளா: ஏட்டி. அடியே. ஏய். ஏபிளா. கணவன் மனைவியை அழைக்கும் சொல்.

ஏறக்கட்டிருச்சு: குணமாக பால் இறக்கிக் கொடுத்துக் கொண்டிருக்கும்போதே மாடுகள் திடீரென்று பாலை ஏறக் கட்டிக் கொள்ளும். அப்போது பீச்சினால் பால் வராது. ''பசுமாடு பாலை ஏறக்கட்டிருச்சு.''

ஏறுங்காடு: எட்டாகையி [தூரமுள்ளகாடு] கடேசிப்புஞ்சை.

ஏறிட்டுக் கூட பார்க்க மாட்டான்: நல்லவன். பிற பொருளுக்கு ஆசைப் படாதவன்.

ஏறி மேஞ்சிருவான்: ''இப்படி இருந்தா ஏறி மேஞ்சிருவான்''...... வேலிச் சுவர் சரியில்லை யென்றால் மாடு ஏறி வந்து மேய்ந்துவிடும். அடுப்பில் நெருப்பை சரியாக அணைக்கவில்லையானால் கூரை மீது ஏறி மேய்ந்து விடும். தற்காத்துக் கொள்வது இல்லையென்றால் அனைத்தும் இப்படித்தான்!

ஏறுகாலாயிருக்கு: விலை ஏறு முகமாயிருக்கு. செல்வம் கூடி வரும் நேரம்.

ஏறுவால்: காளை மாட்டு வால் நீளமாக இருக்காமல் சன்னமாகவும் சிறியதாகவும் இருப்பது.

ஏனம்: பாத்திரம்.

ஏனு தானு: ஏனோ தானோண்ணு.

## ஐ

ஐக் கோடு: பிரியமாகக் கொஞ்சும் போதும், பிரிந்த துயரத் தின் போதும் பயன்படுத்தும் வார்த்தை ''ஏ ... அய்யா ஐக்கோடு... ..''—இது ஒரு கொஞ்சல்.

இண்டம் புதங்காடு—நீங்க
இனம் பெருத்த ஐக்கோடு;—உங்க
இனம் எல்லாம் ஒண்ணுல்லோ—நான்
ஏலக்காய் துண்டு பட்டேன்.
சங்கு புதங்காடு—நீங்க
சனம் பெருத்த ஐக்கோடு—உங்க
சனமெல்லாம் ஒண்ணுல்லோ—நான்
சாதிக் காய் துண்டுபட்டேன்.—(ஒப்பு)

ஐயர் வாளிப்பு: ஏர்வடம் கட்டையாயிருந்தால் தற்காலிக மாய் வேலே தடைபடாமல் நடக்கப் போடப்படும் வாளிப்பு.

ஐயரவு: மனக்கூச்சம். மனதில் தோன்றும் ஒரு வித அரு வருப்பு.

## ஒ

ஒக்கலும் மக்களும்: உறவினர்கள் எல்லோரும்.

ஒக்கிடுதல்: பாழாக்குதல். செம்மை செய்தல் என்ற அர்த்தங் களிலும் வரும். ஒக்கிட்டான்; ஒக்கிட்டுட்டான்; சரி செய்து விட்டான்.

ஒங்கச் சிறப்புக்கு: ''ஒங்க சிறப்புக்கு அதுவொண்ணுவேணும் இல்லாட்ட ஆகும்?'' தன் தகுதிக்கு மீறிய ஒரு பெரு மையை வேண்டி ஒன்றைச்செய்யும்போது இகழ்ச்சியாக இப்படிச் சொல்லுவார்கள்.

ஒங்க வகுப்புக்கு : வகுப்பு = லட்சணம். ''ஒங்க வகுப்புக்கு அது ஒண்ணு வேணும். இல்லாட்ட ஆகும்?'' படிக்கத் தெரியாத ஒருவன் ரெஸ்ட் வாட்ச் கட்டிக் கொண்ட பொழுது குத்திக் காட்டிக் கேலி செய்யும் முறையில் இப் படிச் சொல்லுவார்கள்.

ஒச்சம்: குறை. பழுது. குற்றம். 'வச்சம்'

ஒச்சை கேட்டல்: ஒட்டுக் கேட்டல். ''அவ ஒழிஞ்சிருந்து ஒச்சைக் கேக்குரு.''

ஒசக்க: உயரே. ''ஒசக்கெ''.

''ஒட்டரம் பூவே ஒசக்கெருக்கும் தாழம்வே''
—நாட்டார்பாடல்.

ஒசந்தகை பணியாரம்: பணியாரம் வினியோகிக்கும் போது கூட்டத்தில் உயரமான கைகளுக்குத்தான் முதல்ப் பணியாரம் கிடைக்கும். இப்படித்தான் வாழ்க்கையிலும்; உயர்ந்த வசதியானவனுக்கே அனைத்தும் போய்ச் சேருகின்றன என்பதும்.

ஒஞ்சாம: வெட்கப்படாமல், ''ஒஞ்சாம அலையுருன்''

ஒஞ்சுது; கூசுது. ''அங்க போகணும்கும்போது மனசு ஒஞ்சுதில்லே.''

ஒட்டாங்காளை: ஒரு சாதி மாடு.

ஒட்டுத்தண்ணி: கிணற்றில் தண்ணீர் இல்லாமல் கொஞ்சம் கொஞ்சமாக ஊறி ஊறி எடுப்பதற்குப் பெயர், ஒட்டுத் தண்ணி.

ஒட்டுத்திருணை: வீட்டிற்கு வெளியே சுவரோடு ஒட்டிய வெளிப்புறமுள்ள திண்ணை.

ஒட்டுப்படை; ஒரு சுவர் பலவீனமாயிருந்தால் அதற்கு ஆதரவாக ஒட்டிக் கட்டப்படும் சுவர்.

ஒட்டுவாரொட்டி: தொற்றுநோய்



ஒட்டை: கைப்பிடி அளவு உயரம் ''ஒரு ஒட்டைக்கு வளந்திருக்கான்முந்திக்கு இப்போ''

ஒடப்புலபோடு: உபயோகமில்லே. துரப் போடு; நிலத்தில் தண்ணீர் அரிப்பைத் தடுக்க ''ஒடப்பு'' மேடாக இருக்க அதில் உபயோகமில்லாததைப் போடுவார்கள்.

ஒடஞெத்தவன்: சகா. சேக்காளி. உடன் ஒத்தவன். ''ஒடஞெத்தவனெல்லாம் எப்படிப் படிக்கான்? நீ ஏன் இப்படி இருக்கே?''

ஒண்டி: சேரு. தனி.

ஒண்டித்தல்: சேர்த்தல். பொருத்துதல். செம்மை செய்தல்.

ஒண்ணரைக்கண்ணு: மாறுகண்.

ஒண்ணுக்கு: மூத்திரம் பெய்ய.

ஒண்ணுக்கும்அத்த: ஒன்றுக்குமே உபயோகமில்லாத.

ஒண்ணுக்குள்ளே ஒண்ணு: சொந்தக்காரர்கள்.

ஒணறு: உணர்வு.

ஒத்தக் கயித்திலே பிடிச்சிட்டான்: இழுத்து விட்டு வேடிக்கை பாத்துட்டான். எல்லோரும் ஒன்று சேர்ந்து கொண்டு இவனை மட்டும் தனியாகச் சிக்கலில் மாட்டி விட்டு விட்டார்கள்.

ஒத்தகால்ல நிக்கான்: பிடிவாதமாயிருக்கான்.

ஒத்த சத்த போக முடியாது : தன்னந்தனியாக போக முடியாது.

ஒத்தடிப்பாதை : காட்டில் நடந்துபோய் நடந்துபோய்ப் பதிந்த தடத்தினல் ஏற்பட்ட பாதை.

ஒத்தப்பூட்டு : ஒத்தமாட்டை வைத்துக் கொண்டு, மற்ருெரு வருடைய ஒரு மாட்டை சேர்த்து உழுவது.

ஒத்தபேரன் : தனியாள் (ஆண் பால்)

ஒத்தபேரி : தனியாள் (பெண்பால்)

ஒத்தவரியிலே வசூல் பண்ணிடுவேன்: ஒத்த வரியில எங்காசை வச்சிட்டுப் போ, ''இல்ல...மரியாத கெட்டுப் போகும்... பார்த்துக்க.''

ஒத்தாசனை: ஒத்துழைப்பு. வேலைத்துணை.
''ஒத்தாசனைக்கு ஒரு ஆள் இருந்தால் வசதி.''

ஒத்தாசை : உதவி.

ஒத்தி: வாங்கிய கடனுக்கு வட்டிக்கு ஈடாய் நிலத்தை அனுபவிக்கும்படி விட்டுவிடுவது.
''நிலத்தை ஒத்தி வச்சிருக்கான்''

ஒத்திதாரி: ஒத்திக்கு நிலம் பிடித்தவர்.

ஒத்து ஊதுறான்: கூடச் சேர்ந்து கொண்டு பேசுகிறான்.

ஒத்துக்கு மத்தாளம் :முன்பின் யோசியாமல் ஒருவன் சொல்வதை அப்படியே ஆதரித்து பேசுவது.

ஒத்துப்பாடுறான்: அவன் சொன்னதையே இவனும் சொல்லுகிறான். கூட்டுக்கள்ளவாளி.

ஒத்துமாப் பொடி: முகப்பவுடர்.

ஒத்து வரமாட்டான்: இணக்கமாய்ச் செயல் புரியமறுப்பு. இசைந்து செய்யமாட்டான்.

ஒத்தையா ரெட்டையா: வந்தாலும் சரி போனாலும்சரி என்கிற மனோபாவத்தைக் குறிப்பிடச் சொல்லுவது. புளியமுத்துகளை வைத்து விளையாடும் ஒரு விளையாட்டு.

ஒதக்காய்: பிஞ்சுமுற்றிக் காயாகப் போகும் நிலை.

ஒதப்பழம்: காய் முற்றிக் கனியாகப் போகும் பருவம்.

ஒப்படி: ஓர்சல். பூர்த்தி. முடித்தல். முறையாகச் செய்து நிறைவேற்றுதல்.
''கருது காயெல்லாம் அடிச்சி ஒப்படியாயிருச்சி''.

ஒப்பரவா இருக்கும்: ஒப்புரவு, ஒழுக்கம், ஒழுங்கு.

ஒப்பினியம்: ''ஊருலே ஒப்பினியம் பண்ணிருக்காக'' கட்டுப்பாடு பண்ணீருக்காக.

ஒப்புக்கு: பேருக்கு.
''நாலுபேரோட நாமும் போயி ஒப்புக்குநின்னுட்டு வந்துருவோம்''

ஒப்பேராது: கை சேராது. பிழைக்காது.

ஓம்பது ரூபா நோட்டு: ஏமாத்து. ''அவன் ஒரு ஒம்பதுரூபா நோட்டுகாரன்''.

ஓமட்டுது: நினைத்தாதே பொங்கும் வாந்திஉணர்வு.

ஒயில்கும்மி: மேல்த்துண்டை கையிலெடுத்து வீசியும் விசிறியும் பாட்டின் தாளத்துக்கும் கதிக்கும் தக்கபடி பாதங்களை வைத்தும் எடுத்தும் ஒயிலாகக் குதித்துஆடும் ஒரு கலை நிகழ்ச்சி.

ஒரு ஆளம்பனை: 80 பனை மரங்கள்கொண்டது. ''அவருக்கு நாளாளம்பனை இருக்கு''— ஒரேனேர், ஈரனேர் என்று சொல்லுவதுபோல ஓராளம் பனை, ஈராளம்பனை.

ஒரு உப்புக்கல்லுப் பெறமாட்டான்: ஒன்றுக்குமே உதவமாட்டான் என்பது.

ஒருஊத்து: காலையிலிருந்து மதியம் வரை அல்லது மதியத்திலிருந்து மாலை வரை கமலை இறைப்பதற்கு ஒரு ஊத்து என்று பெயர். காலையில் இருந்து மதியம்வரை கமலை இறைத்தால் அனேகமாகக் கிணற்றில் தண்ணீர் வற்றிவிடும். பின்பு வீட்டிற்குச்சென்று சாப்பிட்டுச் சற்று ஓய்வு கொண்டபின் மாலை 3மணிக்கு போனால் பழைய மட்டத்திற்குத்தண்ணீர் ஊறிவிடும். இரண்டாம் முறை இறைப்பதற்கு இரண்டாம் ஊற்று என்று பெயர். ஒரு முறை ஊறிய தண்ணீரை இறைப்பதுக்கு ஒரு ஊத்து.

ஒரு கண்ணுக்கு தூங்குதல்: சின்னத் தூக்கம். ஒரு குட்டித் தூக்கம். இரண்டு கண்களையும்மூடி நிறைவாகத் தூங்கவில்லை என்பது, பாதித்தூக்கம்!

ஒரு குத்து: ஒருபிடி. ஒரு குத்துச்சோறு.

ஒரு கை பாத்துட வேண்டாமா?— ''அவனை விடக்கூடாது'' என்னுனாலும் சரி... ஒருகை... பாத்துற வேண்டியதான்.

ஒருத்தங்கையிலே பிடிச்சுக்கொடுத்த பிறகு நமக்கு நிம்மதி: குமரு வைத்திருக்கும் தாயின் மனத்தவிப்பு.

ஒருத்தருகாணுது: நடித்துப் பசப்புபவன். அவனது சொல்லை வைத்து நம்ப முடியாத ஒருநபர்.

ஒரு தரையிலே மேய்ஞ்சி ஒருதுறையிலே தண்ணி குடிச்சவங்க: பால்ய சினேகத்தை நினைவுகூர்தல். உறவையும் மன நெருக்கத்தையும் குறிப்பது. (மான்கள், புறுக்கள் இவையெல்லாம் இப்படிச்சேர்ந்தே இருக்கும் கடேசிவரை.)

ஒருப்பணிக்களுதை: அடைத்துத் தின்னுமல் உணவைகொறித்துக்கொண்டே மெலிந்து காணப்படும் மனித, உயிர்ப் பிராணிகளைக் குறித்து சொல்லப்படுவது.

ஒருப்பணி × வாய் அடம்

ஒருப்பத்து: எடுப்புழவு போடாமல் விதைத்துப் பின் உழுவது. ''ஒருப்பத்துலெ விதைச்சிற வேண்டியதுதான்''.

ஒருப்புத்தி : ஒரே கவனம். மாருத. ''ஒருப்புத்தியான ஆளு''

ஒருபாச்சல்: மண்வெட்டியால் பூமியைக் கொத்தும்போது விடாமல் தொடர்ந்து செய்ய முடியாது. ஒரு பாச்சல் செய்வது கொஞ்சம் தகிப்பாறுவது மீண்டும் ஒரு பாச்சல் இப்படி.

ஒருபேச்சிக்கு: நிசம் அல்ல. இருப்பதாக நினைத்து. இப்படி வைத்துக் கொள்வோமே.

"ஒரு பேச்சுக்குச் சொன்னு...அதே காலாப் பிடிக்கிறதா?"

ஒரும்பு: வறட்சி. பற்ருக்குறை. புழுக்கம். ''இந்த வருசம் ஒரும்பாய்ட்டது''

ஒருவடியா: சொல்லத் தெரியாமல். ''ஏன் ராஸ்கல் ஒரு வடியா அலையற?'' ஆயாசமாக. ''எனக்கு ஒருவடியா வருது''

ஒருவழி சொல்லிட்டு பெருவழி போறவன்: சொல்வது ஒன்று செய்வது ஒன்று,'' என்ற பழக்கமுடையவன்.

ஒருவாக்கிலே: ஒரேயடியாய்.

ஒரு வீச்சில்ல: அதிவேகமாய். ''ஒரு வீச்சில்ல வந்திர்றேன்."

ஒரே குலுக்காக் குலுக்கிட்டான்: மாட்டேனுட்டான். இல்லேன் னுட்டான்.

ஒரே கொடிவழி: ஒரே வம்சம்.

ஒரே தலைக்கு: பிடிவாதமாக. ''ஒரே தலைக்கு மாட்டேனுட்டான்'' ஒரேயடியாய்.

ஒரே மேனிக்கு: ஒரே மாதரியாய். அதே போல. ஏராளமாய் ''ஒரே மேனிக்குப் பேசுருன்.''

ஒல ஏத்த விடமாட்டேன்: கடன் கொடுத்தவரின் நிர்ப்பந்த முறை.

ஒலுங்கு: கொசுக்களில் ஒரு இனம்: பெரிசு.

ஒவணியம்: மருத்துவம் முதலான கவனிப்பு.

''ஒனக்கு ஒவணியம் பாக்கவே பொழுது சரிய்ய இருக்கு'' ''ஓனியம்''

ஒவலே: எங்கும் குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றியே பேசப்படுதல் முக்கியமாக ஒருவருக்கு வந்த திடீர் வாழ்வை, செழிப்பைப்பற்றி ஊர் முழுவதும் மனம் பொறுக்காமல் பேசுவது.

ஒவயங்கெட்ட பய: உபயோகமில்லாதவன், உபாயம் தெரியாதவன்.

ஒழுக்கரப்பெட்டி: இரும்புபெட்டி; பணம் நகைகள் வைப்பது.

ஒழுகு ஒழுகா: வரிசை வரிசையாய்.

ஒளக்கரிசி சீவன் இல்லாமல்: எந்தவித ஆலோசனைக்கும் தைரியம் சொல்ல(வும்) குடும்பத்தில் அவர் இருந்தார்.

குடும்பத்துக்குப் பாரமாகவே இருந்ததில்லே.

ஒழக்கு அரிசிச் சீவன்தான் அவர்.

நினைக்கும்போதெல்லாம் அந்த இழப்பு மனசை ரொம்ப பாதிக்கிறது.

ஒளப்புறன்: குழப்புகிறான்.

ஒளம்புதல்: குழம்புதல்.

ஒளரி ஒ-ளரி அடிக்குது காத்து: ஒரே சமயத்தில் பல திசைகளிலிருந்தும் விட்டுவிட்டு அடிக்கும் காற்று.

ஒளுக்கம்: சொரசொரப்போ, மேடு பள்ளமோ இல்லாமல் ஒன்றுபோல் இருப்பது. ''ஒளுக்கமான மரம்''

ஒன்றரை வாடம்: ஒரு நாள்விட்டு ஒருநாள்.

ஒன்னுசொன்னதுபோல: ஒரே மாதிரிக் கருத்து.

ஒன்னையகட்டி அழுகுறதுக்கு சூசுவான்னு இருக்கலாம்: பேசாமல் இருக்கலாம்.

# ஓ

**ஓங்காரிக்க வருது:** கக்க வருவதுபோல. வாந்தி.

**ஓங்கிட்ட:** உன்னிடத்தில். ''ஓங்கிட்ட அப்பொ ஒண்ணு சொன்னனே''

**ஓச்சம்:** ஓசை, ஒலி. ''மணியோச்சம்''

**ஓட்டடைஞ்சி:** நேரமாகி. ''பொழுது ஓட்டடைஞ்சி போச்சி''

**ஓட்டம்:** நீர் இறைக்கும் வாலில் போட்டு தைக்கும் ஒட்டு (கமலையில்).

**ஓட்டராட்டு:** ஓட்டை ராட்டு. வசவு. உபயோகமில்லாதவள்(ன்).

**ஓட்டாங்கணி:** உடைந்த துண்டு ஓடு. ஓட்டாஞ்சல்லி. சிறுவர்கள் குளங்களில் மூழ்கிக் குளிக்கும்போது வெயிலடித்தால் இதமாக இருக்கும். சில நேரங்களில் கூராப்பாக இருக்கும். இந்த சமயத்தில் ''ஓட்டாங்கணி தட்டி தாரேன் ஓடி ஓடி வெயிலடி,
சுக்காங்கல்லு தட்டித்தாரேன் சுள்ளு சுள்ளுண்ணு வெயிலடி'' என்று கத்துவார்கள்.

**ஓட்டை வாவ்:** ரகசியம் தங்காத வாய்.

**ஓடிய சுவர்:** நீளப் பக்கச் சுவர்.

**ஓடியடையிது:** புகல்போகுது. ''அவுக பாடு எப்படி?''...''எப்படியோ ஓடியடையிது''.

**ஓணி:** இறைப்பெட்டிக்குப் பதில் ஒரு ஆள் உபயோகிக்கும் இறைவைக் கருவி.

**ஓதுதல்:** கொஞ்சங் கொஞ்சமாய் விஷயத்தை மனங் கொள்ளச் செய்தல். 'முட்டை ஓதி எறியணும்.'' ''தலையணை மந்திரம் ஓதுதல்''

**ஓந்துருத்தியை:** உன் வேலையை. சோலியை ''ஓந்துருத்தியை ஊது''.

**ஓம்பரம்:** உன்பக்கம். உன் பொறுப்பு. ''காத்தடிச்சாலும் ஓம்பரம். கையலுக்கினலும் ஓம்பரம்'' —தெல்லு விளையாட்டில்.

ஓம்புளிப்பையும் பாத்திருவோம்: சவால் விடுகிறவனைப் பார்த்துச் சொல்லுவது; எதிர்ச்சவால்! நினைத்தாலே பல்லைக் கூசவைக்கிற புளிப்புகள் உண்டு; அதில் இவன் எந்தப் புளிப்பைச் சேர்ந்தவன் என்று தெரிய வேண்டாமா?



ஓமப்பல்லாக்கு: பல்லக்கில் ஒரு வகை. அதன் மேல்விதானம் வளைந்த மூங்கிலால் ஆனது; ஒட்டகையின் முதுகு போல்.

ஓமலிப்பு: ஒவலை.

ஓய்ஞ்சிபோச்சி : ஓய்ந்து போய் விட்டது. முடிந்து விட்டது. மாம்பழச் சீஸன் ஓய்ஞ்சிபோச்சி.

ஓய்ஞ்சி போனுன்: கெட்டு போனுன். (பொருளாதாரத்தில்).

ஓயாக்கண்ணு: மாறுகண்ணு. ஒண்ணரைகண்ணு.

ஓர்மை: ஞாபகம். நினைப்பு. நிம்மதி. அமைதி.

ஓரஞ்சாரம்: ஒதுக்குபுறம். தனி இடம்.

ஓரணோர்: சுமார் 20 ஏக்கர் நிலம் கொண்ட விவசாய நிர்வாகம்.

ஓரிசு: முடித்தல். கணக்கு தீர்த்தல் ''ஓர்சல்''

ஓரெடுப்பு: இடைவேளை இல்லாமல் ஒரேயடியாய் வேலை செய்தல்.

ஓலை: காதில் அணிவது. தங்கத்தாலும் செய்யப்பட்டிருக்கும். வெறும் ஓலையையும் சுருட்டி வைத்துக் கொள்வார்கள்.

ஓலை எழுதுதல்: இன்னுர் இறந்துவிட்டார் என்று உறவினருக்கு தெரியப்படுத்துதல்.

ஓவரசு: களத்து வேலை முடித்தாய் விட்டது.

ஓவாப்பானை உலையேருது: ஓவாப்பானை = வாவளையம் உடைந்தபானை.

''நீ பேசலைன்னு ஓவாப்பானை உலையேருது''

**ஓவாயி:** கோணவாய்

**ஓனியம்:** தொண்டு. கட்டிலிலேயே செயலற்றுக் கிடப்பவர்களுக்கு எல்லா உதவியும் செய்தல். ''மரம் மட்டையிலெ ஏறிக் கீழ விழுந்து கைகால் போனு உனக்கு யாரு ஓனியம் பார்க்கிறது?''

## க

**கக்கம்:** இடுப்புப்பகுதி. ''பிள்ளையக்கக்கத்துல வச்சுக்கோ''

**கங்கணம்:** அதே முனைப்பாய் முனைந்து காரியம் செய்தல். ''இதே சோலியாய் கங்கணம் கட்டிக்கிட்டு அலையுருன்.''

**கங்களவு:** நடுவைக்குப் பிறகு பாயும் முதல் தண்ணீர்.

**கங்காணம்:** காவல். கண்காணிப்பு. மேற்பார்த்தல். கவனித்தல்.

''கங்காணம் இருந்தாலென்ன,
கல் வெள்ளியை சுட்டாலென்ன
வெட்டப்பட்டுச் செத்தாலென்ன—நான்
வீமரிடம் போய் வருவேன்''

—நாட்டார்பாடல்

**கங்கு:** சுடர் விடாமலும், நீறு பூக்காமலும் கனிந்து நிற்கும். நெருப்பு.

**கங்கு கரையில்லாம:** அளவில்லாமல். ''கூட்டம் கங்குகரையிலாமல் வந்திட்டது.'' ''வெள்ளம் கங்குகரையில்லாமப் போகுது.''

**கச்சக்காயி:** கசப்பான காய். சில எலுமிச்சங்காய்களை ஊறுகாய் போட்டால் கசப்பாயிருக்கும்:

''எலுமிச்சம் பழமிண்ணு எடுத்தேனே கைநிறைய்ய
கச்சக்குமட்டி யெண்ணு கண்டவுக சொல்லலையே

—நாட்டார்பாடல்

**கச்சணம்:** கோவணம். கவுசணம். ''கச்சணத்தை இறுக்கிக்கட்டு.''

**கச்சத்துணி:** சலவை இல்லாத, கோடி வெள்ளைத்துணி.

**கச்சந்தி:** கோணிச்சாக்கு.

**கச்சரா:** தகராறு.

**கச்சவடம்:** இல்லாத பெருமையை இருப்பது போல பேசிக் கொழித்தல். 'பெருமைகச்சவடம்'. ''எப்பா, போதும். ஒம் பெருமைகச்சவடத்தை நிறுத்து.''

**கச்சாங்காத்து:** தென் மேற்கிலிருந்து வீசும் காற்று. மழைக்காலங்களில் மழைவரும். ''கச்சான்—மழைக்கு மச்சான்'' என்பர்.

**கச்சி:** கைத்து ''கச்சிப் போச்சி''

**''கச்சி'':** கட்சி-பகை. ''அவுகளுக்குள்ளெ முந்தி கூட்டு இருந்துச்சி; இப்பொ கச்சி''

**கச்சேரி:** அதிகார அலுவலகம், போலீஸ் ஸ்டேஷன். தாலுகாக் கச்சேரி. கிராமமுன்சீப் கச்சேரி.

''வள்ளி தெய்வானே—ஏம் புருசன்
வைவானே
கச்சேரிக்குப் போவானே—கையெக்கட்டி
நிப்பானே''

—நாட்டார் பாடல்

''கச்சேரிக்கு முன்னலபோகாதே;கழுதைக்குப் பின்னலே போகாதே'' —சொலவம்

**கசநாறுதல்:** திரும்பதிரும்ப கேட்டு நச்சரித்தல்.

**கசப்பு:** காலராநோய்.

**கசபுசல்:** எதிர்பாராத இடத்திலிருந்து, கேள்விப்படும் அபிப்ராய பேதம். திடீரென்று தோன்றும் சலசலப்பு. பூசல். ''திடீர்ண்ணு அவுகளுக்குள்ளெ கசபுசல் ஆயிரிச்சி''

**கசம்:** ஆழம் காண முடியாத. ''இருட்டுக் கசம்''

**கசவாளி:** கயவாளி. கயவன். ''சுத்தக் கசவாளிப்பயல்''

**கசற எடுத்துட்டான்:** கசக்கிப்பிழிந்து வேலை வாங்கிறதைப் பற்றி.

**கசாகூளம்:** ரொம்ப லேசு. ''கசக்கி ''பூ'' என்று ஊதி விடுவான்; அவனுக்கு இதெல்லாம் கசாகூளம்''

**கசாமுசாண்ணு:** ஒழுங்கு இல்லாமல்.
'',சாமான்களே இப்படியா 'அடுக்கி' வைக்கிறது; கசாமுசாண்ணு.''

**கஞ்சாம்பத்தி:** லோபி. கஞ்சன்.

**கஞ்சிக்கலயம்:** காட்டுக்கஞ்சி கொண்டு போகிற தோண்டி.
**கட்டக்காலன்:** பன்றி

**கட்டகட்ட உச்சிநேரம்:** சரியான மத்தியானம். உச்சி நேரம் என்றுலே மத்தியானம்தான். 'கட்டகட்ட உச்சிநேரம்' என்பது அதன் பொருளே ஸ்திரப்படுத்திக் கொள்வது.

**கட்டணம்:** பாடை. ''பயலுக்குக் கட்டணங் கட்டியாச்சு''

**கட்டத்தலம்:** மயானம். கட்டத் தலச் செலவு—மயானச் செலவு.

**கட்டபட்டுக்கிட்டே:** தடுதலாகிக்கொண்டே.
''என்னளளவோ காரியம் ஆரம்பிச்சதிலிருந்து கட்டபட்டுக்கிட்டே வருது''

**கட்ட மண்ணு:** வசவு. ஒன்றும் உதவாதவனே என்று. வாழலாயக்கு இல்லாதவன்(ள்)
''கட்டமண்ணு கட்டமண்ணு விருதாக்கட்ட மண்ணு.''

**கட்டவிளக்குமாறு:** தேய்ந்து சிறிதாய் போனவாரியல். ''எடு கட்ட விளக்கமாரை''

**கட்டாந்தரை:** கெட்டியான தரை. கட்டானதரை.

**கட்டாப்பு:** கடந்து போக முடியாமல்த் தடுப்பு.
"கட்டாப்பு கட்டாப்பா ஆள்நிக்கி.''வேட்டையின் போது மிருகங்கள் நாலாதிசையிலும் சிதறி ஓடும் என்று எதிர் பார்த்து அங்கங்கே ஆட்களே கட்டாப்பு கட்டாப்பாக தக்க ஆயுதங்களோடும் வேட்டைநாய்களோடும் நிறுத்தி வைத்திருப்பார்கள்.

**கட்டுக்கால்நாத்து:** வேறு மகசூல் செய்த நிலத்தின் ஓரமாக நாற்று வளர்த்தால் அது கட்டுக்கால் நாத்து. (சுத்துக் கால் நாத்து).

**கட்டுச்சோறு கட்டிக்குடுத்தல்:** கர்ப்பசங்கையைத் தாய் வீடு அழைத்துப் போதல்.

**கட்டுத்தறி:** மாடுகட்டும் கயிறு.
''கம்பர் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடுமாம்''—சொல் வழக்கு.

**கட்டுத்துறை:** மாடு கட்டுமிடம். ''கட்டுத்துறையிலெ விட்டுட்டு மேய்ச்சல்த்தரையில் போய்ப் பிடிக்க முடியுமா?''

**கட்டுலவிட்டு இறக்கிப் போட்டாச்சு:** மரணம் நெருங்கி விட்டது என்று தெரிந்தவுடன் கட்டிலில் கிடக்கும் ஆளை தரையில் இறக்கி படுக்க வைத்துவிடுவார்கள்.

**கட்டை :** உடம்பு. ''கட்டையச் சாத்தவேண்டியதுதான்''.

**கட்டை போடுதல்:** கல்யாணம் செய்து வைத்தல். ''பயலுக்கு ஒரு கட்டை போடுங்க சரியாயிடும்.''

**கட்டையில போக:** வசவு. கட்டை—பாடை.

**கட்டை வச்சி உழுதல்:** ஒரு குறிப்பிட்ட பருவத்தில் இடை வெளி போட்டு உழுதால் நல்லது. மறு உழவுக்குத் தோதாக இருக்கும்.

**கட்டை வண்டி:** விவசாய காரியங்களுக்கென்று ஏற்பட்ட மாட்டு வண்டி.

**கட்டை வைத்தல்:** தட்டான் கல் விளையாட்டில் எல்லை வைப் பதை 'கட்டை வைத்தல்' என்பர்.

**கடக்குட்டி:** கடைக்குட்டி. கடேசிக் குழந்தை.

**கடக்கோ:** தெல்லு விளையாட்டில்; தட்டுளு ''கடக்கோ''

**கடகம்:** பனைநாரில் பின்னிய பெரிய பெட்டி. விளிம்பில் பனை மட்டை வைத்துக் கட்டப்பட்டிருக்கும். 'கடகப்பெட்டி'

**கடகால்:** வாளி.

**கடவு:** சந்து.

**கடி கண்டுக்கிருச்சி!:** நத்திக்கிருச்சி. ஆண்- பெண் தொடர்பில் ருசி கண்டு கொண்டனர்.

**கடிச்சிக்கிட:** கஞ்சி குடிக்கும்போது வெஞ்சனமாக கடித்துக் கொள்ள.

**கடுக்கன்:** தரிப்பு. ஆண்கள் காதில் தரித்துக் கொள்வது.

**கடுத்தம்:** கடுமை. ''ஆள் ரொம்பக் கடுத்தமான பேர்வழி''

**கடுப்பு:** கோபத்தின் உறுத்தல். கோபத்தின் பொறி அணைந்து விடாமல் மனதின் ஒரு மூலையில் வைத்திருந்து சமயம் வரும்போது பழிவாங்க காத்திருப்பது.
நிற்காமலிருந்து கொண்டு துன்பப்படுத்தும் வலி. நீர்க் கடுப்பு.

**கடும் பட்டம்:** புரட்டாசி ஒன்று முதல் பத்து நாட்கள் கொண்டது. இதை முதல்ப்பட்டம் என்றும் சொல்வார்கள்.

**கடைக் கண்புள்ளி:** கருப்பு நிறமாட்டின் கண்ணுக்குப் பக்கத்தில் வெள்ளைப்புள்ளி இருந்தால் ''கடைக்கண் புள்ளி'' என்பர். இது ஆகாது.

**கடைக்களம்:** களத்தின் ஓரம். விளிம்பு

**கடை செல்லாது:** காரியம் செல்லுபடியாகாது.

**கடையாணிக் குச்சி:** வண்டிச்சாவி.

**கடோர்கஜன்:** லேசில் விட்டுக் கொடுக்காதவன்.

**கண் இறுக்கமுள்ள:** வாழை மரத்திலிருந்து ஒரு பட்டையை உரித்து அந்தப்பட்டையைப் பிரித்துப் பார்த்தால் கண் கண்ணாக—சதுரம் சதுரமாக—இருப்பதைப் பார்க்கலாம். இப்படி ஒவ்வொரு மரப்பலகையிலுமே கண்கண்ணாக இருக்கும்; ஆனால் தெரியாது. கவனித்துப் பார்த்தோ, தடவிப் பார்த்தோ உணர்ந்து கொள்ளலாம்.

வன்னி மரத்தின் பலகையை எவ்வளவுதான் இழைப்புளி கொண்டு இழைத்தாலும் கண் இறுக்கமில்லாத மரம் என்பது தெரிந்துவிடும். பூவரசு அப்படியல்ல. அதன் பலகையில் லேசாக இழைப்புளி பட்டாலும் கண்ணாடிபோல மினு மினுக்கும்.

கண் இறுக்கமுள்ள மரமே மிருதுவான, உறுதியான மரமும்கூட. (கண்—தாவர செல்.)

**கண் கருப்பு:** மைக்கண்.

**கண்டகோடாலி:** கோடாலி போன்ற சிறிய அமைப்பு. லேசாக இருக்கும். சிறு செடிகளை வெட்டிக் கொள்ளலாம்.

**கண்டபாதி:** இருப்பதில் பாதி பங்கு. கண்டதில் பாதி.

**கண்டம்:** தத்து. அபாயம். "16 வயதுல ஒரு கண்டம் இருக்கு." சதைத்துண்டம். உப்புச்சண்டம். "கண்டங் கண்டமா நறுக்கணும் ஒன்னே."

**கண்டம் கண்டமா:** பகுதி பகுதியா.

**கண்டமேனிக்கு:** அடேக்க. வரிசையாக. விவரமில்லாமல். "விவரம் தெரியாமெ கண்டமேனிக்குப் பேசாதெ"

**கண்டவுக:** பார்த்தவர்கள். அறிந்துகொண்டவர்கள்.

**கண்டா ஒண்ணு காணாட்டா ஒண்ணு:** நேரில் பார்க்கும்போது ஒன்று பேசுவதும், அதே நபரை பார்க்காதபோது வேறொன்றைப் பேசுவதும். "**கண்டா காமாட்சி; காணாட்டா பூனை திண்ணி**" — சொலவம்

**கண்டாங்கிச் சேலை:** வெண்ணிறமல்லாத கலர்ச்சேலை.

**கண்டிக்கும்:** கேக்கும். குணப்படுத்தும். "இந்த மருந்துதான் இந்தச் சீக்கைக் கண்டிக்கும்"

**கண்டி வைத்தல்:** பாறைகளை உடைத்தெடுக்கும் போதோ, மண்ணை அகற்றும் போதோ அதன் மேலிருந்து கீழ் வரைக்கும் அகற்றுவது.பூமியின் கீழ்பாறைகள் அடுக்கடுக்காக இருக்கும். ஒவ்வொரு அடுக்கின் இடையை கொடி என்று சொல்வது. மேல் உச்சியிலிருந்து கீழ் கொடி வரைக்கும் ஒன்றுபோல் அகற்றுவதை — கண்டி வைத்து எடுப்பது எனச் சொல்லப்படுகிறது. மரம் வெட்டும் போதும் பகுதி பகுதியாக வெட்டுவதற்கு கண்டி வைத்தல் என்பார்கள்.

**கண்டு கழிக்கணும்:** களத்தில் தானியத்தை தூற்றி பணி பதரைப் பார்த்து ஒதுக்குதல்.

**கண்டு போங்க:** நின்னு போங்க.

வாசலிலிருந்து இறங்கியதும் சகுனம் சரியில்லாததால் திகைத்து நிற்கிரு ர்ஒருவர். அதைக்கண்ட பக்கத்து வீட்டுக்காரர் சொல்லுகிருர் ''கண்டு போங்க.'' பலராகக் கூடி ஊர்வழி செல்லும்போது சிலர் சேர்ந்து நடக்க முடியாமல் பின் தங்கி விடுவார்கள். அவர்களையும் சேர்த்துக் கொள்வதற்காகக் கொஞ்சம் ''கண்டு போங்க'' என்பார்கள்.

**கண்ண இருட்டிருச்சு:** மயக்கம்.

**கண்ணக் கட்டிக்கிட்டு வருது:** கஞ்சி குடியாததால் வரும் ஆயாசம். மயக்கம்.

**கண்ணக்கெடுத்தவன் மதியைக் கொடுத்தான்:** படைத்தவன். ஒன்றை எடுத்துக்கொண்டவன் இன்னொன்றை-இரக்கப்பட்டு— அதிகமாகக் கொடுப்பானும்.

''ஒரு கதவு மூடுனு இன்னொரு கதவு திறக்கும்.''

— சொலவம்.

**கண்ணத் தொறண்ணு, வாயைத்தொறக்கான்!:** அவ்வளவுக்கு விவரந்தெரியாதவன். அப்பாவி. சுபாவி.

**கண்ணடையும்:** திருப்தி ஏற்படும். நிறைவு உண்டாகும்.

''அதை ஒடைச்சாத்தான் ஒனக்கு கண்ணடையும்''

**கண்ண மூடிக்கிட்டி கத்துருன்:** விவரமில்லாமல் போடும் கூப்பாடு.

**கண்ணவிஞ்சி போக:** வசவு.

**கண்ணும் பட்டை:** கண்ரெப்பை — கண் இமை.

**கண்ணும் பூச்சி:** கண்ணைப்பொத்தி ஆடும் ஒரு விளையாட்டு.

**கண்ணுன:** சத்தியமாய்.

**கண்ணுக்கு கண்ணுன இஷ்டம்:** சினேகத்தின் நெருக்கத்தை ஒட்டுதலைச் சுட்டும் பிரயோகம்.

**கண்ணுக்கு பிற்காலம்:** செத்தபிறகு.

''நம்ம கண்ணுக்குப் பெறகு எப்படியானாலும் சரி.''

**கண்ணுக்குள்ளேயே இருக்கு:** பார்க்க வேண்டும் போல் ஆசையாயிருக்கும்.

கண்ணுக்கெட்ட மட்டும்: கண் பார்க்க முடியக்கூடிய தூரம் வரை.

கண்ணுக்கெட்டாம: தொலைதூரம். ''கண்ணுக்கெட்டாமப் போய்ட்டான்''

கண்ணுநிலைக்குத்தி: இமைதட்டாமல் (கிரக்கத்தில்) இருத்தல். கருத்தவிழி மறைந்து வெள்ளை விழிபடர்ந்திருத்தல்.

கண்ணு வெளிச்சத்திலே: பார்ப்பதற்குப் போதுமான வெளிச்சம் இருக்கும்போதே. இருட்டுவதற்குள்ளாக.

கண்ல அடி: சத்தியம் செய்வதில் ஒருமுறை; கண்ணைத் தொட்டு.

கண்லெதான் விடிஞ்சது: இரவு முழுவதும் தூங்காமல் நோயாளியைக் கவனித்துக் கொண்டிருந்ததுபற்றி இப்படிக் கூறுவது.

நாம் வாக்களித்த ஒருபொருளைப் பெற விடிந்தும் விடியாமலும் வந்து நிற்பவனைப்பற்றி இப்படிக் கூறுவது.

கண்றாவி: அசிங்கம், பாதரவு. பார்க்கச் சகிக்காதது.
கணிசம்: ஒரு நிதானமாக. ''கைக் கணிசமாக் கொடேன்'' நிறைய்ய: ''கணிசமான தொகையை எதிர்பார்த்தோம்''.
கணை: மண் வெட்டிக்காம்பு.

கணை எண்ணெய்: கணை என்ற நோய்க்கான எண்ணெய் மருந்து.

''கத்தாளங்கருங்கப்'': இனிமேல்ப் பேசக் கூடாது என்று சொல்லும் கடேசிச் சொல். இந்தச் சொல்லுக்கப்புறம் யார் பேசுகிறார்களோ அவர்கள் தோற்றவர்கள்.

''யார்தான் பேசாமல் இருக்கிறார்களோ பார்ப்போம்'' எனும் விளையாட்டில்.

கத்திக்கம்பு: வேல்க்கம்பு. கத்தி இணைக்கப்பட்ட கம்பு.

கதுவாலி: கௌதாரிப் பறவை.

கந்தரகூளம் பண்றான்: தாருமாறு பண்றான்.

கந்து கந்தாய்: மூலைக்கு மூலைசிதறி.

''ஓநாய் வந்ததும் ஆடுகள் கந்துகந்தாய்ச் சிதறி ஓடின''

கப்சா: புரளி.

கப்சிப்: மூச். பேசப்படாது. சத்தமே கேக்கப்படாது.

கப்பக்காலு: உள் வளைந்த கால்கள்.

கப்பச்ச வருமண்ணு: கட்டைச்சுவர் மண்.

கப்பலு: கப்பல். பிரியமாகக் கொஞ்சும்போதும், பிரிந்த துயரத்தின் போது பயன்படும் வார்த்தை.

கப்பு: காலிடுக்கு— தொடை இடுக்கு.
''ஏதாவது சொன்னே கப்பை கிழிச்சுருவேன்''

கம்சு: முழுக்கைச்சட்டை. ''கமுசு''

கம்பக்கட்டை: கதவிலுள்ள கட்டை. கப்பந்துண்டு.

கம்பரக்கத்தி: சதிர் பிறக்க உதவும் கத்தி.

கம்பாயம்: கைத்தறியில் நெய்த, கலரில் கோடு போட்ட துணி.

கம்பிய நீட்டிட்டான்: ஓடிவிட்டான். தப்பிவிட்டான்.

கம்பு: ஒரு தானியம். கரிசல்ப் பிராந்தியத்தின் பிரதான உணவுப்பயிர்.

கம்புஉமி: கம்பம் பொட்டு.

கம்புக்காரர்: கம்பு விளையாட்டு தெரிந்தவர்.

கம்புக்காரன்: தடி எடுத்து ஜீவனம் செய்பவன். 'குண்டர்'.

கம்புக்கூடு: கக்கம்.

கம்பு விளையாட்டு தெரிந்தவர்: சிலம்பு விளையாட்டில் தேர்ந்தவர்.

கம்மனாட்டி: வசவு. (கைம்பெண்)

கம்மாய்: கண்மாய்.

கம்மி: குறைச்சல். ''அஞ்சு ரூபாய்க்கிக் கால்ரூபா கம்மி''

கம்முண்ணு: பேசாமல். சும்மா. வாசனை.

கம்முநல்: இருட்டுதல். இருட்டிக்கொண்டு வருதல்.

கமலம் வளைந்திருத்தல்: வண்டி பைதா வளைந்திருத்தல். (வண்டி சம்பந்தப்பட்ட சொல்)

கமறல்: காரல். பொரைச்சல். ''சேவுபோட்டு ரொம்ப நாளாச்சு போலிருக்கு கமறுது''. ''தொண்டை கமறிக் கிட்டே இருக்கு.''

கயிறு திரிக்கிறது: ஒன்றைப் பத்தாக்கிப் புளுகுதல்.

கர்நாடகம்: பத்தாம்பசலி. நாப்பதாமாண்டு.

கர்ருபுர்ருங்கான்: நாய் வேற்று நாய்மேல் பாய்வதற்கு முன் உறுமுகிறமாதரி. வன்மங் கூறி முணங்குதல்.

கரட்டு வழக்கு: சண்டிவழக்கு

கரட்டோந்தி: ஓந்தி. ஓணான். ''கரட்டாண்டி''

கரடி விடுதல்: புருடாவிடுதல். புளுகுதல்.

கரடு: புஞ்சையில் முளைத்த புல்வரப்பு.

கரண்டு: வளர்ச்சி குன்றிய. ஆளுரெம்பக் 'கரண்டு' போனான்.

கரணடை: கொம்மையும் தானியமும் சேர்ந்திருப்பது.

கரணடைக்கால்: கணுக்கால்.

கரணை: கால்ஆணி.

கரந்தை: விவசாய குத்தகை ஆண்டு; ஆனியிலிருந்து ஆனி வரை. ''ஆனிக்கரந்தை''

கரம்பை: — உலர்ந்த களிமண்

கரிசல்: கருப்பு நிறங்கொண்ட மானாவாரி புஞ்சைப் பிரதேசம்

கரிசனை: அக்கரை.

கருக்கடை: அக்கரை. பொறுப்பாய் கவனித்தல்.

கருக்கல்: இருட்டு விலகி வெளிச்சம் பெறும் வேளை.

**கருக்கலங்குதல்:** பயந்து போதல்.

**கருக்கறுவா:** பன்னருவாள்.

**கருக்காய்:** விளையாதநெல்; பாதி விளைந்தது.

**கருக்கு:** அறுவாளின் பல். ''பன்னருவாளுக்கு கருக்கு வைக்கணும்''

**கருகருன்னு மசங்க:** முற்றிய மாலை வேளை.

**கருகல்:** பயிர் நோய்.

**கருங்களம்:** வெறும் தரையில் தண்ணீர் தெளித்து பிணையலடித்தல்.

**கருங்காய்:** கொஞ்சங்கூட பழுக்காதகாய்.

**கருங்குடலைக் கையில ஏந்திக்கிட்டு:** என்ன நேருமோ என்று பயந்துகொண்டு.

**கருஞ்செவலை:** மாட்டு நிறங்களில் ஒன்று.

**கருடகொம்பன்:** கொம்பனுக்கும் மேற்பட்டவன்.

**கருப்பட்டிப் போயிலை:** கருப்பட்டிப் பாகில் ஊறப்போட்ட புகையிலை.

**கருப்பட்டியிலும் கல்லுக்கெடக்கும்:** நல்லதுலேயும் சில வேண்டாததும் இருக்கும் என்பது. பொடிக் கற்கள் அதன் உள்ளே இருக்கும் என்பதற்காகக் கருப்பட்டியை வேண்டாம் என்று யாரும் சொல்வாருண்டா?

**கருப்பு:** பிசாசு.

**கரும்போர்:** மாட்டின் நிறம்.

**கருமயிலை:** கருப்பு வெள்ளைக்கலவன் — மாட்டின் நிறம்.

**கருவி விடுதல்:** கருவுதல். சிறுபிள்ளைகள் தட்டான் பிடிக்கும் போதும் தெல்லு, கோலி விளையாடும் போது வைத்தகுறி தப்பிக்கொண்ட இருந்தால் உடனிருக்கும் பிள்ளையைப் பார்த்து ''நீ கருவிக்கிட்டே இருக்க'' என்பார்கள்.

**கரை ஏத்தல்:** கட்டிக் கொடுத்தல். ''குமருவை கரை ஏத்தணு மில்ல''.— கலியாணம் செய்து கொடுக்கவேண்டுமென்று

**கரைக்கட்டு:** வேஷ்டிக்கரை.

**கரைகாரர்:** கண்மாய் அழிந்து மீன் பிடிக்க இறங்கும்போது முதல் கரைகாரர் முதலில் வலை வீசுதலும், இரண்டாம் கரைகாரர் இரண்டாவதும், மூன்றும் கரைகாரர் மூன்ருவதும் வலை வீச வேண்டும். பிறகுதான் மற்றவர்கள் வலை வீச வேண்டும். முதல் கரைகாரர் = முதல் மரியாதைக் குரியவர். மன்னனைக் காரர்.

**கரைச்சல் :** தொல்லை. கலக்கம்.

**கல் :** மைல். ''அந்த ஊர் எத்தனைகல் தொலைவில் இருக்கும்?''

**கல் எறிஞ்ச சிருக்கும் கொக்கு வந்த நேருக்கும்:** பாலில் விழுந்த பழம்போல். காக்காய் உட்கார பனம்பழம் விழுந்தது போல்.

**கல்காம்பு :** மெதுவில்லாமல் கடினமாயுள்ள பால்க்காம்பு.

**கல்லாங் கோரை:** கோரையில் பெரியவகை. கிழங்குக்கோரை வகை.

**கல்லுளி மங்கன்:** கூர்மையான கல்லாலும் உளியாலும் உடம்பில் கீய்ச்சி காயங்கள் உண்டு பண்ணிக்கொண்டு ரத்தம் வடிய வந்து பிச்சை கேட்பவன்.

**கல்லெழுத்தி:** 'கல்லமுத்தி'. 'சிலந்தி' போல் குதிங்காலில் ஏற்பட்டு விண்விண்ணென்று தெறிக்கும். வலிக்கும். சலமிருக்காது.

**கலப்பித்தல்:** நெருக்கமாய் முளைத்துள்ள பயிர்களை தேவையான இடம் விட்டு மற்றதுகளை அப்புறப்படுத்தல்.

**கலப்பைக்குத்தி:** கலப்பையாக செதுக்குவதற்கு முன்னுள்ள கருவை மரத்தின் ஓரளவு செதுக்கப்பட்ட குத்தி.

**கலப்பை மூட்டுதல்:** ஷை குத்தியைச் செதுக்கி துளையிட்டு ஏர்க்காலில் மூட்டுதல். கலப்பையில் கொழுவைஏற்றுதல்.

**கலம்:** முகத்தலளவையில் ஒரு அளவு.

**கலிங்கல்:** குளத்தின் தண்ணீர் நிரம்பியவுடன் மீதித் தண்ணீர் வழிந்துபோக கட்டப்பட்டுள்ள வடிகால். கலுங்கு.

**கலிப்பு:** இனபெருக்கம். ''காட்டுல முயல் கலிச்சுப் போச்சி"

**கலேச்சல்:** மாடு கலேதல். ''குடையெக் கண்டால் மாடு கலேயும்''

**கவக்கால்:** முன் ஏர்வையைத் தூக்கி வரப் பயன்படும் ஓர் கவட்டையான கம்பு. கவக்கம்பு.

**கவுச்சிமாறி:** காம விகாரம் கொண்ட சதை ஆசை பிடித்த வன் (ள்).

**கவுச்சவாடை:** தசைநாற்றம். புலால் சம்பந்தப்பட்ட வாடை.

**கவுடிக்கி:** தன்னிரு கால்களுக்கிடையில் மற்றொன்றை அகப் படுத்துதல். காளை பசு மாட்டின் மீது நோங்கி முன் கால் களைத் தூக்கி பசுவை அகப்படுத்துதலைக் குறிப்பது. மற் றக் கால்நடைகளுக்கும் பொருந்தும்.

**கவுடுமொளஞ்சபய:** மனமில்லாதவன். எதிரியிடம் மானம் மரி யாதையை விட்டு பிழைப்பிற்காக அண்டி வாழ்பவன்.

**கவுருது:** கவிழ்கிறது. ''என்னெத் தலேகவுர வச்சிராதே.''

**கவுல்:** தந்திரம், வஞ்சனை.

**கவுல் எடுத்தல்:** ஜமீன்தாரர்களிடமிருந்து நிலத்தைப் பணம் செலுத்தி குத்தகையாக எடுக்கும் முறை.

**கவுளி:** பிரிவுபட்ட கவட்டைக்கம்பு.
''மரத்துலே ஏறி அந்த கவுளியிலே நின்னுக்கோ''

**கவுறுகுத்தி:** நியமகம். நேத்திக்கடன். விலாவில் 'வேல்' சொருவிக் கொள்ளுதல்.

**கவை:** முள்கவை. முள்ளே ஒன்றுக்கு மேல் ஒன்றாக அடுக்கி வைப்பது. 'ஏர்வை'.

**கழிப்புகழிக்கணும்:** கண்ணேறு மாதிரியான தோசங்களே நீக்குவதற்குச் செய்யும் பரிகாரம்.

கழியக்கூத்து: கோமாளித்தனம்.

கழுத்தாகுதல்: வேலையில் பழக்கப்படுதல்.

கழுத்தில சேலையை போட்டு இழுத்தல்: கடன் வசூலிலுள்ள நிர்பந்தமுறை.

கழுத்தேர்: பல ஏர்கள் உழும்போது முதல் ஏருக்குப் பின்னால் வரும் இரண்டாம் ஏர். ''நடு ஏர்''.

கழுதப்பிரட்டு: கீழ்த்தரமான புரட்டு வேலை. தீர்மானித்த விஷயத்திலிருந்து மாற்றி விடுதல். ''நாளைக்கி கிரையம் முடியறதா இருந்தது, அதுக்குள்ளே போயி எவனோ கழுதப் பிரட்டிட்டான்.''

கழுதபெரட்டுக்கு மாடு பிடிக்கான்: ஒழுங்கான விவசாயத் திற்கு அல்ல.

கழுத பெரண்டகளமா: உபையோகமில்லாமல்

கழுத பெரண்டு போச்சி: தீர்மானம் மாறிவிட்டது. ஒழுங்கில் லாமல் போய் விட்டது.

கழுதை எறியை கழுதைதான் தாங்கணும்:

ஒரு முரட்டுப் பெண்ணின் கோபச்செய்கைகளை—இடி மானங்களை —ஒரு முரட்டு ஆள் தான் தாங்கிக் கொள்ள முடியும். எறி-ஒரே சமயத்தில் இரண்டு கால்களையும் தூக்கி விடும் உதை.

கழுதைக்காலுக்குள்ளே விளாறு விடுறான்: இடம் தெரியாமல் நோட்டம் விடுகிறான்.

கழுதைக்குப் பொதி ஏத்றுகிற நேரம்: 12 மணி முதல் 1 மணி வெயில்.

கழுதையைக்கட்டி ஓம சாந்தி வளர்த்த மாதரி: கீழ்ப்புத்தி உள்ளவர்களை சொல்லித் திருத்த முடியாது என்பது.

கழுந்து உலக்கை: இரும்புக்குப்பி பொறுத்தப்பட்ட—நுனி கொண்ட உலக்கை.

கள்ளத்தும்பு: முடிச்சில் ஒரு வகை.

கள்ளப் பிராந்து: பிராந்து. 'பருந்து'.

கள்ளமயிரு: ஒட்டுமுடி. சவுரி.
''கள்ள மயிரு வைச்சா உள்ள மயிரும் போயிரும்''
—சொலவம்

கள்ளவாளி: திருடன்.

கள்ளம் பெருசா?; காப்பான் பெருசா?: கள்ளனே ஜெயிப்பான் என்பது.

களஞ்சியம்: தானியம் நிரப்ப உபையோகிக்கும் கட்டிடம். ''பட்டரை''

களத்துப் பிச்சை: பொலி, வீட்டுக்கு வருவதற்கு முன்னுல் களத்திலேயே கொடுக்கப்படும் ''பிச்சை''.

களப்பு: ஹோட்டல். ''களப்புக்கடை''

களம்: அறுவடையான கதிரைப் பிணையல் அடித்து தானியம் பிரித்து சுத்தப்படுத்தும் இடம்.

களம் தெளித்தல்: களத்தின் தரையை கட்டியான சாணிப் பால் கொண்டு தெளித்துச் சுத்தப்படுத்துதல்.

களம் விடுதல்: களத்தில் வண்ணுன், குடிமகன், தோட்டி போன்றதொழிலாளிகளுக்கு அளக்காமல் கொடுக்கப்படும் தானியம். களம் தெளிப்பது முதல் தானியத்தை ஆற்றித் தூற்றி அள்ளுவது வரை உடனிருந்து பகடை உதவு வான். அதற்கான கூலியாக அளக்காமல் கொடுக்கப்படும் தானியம்.

களரி கூடிறிச்சி: களரி-கூட்டம். எருதுகட்டு பிடிக்குமிடம். சிலவகைக் கூட்டங்களுக்கு மட்டும் இப்பெயர்.

களலே: உடம்பில் தோன்றும் வேண்டாத சதைக்கோளம். வலிக்காது. இதனுல் உபத்திரவமில்லே; ஆபாசமாயிருக் கும்.

களவாணி: திருடன்.

களேக்குச்சி: களேயைத் தோண்டி எடுக்க உதவும்.

கறிச்சட்டி: மாமிசம் சமைக்க என்று ஏற்பட்ட ஏனம்.

கறிவலிக்கி: உடம்பின் சோம்பலேக் கண்டிக்கும் சொல்.
''ஊரைச் சுத்தணும்ணு ஒண்ணுமில்லே; வேலே செய்ய மட்டும் உனக்கு கறிவலிக்கி.''

கறிவிராயி: கறி முருக்கு. உடல் வலிமை. ''ஓங்கறி விராயி... அப்படிப் பேசீருக்க...ராஸ்கோல்.''

கறுக்கு : . பனைமட்டையின் ஓரம். கயிறு திரிக்க பயன்படும்.

கன்னார்: ஒரு மடைக்குரிய பாசனப்பகுதி.

கன்னி காத்தல்: கன்னிமையைப் பாதுகாத்தல். மணவாளனுக்காகக் காத்திருத்தல்.

கனத்தநாள்: அமாவாசை. ''பாட்டிமை''

கனமாருக்கு: ரெம்ப இருக்கு.

கனறுது: வேக்காடு. புழுக்கம்.

கனைச்சான்: இகழ்ந்து கூறுவது.
''ஆமா, அவன் கனைச்சான் போகச் சொல்லு''

## கா

காக்காக் கால்ல வரும் : ''பணம் ஒத்தவரியில பறந்து கிட்டு வரும்...நீங்க போங்க''

காக்காசு பெறமாட்டான்: குடும்பத்துக்கு கொஞ்சமும் உபையோகமில்லாதவன். ''நடுவுள்ளவன் உனக்குக்கொஞ்சம் உபையோகமா இருப்பான்னு நெனைக்கேன்''
''அவனு! காக்காசு பெறமாட்டான்.''

காக்கா முள்ளு: காக்கையின் அலகு அளவு கனமுள்ள முள்.

காக்கா மூஞ்சிப்புல்: காக்கை அலகு மாதிரியான இலை. களை.

காக்காவிருவு: லேசானவிருவு.

காங்க : பார்க்க.

''காங்க வருவாகோ—உங்களெக்
கனிவச்சிக் காம்பாகோ''

—நாட்டார்பாடல்

காங்கக் கருவேலமாப் போச்சி: பார்ப்பதற்கு அபூர்வமாப் போச்சி.

காங்கலை: காணவில்லை. ''ஆளைக்கண்ணுல காங்கிலெயே!''

காங்கை: வெக்கை. சூடு.

காச்சாம் பூச்சான்னு : ஓசை வெறுப்பு.

காசலை: அக்கரை. ''காசலையாக் கேக்கான்''.

காட்டம்: உள்க்கோபம்.

காட்டெ கட்டி மலையக்கட்டி : பேச்சின் விருதாப் போக்கு.

காடக்கண்ணி : தானியம்.

காடத்தட்டு: காடைப்பறவையைப் பிடிக்கும் கண்ணித்தட்டு.

காடப்பய: காலிப்பய.

காடயத்துக்கூட்ட: வசவு.

காடா செதறி: கண்டபடி. சிதறியபடி.

காடாய்: நிறைந்து அதிகமாகக் காணப்படுவது. ''பிள்ளைக்காடு.'' ''ரத்தக்காடு.''



காடா விளக்கு : சிம்னி இல்லா பெரிய திரி போட்ட மண்ணெண்ணெய் விளக்கு. திருவிழாக்காலங்களில் தெருவோரம், இரவு நேரங்களில் கடை விற்பனை செய்வோர் வைத்திருப்பார்கள்.

காடி: கால்நடைகளுக்கான தீவனம் —கூளம்—போடும் பலகை அமைப்பு முறை.

காடி: கூழ்

காடி கஞ்சியானாலும் மூடிக்குடி.''

காடு பார்த்த கொம்பு: விரிகொம்பு. மாட்டுக்கொம்பில் ஒரு வகை.

காடுவாங்கீர்ச்சி : சவாரி மாடுகள் ஒரு வண்டிக்கு ஒரு வண்டி போட்டியாக முந்த நினைத்து வேகமாகச் செல்லும் போது பாதை வழி போகாமல் விலகி வேறு வழியாக போனால் காடு வாங்கீரிச்சி என்பர்.

காடே மேடேன்னு : பிரயோசனமில்லாத. ''ராத்திரி காடே மேடேண்னு கனக்கண்டேன்'' சம்பந்தா சம்பந்தமில்லாத பல காட்சிகளைக் கனவில் காணுதல்.

காணம்: கொள்ளு. பருப்பு வகை.

காணமெ: போதாமல். ''தொடுகறி கடைசி பந்திக்குகாணமப் போச்சி.''

காணி: உரிமை.

காணை; கோமாரிநோய். வாய்க்காணை—வாயில் தோன்றும் புண். மாடுகளுக்கு வரும் ஒரு நோய்.

காத்தாடுது : வியாபாரம் ஆகவில்லை. தொழில்த்தேக்கம்.

காத்துக்கிட்டு : இருந்து கொண்டு. (காத்துக்கொண்டு). ''எம்புட்டு நேரந்தான் காத்துக்கிட்டு இருக்கிறது?'' வேறு யாரும் வந்துவிடாமல் காத்தல். ''திண்ணையெக் காத்துக்கிட்டுக் கெடக்கான்.''

காத்துப்பிரிதல்: குசுப் போடுதல்.

காதவழி: சுமார் 10 மைல்.

காது குத்துதல்: ஆகாத பேச்சை சொல்லி சம்மதிக்க செய்யும் முயற்சி.

காதோட காதுவச்சமாதிரி: ரகசியமாக. யாருக்கும்தெரியாமல்.

காந்தலைட்: பெட்ரோமாஸ்லைட். ஊர்வலங்களில் எடுத்து செல்லும் பெரியது.

காப்பறுப் பண்ருன்: வீண்கிளர்ச்சி. பரபரப்பான வதந்தி.

காப்புக்கட்டு: பொங்கலன்று, வீட்டு முகப்பிலும், புஞ்சையின் வடகிழக்கு மூலையிலும் வேப்பங்குழை, கண்ணிப்பிள்ளை போன்றவைகளை கட்டுதல்.

வேப்பங்குழையால் பொங்கல் சாட்டியவுடன் தோரணம் கட்டுதல். நல்ல காரியங்களுக்கு கால் நடும்போது அதன் உச்சியில் வேப்பங்குழைக் கட்டுவது. ''பொலி 'கட்டுதல்''

**காப்புத்தடை:** பொங்கல் தடை — எல்லாரும் ஒருமித்த மனதுடன் ஊர் பொதுக்காரியமாகிய பொங்கல் நடத்தி விட்டுத்தான் தமது சொந்த காரியங்களில் கவனம் செலுத்துவர். பொங்கல் சாட்டி விட்டால் அதாவது காப்புக்கட்டி விட்டால், ஊர்ப்பெரியவர்கள், முக்கியஸ்தர்கள் வெளியூர் செல்லமாட்டார்கள். கல்யாணம். சடங்கு, கிரகபிரவேசம் போன்றவற்றை செய்யமாட்டார்கள்.

**காம்பி போச்சு,** ருசிமாறல்

**காம்பு கருப்பு:** பசுவிற்கு காம்பு கருப்பாய் இருத்தல்.

**காமா சோமா:** ஒப்பேத்துதல்.

**காமுட்டாப்பய:** முழுமுட்டாள், அடி முட்டாள் என்பது போல.

**காய்:** குறை மாத கர்ப்பம். சிதைந்த கர்ப்பம். மூணுமாத்தையில் காயி போச்சி. கள்ளத்தனமாய் கருவுற்றவளை 'காய் விளத்தாட்டீட்டா' என்பர்.

**காய் விழுதல்:** குறை பிரசவம். சிதைந்த கரு.

**காயடிக்கம்பு:** ஆட்டுக்கு மாட்டுக்கு உடையடிக்கும் கம்பு. கருவமரங்களில் நெற்று அடிக்க உதவும் கம்பு.

**காயடித்தல் :** உடையடித்தல். ஆடு மாடுகளுக்கு ஆண்மை நீக்கம் செய்தல்.

**காயா பழமா;** சிறுவர்கள் சேர்த்தியா சண்டையா என்பதற்கு இப்படிக் கேட்பார்கள். பெரியவர்கள், காரியம் பலிதமானல் பழம் என்றும் பலிதமாகாவிட்டால் காய் என்றும் சொல்லுவார்கள்.

**காரிக்கம்:** வெளுப்பு இல்லாத மல் துணி.

**காரியகிறுக்கு:** கோட்டி மாதரி தெரிஞ்சாலும், சுயகாரியக்காரன். தன் காரியத்தை முடித்துக் கொள்வதில் ஒரே பைத்தியம்.

**கால்:** சுவர்க்கால்.

**கால்க்காணை:** மாட்டுக்கால் குளம்புகளுக்கு மத்தியில் தோன்றும் புண். வெக்கை காலங்களில் வருவது. தொற்று நோய்.

**கால்கட்டு போடணும்:** கலியாணம் செய்யணும்.

**கால் தாங்குறது:** தரையில் கால் ஊன்ற முடியாமல் ''மாடு கால் தாங்குறது''

**கால் தாண்டி:** சிறுவர்கள் விளையாட்டு

**கால் திமிர் பிடித்தல்:** கால் தற்காலிகமாக மரத்துப் போதல். ''கால் திமிரு பிடிச்சிருக்கு'' —பெருங்கால் பிடிச்சிருச்சி.

**கால்தூக்கிக்கணக்கப் பிள்ளை:** ரொம்ப வசதியான ஒரு நிலக் கிழார். அவருக்கு ஒரு முழங்காலுக்குக் கீழே கால் கிடையாது. அவருக்குப் பக்கத்திலேயே எப்போதும் வச்சாள் இரண்டு பேர்கள் இருப்பார்கள். அவர் எங்கேயாவது புறப்பட வேண்டுமென்றால் வச்சாள்கள் ரெண்டு பேரும் ஒருவன் இடது கையையும், ஒருவன் வலது கையையும் கோர்த்துக் கொண்டு வந்து நிப்பான்கள். இவர் அந்த நொண்டிக்காலை அவன்கள் கோர்த்த கைகளில் ஊன்றி அவன்களுடைய தோளில் இவருடைய கைகளை போட்டுக் கொள்வார். அவருக்கு ஒரு கணக்கப்பிள்ளை உண்டு. அவர் ஓடிவந்து தரையைத் தொட்டுக் கொண்டிருக்கும் தன் முதலாளியின் மற்றொரு காலைத் தூக்கிப் பிடித்துக் கொள்வார். இந்த 'அழகில்' புறப்படுவார் அந்த நிலக் கிழார்.

இப்படிக் காலைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு பின்னாலேயே போகும் அந்த கணக்கப்பிள்ளைக்கு அவர் மாதம் பத்துரூபாய் அதிகப்படி இதுக்காக கொடுத்து வந்தாராம்.

அந்த ஊரில் குழந்தைகள் முதக்கொண்டு அவரை ''யோவ் கால்த்தூக்கிக் கணக்கப்பிள்ளை'' என்றுதான் கூப்பிடுவார்களாம்.

குழந்தைகள் இதேபோல் கால்த்தூக்கிக் கணக்கப்பிள்ளை போட்டு இப்பவும் விளையாடுகிறார்கள், ''கால்த்தூக்கிக் கணக்கப் பிள்ளைக்கு மாசம் பத்துரூபாய்'' என்று சொல்லிக்கொண்டு.

**கால் தூங்குது:** கால் மரத்துப் போதல்.

**கால் மண் வாருதல்:** மாடு செறுக்குப் போடும் போது காலால் தரையைப் பிராண்டும். மூர்க்கம் அதிகமாகும்போது மாடு கள் இப்படிச் செய்யும்.

**கால் மூளையத்துப் போச்சி:** (நடையாய நடந்து) ''உள்ளங் கால் வெள்ளெலும்பாக.''

**கால் விலங்கு:** மாட்டின் முன் முழங்காலில் சுழி இருப்பின், அது கால்விலங்கு. நல்லதல்ல.

**காலக்கிரகம்:** தலை விதி

**காலக் கொடுமை:** அதிசய விபரீதங்களைச் சுட்டும் சொல். ''காலக்கொடுமைக்கு பெருச்சாளி காவடி எடுத்தாடுது''
—சொலவம்.

**கால கொண்டாடி :** ராப்பாடி—இரவில் வந்து குறி சொல் பவன்.

**''காலங்காத்தால'' :** காலை நேரம். விடிந்த உடன்.

**காலச் சுத்துன பாம்பு கடிக்காம தீராது:** அவள் காலைச் சுற் றும் அளவுக்கு மூர்க்கன் வந்துவிட்டால் தீண்டாமல் விடு வானா. விஷயம் முற்றிப் போய் விட்டது. வரும் பாதிப்பை அனுபவித்துத்தான் தீர வேண்டும்.

**கால நிழல் காலுக்குள்ள :** நடுப்பகல் 12 மணி.

**காலம் பெரண்டுருச்சு:** சில அதீதமான அநியாயச் செயல் களைப் பார்த்து இப்படிச் சொல்வார்கள். ''கலி முத்திப் போச்சி.''

**காலம் பெற :** அதி காலையில்.

**காலாங்கரை:** புஞ்சைக்காட்டை அழிக்காமலிருக்க மழை வெள்ளத்தை மரித்து அதை வேறு திசைக்குத் திருப்பி விடும் கரை.

**காலாற:** காலின் விருப்பம் போல; காலாற அப்படியே கொஞ்சம் நடந்து விட்டு வருவது.

காலுக்கு காலா: கால் நடை பரம்பரையைக் குறிக்கும் சொல்; மனித இனத்தை குறிப்பிடும் போது பயன்படும் 'பரம்பரை' மாதரி. ''காலுக்கு காலா ஒரு கண்ணுக் குட்டி இருக்கட்டுமே!''

காலேக்கண்டானு நூலேக் கண்டானு: என்ன தெரியும் அவனுக்கு! ''ஆத்தைக்கண்டானு அழகரைச் சேவிச் சானு''

காவட்டு: தூக்க முடியாத கனமான பொருளே நீளமான கம்பின் மத்தியில் வைத்து இருவர் சேர்ந்து முன்னும் பின்னுமாக தங்கள் புஜங்களில் தாங்கிக் கொண்டு போதல். ஒருவனே ஒரு கம்பின் இருபுறமும் கனமான பொருளே வைத்து நடுவில் தோள் கொடுத்துத் தூக்கிச் செல்வது.

காவு: பலி கொடுத்தல்.

காறை ரத்தம்: கருப்பு நிறமான கெட்ட ரத்தம். சில சிலந்தி களில் இப்படி வரும்.

## கி

இச்சிக்குடுக்கை: ரொம்பச் சின்னவீடு. ''இது என்ன வீடு, கிச்சிக்குடுக்கை கணக்கா.''

கிட்டி: நகர முடியாமல் நிறுத்துதல். நெருக்குதல். ''கிட்டி போட்டு பணத்தை வசூல் செய்கிருன்.'' காலேக்குப் போடும் போது பசு மாடு நகர்ந்து போய் விடாமல் நிற்க. மரம் அல்லது இரும்பினுல் செய்யப்பட்டுள்ள ஏற் பாடு ''மாட்டை கிட்டிக்குள் போடு''

கிட்டிக் குச்சி: ஒரு விளேயாட்டு, கிரிக்கெட் மாதரி.

கிட்டித்தல்: ஒரு கம்பத்தைத் தோண்டிய குழியில் நிறுத்தி சுற்றிலும் மண் போட்டு இறுக்குதலுக்கு 'கிட்டித்தல்' என்று பெயர்.

கிட்டவாயிருக்கு: தான் செய்து முடிக்கக் கூடிய காரியமா அது எனத் தோன்றும் போது சொல்லும் சொல்.

காரிய முடிவின் தொலை தூரத்தை எண்ணி மலைத்துச் சொல்லப்படுவது. ''ராமேஸ்வரம் கிட்டெயா இருக்கு'' என்றும் சொல்வார்கள்.

கிடக்க: நிம்மதியாக இருக்க. ''இவ்வளவுக்கு எடங் கொடுத்தப்புறம் நம்மளை கிடக்க விடுவானா?''

கிடாவிரட்டிருக்கு: ஆடு சினை பிடிச்சிருக்கு.



கிடு கட்டி: ஊர் சாட்டும் போது ஒலி எழுப்பும் சிறிய முரசு.

கிடுகு: ஓலை கீற்றினால் பின்னப்பட்டது.

கிடை எழுப்புகிற நேரம்: காலை சுமார் 10 மணி.

கிண்டிக் கவுத்தனும்: கம்மஞ் சோற்றை வேக வைத்துத் துடுப்பால் கிண்டி முடித்து உலை மூடியால் கவிழ்த்தால் வேலை பூர்த்தி.

கிண்டிக் கிழங்கை எடுத்திருவான்: சும்மா விடமாட்டான். தொந்தரவு செய்து விஷயங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுதலைப் பற்றி.

கிண்டி முடணும்: கம்மஞ்சோறு ஆக்குதல் பற்றி.

கிண்டி மேய்தல்: உரிமையுள்ளது போல நடந்து கொள்ளல் இஷ்டம் போல் அனுபவிக்க நினைத்தல். ''எங்கெ வந்து கிண்டி மேய்தெ இதல்லாம் இங்கே வச்சிக்கிடப் படாது ஆம''

கிண்ணிட்டான்: ஓட்டம் பிடித்து விட்டான்.

கிண்ணி நகண்டு போச்சு: தொடை எலும்பு, இடுப்பு எலும்புடன் சேருமிடத்திலிருந்து சேராமல் நகண்டு விடுதல்.

கிணுங்குதல்: அசைதல். ''பயல் என்ன சொன்னாலும் கிணங்க மாட்டங்கான்''

கிந்தான்: நொண்டிவிளையாட்டு—ஒரு கால் மட்டும் ஊன்றி —விளையாடுவது.

கிந்தி: நொண்டி. கிந்தி கிந்தி நடக்கான்''.

கிம்பளம்: லஞ்சம்.

கிரகசாரம்: தலைவிதி

கிரகம் பிடிச்சுப் பய: சனியன் பிடிச்சவன். சனியன் என்ற பெயரைக்கூட உச்சரிக்கக் கூடாதாம்!

கிராக்கி: தட்டுப்பாடு. பிரியக்கால்.

கிராக்கு: கிறுக்கு.

கிரிச்சிக் கெட்டு: நீளமான துண்டால் இடதுபுறம் குஞ்சம் இருக்கும்படியாகக் கட்டும் அழகான தலைப்பா.

கிருஷ்ண சாமி: கிருஷ்ணப்பருந்து. கருடன். 'கிட்ணசாமி''

கிருசு கெட்ட பய: வசவு

கிருத்திரியம்: ஒருவகை சாய்ந்த கேலி. ஆதரித்துப் பேசுவது போல் நடிக்கும் கேலி.

கில்லாடி: கோப்பன்.

கிலாக கொம்பு: மாட்டுக் கொம்பில் ஒரு வகை.

கிழங்கு கெணக்கா: உருண்டு திரண்டு. ''நல்ல கிழங்கு கெணக்க, இரு உன்னைச் சொல்லுதேன்''

கிழிச்சி உப்பு வைச்சுருவேன்: மீனைக் கருவாடாகச் செய்வது போல, கோபமாகச் சொல்லும் ஒரு எச்சரிக்கை.

கிழிஞ்சி போச்சு: சலிப்பின் மேல் கூறுவது. ''கிழிஞ்சதுபோ''

கிழித்தல்: ஆமா. அவருஉ செஞ்சிகிழிச்சாரு. படிச்சிக் கிழிச்சிட்டான்.

கிளி கிளிண்ணு கிளிக்கிறது: எதிராளியின் குட்டு நெட்டை எல்லாம் பகிரங்கமாக எடுத்து வீசுறது. (கிளித்தல்— கிழித்தல்)

முகமூடியைக் கிழித்தல். ''அவன் யார் என்பதை அம்பலப் படுத்தல். ''கிளியாக் கிளிக்கான்'' வைகிறுன்.

கிளிச்செ...நீ: முதலிரவில் பெண்ணை வெற்றி கொள்ளாதவனை நினைத்து ஏசும் சொல்லாக இதைக் கருதுபவர்களும் உண்டு. ''இதைச் செய்து காட்டுகிறேன் பார்'' என்று ஒருவன் சொல்ல, ''ஆம, நீ கிளிச்செ போ" என்று மற்றவன் ஏளனம் செய்கிருன். (கிளித்தல்—கிழித்தல்).

கிளித்தட்டு: ஒரு விளையாட்டு.

கிளியாஞ்சட்டி: மண்ணுல் ஆன சிறிய அகல் விளக்கு. ''கிளியஞ்சட்டி.''

கிறுகிறுன்னு வருது: மயக்கமாய் வருகிறது. தலை சுற்றுதல். நோய் அல்லது பசியின் காரணமாக.

கிறுமம்: ஒழுங்கு. சீட்டு விளையாட்டில் குறைந்த பட்சக் கேள்வி. ''கிறுமமாய் இருக்கிறதாய் இருந்தால் இரு''

## கீ

கீதாரி: ஆட்டுக்கிடையின் தலைவன்.
கீமாறுது: கடலில் மேகம் நீர்வாங்குவதை இப்படிச் சொல்வர்.

கீரமுண்டை: வசவு. கைம்பெண்கள் தங்கள் உணர்ச்சியை அடக்க கீரைத்தண்டும், சோறும் உண்பர். கீரைத்தண்டு உணர்ச்சியை அடக்குமாம்.'' ''மனுசனுக்கு கீரைத் தண்டு யானைக்கு வாழைத்தண்டு''—சொலவம்.

கீழூருக்கு மேலூரு: பக்கத்து ஊர்கள். உறவை சொல்லிக் காட்டுதல்.

கீளுப்பூளுங்கான்: சரியான பதில் இல்லை.

## கு

குக்கிப்போதல்: மனத்தாழ்வு ஏற்பட்டு விடுதல். நினைத்து நினைத்து மனப்பள்ளம் விழுந்து விடுதல்.

குச்சல்: குச்சில். குடிசை. சடங்கான பொண்ணுக்குத் தாய் மாமன் கட்டிக் கொடுப்பது; பதினறு நாட்களுக்கு மட்டு மானது.

குச்சி முறிச்சிப் போடுருன்: சண்டைக்குக் காரணமான விஷ யங்களைத் தூண்டி விடுகிருன். சண்டை மூட்டி விடுகிருன். சிண்டு முடிந்து விடுதல்.

குச்சி வைத்தல்: கர்ப்பத்தைக் கலைக்கும் முயற்சி. எரிக்கங் குச்சியை குறிக்குள் வைத்தல்.

குசும்பு: கோள் சொல்லுதல். ''குசும்பு குண்டாமணி''

குட்டப்புழுதி: குழந்தைகள் பண்ணும் அட்டகாசம்.

''குட்டிக்கரணம்'': வெகு தீவிர முனைப்பு. பிரயாசை. ''நீ என்ன குட்டிக்கரணம் போட்டாலும் நடக்காது.''

குட்டிக்கிராலித்தனம்: காலித்தனம். சில்லரைத்தனம்.

குட்டிச்சொவரு: குட்டிச்சுவர். வாழ லாயக்கில்லாதவன்.

குட்டித்தாச்சி: குட்டி போட்ட தாய்ச்சி ஆடு.

குட்டிதட்டீட்டா: கள்ளத்தனமாய் கருவுற்றவள் காய் விழத் தாட்டுதல்.

குட்டிபோட்டிருக்கு: கம்மஞ்சோறு கிண்டும் போது கட்டி கட்டியாக விழுந்து விடுகிறதைக் குட்டி போட்டிருச்சு என்பர்.

குட்டு நெட்டு: வண்டவாளம். பலம், பலகீனம்.

குட்டோட்டம்: குட்டி ஓட்டம். சிறிய ஓட்டம்.

குடங்கை: முழங்கைக்கும் மணிக்கைக்கும் நடுவிலுள்ள கைப்பகுதி. ''குடங்கையைத் தணிச்சுப்பிடி''

''கொடுங்கை'' ''கொடுக்கை''

குடப்பூண்: வண்டிச் சக்கரக் குடத்துக்கு இருபுறமும் பிடித் துள்ள பூண்.



குடம்: சக்கரத்தின் ஆரக்கால்கள் வந்து குவியுமிடம்.

**குடிமகன்:** நாசுவன். பண்டிதன். சவரத்தொழிலாளி.

**குடுக்கவாங்கப் பண்றுன்:** வட்டிக்குக் கொடுத்து வாங்குறுன்

**குடுமி வாங்கி:** காது குடும்பி.

**குண்டாமாறி சம்மந்தம்:** அவனுடைய உடன் பிறந்தாளை இவனுக்கும், இவனுடைய உடன் பிறந்தாளை அவனுக்கும் திருமணம் முடிப்பது.

**குண்டாளமாய்:** உள் குழிந்திருப்பது.

**குண்டிச் சேலையை நம்பாதவன்:** எதிலும் அவநம்பிக்கை.

**குண்டி மறந்த:** அசாத்ய போக மறதி. மேல்த்துண்டை கீழே போட்டு உட்கார்ந்தது கூட ஞாபகமில்லாமல் எழுந்திருந்து போகிறவன். ''குண்டி மறந்த பய''.

**குண்டு:** வயலில் ஒரு சிறு பகுதி.

**குண்டு:** சாமர்த்தியம்.

''அவன் குண்டு இங்கே செல்லாது''

**குணக்கம்:** மனக்கோணல். பாதிப்பினுல் ஏற்படும் மனச் சோர்வு.

**குணக்குதல்:** கெடுதல். கோணப்படுத்துதல். ''கணக்கனே கொணக்கனே.''

**குணங்குதல்:** சரியில்லாமல் போதல். கெட்டுப்போவதின் ஆரம்பம்.

**குத்தம் :** தப்பிதம். குற்றம்.

**குத்தமில்லே:** வசதியாய் உள்ளது. தேவலே. பரவாயில்லே. சுமார். (குற்றமில்லே).

''அவுகபாடு முந்திக்கிப்ப குத்தமில்லே.''

**குத்தாக்கை:** வீடு மேய்ச்சலில் உபயோகிப்பது. இரண்டாய்ப் பிளந்த உடை விளாரு.

**குத்தாயி:** உட்கார். ''குத்த வை''

**குத்தி:** பாட்டில், புட்டி. போத்தல்.

**குத்திப்போடணும்:** கம்மஞ்சோறு ஆக்குதல்.

**குத்துக்கல்:** பல புஞ்சைகளின் எல்லைச் சந்திப்பைக் காட்டும் கல். பொளிக்கல்லை விட இது பருமனாகவும் உயரமாகவு மிருக்கும்.

**குத்துக்கால்:** பாதங்கள் இரண்டும் தரையில் ஊன்றி இருக்க பிட்டி மட்டும் தரை தொட்டு உட்காருவது அல்லது தரை தொடாமலேயும் உட்காரலாம்.
''தரை ஈரமா இருக்கு குத்துக்கால் வச்சி உக்காரு''

**குத்துக்கொம்பு:** மாட்டுக் கொம்பில் ஒரு வகை.

**குத்துப்பெட்டி:** பனைநாரினால் ஆனபெட்டி. குற்றுவதற்காகக் கம்மம்புல் எடுத்துவரவும், குற்றிய அரிசியை இடித்த பின் எடுத்துப் போகவும் பயன்படும் பெட்டி.

**குத்துப் பொலி:** களத்தில் தானியத்தை பொலி வீசும்போது வானவில் மாதரி வீசாமல் மேல் கீழாகப் போடுதல்.

**குத்து மதிப்பு:** சுமார். தோராயமாக. உருட்டுப்பொதியாய். உத்தேசமாக.

**குதப்புதல்:** வாய்ச்சுவையாக ஒதுக்கிக் கொள்ளுதல்.

**குதிரைக்கட்டு:** வைக்கோல், நாற்றுக்கட்டு, மல்லிக்கட்டு போன்றவற்றை ஏற்றும்போது இருப்புச் சட்டத்தில் முன் பக்கம் நீளவாக்கில் வைக்கப்படும் கட்டு. இதன்மேல் குதிரையில் உட்காருவது போல் உட்கார்ந்து கொள்ளலாம்.

**குதுகுதுன்னு வருது:** காய்ச்சல் காரணமான உணர்வு.

**குந்தந்தள்ளிபோயிருக்கு:** குருடான கண்விழி வெளியே தள்ளிக் கொண்டிருக்கும்.

**குந்தாணி:** நெல் குத்த உதவுவது. கட்டையாகக் குண்டாக இருப்பவளைக் கேலியாகக் குந்தாணி என்பார்கள். கேலி வசவு. ''குந்தாணிக் கொளகட்ட
ஒம் புருஷன் தவக்கட்ட.''

**குந்து வைத்தல்:** கொத்தமல்லிச் செடியை களத்தில் பிணையல் அடிப்பதற்கு முன்னால் நெருக்கி நட்டுக்குத்தலாக நிறுத்தி வைப்பது.

**குப்புற விழுந்தாரு:** குப்புறவிழுந்த குழந்தை சீக்கிரம் தவழ்ந்து விளையாட ஆரம்பிக்கும்.
''அவரு வேலை செஞ்சி குப்புற விழுந்தாருபோ''

**குப்பை கொட்டுதல்:** சேர்ந்து வாழ்தல். இருந்து வாழ்தல்.

**குப்பைமேனி:** பெயர் சொல்லாப் பச்சிலை.

**கும்பா:** உணவு இட்டு உண்ணும் ஏனம்.

**கும்பிடு உழவு:** மண் மகுந்து விழாமல் அப்படியே உழவு தெரியும்படியாக உழுவது.

**கும்மரச்சம்:** அமைதி குலைக்கும் கூட்டுக்குரல்கள். ''பிள்ளைகளெல்லாம்கூடிக்கும் மரச்சம் போடுது'' ஒழுங்கில்லாத இரைச்சல், சப்தம். கட்டுப் பாடில்லாத ஆட்ட பாட்டமும் சப்தமும். ''குடிச்சுப்போட்டு கும்மரச்சம் போடுறுங்க.''

**குய்யப்படுதல்:** கூச்சப்படுதல். ''அடப்பாவி! இவன் என்ன இப்பிடிக்குய்யப்படுதான்!''

**குரக்கோல்:** வண்டி வில்லைச் சம்பாரத்தோடு இணைப்பது

**குரால்:** ஈனுத ஆடு.

**குராவுதல்:** சோர்தல். ''முகம் குராவிப்போயி அலையுரான் மூணு நாளா...என்னேண்ணு தெரியலே.''

**குருடனுக்குஒரேமதி:** தான் நினைப்பதைச் சாதிக்க முனைபவன். அதன் பின் விளைவுகளை எண்ணிப்பாராதவன்.

**குருணி:** முகத்தலளவை.

குலமழிக்கான் : குலதர்மத்தை அழிக்கிறான். குலப் பெருமையை அழிக்கான். வசவு.

குலவை: குரவையிடுதல்

குலுக்கை: குதிர், தானிய சேமிப்புக்கு.

குழி: தமிழ்கணக்கின் பரப்பளவு. குழி பெருக்கம்.

குழிதாடி: மாட்டுக்கு தண்ணீர் காட்டும் மண் தொட்டி. ''குழி தாழி''

குழிப்பந்து: ஒருவகைப்பந்து விளையாட்டு.

குழிப்பால் ஊற்றுதல் : கொன்ற நல்ல பாம்பைப் புதைத்த இடத்தில் பால் ஊற்றுதல். சிறுகுழந்தைகளைப் புதைத்த இடத்தில் மறுநாள் போய் பாலூற்றுவார்கள்.

குழிப்பூப்பூத்திருக்கு: நிலக்கடலையில் முதலில் பூக்கும் பூ.

குழியில போட: வசவு

குழையடித்தல்: இதமாக எடுத்துச் சொல்லி பிடிவாதத்தை கொஞ்சம் கொஞ்சமாக இறக்கி, தன்வயப்படுத்தல். மசியவைத்தல். ''குழையடிச்சுப் பாத்தான் முடியல''

குள்ளங்கம்பு: நாட்டுக்கம்பு.

**குளத்துக்குதான் வாட்டம், குத்துக்கல்லுக்கு என்ன வாட்டம்:** குடும்பத்தில் பெரியவர்களுக்குத் தான் கவலையெல்லாம்; குழந்தைகளுக்கு அதைப்பற்றியெல்லாம் என்ன தெரியும்.

குளியாமல்: மாதவிடாய் காரணமாகக் குளிக்கும் ''மாசக் குளிப்பு'' நின்று போனது; கர்ப்பவதியானதால்.

குளிர்விட்டுப் போச்சு: பயத்தின் காரணமாக ஏற்பட்ட நடுக்கம் தீர்ந்து போச்சு.

குளுசங்கம், ஒரு காரியத்தை எதிர்பார்த்து நடக்கும் பொய் நடை. இதை அறிந்து கொண்டவர்கள், ''என்ன இப்படி குளுசங்கம் போடுறான்'' என்று சொல்வார்கள்.

குளுந்திருச்சி: அம்மை நோய் காரணமாக இறந்துவிட்டது.

குளுப்பாட்டறது: முகஸ்துதி செய்தல்.

குளுப்பாட்டி படுக்க வைக்கிறது: வங்கிழடுகள் உயிர் போகாமல் நீண்ட நாள் இழுத்துக் கொண்டு கிடந்தால் தலையிலும் உடம்பிலும் எண்ணெய் தப்பளம் போட்டு குடங்குடமாய் விடாமல்—மூச்சு விடமுடியாமல்!— குளிர்ந்த தண்ணீரைக் கொட்டிக் குளுப்பாட்டிப் படுக்க வைக்கிறது.

குறிச்சி: நாற்காலி. 'நாக்காலி'

குறிப்பு: ஜாதகம். ''குறிப்பு பார்க்கணும்''

குறிபார்க்கணும்: கோடாங்கி பார்க்கணும்.

குறுக்கம்: 96 செண்ட் கொண்ட பரப்பு. (சில பகுதிகளில் 90 செண்டுகள்; சில பகுதியில் 91 செண்டுகள்).

குறுக்கு: இடுப்பு. ''குறுக்கு பிடிச்சிக்கிட்டது''

குறுங்கட்டில்: முட்டு வீட்டு பிள்ளையைப் படுக்க வைக்க உதவும் சிறிய கட்டில்.

குறுத்தோலை: இளம் ஓலை. குறுத்தோலை × சாரோலை. (குருத்துஓலை)

குறுத வாலி: குதிரை வாலி — கரிசல்காட்டு மானாவாரியில் விளையும் அரிசிதானியம்.

குறும்பை: பனங்காயில் பிஞ்சு. (குரும்பை)



குறுமாத்து உழவு: குறுக்கு வசத்திலான உழவு. அதாவது அகல வசத்திலான உழவு. நீள வசத்திலான உழவு. நெட்டாய உழவு.

குறுமான்: குட்டி ''குட்டிகுறுமான்''

குறைப்பழுது: மாட்டின் விலா எலும்பு ஒன்றுமட்டுமே ஏற்பட்ட எண்ணிக்கையில் குறைவாக இருப்பின் அது குறை பழுது என்பர். இரு இருபுறமும் குறைவாயிருந்தால் குற்றம் என்றும் குற்றமில்லை என்றும் இருவிதமாகக் கூறப்படுகிறது.

கூச்சம் நாச்சமில்லாம: நாணம் சிறிதுமின்றி.

கூசாக்களித்தனம்: சிண்டு முடிதல். ஊமைக் குசும்பு.

கூட்டாஞ் சோறு: பலவகை காய்கறிகளை ஒன்றாகப் போட்டு சமைத்த சோறு.

கூட்டாளி: நண்பன். சேக்காளி.

கூட்டுக்கள்ளவாளி: திருட்டுத்தனத்தில் சேர்ந்து கொண்டவன். திருட்டில் பங்காளி.

கூட: இன்னும். மேலும். அதிகப்படி.
''கூட ரெண்டு பேர்''

கூடக்கூடப் பேசறது: மனைவி சொல்லுக்குச்சொல் பதில் சொல்லிக் கொண்டிருந்தால் கணவன் இப்படிக் கூறுவான்.

கூடி: வழி. ''இப்பிடிக் கூடி வரணும்ண்ணாலும் வரலாம். அப்பிடிக் கூடி வரணும்ண்ணாலும் வரலாம்.''

கூடு கொம்பு: மாட்டுக் கொம்பிலொரு வகை.

கூடுதல்: அதிகம். ''விலை ரொம்பக் கூடுதல்.''

கூத்து: கேலிக்கிடமான செயல். ''நல்ல கூத்துத்தான்... போங்க''

கூதல்: குளிர்.

கூதல் காயணும்: குளிரின் நடுக்கத்திலிருந்து உடம்பைத் தேற்றிக் கொள்ள நெருப்பின் அருகிலோ வெயிலிலோ காய்தல்.

கூந்தல்: பனங்காயில் நொங் கெடுத்ததுபோக மீதிப் பகுதி. பனங்காயின் சீவிய மேற்பகுதி.

''நொங்கு தின்னவனை விட்டுட்டு கூந்தல் நக்குனவனைப் பிடிச்ச மாதரி'' — சொலவம்.

கூந்தாளம்: அருகு பெயர்க்க, குப்பைகிளற உதவும் ஆயுதம்,

கூப்ட்டான்: கெட்ட நோக்கத்துடன் 'கூப்ட்டான்' என்று பெண் சொல்லும் ஆவலாதி.

கூப்பதினி: பாகுபோல் காய்ச்சிய பதநீர்.

கூப்பரை: கவைக்கு உதவாதவன்(ள்)

கூப்பிட்டான்: ஆட்டுக்கு வரும் நோய்.

கூப்பிடு தூரம்
கூப்பிடு தொலே } எழுப்பும் குரல் கேட்கும் தூரம்.

கூமுட்டை: பொரிக்காத முட்டை. வசவு. பயனற்றவன்.

கூராப்பு: மேகங்கள் கூரைபோல் அடர்த்தியாக நின்று பூமி யில் வெயில் விழாமல் செய்வது. ''இன்னிக்குப் பொழு தையே காணோம்... ஒரே கூராப்பா இருக்கு''

கூவர்த்தமாய் பேசுறான்: பூடகமாய் பேசுறான். மறை பொரு ளாகப் பேசுகிறான். கூகமாய்ப்பேசுறது.

கூவிருச்சி: சேவல் பருவ மடைந்து விட்டது.

கூவெய்யடைஞ்சி போயி: அருள் கெட்டுப்போயி. மனிதர் வாழும் வீடுகளில் கூகை, ஆந்தை, வௌவால் அடையக்கூடாது என்பது.

கூளக்கும்பிடு: மனம் உவந்த கும்பிடு அல்ல. பொய்க் கும் பிடு. கும்பிடுகிறவனுக்குத்தான் தெரியும், அது பொய்க் கும்பிடு என்று!

கூளம்: தானியப் பயிர்களின் காய்ந்த தட்டைகள்.

கூறு: புத்தி. ''கூறுகெட்ட பய.''

ஐந்து விரல்கள் பொங்கக்கொள்ளும் அளவு பருத்தி.
மொத்தத்தைப் பல பகுதிகளாகப் பிரிக்கும் சிறு குவியல்.
'கூறுகட்டி விற்றல்.''

கூறுகிள்ளுதல்: ஒரு கம்பை நட்டுவதற்குக் குழி தோண்டி முடித்தபின், நட வேண்டிய கம்பைக் குழிக்குள் இறக்கி மண்ணை தள்ளுகிறோம். இந்த மண் சரியாகக் கீழிறங்கு வதற்காக, குழி தோண்டப் பயன்பட்ட கம்பியின் தட்டை யான மறுநுனியால் கம்பைச் சுற்றிக் கிட்டிக்கிறோம். இதற்கு கூறுகிள்ளுதல் என்று பெயர்.

கூறுவால்: மாட்டுவால் வகையில் ஒன்று.

கூறுவைத்தல்: பருத்தியைக் கூறுகூருகப் பிரித்து வைப்பது. காட்டிலிருந்து பருத்தி எடுத்துக்கொண்டு வருகிறவர்களுக்கு இந்த முறையில் பகிர்ந்து கொடுப்பார்கள் கூலிப் பருத்தியாக.

கூனிக்குத்தி: அதிகம் விரியாத கலப்பைக்குத்தி. 90°க்கு குறைந்தது. செவ்வாளமேழிக்கு கூனிக்குத்தி ஏற்றது.

கூனிமேழி: அதிகம் விரியாத மேழி.

கூனை: கமலேயில் தண்ணர் மொள்ளும் ''அண்டா.''

## கெ

கெங்கு வரைக்கும்: அத்தம் வரைக்கும். முடிவு வரையிலும். ''பிரிவி கவுன்சில்'' வரைக்கும். லண்டன் வரைக்கும். அங்கே ராஜா (கிங்) இருந்ததால் இப்படிப் பிரயோகம் வந்தது. ஐக்கோர்ட் வரைக்கும் இழுத்தடிப்பேன் என் பதுபோலக் கெங்கு வரைக்கும் கொண்டு போவேன் என்ற சொல்வழக்கு வந்தது. இன்றைக்கும், ''கெங்கு வரைக்கும் அடிப்பேனுக்கும்''. என்ற பிரயோகமுண்டு.

கெச்சட்டம்: பறவைகளின் சந்தோஷ ஆரவாரம்.

கெச்சம்: சதங்கை—காலில் ஒயில் கும்மிக்காரர்கள் கட்டிக் கொள்ளும் சிறுமணிகள்.

கெச்சங் கெட்டிக் கிளி வளர்த்தேன்
கீழத்தெரு மேய விட்டேன்.

—நாட்டார்பாடல்.

கெசம்: ஆழமான நீர் நிலே. ''இருட்டுக்கசமாயிருக்கு'' ''வெள்ளம் வந்து பிஞ்சையைக் கெசப் பிடுங்காப் பிடிங் கீருச்சி''.

கெசவாலு: பெரியவாலு, சுழியன், சுட்டி.

கெட்டவார்த்தை: புணர்ச்சி. பால்சம்மந்தப்பட்ட பேச்சு. ''அவளை அவன் கெட்டவார்த்தைக்குக் கூப்பிட்டானும்!''

கெட்டி: தெல்லு விளையாட்டில் முதலில் ஆட வேண்டியவன். ''கெட்டிக்குப் பித்தி பாத்துருவோம்''

**கெட்டி மேய்க்கிறது:** பொறுப்போடு கட்டி ஆளுதல். ''கட்டி மேய்க்கிறது.''

**கெட்டுக்குச் சேராது:** உருப்படாது.

**கெடக்க விடுவாளு:** நிம்மதியாக இருக்க.
''இவ்வளவு எடங் கொடுத்தப்பறம் நம்மளே கெடக்க விடுவாளு?''

**கெடந்தான் :** சுகித்தான். அனுபவித்தான்.

**கெடப்பெசகு:** படுக்கையிலிருந்து எழுந்திருக்கும்போது அறியப்படும் கழுத்துப் பிடிப்பு.

**கெடாரம்:** புதையல். கெண்டுகெடாரம்.

**கெடி:** ரயில்வே ஸ்டேஷன். ''ரயில்க் கெடி''

**கெடும்பு:** கெடுக்க வேண்டுமென்ற எண்ணம். கெடுதல். ''அவனுக்கிருக்கிற கெடும்பு அப்...ப சொல்லமாட்டென்''

**கெடுமதி கண்ணுக்குத் தோத்தாது:** தான் கெட்டுப்போவதை அறியாமல் சரியில்லாத ஒன்றைப் பிடிவாதமாகச் செய்ய முயல்வது.

**கெண்டவிராயி :** திமிர். கொழுப்பு.

**கெண்டு கிடாரம்:** அபூர்வமான பரிசுப்பொருள்கள். ''இதைப் போயி நாம அங்க சொல்லீட்டாப்புல...நமக்கென்ன கெண்டு கிடாரமா கிடைக்கப் போகுது''.

**கெண்டை :** கிண்டல். கேலி.

**கெணக்க:** மாதரியாக. ''இவனே பார்க்கும் போது அவன் கெணக்க இருக்கு''. போல. ''கல்கெணக்க இருக்கு''

**கெத்து:** உள்க்குட்டு. ''கெத்து விடாமலிருக்கான்''.

**கெத்துகு:** சேவலோட மேயத் தயாராகிறது. ''அடைக் கெத்து'' அடை காக்க இடம் தேடி கோழி எழுப்பும் ஒலி.

**கெதி:** ஆரோக்யம். ''ஆளு இப்பொ கெதியா இருக்கார்''

**கெந்தளிப்பு:** நிறைந்த சந்தோஷம்.

**கெராக் கெட்ட:** அதிர்ஷ்டம் கெட்ட. ''கெராக் கெட்ட களுதெ''

**கெலிச்சுட்டான்:** ஜெயிச்சிட்டான். தப்பிவிட்டான். நாலு பேர் சேர்ந்து மரிச்சும் கெலிச்சி ஓடீட்டான்.

**கெலித்தல்:** வெற்றி பெறுதல், பலுகிப் பெருகுதல்.

**கெவி:** ஆழமான கிடங்கு.

**கெளிமதம்:** திமிர்.

**கெளிமதமா பேசுறுன்:** ஜெயித்த அகம்பாவம். (கெலிமதம்)

**கெற்பகிரி:** மார்கழி மாதம் குறிப்பிட்ட ஒரு தேதியிலிருந்து வானத்தில் சஞ்சாரம் செய்யும் மேகங்களின் நிலையும் அதன் பலன்களும் கொண்டது. இச்சமயத்தில் மழை பெய்ய ஏது உண்டு.

**கேதம்:** துட்டி. இழவு.

**கேந்தி:** ஆசை வெறி. ''கேந்தி பிடிச்சிப்போயி அலையுருன்.''

**கேப்பாரு பேச்சைக் கேட்டுக்கிட்டு:** ''தங்கமான பய... கேப்பாரு பேச்சைக் கேட்டுக்கிட்டுக் கெட்டுப்போருன்.''

**கேள்வி கேப்பாரு இல்லே:** யார் எது செய்தாலும் என்ன என்று தட்டிக்கேட்க ஆள் கிடையாது.

**கேறுது:** கோழி முட்டையிடவரும் பருவத்தில் எழுப்பும் ஒலி. முட்டைக்கு வருகிறது. ''கோழி இப்பொதான்கேறுது''

## கை

**கை ஏடுபடிக்கிறவர்:** கற்றுச் சொல்லி.

**கைக்கு எட்டினது வாய்க்கு எட்டலே:** அடைந்தும் அனுபவிக்க முடியவில்லே.

**கைக்குள்ளே:** ரொம்பக்கிட்ட. ''அந்த ஊர் எவ்வளவு தூரமிருக்கும்?'' ''கைக்குள்ளதான்''

**கைகண்ட மருந்து:** சொன்னுங்கம். இந்த நோய்க்கு இந்த மருந்துதான் என்ற நிச்சயம்; அனுபவரீதியானது.

**கைகாரன்:** கோப்பன். வில்லன். பலவித தந்திரோபாயங் களைத் தெரிந்தவன். சொந்த உழைப்பில் வாழாதவன்.

**கைகாரி:** நல்வழி அல்லாத கெட்டிக்காரத்தனத்தை உடைய வள்.

**கைகால் விளங்காமல்:** பக்கவாதம். ''அவருக்கு திடீர்னு கைகால் விளங்காமல்ப் போயிரிச்சி.''

**கைகாவல்:** சமயத்துக்கு உதவுமென்று. ''அஞ்சு ரூவாதான் இருக்கு. கைகாவலுக்கு இருக்கட்டும்.''

**கைகுளுர:** தட்டுப்பாடில்லாமல், மனம்போல். ''கை குளுர செலவழிக்கலாம்.''

**கைச்செலவு:** சில்லரைச் செலவுக்கு. 'பாக்கெட் மணி.' ''இந்தா இதெ கைச்செலவுக்கு வச்சிக்கோ.''

**கைசேரல்ல:** கையிலிருந்து போன பொருள் அப்படியே திரும்பி வராமல் போய்விடுவது. ''போட்ட முதல் கை சேரலே.''

**கை சொளகு:** சிறிய முறம்

**கைத்துட்டு:** ரொக்கம். ''அவருட்டக் கொஞ்சம் கைத்துட்டு உண்டு'' சொந்தத்திலிருந்து போட்டுச் செலவழித்தது. ''நா ஏங் கைத்துட்டு போட்டில்லெ செலவழிச்சிச் செய் தேன்.''

**கை நனைக்கலே:** சாப்பிடவில்லே.

**கை நாளி:** சிறிய நாழி. பொட்டை நாழி. கூலிக்கு அளக் கும் நாழி. கை நாளிக்கு மூன்றுபடி அளந்தால் பட்டணம் படிக்கு இரண்டு படி இருக்க வேண்டும்.

**கை நீட்டிட்டான்:** அடித்து விட்டான்.

**கை நீளம்:** களவு. ''அவனுக்கு கொஞ்சம் கை நீளம்''

**கைப்பக்குவம்:** விலைக்கோ, பிறரிடமிருந்தோ வாங்காமல் நாமே எளிய முறையில் செய்து கொடுக்க முடிகிற மருந் தும் மருத்துவமும்.

கைப்பிள்ளைக்காரி: பிள்ளையை விட்டுட்டு வேலையில் முழுக் கவனம் செலுத்த முடியாத அளவுக்கு பச்சைக் குழந்தையை உடையவள்.

கைபிடி செங்கலாய்: வரிசையாய் நின்றுகொண்டு இருப்பவர்களின் ஒருவர் கையிலிருந்து மற்றவர் கைக்கு என்று ஒரு பொருள் சென்று கொண்டு இருப்பது.

கைபோடுதல்: மாட்டின் விலை பேசும்போது வாங்குபவரிடமும், கொடுப்பவரிடமும், தரகன் கையைப் பிடித்துக் கொண்டு (கை வெளியே தெரியாமலிருக்க ஒரு துண்டால் மூடப்பட்டு இருக்கும்) பேசுவான். ஐந்து விரல்களையும் சேர்த்துப் பிடித்தால் ரூபாய் 500 என்றும், அதையே ஒரு குலுக்கு குலுக்கினுல் 1000 ரூபாய் என்றும், விரல்களிலுள்ள ஒவ்வொரு வரையும் ரூபாய் 10 என்றும் அவர்களுக்குள் ஒரு நிர்ணயம் உண்டு. ''இவ்வளவுண்ணு தரலாமா?...'' ''இல்ல இதுக்கு குறையாது...'' ''சரி இதையே வச்சி. முடிங்க...'' என்ற பேச்சொலி மட்டுமே கேட்கும். தொகை இவ்வளவு என வெளியே தெரியாது. இவ்வாறு பேசும்போது பயன்படும் சில குழூஉக்குறிகள்: 1 கட்டை. 2 தாளு. 3 சவுடு. இவற்றின் தொகை இன்னதென மாட்டுதரகர்களுக்கு மட்டுமே தெரியும்.

கைம் பெஞ்சாதி: விதவை. கைம்பெண்.



கை மரம்: வீட்டு முகட்டிற்கான மரம்.

கைமாத்து: வாய் மொழியாகக் கேட்டு வாங்கி திருப்பித் தருகிற தானியம் மற்றும் பொருள்களும். கைமாத்தாகப் பெற்றுத் திரும்பக் கொடுப்பது. சிறிய கடன் தொகை.

கையடிச்சிர்ரது: விற்று விடுதல். முடிவான விலையை கையில் தட்டிச் சொல்லுதல். ''எகனையா வந்தா மாடுகளை கையடிச்சிர வேண்டியதுதான்''.

**கையாள்:** உதவிக்காக வைத்துக்கொள்ளும் ஆள். கை போன்றுஉடனிருந்து உதவும் ஆள்.

**கையில பிடிக்க முடியாது:** தாள முடியாத சந்தோஷம்.

**கையும் ஓடல்ல காலும் ஓடல்ல:** இக்கட்டான நிலைமை. திடீர் உணர்வால் ஒன்றும் செய்யத் தோன்றாத நிலை.

**கையைக் கழுவீட்டான்:** கைவிட்டு விட்டான்.

**கையைப் பிடிக்கும்:** நஷ்டம் வரும். ''கையைக் கடிக்கும்''

**கையொடிஞ்ச மாதரி:** பிரிவைக்குறிக்கும் சொல். ''அவன் இல்லாதது எனக்கு கையொடிஞ்ச மாதரி இருக்கு''

**கையோட:** ஒரு காரியம் செய்து முடித்த உடனே மீண்டும். ''கையோடு கையா இதையும் செஞ்சிரு''.

''நாஞ் சொன்னேண்ணு அவனை கையொட கூட்டியாந்திரு''

**கைலேட்டு:** பேட்டரி லைட்டு (டார்ச் லைட்)

**கை வச்சிட்டான்:** முடித்து விட்டான்

**கை வரிசை:** தெரிந்த சாமர்த்தியங்கள் வித்தைகள்.

**கை வரும்:** செய் நேர்த்தியாகக் கையாளுதல். ''அது அவருக்குத்தான் கைவரும் விஷயமாச்சே''.

**கை வாய்க்கால்:** தோட்டங்களில் பெருவாய்க்காலில் இருந்து பிரித்துப்போடும் தனிவாய்க்கால்.

**கை விதைப்பு:** கொருக் கலப்பையில் விதை போடாமல் நேரடியாக விதைகளைக் கையிலெடுத்து நிலத்தில் வீசி விதைப்பது.

## கொ

**கொக்கரி:** முன் வளைந்த கொம்புள்ள மாடு.

**கொக்காட்ட:** ஆட்டிப் படைத்தல். தாளமுடியாத படுத்துதல்.

**கொக்கு நோய்:** கோழிகளுக்குவரும் வெள்ளைக்கழிச்சல் நோய். ''ராணிக்கட்''

**கொக்கு முக்காடு:** கொக்கைப் போல கூனி குறுகி முக்காடு போட்டுக் கொண்டு. நட்டமறுநாள் மிளகு செடி, கத்தரி போன்றவை இருக்கும் தன்மையை இப்படிச் சொல்வார்கள்.

**கொக்கை எறிஞ்ச கல்லை மடியில் கட்டிக்கொண்டு:** திறமையற்ற ஒருவன் சந்தர்ப்ப வசத்தால் பெற்ற வெற்றியால் தன்னைப்பெரியவனாக மதித்து மற்றவர்களைப்பதம் பார்க்க முனையும்போது இப்படிக் கூறுவார்கள்.

கல் எறிந்து பழகினான் ஒருவன். வைத்த குறியெல்லாம் தப்பியது. ஒரு நாள் கொக்கு ஒன்றைக் கல்லெறிந்தான். தற்செயலாக - சரியாக - விழுந்து விட்டது. குறி சரியாக விழுந்ததுக்குக் காரணம் அந்தக்கல்தான் என்று நினைத்து அந்தக் கல்லை மடியில் கட்டிக்கொண்டு திரிந்தானாம்.

**கொங்கணையன்:** ஒரு சாதிக்காரன் மற்றொரு சாதிக்காரனைப் பழித்து பேசுவதுபோல ஒரு நாட்டுக்காரன் மற்றொரு நாட்டுக்காரனை நாகரீகமில்லாதவன் என்பான். ''மிராட்டிச்சி'' என்றும் ஒரு பழிப்பு உண்டு. அதுபோல் கொங்கணையன்.

**கொங்காணி:** தென்னை மட்டையில் பின்னுவது. சாக்கை நீள வசத்தில் உள்மடக்கி தலையில் மழை நீர் நனையாமல் இருக்கப் போட்டுக் கொள்வது. ஐம்புத்தட்டையிலும், தாழை மடலிலும், பனை ஓலையிலும் செய்யப்படுவது.

**கொங்கை:** கொப்பு. மரக்கிளை. ''அந்த வடக்கே போற கொங்கையை வெட்டு''

**கொச்ச வாடை:** நிண நாற்றம்.

**கொச்சிக்கிடா:** விதை இல்லாதது. இது ஆட்டினால் விழ வேண்டாம்; தாண்டினாலே ஆடு சினையாகி விடும் என்று ஒரு நம்பிக்கை! ஒரு வித நாற்றம் உண்டு.

**கொச மசக்கு:** ஏமாற்றுவது தெரியாமல் ஏமாற்றுவது. ''என்னமோ கொசமசக்கு நடந்து போச்சி''

**கொசவம்:** பெண்கள் சேலை கட்டுவதில் வைக்கும் மடிப்பு. 'கொசுவம்'.

**கொட்டம்:** மாட்டுக்கு மருந்து ஊற்ற மூங்கிலால் செய்யப் பட்டது. ''மாட்டுக் கொட்டான்.''

**கொட்ட முடிச்சு:** வட முடிச்சு.

**கொட்ட முத்து போடுறுன்:** எதிரியின் கோட்டையை இடித்துத் தரை மட்டமாக்கி உழுது ஆமணக்கு விதைத்து விடுதல். ''நாம இருக்கிற நிரக்கரிஞ்சில்ல... பய... கொட்டமுத்துப் போடுறுன்.''

**கொட்டாங் குழல்:** கொருக்கலப்பையில் விதைபோடும் பகுதி யிலிருந்து மூன்று பிரிவாகச் செல்லும் குழாய்.

**கொட்டாரம்:** தீவனப்படப்பு, களம், குப்பைக்குழி இவையாவும் ஒரு சேர் அமைந்த இடம்.

**கொட்டாவி:** கெட்ட ஆவி

**கொட்டான்:** சிறிய பெட்டி. விதைக்கொட்டான். கொருக் கலப்பையில் மரத்திஞலான விதை போட பயன்படுவது. 'பனைநார் கொட்டான்.'

**கொட்டு:** மேளம், தவுல்.

**கொட்டுப்படாத:** வடுப்படாத. பேச்சு வாங்காதவன். ''கெட் டுப்படாத ஆளு''— வடுப்படாத நபர்.

**கொட்டு மம்பட்டி:** ஒருவகை மண்வெட்டி. தேய்ந்த மண் வெட்டி.

**கொட்டை நூற்றல்:** நூல் நூற்றல். "கப்பல் ஓடிக் கெட்டகுடி யைக் கொட்டை நூத்துத்தேத்தப் போருராக்கும்?''— சொலவம்.

**கொடப்பதறி:** பாம்பைக் கண்டாஞே என்னமோ... பிள்ள்... கொடப்பதறிப் போயி... ஓட்டமா ஓடியாந்திருக்கான். கொடப்பதறி—குடல்பதறி.

**கொட வண்டி:** வண்டி குடை சாய்தல்.
''கொட வண்டி தூக்கிப் போட்டிருச்சி; ரெட்டைக் கொட வண்டி.'

**கொட வான்:** கொத்த மல்லியை துளைக்கும் நோய்.

கொடி: துணிகள் போட்டு வைக்க நீளமாகக் கட்டியிருக்கும் கயிறு அல்லது கம்பி.

கட்டாகக் கட்டுவதற்கு உபயோகப்படுத்துவது. இதற்கு நாற்றுச் சோளப்பயிர் அல்லது நனையப்போட்ட கேப்பைத் தாள் உபயோகப்படும். காட்டில் 'கட்டுக்கொடி' என்றே ஒரு கொடி படர்ந்திருக்கும்.

கொடி முறுக்கு: அதிக முறுக்கினால் கயிற்றில் விழும் மடிப்பு.

கொடி வால் முறுக்குதல்: மாடு, தன் வாலைக் கொடிபோல் நிறுத்தி முறுக்குவதுபோல் சுழற்றுவது.

கொடுக்கப் பிடிச்சுக்கிட்டு அலைதல்: காரியம் எதுவுமில்லாமல் கூடவே அலைதல்.



கொடுக்கறுவா: வீசும்போது கையை விட்டு நழுவி விடாமலிருக்க பிடியின் அடியி லிருந்து 'L' மாதரி வளைவு இருப்பது.

கொடு கொடுண்ணு: காட்டம், "அவனை பார்க்கும் போதெல் லாம் கொடு கொடுண்ணு இருக்கும்."

கொடுங்கால்: ஈனியவுடன் கன்று எழுந்து நிற்கும் போது அதன் முன்னிரு கால்களும் கொஞ்சம் வளைந்து காணப் படுவது. நாலைந்து நாட்களில் இது சரியாகி விடும்.

கொடு சூரி: பயங்கரமானவன். மகாகோபி.

கொடுவாய்: அயர்ந்து தூங்கும்போது வழிந்த எச்சில் கரை. 'கொடுவாக்கறை"— காய்ந்தவுடன்.

கொண்டவன்: கணவன். "கொண்டவனைக் காணயிலே குடலைப் பிரட்டுதய்யா..." தப்புச் செய்துவிட்ட ஒருத்தி கணவன் என்ன செய்வானோ என்று கலங்கிப் புலம்புதல்.

கொண்டிக்காவல்: ஊர் பொதுவிலிருந்து புஞ்சை புறம்போக்கு களுக்கு போடப்படும் காவல்.

கொண்டு செலுத்த: நிறைவேற்ற. தொடர்ந்து செய்து முடிக்க. ''அந்த கேசு என்னுச்சி?... மேலத்தெரு மைனரு கொஞ்சநாள் எடுத்தாட்டிக்கிட்டிருந்தாரு. அவருபோனப் புறம் கொண்டு செலுத்த ஆளில்லாம அப்படியே போச்சி" ''நாண்ணு ஒத்துக்கிட்டா... நாளைக்கு கொண்டு செலுத் தணுமில்லே.''

கொண்டு மிஞ்சிப் போச்சி: தேவைக்கு அதிகமான வருமானம். கொண்டு மிஞ்சிப் போச்சி கொடுக்கல் வாங்கலாச்சி— கோமாளிப்பாட்டு.

கொணக்குதல்: காரியம் விக்கினம் ஆகிவிட்டது. கெடுத்தல்.

கொணங்குதல்: சரியில்லாமல் போதல். கெட்டுப் போவதின் ஆரம்பம். ''இஞ்சின் கொணங்கிப் போச்சி.''

கொணச்சிட்டான்: பெண்ணை புணர்ந்து விட்டான்.

கொணட்டுறுன்: பகட்டுகிறுன். குழைந்து குழைந்து பேசு கிறுன்.

கொத்தப் பருத்தி: கழிவு பருத்தி.

கொத்தன்: வேலைத்தலைமையாள். வேலை தெரிந்த கெட்டிக் காரன். வேலைகளை மதிப்புப் பிடித்துச் செய்யும் வேலை யாட்களின் தலைவன். மனித மேய்ப்பன்.

கொத்தாள்: தானியக்கூலி பெற்றுக்கொண்டு வேலை செய்ப வர். (சம்பள ஆள்— பணம் பெறும் வேலையாள்).

கொத்திப் பெறக்குற கோழியை மூக்கறுத்துவிட்ட மாதிரி: குரூர மான பழி தீர்ப்பு. எது வாழ்க்கையோ அதை கெடுப்பது.

கொத்து: கூலி (தானியமாக) அத்தக் கொத்து —தினக்கூலி.

கொதக்கு: பிரஜோன மில்லாத. ''விருதாக் கொதக்கு''

கொதவளை: குரல்வளை.

கொதை: மரத்தில் உளியால் தோண்டுதல்.

கொந்தாங் கொள்ளையா: ஒரே வாக்குல. நிறைய்ய.

**கொப்பாடை:** அம்மை நோயில் ஒருவகை.

**கொப்பு:** தலை முடியை அள்ளிச்செருகுதல்.

**கொப்புள்ப்பால் இறங்கிரிச்சி:** பசுமாடு ஈனுவதற்கு 3 அல்லது 4 நாட்களுக்கு முன்பு தொப்புள் கனத்துப் பூரிப்பாய் இருக்கும்.

**கொம்பன்:** தலைவன்.

**கொம்பு ஆரை:** தச்சாச்சாரியின் ஆயுதம். பைதா வட்டத்தை சரியாக்க உதவுவது.

**கொம்புச் சுழி:** மாட்டின் இரு கொம்புகளுக்கிடையேயுள்ள பள்ளத்தில் இருக்கும் சுழி.

**கொம்புச்சொளை:** பருத்திக் காட்டில் மடிப்பருத்தி குவித்து வைக்குமிடம். அடையாளம் தெரிவதற்கென ஒரு சுளைப் பருத்தியை ஒரு செடியின் உச்சியில் அடையாளமாக வைப்பது.

**கொம்புசீவி விடுதல்:** தூண்டிவிடுதல். தயாரிப்பு பண்ணல். தவருன வழியில் உற்சாகப் படுத்துதல்.

**கொம்பு சுத்திட்டான்:** விளையாட்டில் கூறுவது. எதிரியை மடக்கி—காரியத்தைச் சாதித்து விட்டான்.

**கொம்பு மண்வீசுதல்:** கொம்புகளால் மாடு தரையைப் பெயர்த்தெறிதல்.

**கொம்மை:** சக்கையின் உதிரி.

**கொமட்டுது:** ஓங்காரிக்க வருது.

**கொமரு காரியம்:** கல்யாணம் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகள். (குமரு—குமரி).

**கொய்யாக்கட்டை:** கதவை மூடிசாத்த பூட்டுபோல் உதவும் கட்டை.

**கொய்யாக்கட்டை:** பாரவண்டியில் வாரிகள் முகத்தடியை அழுத்தாமல் தாங்க, இருப்புச் சட்டத்தின் மேல் பொருத்தப்பட்ட கட்டை.

**கொரக்கவலி:** கை கால் கோணிக் கொண்டு போதல். 'கொக்களித்தல்' ''யப்பா; இதென்ன இந்த விரலு இப்படிக் கொரக்களிச்சிட்டுப் போகுது.''

**கொரக்களி:** சேட்டை. குரளித்தனம்.

**கொரநாடு:** இது தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஊர். கைத்தறி நெசவுக்குப் பேர்போனது. இங்கு நெய்யப்படும்சேலை கொரநாட்டுச் சேலை.

**கொர நாட்டுச் சேலை:** மெல்லிய கம்பிக்கோடுகள் நெட்டு அல்லது குறுக்கு வசத்திலோ அல்லது இரண்டு வசத்திலோ போட்டிருக்கும். சைக்கு 14 முழமிருக்கும். சாயம் போகாது.

**கொரம் பாடுதல்:** அடைவதற்கு ஒன்றைக்கேட்டு இரக்கத்தைத் தூண்டி மன்றாடுகிறதுக்கு. 'கொரயம்' ''என்ன எளவு இவன் இப்படிக் கொரம் பாடுதான்!''

**கொரளிவித்தை:** குட்டிச் சாத்தான் போன்றவற்றின் உதவியால் செய்யும் வித்தை. செப்படி வித்தைபோல.

**கொராலு:** ஆட்டின் வகை. (இன்னும் ஈனுத ஆடு).

**கொரு:** கொருப் பேசுதல்—சொல்வதற்கெல்லாம் நகைச்சுவையோடு குற்றங்கள் கூறுதல்.

**கொருக்கலப்பை:** மூன்று அல்லது நான்கு பல்லுகள் கொண்டது; ஒவ்வொரு பல்லுக்கும் $1\frac{1}{4}$ அல்லது $1\frac{1}{2}$ அடி இடைவெளி கொண்டது. இந்தக் கலப்பை உழுது கொண்டு போகும்போதே விதைக் கொட்டானிலிருந்து பல்லுகளுக்குப் போய்ச்சேரும் குழாய் வழியாக, விதைகள் விழும் அமைப்புக்கொண்டது. மாடுகளால் இழுக்கப்படுவது (பல்—கலப்பையின் உழுகிற நுனி)

**கொருவாய்:** பல் உடைந்து ஓட்டையாயிருத்தல். பானையின் விளிம்பு உடைந்துபோனுல் கொருவாய்ப் போச்சி என்பர்.

**கொல்லைக்கு:** மலம் கழிக்க. 'வெளிக்கு'. ஸ்லாதிக்கு. 'ரெண்டுக்கு'.

கோலபட்டினி: செயல்பட முடியாத அளவுக்குப் பட்டினியின் தாக்கம். ''மாடு கொலப்பட்டினியாக் கிடக்குது''
''அன்னப்பால் தண்ணிக் கூடக் குடிக்காம கொலப்பட்டினியாக் கெடக்கான்.''

கொலெகொலெயா முந்திரிக்கா: ஒரு விளையாட்டு.

கொழித்தல்: புடைத்தல். பெருமைகளைச் சொல்லிக்கொண்டு திரிதல். ''கொளிச்சிக்கிட்டுத்தான் அலையுதா."

கொழுப்பு: சுவரில் சாந்துப் பூச்சு முடிந்ததும் அதன்மேல் நுண்ணமான சுதை அல்லது கெட்டியான சிமெண்ட் கரைசலை வைத்து அழுத்துவது. அதாவது அழுத்திப் பூசுவது. இதற்கு மற்றொரு பெயர் சன்னம் வைப்பது.

கொள்ளநாள்: ரொம்பநாள். ''ஒன்னையப்பார்த்து கொள்ள நாளாச்சிடீ!''

கொள்ளாக்குமரு வில்லாச் சரக்கு: கட்டிக்கொடுக்காத விலை போகாத சரக்கு... குமரி.

கொள்ளிக் கொம்பு: மாட்டுக்கொம்பிலொரு வகை. கொம்பு முனையில் வெள்ளை இருந்தால் கொள்ளிக்கொம்பு. இது ஆகாது. வெள்ளைநிற மாட்டில் இவ்வாறு இருந்தால் குற்றமில்லை.

கொள்ளியத்த சொத்து: பிள்ளை இல்லாமல் போனவனது சொத்து.

கொள்ளியத்த பய: பிள்ளை இல்லாதவன். கொள்ளி முடிஞ்ச பய. வசவு.

கொள்ளு: மன்மதபீடம்.

கொள்ளே சொத்து: ஏராளமான சொத்து.

கொள்ளை எகனை: கொள்ளை மலிவு. ''இப்ப கத்திரிக்காய் கொள்ளை எகனை.'' பொருத்தமாக. ''அந்த மாடு நல்ல மாடுதான்... விலைதான் அதிகம்.'' ''அப்படியா சொல்லுதிய... வாங்க அவர்ட்ட நான் சொல்லி ஒரு எகனையா போட்டு முடிப்போம்.''

கொள்ளையத்த சொத்து: ஏராளமான சொத்து.

கொள்ளிபில போக: வசவு. கொள்ளி அடித்து வாரிக் கொண்டுபோவது போல உயிர்களை எமன் கொண்டு போகும் நோய் பேதி.

கொளச்சிமம்பட்டி. ஒரு வகை மண்வெட்டி.

கொளரிக் கொளரி அடிக்கும் காத்து: ஒரு சீரு இல்லாமல் விட்டு விட்டு அடிக்கும் காற்று.

கொளுக்கி: 'கொழுக்கி'. நாராங்கி. கொக்கி. (கொழுவுதலிலிருந்து வந்த சொல்).

கொளுமோர்: கிணற்றில் விழுந்தவர்களுக்கு குடிக்கக் கொடுக்கப்படும் சூடுபடுத்தப்பட்ட மோர். (கலப்பைக் கொழுவை அடுப்பிலிட்டு சூடுபடுத்தி மோரில் முக்கி சூடு ஆக்குவது).

கொன்னல்: திக்கல். (வாய்).

## கோ

கோக்காலி: உயர்ந்த சுவர்களில் வெள்ளையடிக்க வசதியாக நின்று கொள்ளவும், உயரமான கட்டிடங்களில் ஒட்டடை அடிக்கவும் பயன்படும். இரண்டு சிறிய ஏணிகளை இணைத்து அதன் உச்சியில் பொருத்தப்பட்டுள்ள பலகையில் இப்படி நின்றுகொள்ள வசதி. உயரமான ஸ்டூல்! ''கோக்காலி போல வளந்ததுதான் மிச்சம் ஒரு கூறு கிடையாது.''

கோக்காலி: வெங்காயக் கோக்காலி.

பெருவாரியாக விளைந்த வெங்காயத்தை கெட்டுவிடாமல் காற்றோட்டமாக இருக்க திறந்த வெளியில் தட்டையாலும் வரிச்சுகளாலும் உண்டாக்கப்பட்ட ஒரு அமைப்பு. கோக்காலி நீளம் எவ்வளவு வேண்டுமானாலும் இருக்கலாம். அகலம் முக்கால்அடி. உயரம் ஓராள் உயரம்வரை. மழைக்கு நனையாமலும் வெயிலுக்குக் காயாமலும் இருக்க முகடுகூட்டி கூரை வேயப்பட்டிருக்கும். தூரத்திலிருந்து பார்க்க ஏதோ பறவையின் கூண்டோ என்று எண்ணத் தோன்றும்.

**கோக்குமாக்கு:** ஒன்றுகிடக்க ஒன்றைச் செய்தல். முறை கேடாகச் செய்வது. ''கொசமுசக்கம்.'' தகிடுதத்தம். ''கோக்கு மாக்குப் பண்ருன்''

**கோசம்:** காளையின் அடிவயிற்றில் நீர்த்தாரையோடு தொங்கும் தோல்.

**கோசலம்:** குசலம். ''கோசலம் விசாரிக்கிறது.''

**கோசுப்பெட்டி:** வில்வண்டியில் அமைந்த பெட்டி.

**கோசுபாரா:** கணக்கின் சுருக்கம். வரவு, செலவு, இருப்பு என்று ஒரே வரியில் கொண்டு வந்து விடுவது. ''ஐந்தொகை எடுத்தல்.'' ''கோஸ்பாரா.''

**கோட்டம்:** கோளாறு. வளைவு. நெளிவு.

**கோட்டை ஏர்:** உழுவதற்கு முன் அல்லது உழுது முடிந்த பிறகு கலப்பையைத் தலைமாற்றி, அதாவது ஏர்க்கால் தரையிலும் கலப்பை நுகத்தடியின் மேலேயும் இருக்கும் படியாகக் கட்டிக்கொண்டு புறப்படுதல்.

**கோட்டை வடம்:** கமலையை உபயோகப்படுத்தாத நேரங்களில் கோதாயம் போட்ட அமைப்பு.

கமலை இறைத்துக்கொண்டிருக்கும் போது இடைவேளையாகச் சாப்பாட்டுக்கோ அல்லது தண்ணீர் ஊற வேண்டும் என்பதற்காகவோ நிறுத்தி வைக்கும்போது மாட்டை மட்டும் அவிழ்க்க நேர்ந்தால் அப்போது கமலை வடத்தைக் கொஞ்சம் வெளியே இழுத்து கமலைக் கட்டையில் சுற்றி வைப்பது; இது கூனை முதலியன கிணற்றுள் விழுந்து விடாதபடி ஒரு உகந்த பாதுகாப்பு ஏற்பாடு.

**கோடாலிக் கொண்டை:** கம்பு கழன்ற கோடாலியை ஞாபகப் படுத்தும் உருவம் அமைந்த கொண்டை.

**கோடாங்கி பார்த்தல்:** உடுக்கடித்துப் பாடுகிறவன் இடத்தில் குறி கேட்டல்.

**கோடான்:** புஞ்சைப் பொழியிலுள்ள ஒருவித கிழங்குச் செடி. கொத்தமல்லியை ஓட்டையாக்கும் ஒருவித நோய்.

கோடி: புதிது. ''கோடி வேட்டி.'' யாரையுமே இதுவரை தீண்டாத நல்ல பாம்பு. ''கோடிப்பாம்பு''

கோடு: கோர்ட். ''கோடு நாடு அலேஞ்சி.''

கோணக்கலப்பை: திறுக்கு தாளம். நேரில் மறுக்காமல், காரியம் செய்யாமல்.

''பயல் கோணக்கலப்பை சாத்தீட்டான்.''

கோணக் கொம்பு: மாட்டுக் கொம்பில் ஒரு வகை.

கோணயன்: நேர்வழி அல்லாதவன். ''கோணையன்.''

கோணமாண...கொக்கரமாண: வரிசையாய் இல்லாத. ஒழுங்காய் இல்லாத.

கோணூசி: கோணிச்சாக்கு தைக்கும் ஊசி.

கோணெழுத்து: இங்கிலீஷ். ''அவன் நாலு கோணெழுத்துப் படிச்சிட்டு வந்தவன்.'' ''மேல்ப்படிப்பு.''

கோத்தரை: கூறு இல்லாதவன்.

கோதண்டம்: முன்பு ஏட்டுப் பள்ளிக்கூடத்தில் சேட்டை செய்த அல்லது பள்ளிக்கு வராத படிக்காத பையனுக்குக் கொடுக்கும் தண்டனை. குறுக்கு விட்டத்தை கைகளால் கோர்த்துப் பிடித்துக்கொள்ள செய்து கீழே எழுத்தாணியை நட்டி வைத்து விடுவது. பிறகு காலிலும் முதுகிலும் பிரம்பாலடிப்பது.

கோதா: சொந்தப் பொறுப்பு. ''அந்தக் கோயிலெ ஊர்ப் பொதுவிலெயிருந்துதானெ கட்டுருக.'' இல்லே; இவுக சொந்தக் கோதாவுலெதான் கட்டுருக". (ஹோதா.)

கோந்து: பிசின்.

கோப்பரம்: விருதாவளர்த்தி. வசவு. ''கோப்பாரம் போல வளர்ந்ததுதான் மிச்சம்."

கோப்பன்: குறிப்பிட்ட துறையில் கெட்டிக்காரன்.

''பொல்லாத கோப்பன்'' ''அந்த வகையில் பெரிய்ய கோப்பன்தான்.''



கோப்பாளச்சுவர் : இருபக்க ஓட்டுச் சாய்ப்பின் இடை மேல்ச் சுவர். முக்கோண வடிவத்தில் அமைந்தது. 'நெத்திச் சுவர்.'

கோப்பாளம்: நாமம்.

கோப்பு: தயார்நிலே. பருவம். ''சரியான பருவத்திலெ விதைச்சிறணும் கோப்பு தவறவிட்டுறக் கூடாது.'' நிறைந்த வசதிகள். ''ஏர்கோப்பு இல்லே'' ''கம்பு அருவாளோடு கோப்பா வந்து இறங்கீட்டான்.''

கோப்பு குலேஞ்சி போச்சி: விவசாயத்திற்குண்டான கோப்புசங்கள் (மாடு, கலப்பை வகை முதலியன) கலேந்து போய் விடுதல்.

கோப்புசம்: எல்லாவிதமான ஏதுகாரங்கள். தயார்நிலே.

''கோர் கோர்'': சிறுவர்கள் சண்டையிடுகையில் மீண்டும் தூண்டி விடும் சொல். சாவல் கட்டின் போது இப்படிச் சொல்லி சாவலே விடுவார்கள்.

கோரி: மொண்டு. மோந்து. ''அந்த ஏனத்திலிருக்கிற தண்ணியை கோரிக் கோரி ஊத்து''.

கோரை: களே.

கோவாங்காட்டு மூலே: வடமேற்கு மூலே.

கோவில்பட்டி கணக்கப்பிள்ளே வாயிலே மண்ணு: கழைக் கூத்தாடிகள் பரம்பரையாகச் சொல்லி வருகிற ஒரு வழக்கு.

ஆட்டம் நடந்து கொண்டிருக்கும் போது இடை நேரத்தில் கோமாளி போன்ற ஒருவன் ஒரு துணி பொம்மையைக் கொண்டுவந்து தரையில் வீசிக் கிடாசுவான். பக்கத்திலிருப்பவன், ''இது என்னப்பா!'' என்று கேட்பான். ''இது தெரியாதா; இதுதான் சண்டாளப்பாவி கோவில்

பட்டி கணக்கப்பிள்ளை!'' என்பான். அவ்வளவுதான்; அங்குள்ள கழைக் கூத்தாடிகள் எல்லாரும் மூன்று முறை, ''கோவில்பட்டிக் கணக்கப்பிள்ளை வாயிலெ மண்ணு'' என்று சொல்லி மண் அள்ளிப் போடுவார்கள்.

தனது குலத்துக்கு—குடும்பத்துக்கு—இழிவு உண்டு பண்ணியவனை அல்லது தீராத கெடுதல் செய்தவனை பரம்பரை பரம்பரையாக இப்படிச் சொல்லி ஏசுவது இன்றும் வழக்கத்திலுள்ளது.

**கோழிக்காரம்:** கோழிகளின் காய்ந்த மலம்.

**கோழி கூப்பிட:** நேரத்தைக் குறிப்பிடும் சொல். ''சாமக் கோழி கூப்பிட'' ''தலைக்கோழி கூப்பிட'' ''இரண்டாம் கோழி கூப்பிட.''

**கோழித்தூக்கம்:** உட்கார்ந்து கொண்டோ நின்று கொண்டோ....நின்று கொண்டே தூங்கும் தூக்கமும் உண்டு. கிடைகாவல் இருப்பவர்கள் காவல்க்கம்பை முன்பக்கமாக ஊன்றிக் கொண்டு நாடியை அதன் மேல் வைத்துக்கொள்வார்கள். கால்களை சற்று அகலமாக—கம்பின் தூரத்துக்குத் தக்கபடி—வைத்துக்கொள்வார்கள். ஒரு கம்பும் இரண்டு கால்களும் சம தூரத்தில் ஒரு முக்காலிபோல அமைந்திருக்கும். அப்படியே நின்று கொண்டு சொகமாய் ஒரு தூக்கம் போட்டு விடுவார்கள்! ''நாய்த் தூக்கம்'' என்று இதற்கு ஒரு கேலிப் பெயர் உண்டு. நாய் அயர்ந்து தூங்கினாலும் ஒரு சின்ன சலனம் கேட்டாலும் பட்டென்று விழித்துக் கொண்டு தலைதூக்கிப் பார்க்கும். காவல்க்காரர்களும்இது போன்ற உணர்வுடனேயே தூங்குவார்கள். நின்று கொண்டே தூங்கும் தூக்கம்.

**கோளாறு:** இந்த விஷயத்தை இப்படித் தீர்க்க வேண்டுமென தெரிந்திருத்தல். சில இடங்களில் கெட்டுப் போகும்படி செய்தல் எனப் பொருள்படும். கோளாறுன ஆளு. கோளாறு பிடிச்ச ஆளு.

**கௌளி:** பல்லியில் ஒரு வகை.

**ஸ்லாத்தி:** திரை

**சக்கட்டி ;** நொண்டி

**சக்கடாவண்டி:** கட்டை வண்டி.

**சக்கணக்குண்டு:** அப்புராணியாக இருந்த பையன் சுதாரித்துக் கொண்ட பொழுது கூறுவது. தெம்மாடி சில சமயங்களில் விளையாட்டில் எதிர்பாராவிதமாகப் பிரமாதமாக ஆடி விடும் பொழுது அவனைப் பாராட்டி வியந்து இப்படிக் கூறுவர்.

**சக்கணஞ்சாவக் கூவுது:** மேல்மாந்தை ஜமின்தார் சக்கணக் குஞ்சையனுசர் சாவல் கட்டில் வல்லவர். எந்தப் போரிலும் இவரது சாவல்தான் ஜெயிக்கும். எனவே இப்பகுதி மக்கள் இதையே ஒரு பாராட்டுச் சொல்லாக்கி விட்டனர். ''அடிரா...சக்கணக்குண்டு'' ''சக்கணஞ் சாவக் கூவுது''

**சக்கரை:** குழந்தையின் ஆண்குறி.

**சக்களத்தி:** தனது புருஷனின் மற்றொரு மனைவி அல்லது மனைவி மாதிரி இருப்பவள்.

''வாடியம்மா சக்களத்தி

வரிவிழுந்த வக்கணத்தி''—நாட்டார் பாடல்.

(வக்கணத்தி—உயிர்களை கபளீகரம் செய்யும் மலைப் பாம்பு.)

**''சக்காத்தா?'':** சும்மாவா?. நீ என்ன இனாமாகக் கொடுக்கப் போகிறாயா? என்பது. ''சக்காத்தாவாகுடுக்க!''

**சக்கை:** தானிய மணி நீக்கப்பட்ட கதிர்.

**சக்கைப்பட்டம்;** எல்லா மாசத்திலும் 14, 15ம் தேதிகளில் விதைக்கக் கூடாது என்பது.

**சக்கைப்பிறட்டி:** களத்தில் சக்கைகளைத்திரட்ட உபயோகிக்கும் கருவி.

**சக்கைப்போடு:** நல்ல போடு. பேப்போடு. அமோக விளைச்சல்.

''வெள்ளாமை இந்த வருஷம் சக்கைப்போடு''

சக்சையைப் பெரட்டிட்டான் : நன்ருக அடித்து விட்டான், கதிரை பிணையல் விட்டு சக்கை ஆக்குவது போல.

சகட்டுமேனிக்கு: ஒட்டு மொத்தமாக. எல்லாரையும். எல்லாத்தையும்.

சகடால்: சவடால். பேச்சு சாமர்த்தியம்.

சகலப்பாடி: சட்டகர். மனைவியின் உடன்பிறந்தவளின் கணவன்.

சகாகோடி சங்கம் : பலப்பல கோடி. எண்ணிக் கணக்கிட முடியாத.

சங்கதி: கெட்ட வார்த்தையைக் குறிப்பிட.

சங்காத்தம்: உறவு. தொடர்பு. ''அவஞ் சாங்காத்தமே வேண்டாம்''. 'சகவாசம்'.

சங்கிலி: நாலு குறுக்கம் கொண்ட நிலப்பரப்பு. நிலஅளவு.

சங்கிலிமுடிச்சு: சங்கிலி போன்ற தொகுதி முடிச்சு.

சங்கு: கழுத்து. குரல்வளை.

சங்கு உதற நேரம்: காலை 6 மணி. மாலை 6 மணி.

சங்கு முகம்: ஆறு கடலோடு கலக்குமிடம். ''சங்கமதத் துறை''.

சங்கை: தவணை. செய்ய வேண்டிய முறை. வரிசை. ''மூணு வருச சங்கை தெகஞ்சி போச்சி.'' ''சங்கை கெட்ட பய.''

சச்சரவு: வாய்ச்சண்டை.

சச்ரூபம்: அப்படியே அசல் உருவம். 'தத்ரூபம்.'

சஞ்சிவம்: கலப்பை.

சட்டடியாகப் படுத்திட்டான்: நோய் காரணமாக எழுந்து நடமாட முடியாத அளவுக்கு படுத்த படுக்கையாய் விட்டான்.

சட்ட வாங்கு வளையம்: சட்டத்தில் பிடிக்கப்பட்ட இரும்பு வாங்குகளும் வளையங்களும்.

சட்டாம் பிள்ளே: திண்ணைப்பள்ளிக் கூடத்தில் ஆசிரியருக்கு உதவியாக அவரால் நியமிக்கப்பட்ட உதவிமேய்ப்பன். ஆசிரியர் வகுப்பில் இல்லாத போது கவனித்துக் கொள் பவன்.

சட்டி உடைஞ்சி போச்சி: வேலே பறி போய் விட்டது. (சீட்டு கிழிந்து விட்டது என்பது போல) வேலே இழந்தவன் தன் துணிமணிகளே, உடைமைகளே எடுத்துக் கொள்கிருன். சாப்பாட்டுச் சட்டியை மண்சட்டியைத் தூரப்போடுகிருன். வேலே போனது போல் சட்டியும் உடைந்து போகிறது.

சட்டிக்கிழங்கு: களே. பஞ்ச காலத்தில் உணவு.

சட்டுப்புட்டுண்ணு: விரைவாக. சீக்கிரமாக.

சட்டை செய்யாதிருத்தல்: பொருட்படுத்தாதிருத்தல். மதியாது இருத்தல். ''அவன் யாரையுமே சட்டை செய்ய மாட்டான்.''

சடவு: வருத்தம். சோர்வு. ''வீட்டிலே கொஞ்சம் சடவு'' ''மாடு சடஞ்சு போச்சு'' (சடைவு)

சடுக்காக்கம்பு: டம்பத்துக்காக கையில் வைத்துக் கொள்ளும் கட்டைக்கம்பு. லத்திக்கம்பு நீளத்திலிருக்கும்.

சடைப்போடுதல்: நாத்துப்படப்பிலே கூளம் பிடுங்கி முடித்த உடன், அடையாளத்துக்காகப் போடப்படும்—பின்னப் படும்— ஜடை. வீட்டுக்கூரையின் மேலும், படப்பின் உச்சிப் பகுதியிலும் தட்டையைக் கொண்டு இம்மாதிரி சடை போடுவார்கள்.

சண்டாக்கிருவாரு: எடுத்தெறிந்து பேசும்போது சொல்லுவது. ''ஆமா...இவரு...சண்டாக்கீருவாரு.''

சண்டை வரத்திரிஞ்சது: வாய்சத்தம் வரத்திரிஞ்சது.

சத்தங்காட்டாம: அருவமில்லாமல்.

சத்தங்காட்டு: கூப்பிடு. ''ஆளுங்களே வேலேக்கு சத்தங்காட்டிட்டு வா.''

சத்தம்: சண்டை. தகராறு. தள்ளுமுள்ளு இல்லாத வாய்ச் சண்டை.

''சத்தம் போடுங்க'': கண்டியுங்கள். சண்டை பிடியுங்கள். "பயலொட போக்கு சரியில்லே,கொஞ்சம் சத்தம் போட்டு வையுங்க.''

சத்திப்பூ: வாந்தி.

சதகுப்பை: வசவு. உபயோகமில்லாதவன்.

சதப்பீட்டான்: நொறுக்கி எடுத்துட்டான். ''அடிசதப்பீட் டான்''

சதுரித்தல்: உருவம் உண்டாக்கப்படுவதற்கு முன்னுள்ள நிலை; மரம் அல்லது கல்லில். முழுமரமாயிருப்பதை கலப்பைக்குத்தி போன்ற பொருள்களுக்கு ஏற்ற சைசில் வெட்டுவது. 'சதுரிப்பது'.

சதைக்காய்: உளுந்து போன்ற செடிகளில் காய் தடிமனுய் காணப்பட்டாலும் பருப்புத்திரண்டிருக்காது. தோல்சதை அதிகமாயிருக்கும். விளையும் காலத்தில் மழை அதிக மிருந்தால் இவ்வாறு ஏற்படும். ''உளுந்து பூரா சதக் காய் விழுந்து வம்பாப் போச்சி"

சந்தனப்புல்லை: மாட்டு நிறக்களில் ஒன்று.

சந்து பொந்து: மறைவான இடம்.

சப்சாடாய்: அநேகமாக. பூராவுமே. முழுவதும்

சப்பட்டை: பிராந்திபாட்டில். மோசமான. குறை விழுந்த.

சப்பழிஞ்சி: நெளிந்து. வடிவு குலைந்து.
''ஏனம் சப்பழிஞ்சிப் போச்சி.''

சப்பிட்டுப்போதல்: நாக்கு காரம், புளிப்புக்கு ஏங்குதல். கடேசியில் விஷயம் ஒன்றுமில்லாமல் இவ்வளவுதானு என்ருகிவிடுதல்.

சப்பீட்டான் (நல்ல சீருக்கு): உறிஞ்சி விட்டான்.
தீர அனுபவித்துவிட்டான். மிச்சமில்லாமல் அடியோடு அபகரித்துக் கொண்டான்.

சப்புக் கொட்டுதல்: மொச்சக்கொட்டுதல். சாப்பிட்டபின் ருசி யை நினைத்து நாக்கை மேல் அன்னத்தோடு ஒட்டி ஒலி எழுப்புதல். 'சொட்டாங்கி'

சப்புச் சவரு: கண்டது கழியது. ''அந்த ரூமுக்குள்ளெ சப்புச் சவரெல்லாம் அடைஞ்சி வச்சிருக்கு''

சப்புண்ணு போச்சி: முடிவு சுவாரஸ்யமாக இல்லே.

சப்பை: கிளித்தட்டு விளையாட்டில் கோட்டிற்கு வெளியே போய் விட்டால் சப்பை என்று கூறுவார்கள்.

''சப்பை நாறிப் போச்சு.''

சப்பைத்தட்டு: ஒரு விஷயத்தை கவனிக்காமல் போட்டு வைப் பது. கிடப்பில் போட்டுவைத்தல். ''என்ன விசயத்தை யிப்படி சப்பைத் தட்டுலெ போட்டுட்டீகெ?''

சப்பையாண்டி: கெட்டிக்காரன். ''ஒரு சப்பையாண்டியாலயும் முடியாது.

சம்சாரி: விவசாயி. காடு கரையுள்ளவன்.

சம்சாரி ஒழுங்கு: சம்சாரிகளுக்கு என்று பூர்வமாகவே அவர் களுக்குள் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஒழுங்கைக் குறிக் கும் இது. இதை யார் மீறினாலும் எல்லாரையும் பாதிக் கும்.

நஞ்சைகளில் வரப்பு இருப்பதுபோல் புஞ்சைகளில் வரப்பு இருக்காது. மூலைகளில் பொளிக்கற்கள் தான் நிற்கும். ஒருவருக்குக் கம்மங்கதிர் சீக்கிரமாக விளைந்துவிடும். இரண்டு புஞ்சைகளுக்கும் ஊடு பொளி தெரியாததால் இந்த பொளிக்கல் மேல் ஒரு ஆளையும் அந்தப் பொளிக் கல்மேல் ஒரு ஆளையும் நிறுத்தி— நேர்கோடு போல— ரெண்டு பக்கமும் கம்மங்கதிர்த் தட்டைகளை வகிடுபோல் வகிர்ந்து மிதிக்க வேண்டும். அப்படிச் செய்யும்போது புஞ் சைக்கு பாத்தியப் பட்டவர்கள் இருதரப்பாரும் இருக்க வேண்டும். ஒரு தரப்பார் இல்லாத சந்தர்ப்பம் ஏற்படும் போது காவல்காரரையோ அல்லது மத்தியஸ்தமான ஆளையோ வைத்துக்கொண்டு இதைச் செய்ய வேண்டும். இப்படிச் செய்யாது கதிரைப் பொருக்கும்படி விட்டால் லாப நஷ்டம் ஏற்பட ஏதுவுண்டு, இருவர்க்கும். அப்படி பல காரியங்கள்.

மகசூல் சமயத்தில் வண்டி பத்தும் முறை. விதைப்பு சம யங்களில் நடந்து கொள்ள வேண்டிய முறை. ஏர்மாடு

இல்லாதவர்களுக்கு ஏற்றுக் கொண்டால் சொன்ன வாக் கின்படி நடத்தல். இந்த மாதரி எத்தனையோ.

**சம்ப்ராயம் என்ன:** பந்தயம்... என்ன வச்சிக்கலாம்.

**சம்பல்:** சவதம். மலிவு. ''விலே ரெம்ப சம்பல்.''

**சம்பு:** மெலிவு. ''முந்தியக்காட்டிலும் ஆள் இப்பொக் கொஞ் சம், சம்பித்தான் இருக்கு.''

**சம்புதல்:** குராவுதல். வாடுதல். ''முகம் சம்பிப் போனான்.''

**சம்மணம்:** சப்பணம். ''நல்லா சம்மணம் போட்டு உக்காரு''

**சம்மாடி:** வள்ளத்தை ஓட்டும் தலைவர்.

**சமஞ்சிருக்காள்:** பக்குவவதி ஆகி இருக்காள். பெரியமனுஷி ஆகி இருக்காள்.

**சமட்டு:** நொறுக்கு. ''அடி சமட்டி எடுத்துட்டான்'' கதிரைக் காலில் போட்டு மிதித்தல்.

**சமதி:** சமானம். ''ஒனக்கு சமதி உண்டா?'' ''அவனுக்கு சமதியான ஆள்த்தான் இவனும்.''

**சமுக்காரம்:** சோப்பு ''சமுக்காரக்கட்டி.''

**சமுசாரம்:** மனைவி. செய்தி. (சமாச்சாரம்). ''ஊர்லருந்து ...எதும்...சமுசாரம் சொல்லிவிட்டாகளா?''

**சர்கோடு:** பயணம். பிரயாணம். ''எங்கோ சர்கோடு கிளம்பி யாச்சி போலிருக்கு.''

**சரக்குப்பண்ணீட்டான்:** கொன்றுவிட்டான்.

**சரப்பலகை:** கதவுக்குப் பதிலாக சொருகு பலகைகளாக இருப் பது. இந்தப் பலகைகள் ஒன்று, ரெண்டு என்று பலது இருக்கும் சரம்சரமாக.

**சரவை:** உறவு—தொடர்பு. ஒட்டு. பழக்கம். ''அவன் சர வையே நமக்கு வேண்டாம்.''

**சருகு:** வெற்றிலை. ''சாமி ஒரு சருகு இருந்தா கொடுங்க.''

சருவக்கண்ணுடி: உலோகத்திலேயே உண்டு பண்ணப்பட்ட முகம் பார்க்கும் கண்ணுடி.
''சாலையிலே சாலையிலே
சருவக்கண்ணுடி— அந்த
சத்திரப்பட்டி மாப்பிள்ளைக்கு
ரெண்டு பெஞ்சாதி'' — நாட்டார் பாடல்.

சருவம்: உலோகத்திஞலான பெரிய ஏனம். 'சருவச்சட்டி', 'சருவப்பானை'.

சல்லவாரிப்பய: சில் லு வேர்ப்பயல். பெரியதனம் இல்லாத பொடிப்பயல். சல்லிப்பயல்.

சல்லி: கடையன். மோசமானவன். ''சுத்த சல்லிப்பயல்.'' ஒரு சல்லி என்பது டணம் என்ற நாணயத்தின் கடேசி. (ஒரு டணம் பத்துத்துட்டு கொண்டது. ஒரு துட்டு நாலு சல்லி கொண்டது).

சல்லிசு: சல்லி என்ற நாணயத்தால் வாங்க முடிவது. ''ரொம்பச் சல்லிசு''. ரொம்பசீப். மலிவு.

சல்லிமேய்ச்சல்: தட்டையைக் கொண்டு சன்னமாக கனமில் லாமல் மேயப்படும் கூரைமேய்ச்சல்.

சலாவத்து: கூட்டமில்லாமல். கலப்பாக. ''இடம் சலாவத்தா இருக்கு இன்னும் எத்தனை பேர் வேணுமானுலும் உக்கார லாம்.''

சவக்கழிச்சி: ருசிஇல்லாமல். சப்பிட்டு. ருசியாக சாப்பிட்டு பலநாள்களானதால் வாய் சவக்கிழிச்சிப்போதல்.

சவங்கத்தனம்: சுறுசுறுப்பு இல்லாததன்மை. ஆடி அசைந்து இயங்குதல். வீரமில்லாத தன்மை.

சவட்டீட்டான்: காலில் போட்டு மிதித்தல். உதைத்து அடித்து விட்டான்.

சவடு: ''விடாம மழை சவடு எடுக்கு''

சவத்து: கொள்ளை மலிவு. சீச்சி என்று அழியும் சீரழிவு. ''கத்திரிக்காய் சவத்துப் போச்சி.''

**சவத்தைத் தள்ளு:** பேசாதே அதைப்பற்றி. சவம் என்பது முடிந்துபோன காரியம்; மேல் மேலும் அதைப்பற்றியே பேசிக்கொண்டிருப்பதில் பயன் இல்லை என்பது. ''தள்ளு சவத்தை''. சவம்—பிணம்.

**சவதம்:** சவுத்து. மலிவு. 'சவுதம்.'

**சவரே சவரே:** வசவு.

**சவலாத்து:** மூடுதிரை.

**சவலை:** கர்ப்பிணியின் பால் மறவாத பிள்ளை. ''சவலைப் பிள்ளை''. சவலையின் கடுமை பற்றி கிராமியக் கதைகள் உண்டு.

மகன் பதினாலு வயசு இளவட்டம். நல்லா கலப்பை பிடித்து உழுது கொண்டிருந்தான்.

அவனுடைய தாய் உண்டாகி இருந்தாள். கலப்பை பிடித்து உழும்போது அவனுக்குக் கொஞ்ச நாளாய், என்றுமில்லாத ஒரு ஆயாசமும் சோர்வும் கண்டிருப்பது அவனுக்கே ஆச்சரியமாக இருக்கும். ஒரு நாள் அவன் சோர்வுதாளாமல் காட்டில் கலப்பையை நிறுத்திவிட்டு மரத்து நிழலடியில் வந்து அப்படியே அயர்ந்து படுத்துக் கிடந்தான். தாய் அவனுக்குக்கஞ்சி கொண்டு வந்தபோது கலப்பை நிறுத்திக்கிடப்பதையும் மகன் சோர்ந்து மரநிழ லில் படுத்துக் கிடப்பதையும் பார்த்து ஆச்சரியப்பட வில்லை; பெண்களுக்கு இதைப்பற்றித் தெரியும். மகன் எவ்வளவு சத்தான ஆகாரம் சாப்பிட்டாலும் ஓய்வு எடுத் துக் கொண்டாலும் அந்த சோர்விலிருந்தும் ஆயாசத்தி லிருந்தும் மீள முடியவில்லை.

''அம்மா எனக்கு என்ன வந்தது; ஏன் இப்படி இருக் கிறது?'' என்று கேட்டுக்கொண்டே யிருப்பான். பத்து மாதம் கழித்து அந்த தாய்கு ஒரு குழந்தை பிறந்தது. அடுத்த நாளே அந்த மகனுடைய சோர்வு ஆயாசம் எல் லாம் போய் பழைய திடம் வந்துவிட்டதாம்.

**சவாப்பு:** பதில். 'அப்படிக் கேட்டா நா என்ன சவாப்பு சொல்றது.'

**சவுக்காரம்:** சோப்பு.

சவுக்கை: நான்கு புறமும் திறவையான ஒரு திண்டில், கால் நிறுத்தி மேலே கூரை வேய்ந்திருக்கும். வேனில் காலத்தில் காற்றோட்டமாய் உட்காருவதற்கான இடம்.

சவுரியம்! சகாயம். ''விலே சவுரியமா இருக்கே!'' சௌக்யம். ''சவுரியமா இருக்கீகளா?'' சுகம்.

சவுல்: மொக்கை. நாய்களின் சேர்க்கை.

சள்ளே: தொந்தரவு. ''இது ரொம்பச் சள்ளை புடிச்ச வேலே யாக்கும்.''

சளசளன்னு: நிறுத்தாமல், சொன்னதை மீண்டும் மீண்டும் பேசிக்கொண்டு எரிச்சல் தரும் வகையில் குரல் உயர்த்திப் பேசுவது. ''என்ன எளவு சளசளண்ணு ஓலேப்பாயிலெ நாயி மோண்டாப்லெ, சை!''

சளம்: தொந்தரவு. நச்சரிப்பு. ''இவ சளத்தைப் பொறுக்க முடியலேயே கடவுளே.'' போரடித்தல்.

சளம்ப: நிறைய்ய. ''புண்ணுக்கு சளம்ப எண்ணெய் போடு''

சன்னஞ் சன்னம் பர்வதம்: கொஞ்சம் கொஞ்சமாக சேர்த்தால் மலேஅளவு சேர்க்கலாம். பல துளி பெரு வெள்ளம்.

சன்னஞ் சன்னமா: கொஞ்சங் கொஞ்சமாய்.

சன்னம்: கொஞ்சம். ''அவனுக்கு நான் சன்னமா கொடுத்து ஒதவி இருக்கேன்.''
எதிராளி யாருக்கும் தெரியாமல் தனக்கு வேண்டியவர் மாத்திரமே அறிந்து கொள்ளும்படியாக எழுப்பப்படும் ஒலி.

சன்னம்: 'சன்னே,' காடைத்தட்டிலுள்ள கூட்டுக்காடை காட்டு காடையை கூப்பிடுவது.

சன்னீருவாரு: உதாசீனம் செய்து சொல்லுவது. ''ஆமா... அவரு சன்னீவாரு.''

சனியன் பிடதியில் ஏறி உட்கார்ந்து கொண்டுவிட்டான்: வசமாக அவனுக்கு அபாயம் வந்துவிட்டது. வீழ்ச்சி தொடங்கி விட்டது.

சனியன் பிடிச்ச பய: வசவு.

சாக மதியத்த } : பயனற்றவன். எதாவது வேண்டும் என்று
சாக மாட்டாத } கேட்டுத் தொந்தரவு செய்யும்போது எரிச்சலில் சொல்லும் வசவு.

சாங்கம்: பாசாங்கு. கள்ளபாசாங்கு. கொறப்பாசாங்கு.

சாச்சிக்கிட்டு: பொறுத்துக்கொண்டு. கண்டும் காணுமல் ஒதுங்கிக் கொண்டு.

சாஸ்த்தி: அதிகம்.

சாட்டக்கம்பு: சாட்டை இணைத்துக் கட்டப்பட்ட கோல்; மாட்டைத் தூண்டிப் பத்த.

சாட்டுதல்: ஊர் சாட்டுறன். ஒப்படைத்தல். ''பணத்துக்கு அவன்கிட்ட சாட்டீட்டான்.''

சாட்டுமாட்டு பண்ணுதல்: கடங்கழிக்கிறது. ஒப்பேத்துறது.

சாடை: முகச்சாயல். 'முகச்சாடை.' ''ஒரு சாடைக்கு பாக்க நம்ம இவனைப் போல இல்ல''

சாடை பேசுதல்: அடுத்தவனை வைவது போல் இவனை வைவது. ''சாடை மாடைய பேசுறது.''

சாணக்கிழங்கு: களை. பஞ்சகாலத்தில் ஏழைகள் இதை எடுத்து அரைத்து புளிக்க வைத்து கொளுக்கட்டை செய்து சாப்பிடுவார்கள்.

சாணப்புல்: களை.

சாணி உருண்டை கொடுக்கிறது: நகை களவு கொடுத்தவர்கள் பக்கத்து வீட்டாரைச் சந்தேகிக்கும் போது அந்த தெரு பூராவுக்கும் வீடு தவருமல் சாணி உருண்டை கொடுப்பார்கள்.

எடுத்தவர்கள் மனம் மாறி, கொடுத்த சாணி உருண்டையில் நகையைப் பொதிந்து கொண்டு வந்து போட்டு விடுவார்கள் என்ற எதிர் பார்ப்பில் செய்யப்படுவது.

சாணி சந்தைக்கு போயிரும்: விழும் அடிபயத்தால் மலம் கழிப்பது. பயமுறுத்துவது. எச்சரிக்கை.

சாணிப்பால்: சாணி கரைசல் (அதிகாலையில் வீட்டின் முற்றத்தில், களத்தில் தெளித்து முழுகுவதும்.)

சாணைமேய்தல்: களத்தில் கொண்டு வந்து அடுக்கிய கம்மங் கதிரை மழையில் நனையாமல் சுற்றிலும் கம்மந்தட்டையால் மூடி, முகூடு கூட்டி வேய்தல்.

சாணை வைத்தல்: கதிர் பிறக்கி அடைந்து வைத்தல்.

சாதனை: பிடிவாதம். முரண்டு. சாதித்தல். ''பள்ளிக்கூடம் போக மாட்டேண்ணு சாதனை பண்றான்''
(பிடிசாதனை- பிடித்த பிடியை விடாமல் சாதிப்பது; குரங்குப்பிடி)

சாதா: உசத்தியில்லாத. சாதாரணமான. ''சாதாத் துணி''.

சாதி: தரத்தில் மிக உயர்ந்தவைகளை குறிப்பிடுவது. ''சாதிப் பசு''. ''சாதிப்பவளம்''. ''சாதிச் சேவல்''.

சாதி அடி: 112 அங்குலம் கொண்ட ஒரு அடி. நீட்டலளவு.

சாதிக்கான்: தான் சொல்வதிலிருந்து விலகாமல், சொன்னதே சரி என்று. பிடிவாதமாக ஒன்றில் நிற்றல். ''நான் எடுக்கலேண்ணு சாதிக்கான்''

சாதிகெட்ட: வசவு.

சாந்திகழித்தல்: பேய் கோளாறுகளுக்கு செய்யப்படும் பரிகாரம்.

சாந்து: சுண்ணம், சுதை, சிமெண்ட் சாந்து.

சாப்பாட்டு ராமன்: சாப்பாடு ஒன்றையே குறியாக் கொண்டவன்.

சாம்ப பூத்திருச்சு: பூசணம் பூத்து போச்சி.

சாம்பீட்டான்: பணம் கரந்து விட்டான்.

சாம்புராணி: அரணை. ''பாம்பு ராணி''.

சாம ஏமத்துல: இரவு எந்த நேரத்திலும்.

சாமக்கூத்தாடிக்கிட்டு: காலா காலத்தில் படுக்கப் போகாமல் விருதாவாக முழித்துக் கொண்டு மற்றவர்களேயும் தூங்க விடாமல் செய்கிறவர்களேப் பார்த்து "என்ன இப்படி சாமக்கூத்தாடிக்கிட்டு" என்று சொல்லுகிறது.

சாமக் கோழி கூப்பிட: நடு சாமத்தில் கூப்பிடும் சேவலின் கூவல்.

சாமக்கோடாங்கி: இரவு குறி சொல்லிவிட்டு பகலில் படி வாங்குபவன்.

சாமாசி: ஆகாத விஷயங்களில் எல்லாம் தனது சாமர்த்தியத்தை காட்டுதல். "சாமாசி பண்ருன்".

சாமானியம்மா முடியுமா? லேசுல முடியுமா? (முடியாது)

சாமி பால் குடிக்கிற நேரம்: பொழுது அடைகிற நேரம்.

சாமி மலே ஏறீருச்சி: ஆவேசம் தீர்ந்து விட்டது. "அருள் நின்று விட்டது"

சாமை: ஒரு தானிய வகை.
சாமை விளேஞ்சாத் தெரியும்; சக்கிலியப்பொண் சமைஞ்சாத் தெரியும் — சொலவம்.

சாயந்தரம்: சாயங்காலம். சாயரட்சை.

சாயலச்ச: பொழுது சாய.

சார்: தட்டையைச் சார் போடுவது. படப்பின் மேல் தட்டைக் கட்டுகளேச் சாய்வாக அடுக்கிவைப்பது.

சாரங்கெட்டவன்: பெண் நோக்கம் இல்லாதவன். பயன் இல்லாதவன்.

சாரணத்தி: களே. ஒருவகைக்கீரை.

சாரம்: வீடு கட்டும்போது கொத்தனர் இருந்து வேலே செய்யப் போடும் தாங்கல்.

சாரவாடை: சாரல்வாடை. குளிர்வாடை. கூதல்.

சாரிக்கணும்: விசாரிக்கணும். "அங்கே போயி சாரிங்கோ"

சாரு காயுமா?: காரியம் ஆகுமா?
"என்ன மாப்ளே சாருகாயுமா?"

சாரு மணமாப் போச்சி: எதிர் பார்த்ததுக்கு மேலாகவே காரியம் அமைந்தால் இப்படிச் சொல்வர். "ஆடு கிடந்த கிடைக்கு சாரு மணமாம் போச்சி"— இப்படி நன்ருக அமையுமென்று யார் கண்டார்கள். "அது கிடந்த கிடப்பென்ன இருந்த இருப்பென்ன?"

சாருவளமாப் போச்சி: காரியம் கை கூடிவிட்டது.

சாரைவால்: மாட்டுவால் வகையில் ஒன்று.

சாரோலே: முற்றிய பச்சை ஓலே. சாரோலே × குருத்து ஓலே.

சால்: மண்ணலான பெரியபாண்டம். "சுடுசால்". ஏற்றம் இறைக்கும் சால். உழவுசால்.

சால்விதை: உழவு சாலில் போடும் விதைப்பு.

சாவட்டை: மட்டரகம். உபயோகமில்லாத. திடமில்லாதவன். "பணம் பெத்த கருவாடு பானேக்குள்ளே கெடக்கு. சாவட்டகருவாடு மேவட்டம் போடுது"— சொலவம்.

சாவாசம்: சேர்க்கை. பழக்கம். "சகவாசம்".

சாவாரச்செத்த: சீத்துவமில்லாதவன்.

சாவி: பதர். "நெல்லு சாவியாயப் போச்சு". அச்சாணி.

சாவு விளேச்சல்: யாராவது வீட்டில் "கிழடுகள்" சாகிற போது அல்லது செத்த அந்த வருஷத்திய மாசூல் நன்ருக இருக்கும் என்பது.

சாளே: தற்காலிக வாசத்திற்குப் போடப்படும் கூரை.

## சி

சிக்காது: நடக்காது. கிடைக்காது. அவங்கிட்டச் சிக்காது.

**சிங்காரிச்சி மூக்கு அறுத்த மாதரி:** பரிசம் போட்டு, நிச்சய தார்த்தம்பண்ணி கல்யாணத்திற்கு நாளெல்லாம் குறித்த பிறகு... பெண்ணைப் பிடிக்கவில்லை... கல்யாணம் வேண் டாம் என்று கூறுவது.

**சிங்கான்:** தண்ணி வண்டியிலுள்ள கட்டை.

**சிங்கி:** ''ஜால்ரா''. ஆமாம்சாமி போடுகிறவன் (ள்).

**சிங்கிலி:** நெல் விளையாட்டில் எல்லாவற்றையும் தோற்றவன் இறுதியில் தன்கைத் நெல்லையும் பணயம் வைத்தாடு கிறான். தெறிப்பதற்கு கைத்தெல் வேண்டும். ஆகவே ஒரு ஓட்டாஞ் சில்லியை நட்டுகிருன். இதற்கு சிங்கிலி எனப்பெயர்.

**சிங்கேறு:** (சிங்கம் + ஏறு). ஆண் சிங்கம். விளையாட்டில் ஒருவனின் தீரச்செயல் வெளிப்படும்போது கூறுவது ''அடிரா சிங்கேறு'' (பாராட்டுச்சொல்)

**சிச்சிலுப்பை:** அம்மை நோயில் ஒருவகை. சிறிய அம்மை.

**சிட்டங்கட்டிருச்சி:** காளவாயிலில் அதிக சூட்டால் பல செங் கற்கள் ஒன்ருக ஒட்டுதலுக்கு பெயர்.

**சிட்டாப்பறக்கு:** வேகமாக ஓடுதலுக்கு 'சிட்டு' பறப்பது உவமை. திடீரென்று ஓடிபோய்விட்டான். இருந்தாப்பில இருந்து காணாமல் போய்விட்டான். ''மாடுக சிட்டாப் பறக்கு''

**சிட்டி:** சிறுகலயம். ''நாலு சிட்டி கள்ளுக் குடிச்சிருக்கான்''

**சிணுக்கட்டம்:** வாய் திறவாமல் மூக்கின் வழி ஒலிக்கும் ஒரு வித செல்ல அழுகை. ''செல்லச் சிணுக்கட்டம்''

**சிணுங்குறன் (ள்):** அந்தரங்கத் தேவையை சொந்தமானவரி டம் தெரிவிக்கும் ஒருவிதம்.

**சித்திரைச்சுழி:** சித்திரை மாசம் பிறந்தவன் சுழிப்பயலாக இருப்பான் என்பது ஒரு நம்பிக்கை.

**சிந்திரை விட்டுவிட்டான்:** வருடச் சம்பளத்துக்கு சேர்ந்த விவ சாயக்கூலி இடையில் வேலையை விட்டு விட்டால் இப் படிச் சொல்வர்.

சிப்பி: தொடை எலும்பும் முழங்காலும் சேருமிடத்தில் உள்ளது. 'சிரட்டை எலும்பு'.
''இரு உன் சிப்பியை நகட்டிருதென்''

சிப்பிலித்தட்டு: சோறு வடிக்க உதவும் கண் கண்ணான பாத்திரம்.



சிம்ட்டா: மூக்குமயிர் பிடுங்கும் ஆயுதம்; சாவணம் போன்றது.
இரண்டு விரல் நுனிகளின் இடுக்கில் கொள்ளும் பொடியின் அளவு. ''ஒரு சிம்ட்டா பொடிகுடு''

சிம்பளங்காட்ருன்: (மாட்டை): பாய்ச்சக் காட்டுரான்.

சிம்புதல்:
''சிலந்தியைக் கத்தியால் லேசாச் சிம்பிவிடணும்.''
''ரொம்பத்தான் சிம்பிக்கிட்டு வாரான்''
''மாடு பாய்வதற்குக் கொம்பை சிம்பிக்கொண்டு வருது''

சிம்பொட்டுங்காமல் இருத்தல்: சும்மா இருத்தல்.

சிய்யான்: ''தூச்சி''— விளையாடும் போது தற்காலிகமாக விளையாட்டிலிருந்து நின்றுவிட நினைப்பவர்கள் கூறுதல்.
''இந்த வேலையை நீ செய்யலேண்ணு ஒங்க சிய்யானு... வந்து செய்வாரு?''

சிய்யென்று: தனக்குத்தானே போரடிக்கும் போது. ஒன்றும் ஓடாத போது. தனிமை சலிக்கும் போது சொல்லும் வார்த்தை. ''சிய்யென்று இருக்கு.''

சிரங்கை: உள்ளங்கையா லெடுக்கும் அளவு.
''சிரங்கைத் தானியம் அள்ளிப் போடும்''

சிரப்பலகை: திறப்பு இல்லாத சொருகு பலகை.

சிரப்பி: கலை சுரண்டி. 'சிப்பான்'. 'சிரப்பான்'

சிரிப்பாணிக்கூத்து: நினைப்பு வரும் பொழுதெல்லாம் சிரிப்பு வரும் சம்பவம்.

சில்லம் தட்டிப்போச்சி: சிதறி போதல். சில்லரையாய் செலவழிந்து போய்விட்டது.

**சில்லரைத்தனம்:** அற்பத்தனமான செய்கைகள்.

**சில்லரையாய்:** சிதறிப்போய்.

**சில்லாடை:** பன்னாடை.

**சில்லுமூக்கு:** திடீரென்று மூக்கிலிருந்து இரத்தம் கொட்டுவது.

**சிலாவரிசை:** சிலம்பாட்டம் சம்பந்தமான வார்த்தை.

**சிலுகை:** வலியச் சென்று இழுக்கும் வாய்ச்சண்டை.

**சிலுகை ஆட்டாதே:** கதவிலுள்ள நாருங்கியை ஆட்டி ஒலி எழுப்பாதே. ''சிலுகை ஆட்டினால் சண்டை வரும்!''

**சிலுப்பட்டை:** பணிவு இல்லாமல் நிமிர்ந்து நிற்பது. தலைரோமம் சிலுப்பிக் கொண்டிருப்பதைக் கொண்டுச் சொல்லப்பட்ட வார்த்தை. (வசவு).

**சிலுவாய்:** வாயின் ஓரம்.
''எதிர்த்துப் பேசினே சிலுவாயைக் கிழிச்சிருவேன்''

**சிவத்த ரெட்டுபோல:** சிவப்பான.

**சிறட்டை:** கொட்டாங்கச்சி — பருப்பு எடுக்கப்பட்ட தேங்காய் மூடி.

**சிறுக அஞ்சு:** மாட்டிற்கு சிறிதாக இருக்க வேண்டியவை அஞ்சு: 1 மூஞ்சி, 2 வால், 3 தாடி, 4 கொம்பு 5 நீர்தாரை (கோசம்)

**சிறு சொளகு:** சிறு பிள்ளைகள் விளையாடப் பயன்படும் சிறிய கைச்சொளகு.

**சிறு வாடு:** பெண்கள் தங்களுக்கென்று சிறுது (சிறுதேட்டு) சிறுதாக பணம் அல்லது பொருளை சேகரித்து வைத்துக் கொள்ளும் முதல்.

**சிறை:** பேரழகி.

**சின்னஞ் சிறுசு:** வாழ்க்கை தொடங்கும் வயசு. மணம் முடிந்த சமயத்திலுள்ள பெண்.

சின்ன நாளி: கைநாளி.

சின்னப்பானை உலை வைக்கிற நேரம்: மாலை 4-5 மணி.

சினுக்கவலி: தலைமயிர் சிக்கெடுக்க உதவுவது. 'சினுக்கோலி'.

சீ

சீக்காளி: நோயாளி. ரோகி.

சீக்கு: நோய். சிலசமயங்களில் இது ''பொம்பளைச் சீக்கை''க் குறிக்கும்.

சீங்குழல்: புல்லாங்குழல். ''மேல் உதடு இல்லாதவன் சீங் குழல் ஊத அட்சரம் வாங்கினானும்''—சொலவம்.

சீசா: சிறிய பாட்டில்.

சீட்டைச் தொலைச்சிட்டாம் போலிருக்கு: நெடுநாள் சாகாமல் இழுபறியாக இருப்பவர்களைப் பற்றி கேலியாகச் சொல் வது. ''சீட்டை எருமை மாடு திண்ணுருச்சா?''

சீண்ரம்: தொந்தாவு. தொறட்டு. அசிங்கம். ''சீண்ரம் பிடிச்ச வேலை.''

சீத்துவம்: சக்தி. பலம். ''பல்லக்கு ஏற யோகமிருக்கு அதில் உன்னி ஏறச் சீத்துவமில்லை''—சொலவம்.

சீந்துதல்: நெருங்குதல். விரும்புதல். ''யாரு உன்னை சீந்தப் போரு.''

சீப்பு: சுமார் 10 அல்லது 12 வாழைக்காய் கொண்ட ஒரே தொகுப்பு. ''ஒரு சீப்பு வாழைக்காய்''

சீம்பால்: மாடு ஈன்று மூன்று நாள் வரை கொடுக்கும் பால்.

சீம எண்ணை: மண்ணெண்ணெய். ''சீமெண்ணெய்''

சீமவித்த: அபூர்வ வித்தை. ''ஆமா இது பெரிய சீம வித்தையல்லவா.''

சீமை: தொலைநாடு. வெள்ளையர் நாடு. லண்டன்.

சீமைய வித்தவள்: கெட்டிக்காரி. அவளை யாரும் ஏமாற்ற முடியாது.

சீர்தச்சிருக்கு: சிறு குழந்தைக்கு வரும் நோய். காய் போன வளின் வாடை தைத்தால் வரும் நோய்.

சீராடுதல்: காரியம் முடியாமல் காரியத்தைச் செய்து கொண்டே இருத்தல். ஒன்றிலும் பதியாமல் அங்கு மிங்குமாகத் திரிதல். ''ஏய் புறப்படு; என்ன சீராடிக் கிட்டு இருக்கே.'' ''சித்திரை பத்தினிலே சீராடும் மேல் காற்று''—சொலவம்.

சீவங்கெட்ட: உயிரோடு இருந்தும் புண்ணியமில்லை. ''சீவங்கெட்டப்பய'' பலமில்லாதவன்.

சீவிச்சிருச்சி: இறந்து போய் விட்டது.

சீவு: ஒரு வித நாணல் புல். வீடு மேய உதவும். 'சீகு'

சீன்னு: அச்சலாத்தியாய். போரடித்தல்.

சீன்னு போச்சி: முடிவு தந்த எரிச்சல்.

சீனி அவரை: கொத்தவரை.

சீனிக்கிழங்கு: வள்ளிக்கிழங்கு. சக்கரைவள்ளிக்கிழங்கு.

## சு

சுக சன்னி: எண்ணெய் தேய்த்து குளித்த தினத்தில் பெண்ணோடு ''சேர்ந்த'' அலுப்பு காரணமாக வரும் சன்னி.

சுங்கிடிச் சேலை: ஒரே நிறத்தில் அமைந்த சேலையில் மற்றொரு நிறப் பொட்டு பொட்டாகப் புள்ளிகள் போடப்பட்ட சேலை.

சுங்கு: தானியக்கதிர்களிலுள்ள மகரந்தம். ''இப்பொத்தான் பயிர் சுங்கு பிடிச்சிருக்கு'' 'சொங்கு'.

சுடு காடு நக்கி: மாட்டின் மூக்கின் ஊடே வெள்ளையாய் இருந்தால் அதை சுடுகாடு நக்கி என்பர். இது ஆகாது. மூக்கின் இருதுவாரத்திற்குமிடைப்பகுதி முழுவதும் வெள்ளையாய் இருந்தால் குற்றமல்ல.

**சுடுகுஞ்சி:** யாரும்; ஒரு உயிர்ப்பிராணி கூட. ஒருத்தருமே இல்லே என்பது. ''ஊருக்குள்ளே ஒரு சுடு குஞ்சியெக் காணோம்!''

**சுடுதண்ணி:** காப்பி. ''தேயிலேத் தண்ணி.'' ''கொஞ்சம் சுடு தண்ணி போடேன்.''

**சுண்டான்:** ஒரு வகை எலி. சிறியதாயிருக்கும். ''சுண்டான் சிலம்பு அடிச்சிப் பெருச்சாளி சாஞ்சிரவா போகுது?'' —சொலவம்

**சுணக்கம்:** அலுவல் காரணமாக ஏற்பட்ட தாமதம். சிறு சோம்பல்.

**சுணங்குதல்:** கதகதப்பைநாடி ஒட்டுதல். ஆள் மேலே விழுந்து உராய்ந்து கொண்டிருத்தல்.

**சுத்த:** பூராவும். முழுவதும். ''சுத்த மோசம்''

**சுத்த வாளி:** நிரபராதி. சுத்தவாளி × குத்தவாளி.

**சுத்துப் பொலி:** களத்தில் பொலியைச் சுற்றியிருப்பது.

**சுத்துமணி:** ஒரு வகை நகை. கழுத்தில் அணிவது.

**சுத்து முடிச்சி:** ஒரு வகை நகை.

**சுத்து முத்தும்:** சுற்றிலும் முற்றாக. சுற்றும் முற்றும். ''சுத்தும் முத்தும் பாத்துப்போ'' சுத்துமுத்தும் அவனெ எங்கேண்ணு இருக்கில்ல.

**சுதந்திரம்:** சுடு காட்டில் எரி மூட்டிய பின் கரைமரத்தடிக்கு வந்து, குழிதோண்டி, மண்கரைத்தவன், வெட்டியான், வண்ணான், குடிமகன் போன்றோர் பெற்றுக் கொள்ளும் பணம். இதைக் கொடுப்பவர் இடது கையினால் கொடுப்பார்.

**சுதாரிப்பு:** உஷார் தன்மை.

**சுதி இறங்கிப் போச்சு:** வீராப்பு. குறைஞ்சிப் போச்சு.

**சுதேசி கலர்:** ஊதாக் கலர்.

சுபாவி: அப்பாவி. அப்புராணி.

சும்மாடு: தலையில் பாரம் அழுத்தாமலிருக்க துணியை வட்டமாகச் சுற்றி வைத்துக் கொள்வது.

சுரிச்சிக்கிட்டே போகும் முள்ளு: அதிகாலையில் (எழுந்திருந்ததும்) காலில் உள்ள முள்ளை முள் வாங்கியால் கிளைச்சி எடுத்தால் முள் சுரித்துக் கொண்டே போகும். முள் வாங்கிக்குள் சிக்காது.

சுரிச்சிப் போச்சி: நிறைந்து விட்டது.
''மழை தாறுமாருப் பேஞ்சி கம்மா கால்வாயெல்லாம் சுரிச்சிப் போச்சி, சுரிச்சி''

சுருக்காங்கண்ணி: கயிற்றில் போடும் ஒரு வித முடிச்சு.

சுருக்காணிப்பை: தலைச் சுமையாக விற்கும் பெண்கள் சில்லரையை போட்டு வைக்கப் பயன்படும் சிறு பை. ஒரு கயிறை பிடித்து இழுக்க வாய் விரியும். மற்றொன்றை இழுக்க பை வாய் சுருங்கும். 'சுருக்குப்பை.'

சுருக்கு: உறுத்தலான சொல்லைக் கேட்கப் பொறுக்காதவன்.
''சுருக்குண்ணு சொல் கேட்க மாட்டான்.''

சுருட்டைக்கொம்பு: மாட்டு கொம்பு வகையில் ஒன்று.

சுருத்து: தனி விதமான அக்கறை.
தப்பிதத்தைச் சுட்டிக் காட்டும் போது சுருக்கென்று வரும் கோபம்.
''அதை சொன்ன மட்டும் சுருத்து மயிரு வருது.''

சுழியன்: சேட்டை செய்பவன், ''சுழிச்சேட்டை''



சுள்ளாணி: சுள்ளி போல மரத்தில் செதுக்கிக்கொண்டு மரச்சாமான்கள் செய்யும் போது—இரும்பு ஆணி மாதரி—உள்ச்செலுத்தி அறைவது.

சுள்ளாப்பு: சுள் என்று தாக்கும் வெயில்.
'வெயில் சுள்ளாப்பா அடிக்கி.'

## சூ

சூச்சக்கலப்பை: டிராக்டர்.

சூச்சம்: எந்திரம். விசை.

சூடாஇருக்கு: விலை அதிகம். ''விலை ரெம்ப சூடா இருக்கு'' ''சந்தை ரெம்ப சூடா இருக்கு''

சூடு: ரோஷம். (சூடு சொரணை—ரோஷம் மானம்)

சூணை: வளைவு. சூம்பல்.

சூத்தை: கத்தரிக்காயில் விழும் நோய். ''கத்தரிக்காய் சூத்தையாயிருக்கு'.

சூது வினையம்: வஞ்சகம். கபடம்.

சூந்து: கார்த்திகையன்று தட்டையை நீளமான பெரிய கட்டாக கட்டி கொளுத்துதல்.

சூப்புதல்: சுவைத்தல். ''விரலை சூப்புதல்''

சூம்புதல்: சூப்புதல், சுறுங்குதல். ''கால் சூம்பிப் போச்சி''

சூர்தட்டை: படப்பு மேய உதவும் கூர் நுனி படுத்தப்பட்ட நேரான தட்டை.

சூர்பிடித்தல்: படப்பு மேய்ச்சல் சரிந்து விழாமல் இருக்க சூர்த்தட்டையால் குத்தி மடக்குவது.

சூராவளி: சுறுசுறுப்பு. ''சோற்றுக்குச் சூராவளி வேலைக்கு வெட்ட வெளி!''—சொலவம். சுறுசுறுப்பான சிறுபுயல்.

சூலம் சாத்தி: ஊருக்குள்ள மேய விடுதல். ''ஏலே ஒண்ணே என்னே சூலஞ்சாத்தி விட்டிருக்கா ஊருக்குள்ளே?''

**சூலம் சாத்துதல்:** மாட்டிற்கு சூலம் சாத்தி கோயில் மாடாக விடுதல். இதை காயடிப்பதில்லை. பொலிக் காளையாகப் பயன்படும். இஷ்டம்போல் எங்கும் மேய்ந்து திரியலாம்.

## செ

**செகப்பு கண்டது:** பெண் கர்ப்பமாக இருக்கும்போது இடையில் மாதவிடாய்க்கான அறிகுறி தெரிந்தால் இப்படிக் கூறுவர்.

**செகிட்டேரி:** செகரட்ரி— ''செகிட்டேரி சுப்பா நாயக்கரு''

**செங்கமங்கல்:** வானத்தில் மாலையின் சிவப்பு மங்கி இருட்டப் போகும் வேளை.

**செஞ்சிட்டேன்:** இனி என்ன செய்ய முடியும் செய்தாகி விட்டது. ''இதென்ன இப்படி செஞ்சிட்டேன்.'' ''போச்சி விட்டுட்டேன்.''

**செஞ்சோளம்:** ஒரு தானிய வகை. இருங்குச் சோளத்திலும் பால்ச் சோளத்திலும் செஞ்சிகப்பாய் இருப்பது.

**செட்ச்சை:** அரண்மனை. தெலுங்குச் சொல். ''திருமால் நாயுண்டு செட்ச்சை'' (திருமலை நாயக்கர் மஹால்).

**செட்டப்பு:** 'ஆட்களை செட்டப் பண்ணனும்.'

''எலெக்சனுக்கு ஆட்களை அவரு அங்கங்கெ செட்டப்பு பண்ணீட்டாரு'' ஆங்கில வார்த்தை.

**செட்டு:** சீர்மை. ''செட்டாப் பிழைக்கான்''

**செட்டை:** பறவையின் இறக்கை. ''செட்டையிலெ அடிபட்டு இருக்கு''

**செடி:** செருக்கு. எக்கு. 'மாடு செடிப்போடுது'.

**செடி:** நாறச்செடி. வசவு.

**செடியில் கட்டணும்:** நாயைச்செடியில் கட்டணும். 'கொல்ல வேண்டும்' என்று பொருள்.

செண்டிக்கிறது: இருந்த இடத்திலிருந்தே ஸ்பிரிங் மாதரி துள்ளிதாவுதல். முறைத்தல்.

செண்டு: சண்டு. சண்டுவற்றல். குப்பை. ''செண்டு செத்தை"

செண்டேராது: ஒப்பேராது. போய்ச் சேராது.
''தொலேக்காடு... குப்பை கூளம் போய்ச் செண்டேராது"

செணுச்சிப்பாக்கான்: முறைத்துப் பார்க்கிருன்.

செத்த: கொஞ்சம். சிறிது. ''செத்தநாழி கழிச்சி வாயேன்''

செத்திங்காணு: கொஞ்சம் போல.

செத்தை: மைக்காத, செமிக்காத குப்பை. கழி கூளம்.

செத்தை செதுவல்: களே புதர் என்று நெருங்கி முளேத்திருப்பது.

செத்தை-புழு: புண்ணில் உண்டாகும் புழு.
''மாட்டுக்கு புண்ணுல செத்தை வச்சிருச்சி.''

செதுக்குமுத்து: வட்டக் கோட்டுக்குள் குவிந்து கிடக்கும் புளியம் முத்துக்களே தகடு போன்ற சிறிய பலகைக் கல்லால் எறிந்து எத்தி 'முத்து'க்களே சேர்க்கும் விளேயாட்டு. கல்லேவீசி எறியும் போது அது தரையை செதுக்கிக் கொண்டு போகும்.

செந்தட்டி: மேலெ பட்டால் தாங்க முடியாத அரிப்பும் தடிப்பும் உண்டாக்கும் செடி.

செந்தாளே: பயிர் நோய்.

செந்தூக்கா: ரொம்ப லேசாகத்தூக்குதல்.

செம்பிலி: செம்மறி ஆடு

செம்மம்: ஜென்மம். ''செம்மம் அழிஞ்சாலும் அவங் கூட நா பேச மாட்டேன்''

செம்மை செய்தல்: செப்பனிடல்.

செமந்த: மிக அதிகம். ''செமந்த சொத்து'' 'செமந்த ஆடு'

செமிஞ்தல்: செரித்தல்.

செய்யால்: அழிந்து போன காடு. ''நம்ம புஞ்சை தவிர நாலு பக்கமும் செய்யாலு''

செய்வினே: மாயம் மந்திரத்தால் ஒருவனுக்கு கேடு செய்தல். 'செய்வினே வச்சிட்டான்.'

செரட்டை: சிரட்டை. கொட்டாங்கச்சி.

செரட்டை-மடு: பசுமாட்டிற்கு மடி சிறியதாய் இருந்தால் இப்படிச் சொல்வர்.

செருக்கு: செழிப்பு.
''அந்த ஊர்ல நாடாக்கமாரு நல்ல செருக்கு''
சொல்லவும் வேணும், சொல்லவும் கூடாது. தர்மசங்கடமான விஷயத்தை சொல்லப் போகும் முன் கூறும் முன்னுரை.

செருக்கு: ''என்னமோ அடச்சிருக்கு. தண்ணி போகாம செருக்குது''

செல்லக்கிறுக்கு: அதிக செல்லம் கொடுத்து வளர்க்கப்பட்ட நபரின் அசட்டு செய்கைகள்.

செல்லாயிட்டார்: காலமானர்.

செலவு: பெரிச்சாளி தோண்டி வசிக்கும் வளே. ''பெரிச்சாளிச் செலவு''

செவ்வாளக்குத்தி: அதிகம் விரிந்த கலப்பை குத்தி.

செவ்வாளமேழி: அதிகம் விரிந்த மேழி.

செவ்வாளே: சிகப்பான ஆள்.
''ஒரு செவ்வாளேப் பயல் இப்பிடிக்கூடிவந்தானு?"

செவலே: மாட்டின் நிறம்.

செவனேன்னு: சும்மா. ''செவனேன்னு இரு''

செவிச்சுழி: மாட்டின் இரு காதுகளுக்கும் கீழோ அல்லது பக்கவாட்டிலோ இருப்பது.

செவிட்டில்: கன்னத்தில். அலகில்.

செவிப்பாம்பு: மாட்டுச்சுழி. மாட்டு காதிற்கு பின்னல் இரு சுழிகளிருந்தால் அது 'செவிப்பாம்பு'.

செவுள்: கன்னம்.

செள்ளங் கொஞ்சுருன்: செல்லம் கொஞ்சுருன். செல்லத் தைக் கண்டித்துச் சொல்லும் போது''செள்ள''மாகிறது.

செள்ளு: கோழிப் பேன்.

செளிச்சி போச்சி: முகத்தில அடிச்சிப்போச்சி. நிறைவு கொண்ட பின் ஏற்படும் சலிப்பு.

''அவரைக்காயே தின்னு தின்னு செழிச்சிப் போச்சி''

செளிம்பு: தெளிச்சி. தெம்பு. முகத்தில் ஆரோக்கியக் களை.

செறுமுதல்: சளி கட்டிய தொண்டையை சரி செய்கிறது.

சென்மம்: ஆயுள் தண்டனை.

செனசெனப்பா இருக்கு முகம்: உடல், மனம், நலமின்மை யைக் காட்டுவது; காய்ச்சலினுலும், கோபத்தின் அறி குறியாலும்.

## சே

சேக்காளி: சிநேகிதன்

சேக்கு: கிராப்பு

சேகரம்: தொடுப்பு. வங்கணம். ஒரு ஆண் பெண்ணையோ அல்லது ஒரு பெண் ஆணையோ சேர்த்து வைத்து கொள் ளுதல்; வைப்பாக.

சேட்டம்: நலம். ''உடம்புக்கே சேட்டமில்லே"

சேட்டிப்பு: அதீதமனேபாவம். ''சேட்டிப்பு பண்ருன்''

சேட்டு: இகழ்ச்சி. ''பெரிய சேட்டு கணக்க."

சேட்டை: குரும்பு. தொந்தரவு.

சேப்பு: சட்டை பை.

சேர்வை: பனங்காயைச் சீவிய சீவல். கால்நடை தீவனம்.

சைக்கினை: சைகை காமித்தல்.

சையோத்தியம்: இஷ்டம். பற்றுபாசம்.

## சொ

சொக்கனுக்கு சட்டியளவு: சாப்பாடுதான் அவனுக்கு முக்கியம்.

சொக்காரர்: தாயாதி.

சொக்கு: கிறக்கம். மயக்கநிலை,

சொகஞ்செயல்: ''சொகஞ் செயலாப் போய்ட்டு வாங்க.''

சொகம்: இன்ப உச்சி சுகம். வசதி. ஆனந்தம். ''எனக்கு 'சொகம்' வந்திட்டது''— புணர்ச்சியின் நிறைவை, திருப்தியைக் கூறுவது.

சொங்கு: சோளச்சொங்கு. நன்கு திரண்டு விளையாத சோளத் தானியத்தின் மேல் ஒட்டிக் கொண்டிருக்கும் தோடு.

சொச்சம்: மீதி (சொச்சம்—மிச்சம்).

சொஸ்தம்: குணம். சுகம்.

சொட்டாங்கி போடுதல்: மெச்சக் கொட்டுதல்.

சொட்டி: தெல்லு அல்லது கோலி விளையாட்டில் நட்டி வைத்தது தவிர வேறொருவனின் 'கைதெல்' மீது தெறிப்பவனது தெல் அல்லது கோலி பட்டால் அது 'சொட்டி'.

சொட்டை: குற்றம். பள்ளம். பழுது. ''சொட்டைச்சொல்.'' ''சருவப் பானை கீழ விழுந்து ஒரு ஓரத்தில சொட்டையாப் போச்சு''

சொட்டை: இடுப்பு. ''சொட்டையெ முறிச்சிப் போடுவேன்''

சொட்டை வாள்: ஒரு வகை மீன். ''ஆள்... பாக்கிறதுக்கு... நல்ல சொட்டவாள் மாதிரி இருப்பான்''

சொடக்குப் போட்டுக் கூப்பிடு; நாயைக் கூப்பிடும் முறை.

''நான் சொன்னதை செய்யலேன்னு என்னை சொடக்கு போட்டுக் கூப்பிடு'' ''சொடக்கு போடுற நேரத்தில வந்திடுவேன்''

சொடக் கெடுத்த மாதிரி: புதுமையாய். தெளிச்சியாய். ''இப்பத்தான் உடம்பு சொடக்கெடுத்த மாதிரிஇருக்கு.''

சொடிஞ்சி: பயிர்கள் மழை இல்லாமல் வாடி வதங்கி சொடிஞ்சி போதல்.

சொணக்கு: படப்பில் மட்டமாக இல்லாமல் நீட்டிக் கொண்டிருக்கும் பகுதி.

சொணங்காம: தாமதியாமல். சீக்கிரமாக. ''சொணங்காம வாங்க''

சொணங்குதல்: ஒட்டுதல். சாய்தல். பிரியத்தோடு மேலே சாய்ந்து மெல்லிய இன்பக் குரல் எழுப்புதலும் உராய்தலும். ''ஆள் மேலேயே சொணங்கிட்டுவாரே, அங்கிட்டு போயேன்.''

சொணை; முனை. கூர்மை. அரிப்பு. ''சொணையுள்ள மாடு தொட விடாது'' ''தொடு சொணையான மாடு''
''சொணை மாறிப் போனான்'' ''களத்தில் சோளம் அடிக்கும் போது சொணை உடம்பெல்லாம் பிடுங்கித் திங்கும்.''

சொத்தி: ஊனம். ''சொத்திக்கை.''

சொதமண்: சொத சொத என்றிருக்கும் நுண்ணமான ஈர மண்

சொதை: ஜோடி. ''ஒரு சொதை மேளம்''

சொதை சேர்ந்திருச்சி: ஜோடி பொருந்தி விட்டது.

சொமெகடன்: ஏற்றுக்கொண்ட கஷ்டம். விரும்பி ஏற்கும் தொந்தரவு. சுமந்து தீர வேண்டிய கட்டாயம். (சொமை கடன்).

சொருக்கு: சுருக்கு. காம்பிலிருந்து ஒரு தடவையில் இழுக்கும் போது வெளியாகும் பாலின் அளவு. ''ஒரு சொருக்குப் பால்.''

சொருகிக் கிடுச்சி: தின்ற உணவு அசைபோட வாய்க்கு வர முடியாமல் சொருகிக் கொள்வது; ஆடு மாடுக்கு. ஒரு

பருவத்துச் சோளப்பயிர் சொருகி விடும். அசைபோடும் கால்நடைகளுக்கு உணவு அசைக்கு வராமல் தொண்டையில் சொருகியது போல வந்து நின்றுவிடும், உடனே கவனிக்காவிட்டால் மாடு இறந்துவிடும்.

சொல்ச்சத்தி: சொல்லுக்கு மதிப்பு. ''அவருக்கு அங்கெ சொல்ச்சத்தி ஜாஸ்தி.'' ''சொல்ச்சத்தியான ஆளு''

சொல்வில்லான ஆளு: செல்வாக்கான ஆள்.

சொலவம்: சொலவடை. பழமொழி. படித்தவர்கள் உண்டு பண்ணியது பழமொழி; பாமரர் உண்டு பண்ணியது சொலவம்.

சொவடு: ஒத்த வயசு. (சோடு, சோட்டு)

சொவரொட்டி: ஒரு பச்சிலை. சுவர் ஆணியில் மாட்டும் விளக்கு. 'பெட்ரூம் லைட்.'

சொள்ளு: வாய்நீர். ''சொள்ளு வடியுது'' 'ஜொள்ளு.'

சொள்ளை: குறை. சோடை. ''தொட்டதுக்கெல்லாம் அதுலெ சொள்ளை இதுலெ சூத்தைங்கான்!''

சொளகு: முறம்.

சொளமாடி: திருடிக்கொண்டு. 'சொளையமாடி.'

சொற்புத்தி: சொந்தப் புத்தி இல்லாமல் சொன்னபடியெல்லாம் கேட்டு நடக்கும் அறிவு உள்ளவள்(ன்). ''எடுப்பார் கைப்பிள்ளை''யாக.

சொற்டை: வங்கு (தோல்வியாதி). டில்லி எருமை.

சொன்னுங்கம்: சரியான மருந்து. ''இந்த நோய்க்கு சரியான மருந்துதான் சொன்னுங்கம்.''

சொன்னுப்பலெ: அனுபவஸ்தர்கள் சொன்னது போல. முன்னோர்கள் சொன்னதுபோல.

''என்னமோ சொன்னுப்பலெ இருக்கெ நீங்க பேசுறது!'' ''சொன்னுப்பலெ நிலைமையும் இங்கெ அப்பிடித்தானிருக்கு''

சோக்: பார்க்க நல்ல. மனசுக்கு பிடித்த. ''அழகான. ஆள் பார்க்க சோக்கா இருப்பார்.'' ''சோக்கான பொண்ணு.'' ''சோக் பேர்வழி.''



சோட்டை: பெரிய அளவு குத்துச்சட்டி.

சோடி கூப்பிடுறான்: மோதலுக்கு அழைக்கிறான்.

சோடு: சமம். சமவயது. பொருத்தம். ஜோடி. பட்டம். ''அப்போ நாங்கள்ளாம் ஒரு சோட்டுப் பிள்ளைக.''

சோடு: மாட்டின் வயது.

சோணக்காது: குடை மாதரி வளைந்தது. 'குடைக்காது.

சோத்துக்கை: வலதுகை.

சோத்துமாடன்: சோற்றினால் செய்யப்பட்ட படப்புக்கு என்றே இருக்கும் மாடன். (வசவு) ''லே விருதா சோத்துமாடா''

சோதா: ஏலமாட்டாதவன். ''சோதாப்பயலைப் போகச் சொல்லு.''

சோதாக்கிடா: இனவிருத்தி செய்ய இயலாத கிடா.

சோப்படி: பிக்பாக்கெட். ''சோப்படி அடிச்சிட்டான்''

சோப்பு: சட்டைப்பை. பாக்கெட். 'சேப்பு'.

சோப்ளாங்கி: உதவாக்கரை. ஏலாதவன். ஒன்றுக்கும் லாயக்கில்லாதவன். மண்டையில் ஒன்னுமில்லை, வெறும் வாய்ப் பேச்சு மட்டும் உள்ளவன்.

சோரம்: மோசம். ''சோரம் பண்ணீட்டான்.''

சோலி: காரியம். கெட்டவார்த்தை.

சோலி முடிந்தது: அவ நடைய காரியம்—சம்பந்தப்பட்ட மர ணச் சடங்குகளெல்லாம்—முடிந்தன.

சோலியை முடிச்சிட்டான்: ''குளோஸ் பண்ணிவிட்டான். கொன்று தீர்த்து விட்டான்.

சோனகம்: தென்கிழக்குக் காற்று.

## ஜ

ஜம்முன்னு: கம்பீரமாக.

ஜமா: கூட்டுஜாலி.

ஜமாளிக்கி: மெய் மறக்கச் செய்தல். சொக்கச் செய்தல். ''பூ வாசனை ஜமாளிக்கு.''

ஜனக்கட்டு: ஆள் செருக்கு. ''அவனுக்கு ஜனக்கட்டு இருக்கு பின்னே பேசமாட்டானு.''

ஜாஸ்தி: அதிகம்.

ஜொள்ளு: வாய்நீர். ''தேன்''

ஜொன்னு: காய்ச்சிய சீம்பால்.

ஜோரா: அழகாக.

## ஞ

ஞய்யாமிய்யாங்கான்: வசமாக மாட்டிக்கொள்ளும்போது பதில் சொல்ல முடியாமல் உழறுவது. ''ஏம்பா கருத ஒடிச்சேங் கேன்; ஞய்யாமிய்யாங்கான்''

ஞாயம்: நியாயம். நீதி. ''எனக்கு ஞாயம் கிடைக்கணும்.''

## ட்

ட்ரிக்: தந்திரம். ''அதுலெ ஒரு டிரிக் இருக்குடா பயலே!''

## ட

டக்கப்போர்: போராட்டம். இழுபறி. அவங்க ரெண்டு பேத் துக்குள்ளர பெரிய்ய டக்கப்போரு வந்திருச்சி.''

டக்கர்: டிராக்டர். எந்தரகலப்பை. சூச்சக்கலப்பை.

டக்கு: விஷயத்தில் வைக்குப் பொடி. ''டச்கு வைச்சு பேசு ருன்.'' ரயில் பெட்டி.

டப்பா டான்ஸ்ஆடிப்போகும்: ஏங்கிட்ட சேட்டை பண்ணுன... ஒன்டப்பா டான்ஸ் ஆடிப்போகும்.

டமாணச்சுழி: மாட்டுச்சுழி. மாட்டின் முதுகில் இரு சுழிகள் இடவலப்புறமாக இருந்தால் அது டமாணச்சுழி.

## டா

டாண்ணு: சொன்னபடி. மிகச் சரியாக. கச்சிதமாய். சரியான நேரம். ''சொன்னபடி ஆள் டாண்ணு வந்து இறங்கிட் டாரே!''

டாப்பக்கழட்டிட்டான்: மண்டையை நொறுக்கீட்டான்.

டாரா விட்டிருச்சி: இரண்டாய். வேட்டி டாராய் கிழிஞ் சிருச்சி.''

## டி

டிக்கிரி: டெதாஸ்கோப். டாக்டரு டிக்கிரி வச்சுப் பாத்தாரு'' கோர்ட்லெ போட்ட நோட்டு டிக்கிரி ஆயிரிச்சி''

டிமிக்கி: ஏமாற்றுதல். எத்துதல்

டின்னைக்கட்டிக்கோ (முதுகில்): அடி வாங்கத்தயாராயிரு. செய்த குற்றத்திற்கு தண்டனை பெறப்போகிறாய் என்று எச்சரித்தல்.

## டே

டேரா: இருத்தல். தங்குதல்.
''பத்து நாள் நம்ம வீட்டுலெ வந்து டேராப் போட்டுட் டான்!''

**டோஸ்:** சொல்த்தாக்குதல். குரல் ஓங்கிய பலத்த கண்டனம். ''நல்லா டோஸ் குடுத்து விட்டுவிட்டான்''.

## த

**தக்கம்:** வாய்த்தர்க்கம்.

**தக்க வைத்தல்:** தனதாக்கிக் கொள்ளுதல். ''முழுத்தேங்காய் நாயக்குத் தக்குமா?''

**தக்கன:** (தக்கனெ) தகுந்த. ''அதுக்கு தக்கனெ''— அது அதுக்கு தகுந்த மாதரி.

**தகடு:** எந்திரம் மந்திரம் எழுதிய தகடு. இதில் நல்லதற்கும் உண்டு கெட்டதிற்கும் உண்டு.

**தகணு:** பனங்கொட்டையிலிருப்பது. இதை சாப்பிடலாம். இனிப்பாயிருக்கும். 'தகண்'. அவன் உடம்பில் சதை தகணுதகணய் இருக்கு.''

**தகை:** தீராத தாகம். ''நெஞ்சுத்தகை பிடிச்சிருக்கு.''

**தங்கமாய்ப் போச்சு:** நல்லதாய் போச்சி.

**தங்குதல்:** நிலைத்தல். அமர்தல்.

**தங்குவிஷம்:** குணம் வந்த பிறகும் உடம்புக்குள் மிஞ்சி இருக்கும்.

**தர்சு செய்தாய்ச்சி:** முளைப் பிடிச்சாச்சி. வீட்டுக்கு.

**தச்சுமுழம்:** சுமார் $2\frac{3}{4}$ அடி. தச்சாசாரிகள் சொல்லும் அளவு முறை.

**தசகூலி:** சம்சாரி குடும்பத்தில் ஏற்படும் பலவிதமான செலவுகள். ''தசகூலி அத்துப்போகும்.''

**தசகூலிவிபரம்:** வண்ணான் கூலி, குடிமகன் கூலி, கொல்லாசாரி கூலி, தச்சாசாரி கூலி, கிழிந்த துணி தைப்பவன் வாங்கும் கூலி, களத்தில் பகடை வாங்கும் கூலி, ஆடு மேய்ப்பவன், மாடு மேய்ப்பவன், களையெடுப்புக் கூலி, அறுவடைக் கூலி, இப்படிப்பத்து.

**தசை:** சத்து. ''நிலம் தசை வாங்கிப் போச்சி''.

**தட்டக்கருது:** தலைக்கதிர் அல்லாத பக்கக் கதிர்.
தலைக்கதிர் பிறக்கியபின் பல நாள் கழித்து இரண்டாம் முறையாகப் பிறக்கும் கதிர். பிறக்குதல்-பொருக்குதல்.

**தட்டட்டி:** மொட்டை மாடி.

**தட்டளிதல்:** சிரமப்படுதல். எது இன்னது என்று தெரியாமல் தடுமாறுதல். ''தட்டழிஞ்சு வந்து சேர்ந்தான்''

**தட்டு:** தோட்டத்தில சில் கைவாய்க்கலைக் கொண்ட ஒரு பெருவாய்க்காலில் அடங்கிய பகுதி.
''ஒரு தட்டுதான் தண்ணீர் பாய்ஞ்சிருக்கு''.



**தட்டுக்குழி:** மாட்டுக்கு இது தெரிந்த 2-3 நாட்களில் மாடு ஈன்று விடும். ''தட்டுக்குழி இறங்கீரிச்சி'' ''தட்டுக்குழி நெறிஞ்சிரிச்சி''

**தட்டுக்கெட்டவ:** வசவு. ''தட்டுக்கெட்ட முண்ட''.

**தட்டுச்சொளகு:** வட்டமான சொளகு.

**தட்டுதல்:** மறுத்தல். ''என் வார்த்தையை தட்டாதே.''

**தட்டுப்படுதல்:** காணப்படுதல். தென்படுதல். ''என்னய்யா ஆளையே தட்டுப்படக் காணோம்!''

**தட்டுப் பலகை:** படப்பு அடுக்கப் பயன்படுவது. அடுக்கிய படப்பின் சுவர்ப்பகுதியைத் தட்டி ஒழுங்குபடுத்த உதவும் பலகை. ஒரு அசப்பில் கிரிக்கெட் மட்டை போன்றிருக்கும்.

**தட்டுப் பெரட்டு:** அறியாமல் நடந்துவிடும் தவறு.

**தட்டுமுட்டுச் சாமான்கள்;** அத்யாவசிய உபையோகச் சாமான்கள்.

தட்டுவாணி: வசவு.

தட்டை: கம்மம் பயிரின் கதிர் நீங்கிய காய்ந்த பகுதி.

தட்டை மேய்ச்சல்: தட்டையால் கூரைவேய்வது.

தடம் பார்த்தல்: பதிந்த கால்தடங்களைக் கொண்டு அது இன்னார் என அடையாளம் கண்டுபிடித்தல். பாதையை கவனித்துச் செல்லுதல். ''தடம் பார்த்துப் போ''

தடம் பெரளுது:
தடம் வெட்டிப்போகுது: } மாடு ஒரு பக்கம் போக, வண்டி ஒரு பக்கம் சாய்வாக இருத்தலுக்கு இப்பெயர்.

தடயம்: குற்றவாளிகள் தங்களை அறியாமல் மறதியாய் விட்டுப்போன அவர்களுடைய பொருள்கள். சாட்சிப் பொருள். அடையாளம்.

தடலடியா; முரட்டுத்தனமாய்.

தடவுபருத்தி: முதலில் வெடிக்க ஆரம்பிக்கும் பருத்தியை தேடித்தேடி அல்லது தடவித்தடவி எடுக்க வேண்டும்.
''தை மாசம் தடவு பருத்தி
மாசி மாதம் மடிப்பருத்தி'' — சொலவம்.

தடவுபழம்: முதலில் பழம் பறிப்பது; தேடித்தேடிப் பறிக்கும் பழம். பழங்களும் தடவலாகவே இருக்கும். (தடவல்-பற்றுக்குறை. தட்டும் தடவலுமாய்.)

தடிக்கலப்பு: பனைமரங்கள் ஒரு பகுதியில் நெருங்கியும், ஒரு பகுதியில் கலப்பாயும் இருக்கும். இதற்கு ''தடிக்கலப்பு'' என்று பெயர்,

தடிவெட்டிப் போடுதல்: தொடங்குகின்ற காரியத்துக்கெல்லாம் எடைஞ்சல் செய்வது.

தடுக்கு: உட்காரப் பயன்படும் ஓலையினலான தட்டு.

தடுமம்: ஜலதோஷம். நீர்கொள்ளல். 'தடுமன்'.

தடுதலே: மறுப்பு. ''எம் பேச்சுக்குத் தடுதலே சொல்லாதே.''

தடை: தடுப்பு. ஆட்சேபணை. ''தடை சொல்ல மாட்டான்.''

**தண்டயக் கம்பு:** சப்பரம், பல்லக்கு முதலியன ஊர்வலத்தில் நிற்கும்போது தாங்கி நிற்க உதவும்.

**தண்டாதஸ்க்காங்கான்:** ஆய்பூய்ண்ணு மிரட்ருன். சத்தம் போடுருன்.'

**தண்டி:** பெரிசு. பருமன். ''தொடைத்தண்டி பாம்பு.'' ''இத்தாந்தண்டி.'' வரை. ''நான் வருந்தண்டியும்நீ அங்கேயே இரு.''

**தண்டிக்குத்தரமா:** ஜோடி பொருத்தமாய். ''பொண்ணுக்கு மாப்பிள்ளை தண்டிக்குத்தரமா இருந்தாத்தான் நல்லது.''

**தண்டிப் பிள்ளைகள்:** ஒரே வயதுடைய சிநேகிதர்கள்.

**தண்டையக்குச்சி:** சுவரில் பதிக்கப்பட்ட முளைக்கம்பு.

**தண்டோரா:** ஒலி மூலம் பொது அறிவிப்பு.

**தண்ணிக்கி அங்கிட்டா இங்கிட்டா:** கடலை தாண்டியா உள் நாட்டிலா.

**தண்ணி கண்டதோ, பாறை கண்டதோ:** உண்டு அல்லது இல்லையென பார்த்து விடுதல்.

**தண்ணிகாட்டுதல்:** மாட்டுக்கு தண்ணீர் வைத்தல். மனுஷனை மனுஷன் ஏமாற்றுதல்.

**தண்ணிகுடிச்ச மாதரி:** ரொம்பச் சுலபமாக. ஒரு கஷ்டமில்லாமல். அவ்வளவு லேசாக.

**தண்ணிச் சாஸ்திரம்:** பெண் முதலில் தண்ணிக்குப் போவது; திருமணமான பிறகு.

**தணுசு:** தணிந்து இருப்பது. வெடுசு × தணுசு. ''மண் வெட்டி ரொம்பத் தணுசா இருக்கு''.

**தத்தக்கா புத்தக்காண்ணு:** நிலைத்து நிற்பதற்கு முன்னுள்ள ஆரம்பச் சிரமங்கள்; குழந்தை எழுந்து நிற்பதற்கு முன்னுள்ள சிரமம் போல.

**தத்தாங்கி:** சிறு குழந்தை இரு கைகளையும் தட்டுதல்.

தத்திப்பித்தி: ரொம்பச் சிரமப்பட்டு. ''தத்துப்பித்தி ஒரு மட்டுக்கும் படியேறிட்டான்.''

தத்து: கண்டம். மரணத்தின் வாய் வரை சென்று மீளல்,

தத்து எடுத்தல்: சுவீகாரம். வாரிசு. ''தத்துப்புத்திரன்.''

தத்துக்கட்டணும்: மண் அரிக்காமல் தடுக்கக் கட்டப்படும் வடி சுவர்.

தந்தொழில்: தமது குலத் தொழில்.
''தந்தொழில் தெரியாதவனுக்குத் தலையளவு பஞ்சம்''
—சொலவம்

தப்பப் பிறந்தவன்: அங்கே பிறக்க வேண்டியவனில்லை. அந்த குடும்பத்திலெ அவன் ஒரு ஆளு தப்பப்பிறந்தவன்.

தப்பல்: பாராட்டுச்சொல். ''அடிருத்தப்பல்ண்ணும்''

தப்பளம்: நெற்றி, தலை ஆகிய இடங்களில் பற்றுப்போடுதல்.

தப்பிப் போதல்: காணுமல் போதல். ''ஆடு தப்பிப் போச்சி''

தப்பிலி: வசவு. ''தப்பிலிப்பய''

தப்பு: சிறுமேளம்.

தபா: தடவை. ''எத்தனை தபாதான் சொல்றது உனக்கு''.

தம்பட்டை: கோயில் மாடு. ''தம்பட்டங்காளை''

தம்மாட்டை: மன்னிப்பு. ''இந்த ஒரு தரம் தம்மாட்டை; போ''.

தம்முசம்: பலம், சக்தி.

தயணுத்துப் பண்ருன்: கெஞ்சுருன். சிபாரிசு செய்யச் சொல்ருன். நாடியைத் தாங்குருன்.

தயிப்பாரணும்: தவிப்பு ஆரணும். தகிப்பை ஆற்றுதல்.

தரங்கு: வேல் கம்பு.

தரங்கெட்ட : பெரியவர் சின்னவர் என்கிற மரியாதை கூட தெரியாத. ''தரங் கெட்ட பய''. வசவு.

**தரம்:** தடவை. ''எத்தனை தரந்தான் சொல்றது'' — ''எத்தனை நேரந்தான் சொல்றது''

**தர வளச்சி:** வரவழைத்து.

**தரவை:** உப்பங்கழி.

**தரிசு:** விவசாயம் செய்யாமல் போடும் நிலம்.

**தருகுதல்:** தக்குதல். ''செடி தருகிரிச்சின்னு காய்ச்சிரும்.''

**தருவை:** சலவைக்கான உவர்மண் விளையுமிடம்.



**தலகாணிபாத்தி:** இரு புறமும் தண்ணீர் பாயும் பாத்தி. பொழி ஓரத்தில் பாத்தி அமைந்திருப்பது அதாவது பொழி ஓரத்தில் வாய் காலில்லாமல் பாத்தியமைத்து சற்றே தள்ளி வாய்க்காலமைத்துத்தான் தண்ணீர் பாய்ச்சுவது.

**தலைக்கட்டு:** மணம் புரிந்து கொண்ட தம்பதியர் ஒரு தலைக் கட்டு. ''இந்த ஊரிலெ 500 தலைக்கட்டு இருக்கு''

**தலைக்கட்டுவரி:** கிராமத்துப் பொதுவுக்காக வசூலிக்கும் குடும் வரி.

**தலைக்கோழி கூப்பிட:** காலை 3 மணி உத்தேசம்.

**தலை கவுரவச்சிராதெ:** மானத்தைக் காப்பாற்று.

**தலைகால் புரியாமல்:** கோபம், கர்வம், சந்தோஷம் முதலிய எதிலும் அதீதவேகம்.

**தலை கீழ ஒப்பிப்பான்:** எந்த இடத்திலிருந்து எப்படிக் கேட்டாலும் ஒப்பிப்பான்.

**தலைச்சிறை:** தலையை கவசத்தினுல் மூடி வைக்கும் ஒரு வகை தண்டனை. அவஸ்தை. ''இவனுடெ பெரிய்ய தலைச் சிறையாப் போச்சி''.

தலைத் தொலிய வாங்கிருவேன்: எச்சரிக்கை. இப்படி தண்டிப்பேன் என்று மிரட்டுதல்.

தலை பொறுக்காது: ''தலை வெடித்துவிடும்!'' ''அபாண்டமாச் சொன்னா உன் தலைப் பொறுக்காது.''

தலை மடக்கு: உழவு சென்று திரும்பும் இடம்.

தலை முழுக்கு: கருமாதி.

தலை முழுகீற வேண்டியதுதான்: கைவிட்டு விட வேண்டியது தான்.

தலைமுறை தத்துவமாய்: பரம்பரையாய்,

தலையில கை வச்சிட்டு போக வேண்டியதுதான்: அவனை நம் பிஞல் வருத்தத்திற்குள்ளாக்கி விடுவான்.

தலையெடுத்திட்டான்: எல்லா வேலைகளையும் பொறுப்பாகச் செய்யும் முறையில் வளர்ந்து விட்டான். ''தம்பி தலை யெடுத்திட்டான் வெள்ளாட்டுக்கு ஆள் தேவையில்லை''
—சொலவம்

தலையைச் செரைச்சி...நடுவிளக்கு ஏத்தணுமா?: அவமானப் படுத்தும் முறை.

தலையை வெட்டி நாய்க்குப்போடு: கால் தாண்டி விளையாட்டில் சொல்வது. குனிந்து நிற்கும்போது தலையை நீட்டிக் கொண்டிருந்தால் இப்படிச் சொல்வார்கள்.

தலைவச்சி படுக்கமாட்டான்: அந்த பக்கமே போக மாட்டான். பிடிக்காத இடத்திற்கு போவதில்லை.

தவ்வாளி: பாய்ச்சல்.

தவ்வுதல்: குதித்தேறுதல். (உயர)

தவக்கா: தவளை.

தவங்கி: தளர்ந்து. தள்ளாட்டம் ''தவிங்கின பருவந்தான்" ''ஆள் ரெம்ப தவங்கி போய்ட்டார்.''

தவசம்: தானியம். சில இடங்களில் இது கம்பம் புல்லைக் குறிக்கிறது.

தவதாயம்: கஷ்டம். ஆள்ரெம்ப தவதாயப்பட்டுப் போனரு. நொம்பலம்.

தவணைப்புளி: புளி, மிளகாய்வற்றல், உப்பு ஆகியவற்றுடன் கருப்பட்டி சேர்த்து அரைத்து குச்சியில் வைத்துச் சப்பி சாப்பிடுவது. சிறுவர்கள் கூடிச்செய்து கொள்ளும் ஓர் தின்பண்டம்.

தவளைக்கொத்து: இருப்புச்சட்டத்தை நுழைக்கும் இரும்பினு லான வளைவு.

தவிக்கி: தாகமாயிருக்கு. "தண்ணி தவிக்கி". தேடுது. "தவியாதவிக்கான்". "அம்மாவை காணுமேயின்னு பிள்ளை தவிக்கி."

தவிச்ச வாய்க்குத் தண்ணிகுடுக்க மாட்டான்: ஈவு இரக்கமற்ற மாபாவி.

தவிச்சுப்போயி: அலுத்துப்போய். பயந்துபோய். "என்னமோ ஏதோண்ணு தவிச்சிப் போயிட்டேன்".

தவிட்டுக்குஞ்சி: ஒரு விளையாட்டு.

தவிடுதாங்கிப்போதல்: அந்த காரியத்தைச் செய்து முடிக்கும் முன்னே தன்னுல திண்டாடிப்போச்சி என்ற பொருளில் வழங்குகிறது.

தழுக்கு: இரண்டு கைகளும் சேர்த்து அள்ளும் ஒரு அளவு. "மாட்டுக்கு ஒருதழுக்குகூளம் போடு."

தழையிறது: பால் மாட்டில் வேறுகன்றை பழக்குவது.

தள்ளுகுச்சி: உழவில் மாடு உள்ளடிப்பதை அல்லது விலகிப் போவதைத் தடுக்க மேக்கால் துவாரத்தில் சொருகப்படும் குச்சி.

தளண்டு: தளர்ந்து. "வயசானதினலெ தளண்டுட்டாரு"

தளபாடம்: பார்க்காமலேயே சொல்ல முடியும்.

தளைநார்: பனையேறிகள் காலில் போட்டுக்கொண்டு பனையேறு வது.

**தளுகைச்சோறு:** பூசை செய்யும்போது இலையில் வைக்கப்படும் சோறு.

**தற்புத்தி:** வளர்ச்சி. முன்னேற்றம். ''பையனை கொஞ்சம் தற்புத்தி பண்ணி விட்டிருங்க''—தன் புத்தியோடு பிழைத்துக்கொள்ளுமளவுக்கு ஆளாக்கி விடுங்கள்.

**தன்காலம்:** கார்காலம். ''தன்காலம் ஆயிப்போச்சில்ல தென்னங்கண்ணு சும்மா வைக்கலாம்''

**தன்கைப்பட்டிருக்கு:** சுளுக்கி இருக்கு.

**தன்கைமேழி:** பாவுலேயே அமைந்த மேழி.

**தன்தரை:** அசல் தரை. கெட்டியான தரை. போடுமண் போடப்பட்ட தரையல்ல.

**தன்மூப்பு:** தான் நினைத்தபடி. பெரியவர்களிருக்க அவர்களிடம் கேளாமல் தான் நினைத்தபடி செலவழிப்பதும் ஊர் வட்டிக்குப் போவதும் வருவதுமான செயலைக் குறிப்பது.

**தன்னக்கட்டிட்டான்:** சிபாரிசு செய்வது. மேற்கொண்டு நடவடிக்கை இல்லாது செய்துவிட்டான். சரிக்கட்டிட்டான்.

**தன்னக்கட்டிப்போகும்:** இலாப நஷ்டமில்லாமல் நடக்கும்.

**தன்னப்போல:** தானாக.

**தன்னுள்:** தனதாள்.

**தன்னுசார்:** பிரக்ஞை. ''ஆள் தன்னுசார் இல்லாமல் கிடக்கு.''

**தனக்கற:** தன் இஷ்டத்திற்கு. ''தனக்கற மேய்ஞ்சிட்டு மாடு நல்லாயிருக்கு.''

**தனக்கேசங்கடம் அதிலே ஒரு வங்கணம்:** கஷ்டத்தை அறியாதல் உல்லாசமாய் மட்டும் இருக்க விரும்புகிறவனைப் பற்றி.

**தனதாள்:** சொந்த.

**தனதேர்:** சொந்த ஏர்.

**தனிக்கட்டை:** பிரம்மச்சாரி. ''ஒமக்கென்னய்யா... நீர் தனிக் கட்டை.''

**தனிக்காட்டுராசா:** கேள்விகேப்பார் இல்லாதார்.

## தா

**தாக்கல்:** தகவல். பதிவு. ''ஊரிலெ இருந்து ஒரு தாக்கலே யும் காணோம்.'' ''அவம்பேர்லெ ஏதோ கோர்ட்லெ வழக்கு தாக்கல் பண்ணுனதாக் கேள்வி.''

**தாக்காட்டி:** தாமதப் படுத்து. நிறுத்தி வைத்தல். ''ஆளக் கொஞ்சம் தாக்காட்டி வைங்க.''

**தாக்கானஆள்:** பலசாலி. உடம்புதாக்கு.

**தாக்கு:** புன்செய். ''மேலத்தாக்கு'' ''கீழத்தாக்கு.'' புன்செயில் மண்ணை நீண்ட சதுரமாய் குவித்து ஒழுங்குப் படுத்துதலுக்கும் ''தாக்கு'' எனப்பெயர்.

**தாக்குத்தப்பானவிலே:** கூடுதலான விலே. எக்குத்தப்பான விலே.

**தாங்கல்:** வருத்தம். ''மனத்தாங்கல்'' சடவு.

**தாச்சல்:** கோவணம். ''தனக்குத் தனக்குண்ணு தாச்சலும் பதக்கு.''—சொலவம்.

**தாசாபண்ணுதல்:** சமாதானம் பண்ணுதல். தனக்கு சாதக மாக சரிக்கட்டுதல்.

**தாட்டாய்:** தாராளமாய். விஸ்தாரமாய். அதிகமாய். ''தாட் டாய் செலவழிக்கான்.''

**தகிட்டியம்:** செல்வாக்கு. கம்பீரம்.

**தாட்டு:** பருத்தி அடைவதற்கு சாக்குகளேக் கொண்டு தைக் கப்படுவது. சதுரமாயிருக்கும் பொருளே அடைத்த பிறகு அதற்கு 'மருகை' என்று பெயர்.

**தாட்டு பத்திரிச்சேலே:** பெரிய பெரிய கட்டங்கள் போட்ட சேலே; சாரம், அருப்புக்கோட்டை போன்ற இடங்களில் நெய்யப்படுகிறது.

தாட்டோட்டு: சால்ஜாப்பு. தட்டிக்கழித்தல்.

தாட் பூட்: மிகச்சிறிய தப்பிதத்தைப் பெரிசுபடுத்திக் கூப்பாடு போடுவது. பயமுறுத்திக் கூப்பாடு போடுவது.
''தாட் பூட் தஞ்சாவூர்ங்கான்"

தாடிக்கொம்பு: மரத்தில் தாழ்ந்த கொப்பு.

தாந்தின்னி: சுயநலக்காரன். அடுத்தவர்களுக்கு ருசி பார்க்கக்கூட தராதவன்.
தாந்தின்னி பிள்ள வளக்காது
தவிடு தின்னி கோழி வளக்காது — ஒரு சொலவம்.

தாப்பா: தாழ்ப்பாள். "போடுதாப்பா". ''ஒண்ணும் தெரியாத பாப்பா மத்தியானம் ஒரு மணிக்கே போட்டாளாம் தாப்பா'' — சொலவம்.

தாப்பிரியம்: விரிவான விளக்கம். ''நீ அதுக்குத் தாப்பிரியம் பிரிக்கியாக்கும்.''

தாபு: பறவைகள், மிருகங்கள் தங்கிச் செல்லுமிடம்.

தாம்போயி: ''தாம்போதி'': ஓடைமீது ரோடு கடக்க வேண்டிய இடத்தில் ஓடையின் தாழ்வுக்குத் தகுந்த மாதிரி கட்டி விடப்பட்டிருக்கும். ''ஓடு பாலம்''.

தாமரங்காய்: கோழியின் உடம்புள்ளிருக்கும் ஒரு உறுப்பு.

தாமரித்தல்: பராமரித்தல். கவனித்தல். இழுத்துப்பிடித்தல். ''மாட்டை தாமரிக்க முடியலே''. பத்துப்பேர் திடீர்ண்ணு போயிட்டா தாமரிக்க வழி இருக்கா?''

தாமூசம்: சுணக்கம்.

தாய்க்கிராமம்: சில கிராமங்களுக்கான தலைமை கிராமம்.

தாய்பிள்ளெகெ: இரத்த உறவுடையவர்கள். நெருங்கிய சொந்தக்காரர்கள். ''அவுகள்ளாம் தாய்பிள்ளெகெ."
''அந்த ஊருலெ எங்களுக்கு தாய்பிள்ளெகெ ஜாஸ்தி.''

தாயமாட்டு: தாமதம். ''வேலைத்தாயமாட்டு.''

தாயா பிள்ளையா: நெருங்கிய பழக்கத்திற்கு சொல்லும் சொல். (தோண்டியும் கயிறுமாக).

**தாயோடபுள்ள தலைகூடாமச் செய்திட்டான்:** ஊடாடி உறவை வெட்டி விட்டான்.

**தார்:** அகலம் குறைந்த நீளமான புஞ்சை. ''கீழமேல தார்''. குலை. ''வாழைத்தார்.''

**தார்க்கம்பு:** ஊசி சொருகிய கம்பு.

**தார்க்கம்பு வெள்ளி:** வானத்தில் ஒரு நட்சத்திரக் கூட்டம்.

**தார்சா:** தாவாரம். 'வெராண்டா'

**தார்சு குத்துதல்:** மச்சுக்கு செங்கல் குத்துதல்.

**தார் பாய்ச்சிக் கட்டுதல்:** வேட்டியை மடக்கிச் சுருட்டி பின் பக்கம் சொருகுதல்.

**மாவ்வுதல்:** நீளவசத்தில் தாவுதல்.

**தாவணி:** மாட்டுச்சந்தை. ''மாட்டுத்தாவணி''

**தாவலை:** நோயுற்று இருந்து இப்போது ஏற்பட்டக் குணம். பரவாயில்லை. ''விலை ரொம்பத் தாவலை.''

**தாவா:** வழக்கு.

**தாவு:** நீர்தேங்கும் சமதளமில்லாத பூமி.

''ஈழையும் கொங்கையும் எதிர்த்து மின்னுது
தாவுலிருக்கிற கூட்டை எடுத்து மேட்டுலெ வை''
— சொலவம்.

**தாள்:** குதிரை வாலித்தாள். கேப்பைத்தாள்.

**தாளக்கம்:** தயக்கம். ''இந்தத் தாளக்கம் ஈளக்கந்தானெ ஆகாதுங்கெ''

**தாளம்.** உணவு போட்டு உண்ணும் ஏனம். ''தாலம்''

**தாளி:** பெரிய அளவுள்ள பானை. 'தாழி'

**தாளிக்காதே:** பெண்கள் சண்டையிடும் போது அதிகம் பேசாதே என்று கூறுவது. பெருமையைப் பீத்தாதே.

**தாறும் பூறுண்ணு கிடக்கு:** தாறுமாறுகச் சாமான்கள் நாலா பக்கமும் இரைந்து கிடக்கிறது.

தாறுமாறு: வகையில்லாமல். ''தாறுமாறுகப் பேசுறன்.''

தானப் பாழாக்கிட்டான்: பாழாக்கி விட்டான் சொத்தை.

தானம் போடுதல்: தோட்டத்தில் தரை பதமாயிருக்கும் போது ஊசியாகச் செதுக்கப்பட்ட கம்பால் தரையில் முழத்திற்கு ஒன்றுய்க் குத்திக் குழிசெய்து கொண்டே போவார்கள். இதற்கு தானம் போடுதல் எனப் பெயர். இத்தானக் குழியில் கத்திரி, மிளகு செடி, நாற்றுக்களை வைத்து வேரை மண்ணுல் மூடுவார்கள். காட்டிலும் இப்படித் தானம் போட்டு கம்மம் பயிரை நடுவார்கள். ''குழி காற்றுப் போடுவது." ''குழி நாத்து நட்றது''

தானவாய்: மிருகங்களின் மலத் துவாரம்.

## தி

திக்குப் போட்டுக் கட்டுதல்: வாளிப்புப் போட்டுக் கட்டுதல்.

திக்குவாய்: கொன்னவாய்.

திகுடு முகடான: பிரம்மாண்டமான. ''திகுடு முகடான மழை''

திகைதல்: பேரம் முடிதல். முடிவு செய்தல். தீர்மானித்தல். ''மாடு விலை தகைஞ்சிட்டது''.

திங்கணும்ண்ணுதானிருக்கு: ஒருவர் மேல் ஒருவர் கோபமாயிருப்பதைக் கூறுவது. அளவுக்கு மீறிய பெண்—ஆண் பிரியத்தின் போதும் கூறுவது.

திட்டம் கட்டுதல்: கணக்கு முடித்தல்.

திட்டம் கட்டுதல்: முடிவு செய்து விடுதல். ஒருவனைக்கொன்று விடுவது என்று தீர்மானித்து விடல். ''பயலைத் திட்டம் கட்டீட்டாங்க.''

திட்டாந்தரம்: அபாண்டம். இல்லாததை இருப்பது போல நிலை நாட்டுவது. ''நீ தான் எடுத்தேண்ணு திட்டாந்தரமாய்ச் சொல்லுதான்.''

திட்டித் திமிறுதல்: ''உரிமைப் பட்டவ, அவள் அண்ணன் தம்பி பிள்ளைகளுக்கு கொடுக்கணுமிண்ணு நினைப்பாள்ள. அப்பிடியில்லாம வேறு ஒருத்தர் பிள்ள வந்தா திட்டி திமிறத்தான செய்வாள்''

திட்டிவாசல்: பெரிய்ய கதவில் அமைந்த பிள்ளைக்கதவு.

திட்டுச்சட்டி: மண்ணால் ஆன, குண்டாளமான சட்டி.

திடாரிக்கம்: தெம்பு. திட ஆரோக்கியம்.

திடுக்குண்ணுவா: சீக்கிரம் வா.

திடுதிப்புண்ணு: எதிர்பாராமல். ''திடுதிப்புண்ணு இப்படி வந்து நின்னா என்ன செய்யறது?''

திண்டுக்கு மிண்டு: வித்தியாசமாக. ஏறக்கொறைய ''ரொம்பத்தான் அவன் திண்டுக்குமிண்டு பேசிக்கிட்டு அலையுதான்''

திண்ணக்கம்: திமிர். ''திண்ணக்கமாப் பேசுறான்.''

திண்ணிமாடன்: சோத்துமாடன்.

திமில்: 'மாட்டுச் திமில்'

திமிறுதல்: மீறுதல். ''பிடிச்சிக்கிட்டா திமுற முடியல்ல''.

திரட்டுதல்: விராசுதல். கோபமாய் கண்டித்தல். ''திரட்டு திரட்டுண்ணு திரட்டிட்டான்.'.

திராசு பின்னல் முடிச்சு: திராசுக்குப் போடும் பின்னல் முடிச்சு.

திராம்: முன்பு வழக்கத்திலிருந்த முகத்தலளவை. சாராயம் அளப்பதில் மட்டுமே இருந்தது. ''அவங்கெடக்கான் குடிகாரன் எனக்கு ரெண்டு திராம் போடு!''

திராயும் படியும் தெருவிலே இருக்கு: எல்லாருடைய நல்ல, கெட்ட நடத்தைகளை ஊரார் எல்லாரும் அறிந்து இருக்கின்றனர் என்பது. (திராயு—தராசு).

திரி திரி பொம்மக்கா: மணலில் சிறு குழந்தைகள் விளையாடும் ஒரு விளையாட்டு.



திருகாணி: கயிறு முறுக்கேருமல் இருக்கக் கட்டுக் கயிற்றுக்கும் தும்புக்கும் இடையில் உலோகத்தில் போடுவது.

**திருகுதாளம்:** நிலையிலிருந்து மாறிவிடுதல். ''ஒழுங்கா இருக்கும் போதே திருகுதாளம் பண்ணுவா(ன்) இப்பொ கேக்கணுமா?''
இல்லாததெல்லாம் செய்தல்.

**திருணை:** திண்ணை. ''தெரணை''

**திருப்பூட்டுதல்:** தாலிகட்டுதல்.

**திருவாலிப்பய:** திருட்டுப்பய.

**திருவிளக்குத்தீ:** தேங்கா திருகி.

**தினுசு:** வகை. விதம்.

## தீ

**தீஞ்சிபோச்சு:** மழையே இல்லாமல் பயிர்கள் வாடிக் கருகி விட்டன.

**தீட்டீட்டான்:** தீர்ப்பு சொல்லிவிட்டான். ''ஏழு வருடம் தீட்டீட்டான்.''

**தீத்தாங்கி:** அடுப்புக்கு மேலே போட்டிருக்கும் மண்ணால்ஆன பரண் போன்றது. அடுப்புத்தீ மேலெழும்பி கூரைக்குத் தாவிவிடாமல்தாங்கிக்கொள்ளும்.

**தீத்துக்கட்டுதல்:** 'குளோஸ்' பண்ணுதல்.

**தீந்து கட்டுதல்:** சில ஜாதிகளில், பெண்களுக்கு மணவிலக்குப் பெறவும், மறுமணம் செய்யவும் உரிமை உண்டு.

**தீபம் வைக்கும் நேரத்தில்:** தீபம் பொருத்திய பிறகு நெருப்புக்கொடுப்பதோ, பணம், தானியம், கொடுப்பதோ இல்லை. கிணறு இருக்கும் வீட்டிலிருந்து மற்றவர்களை தீபம் பொருத்திய பிறகு தண்ணீர் எடுக்க அனுமதிக்க மாட்டார்கள். அந்தி நேரத்தில் சம்பந்தகாரர்கள் வந்திருந்தால் தீபம் பொருத்திய பிறகுதான் வீட்டிலிருந்து போக அனுமதிப்பார்கள்.

**''தீய வையி'':** வேண்டாத செத்தை சண்டுகளை எரித்து விடுவதுபோல் பிடிக்காததன் மேலுள்ள கோபம். (வசவு)

**தீர்த்தல்:** விவாரத்து. ''அவன் அவளை தீர்த்துட்டான்.''

**தீர்வை:** விவாகரத்து செய்யும்போது கொடுக்கப்படும் பணம்

**திரப்படிச்சவரு:** மெத்தப்படித்த மேதாவி.

**தீரலெ:** நேரம் காணவில்லை. ''வேலை தீரலெ'' ''சாப்பாடுக்குத் தீரலெ'' ''வரத்தீரலே'' —வருவதற்கு அவகாசம் போதவில்லை.

**தீரவாசம்:** நதிதீரத்தில் முப்போகம் விளையும் நஞ்சையும் தோப்பும் துறவுமாய் செழிப்போங்கி நிற்கும் பிரதேசம்.

## து

**துக்காணி:** சிறிய அளவு. இத்தினிக்காணு. லேசு. ''துண்டு துக்காணி''

**துட்டாப்பு:** சிறு குழந்தைகள் ஏதாவது ஒரு பொருளை விழுங்கி ஞல் வயிற்றுப்போக்கு ஏற்படும் போது இவ்வாறு கூறுவர்.

**துட்டி:** துக்கம். எளவு. 'துஷ்டி' ''துட்டி வீடு''

''துட்டுக்கு எட்டுக்குட்டி வாங்கி எட்டையும் எட்டுதுட்டு மேனிக்கு வித்தாலும் வட்டித்துட்டுக்கு ஈடாகாது: வட்டிக்குப் பணம் கொடுக்கல் வாங்கல் செய்யும் தொழிலுக்கு நிகர் உலகத்தில் வேறு எதுவுமே நிகராகாது என்பது.

**துடுப்பு கீரை:** கீரைவகைகளில் ஒன்று. மானுவாரியில் விளைவது.

**துண்ட ஒதறித் தோள்ல போட்டுட்டு:** பொறுப்பில்லாமல்.

**துண்டம்:** ஆட்டின் ஒரு தொகுதி. கறித் துண்டம். (ஒரு துண்டம் 60 ஆடுகள்)

**துண்டாய்:** தனியாய். ''துண்டாய்ப் போய் நில்லு.''

**துண்டைப்போட்டுத் தாண்டு:** ஒரு விதமான சத்தியம் செய்யும் முறை. ''உன் குண்டி வேட்டியைப் போட்டு தாண்டு'' என சொல்வதுதான் பெரு வழக்கு.

**துணிப்பு:** தெளிவாக. அல்க்காக ''இங்கேருந்து பார்த்தாலே துணிப்பாத் தெரியுமே''

**துணைப்போனவன்:** துணைக்கு-போல. ''அவனுக்கு துணைப் போனவன் இவன்''— அவன் மாதிரியே இவனும்.

**துப்பட்டி:** போர்வை.

**துப்பில்லை:** வக்கில்லை.

**துப்புக்கெட்ட பய:** வக்கில்லாதவன். அறிவு கெட்ட பயல்.

**தும்பு:** நார்.

**தும்பு முளைக்குச்சி:** தும்புக்குச்சி.

**தும்புவார்ச் செருப்பு:** ஓடும் போது கழன்று விடாமல் இருக்க குதிங்கால் சுற்றி வார் இணைந்த செருப்பு.
''தும்புவார் செருப்புப் போட்டு
துடியாய் வழி நடந்து
மஞ்ச மலையேறி — நா
மாலையிடப் போவதெப்போ?'' — நாட்டார் பாடல்.

**துரிஞ்சல்:** வௌவால் இனங்களில் சிறிய வகை.

**துருசு:** தும்பு.

**துருத்தி:** காரியம். ''ஒந் துருத்தியை நீ ஊது''

**துருத்தொலைக்கான்:** தொந்தரவு.

**துரும்பத் தூணாக்குகிறது:** மிகைப்படுத்தல்.

**துருவ:** நேராக. எங்கும் நிற்காமல்.

**துவ்வான்:** எறசல். 'தூவான்'
குழந்தைகள் விளையாட்டிலிருந்து தற்காலிகமாக விலகிக் கொள்ள எழுப்பும் ஒலிக்குறி.

**துவத்து:** துவட்டு. ஈரத் தலையைத்துவட்டுதல் ''தலையெத் துவத்து''.

**துவாலை:** பெண்களுக்கு வெளியாகும் வெள்ளை நீர். (சூடு காரணமாக).

**துள்ள துடிக்கப் போயிட்டார்:** படுசாவு.

துள்ளுமரி வெட்டுதல்: இளம் கிடா பலி கொடுத்தல்.

துறவல்: திறவுகோல்

துறை: சலவைத் தொழிலாளிகள் சலவை செய்யும் குளக்கரை. ''அம்மா, துறைக்குப் போறேன் 'அழுக்கு'ப் போடுங்க.''

## தூ

தூக்கச் சடவு: தூக்கமின்மையால் ஏற்படும் ஆயாசம்.

தூக்கணும்: பெருக்கணும். ''வீட்டைப் பெருக்கணும்—''வீட்டைத்தூக்கணும்''

தூச்சி: விளையாட்டின் ஊடே தற்காலிகமாக விடுபடுவதற்குச் சொல்லும் குறிச்சொல். 'துவ்வா'.

தூணி: மரக்கால்.

தூத்தரிச்சிட்டான்: வீணாகச் செலவழித்து விட்டான்.

தூப்பாக்குழி: ஜலதாரை. வீட்டிற்குள்ளிருந்து கழிவுநீர் வெளியேறும் பொந்து.

தூமையழகன்: கேலி வசவு, உரிமை பாராட்டிச் சொல்லுவது. (பெண்கள்). ''என் தூமை அழகனைக் காணமே!''

தூர்வை: கிணற்று உள் தரையில் படிந்த அழுக்கு. 'தூரு'

தூரம்: வீட்டு விலக்கம். மாதவிடாய். முட்டு.

தூரமா? — 'தூரவா?': எங்கே போகிறீர்கள்? ''தூரவா போறீஹெ?''. ஒருவர் ஒரு இடத்துக்குப் போகும்போது எங்கே என்று கேட்பதுக்குப் பதிலாக தூரமா என்று கேட்பது வழக்கு.

தூரி: ஓடுகிற தண்ணீரில் மீன் பிடிக்கும் ஒரு கருவி. இது நாணல் தட்டையிலான கூடு போன்றது.

தூரு: பெருக்குதல். ''வீட்டைத் தூரு.''

தூள்தான்: நிலை கொள்ளாத மகிழ்ச்சி. ''எங்கயாவது ஊர் வட்டிக்குப் போகணுமின்னா தூள் தான்.''

# தெ

தெக்க வடக்கத் தெரியாது: விபரம் தெரியாதவன்.

தெகத்திருச்சி: விரட்டி விட்டது. குஞ்சுகள் ஓரளவு பெரியது ஆனவுடன் கோழி தன்னிடமிருந்து அவைகளை துரத்தி விட்டு சேவலோடு போய் சேர்ந்து கொள்ளும்.

தெகரம்: கஷ்டம். திணறுதல். திக்குமுக்காடுதல்.

தெகிடு தெப்புல: எப்பவாவது.

தெண்டம்: வீண் அபராதம்.

தெண்டல் தெரிசலா: ஒன்றிரண்டாக. தெளிவில்லாமல். "தெண்டலும் தெரிசலுமாக்கிடக்கு."

தெண்டு: மனசைத் துளைக்கும் சந்தேகம். தெண்டு, என்பது ஓணனில் ஓர் இனம். குடித்த கஞ்சியோட வயிற்றுக்குள் தெண்டு போய்விட்டதாக நினைத்தவனின் கதையிலிருந்து வந்த பிரயோகமிது.

தெத்திட்டான்: மறுத்துவிட்டான். ஏய்த்து விட்டான். ஏமாற்றி விட்டான்.

தெத்துப்பல்லு: எத்துப்பல்லு. "தெத்துப் பல்லுக்காரன் சிரிக்கிறதும் தெரியாது அழுகிறதும் தெரியாது"

— சொலவம்.

தெத்து வளிபண்ணணுமில்ல: பதிலுக்கு செய்து கழித்தல். பாட்டன், பாட்டி, நோயுற்றுள்ளார்கள். அவர்களிட மிருந்து சொத்து மற்றும் பயனடைந்தோர் அவர்களுக்கு தொண்டு ஊழியம் செய்து, தமது கடமையைச் செய்து கழித்தலை, "எப்படியும் தெத்துவளி பண்ணணுமில்ல" என்பார்கள்.

தெத்துவாளி: ஏமாற்றுக்காரன். கடன் வாங்கினால் திரும்பக் கொடுக்கிற வழக்கமே கிடையாது. "சரியான தெத்து வாளி அவன்"

தெந்தனம் பாடுதல்: அலட்சியப் படுத்துதல்.

தெப்பக்கட்டை: வண்டியின் ஒரு பகுதி.

தெம்மாடி: ஏல மாட்டாதவன். கையாலாகாதவன்.

**தெம்மாளி:** ஏமாளி ''தெம்மாடி''.

**தெரட்டு முழி:** பிதுங்க விழிப்பது போலமைந்த கண்கள்.

**தெராட்டு:** வேகமாய். ''வண்டி தெராட்டுல போகுது''

**தெராட்டு:** தனியாய். அத்தாந்தரமாய். ''தெராட்ல விட்டுட்டான்''.

**தெல்லு:** மலையில் படரும் ஒரு கொடியில் விளைந்த விதை.

**தெலா:** ஏற்றம். 'துவா'.

**தெளிச்சி:** தெளிவு. களை. பிரகாசம்.

**தெளியக்கடைஞ்சவள்:** விபரமானவள். சிக்கனமானவள். ''அவள் கடைந்த மோரிலிருந்து யாராலும் துளி வெண்ணெய் எடுக்க முடியாது!''

**தெறஞ்சிருச்சி:** திரைந்து விட்டது.

**தெறந்தாம் பத்தியாகிடக்கு:** கதவில்லா வீடு; மூடாத பகுதி. ''திறந்தாம் பத்தி''

**தென்னல்:** தென்றல்

## தே

**தேசாந்திரம் போயிட்டாரு:** ஒரேயடியாய் கிளம்பி எங்கேயோ போயிட்டார். ''பரதேசம் போய் விட்டார்''

**தேட்டாளபுத்திரன்:** உழைப்பாளி பாரம்பரியத்தைச் சேர்ந்தவன்.

**தேட்டாளன்:** உழைப்பாளி. ''தேட்டாளி''

**தேட்டு:** உழைப்பு. சம்பாத்தியம்.
''ஒன் தேட்லெ இருந்து நாஞ் சாப்பிடலே; ஞாவகம் வச்சிக்கோ.''

**தேரம்:** வேளை. நேரம். ''தேரமாச்சி விடுங்கோ போணும்''.

**தேரி:** பெரிய விஸ்தாரமான மணல் மேடு.

தேரோட மாலே தெருவோட: மணமாலை வாடுவதற்கு முன்பே மரணமாகி விடுவது.

தேன் குழல்: முருக்கு எனும் தின்பண்டத்தில் ஒரு வகை.

தேனைத் தொட்டாயோ, நீரைதொட்டாயோ: பட்டும் படாமல்.

## தை

தைப்பாறுதல்: இளைப்பாறுதல். தகிப்பு ஆற்றுதல். ஓய்வு.

## தொ

தொக்கம்: ஜீரணிக்காத வஸ்துக்கள் வயிற்றிலேயே தங்கி விட்டாலும், மனசை விட்டு நீங்காமல் ஒன்று நெருடிக் கொண்டிருந்தாலும் "தொக்கம்" விழுந்து விட்டது என்பார்கள்.

தொக்கம் எடுப்பது என்றே நாட்டு வைத்தியத்தில் உண்டு.

தொக்கு: லேசு. இளப்பம். "என்னைக் கண்டா அவனுக்கு ரொம்பத் தொக்கு"

தொக்குளுப்புல: அலட்சியமாய். லேசாக.

"ரூபாயை வாங்கி தொக்குளுப்புல நீ வச்சிக்கிட்டயின்னு நாங்க என்ன பண்றதாம்?"

தொஞ்சி போனான்: இழந்து போனான்.

தொட்டா சிணுங்கி: } காட்டில் முளைக்கும் களை. இதன் இலை
தொட்டா மினுக்கி: } களைத்தொட்டால் சுருங்கிக் கொள்ளும்.

தொட்டில் முடிச்சி: தூளியின் விளிம்புகளை கயிறோடு இணைத்துப் போடப்படும் முடிச்சி.

தொட்டி விழுந்திருச்சி: அதிக வயசான மாடுகளுக்கு வயசு முதிர்ச்சி காரணமாகக் கடைவாய்ப் பற்களில் சில இறங்கிப் போயிருக்கும். இதனால் சரியாக அசைபோட முடியாமல் இரை வெளியில்விழும். மெலிந்து கொண்டே போகும்.

தொட்டுக்கிட: தொடு கறி. வெஞ்ஜனம்.'' ''சோத்துக்கு தொட்டுக்கிற.''

தொட்டுக்கோ தொடச்சிக்கோண்ணு: பற்றுக்குறை.

தொட்டுத்தொட்டு: மேன் மேலும். ''வீடு கட்ட ஆரம்பிச் சதிலெ இருந்து தொட்டுத் தொட்டு செலவு ஆகிக் கொண்டே இருக்கு.''

தொட்டு முள்ளு: வாசலில் போட்டமைக்கும் ஒரே முட்கிளை, கதவுக்கு பதிலாக.

தொடுப்பு: வங்கணம். தொடர்பு; ஆண் பெண் உறவுக்கு.

தொடை கீழ் மச்சம்: அதிர்ஷ்டம்.

தொண்டத்தண்ணி: தொண்டையிலுள்ள ஈரம். இந்த பிள்ளை களோட தொண்டத் தண்ணியை கொடுத்து முடியலே.''

தொண்டு; பாத்திகளுக்கிடையேயுள்ள வரப்பு.

தொண்டு: ஒட்டை. வயிறு. ''ஒன் தொண்டுக்கு இது இறங் காதோ?''

தொண்ணுறுதல்: கிடைக்கும் என்று எதிர்பார்த்து ஏங்கிக் கொண்டே இருப்பது.

தொத்தல்: மெலிந்து, வயதான.
''அவன்ட்டெ ஒரு சோடி தொத்தல் மாடு கிடக்கு.''

தொந்தாட்சண்யம்: தொடர்பு. ''அவுகளுக்கும் நமக்கும் எந்த தொந்தாட்சண்யமும் கெடயாது.''

தொப்புள் பால் இறங்குதல்: இந்த அறிகுறி தெரிந்த 2 அல் லது 3 நாள்களில் மாடு ஈன்று விடும்.

தொய்யல்: தொய்வு.

தொயங்கட்டுறான்: தொடருகிறான். விடாபிடியாக தொடரு கிறான்.

தொயந்து: தொடர்ந்து.

தொயில்கீரை: ஒருவகைக் கீரை.

தொரட்டி: ஆடுமேய்க்கிறவர் வைத்துக் கொள்ளும் கம்பு, 'தொரட்டிக்கம்பு.'

தொரத்தல்: இறுமல். புகைச்சல்.

தொரவல்: திறவுகோல்.

தொவஞ்ச கை: அனுபவப்பட்ட கை. தாயம் விளையாட்டில் ''ஒருத்தாயம்'' விழுந்தவுடனே அவன் ஆட்டத்தைத் தொடரலாம்.

தொவயாக்கை: அனுபவமில்லாதகை. தொவயாக்கை × தொவஞ்சகை.

தொவையணும்: இரும்பை மீண்டும் சுடவைத்து அடித்தல். ''அரிவாள் மழுங்கிப் போச்சி தொவையணும்''.

தொலங்குவியா: இதை தனியே சொல்லாமல் விளங்குவியா தொலங்குவியா எனச்சேர்த்துச் சொல்வார்கள் வையும் போது. வசவு.

நொலவெட்டு: வெகு தூரம். ''ரொம்பத்தூரம்''

தொலி: தோல்.

தொலிச்சி எடுத்துட்டான்: தோலி உரிச்சிட்டான். அடித்த அடியில் தோல் உரிந்து விட்டது.

தொலியப் பூரிட்டான்: தொலியை உரிச்சிட்டான்.

தொலியாத் தொலிச்சிட்டான்: அடித்துத் தொலியாக்கி விட்டான்.

தொலியலே: கடினமாயிருக்கிறது. ''பல்லுக்கு தொலியலே''

தொலேக்குழி: கிணற்றுக்குள் கூனே முங்கும் இடம்.

தொலேந்துபோதல்: காணாமல்ப்போய்விடுதல். ''எங்கே தொலேஞ்சிபோனெ?''

தொலேயாத: பொல்லாத வேலேயாக்கும் என்ற பொருளில், ''தொலேயாத வேலே'' என்பர்.

தொலேயாதாக்கும்: கொஞ்சம் போல். ''நமக்கு தொலே யாது... சும்மா ஒரு கோட்டையிருக்கோ இரண்டு கோட்டையிருக்கோ.''

தொவ்வல்: துவண்டு. கயிறு விறைப்பில்லாமல் தொவ் வலாப்போச்சு''

தொள்ளக்காது: துளேவிழுந்த காது. ''தொள்ளக்காதன்''

தொள்ளாளி: கிராமத் தொழிலாளர் பரம்பரையைக் குறிக் கும். வண்ணான், குடிமகன்போல.

தொழில்த் தெரிஞ்சவன்: மந்திரவாதி. ஏவல், பில்லிசூனியம் முதலியன தெரிந்தவன்.

தொளேச்சித் தொளேச்சி: சந்தேகம் தெளிய. ''தொளேச்சித் தொளேச்சிக் கேக்கான்.'' ''அப்......ப தொளச்சி எடுத் துட்டா!''

தொறட்டு: சிக்கல். ''பெரிய்ய தொறட்டாப் போச்சி''

## தோ

தோசம்: கூடாது. அப்படிச் சொல்லக்கூடாது ''தோசம்,'' குழந்தைகளுக்குச் சொல்வது.

தோசிப்பு: சுகசன்னி. அன்னதுவேஷம்.

தோட்டக்குழி: கொல்லே. கொட்டாரத்தில் அவரை புடல் போடப்படுவது. ''பயிர்க்குழி''

தோட்டமுத்தமான மாடு: சன்னரோமமும், மினுமினுப்பும் கூடிய லட்சணமானமாடு.

தோண்டியும் கயிறுமா: ஒத்தாசனேயா. பிரியாத ஒட்டுற வாக.

தோத்தி: விளேயாட்டில் தோற்றவள்(ன்).
''தோத் தி ஞ யே
தோத்த குடி ஞ யே......''
—குழந்தை விளேயாட்டுப்பாடல்.

தோது: வசதி. ''நீ இங்கே இருக்க தோதுப்படாதுப்பா''

தோதுவாது: சமய சந்தர்ப்பம். ''தோதுவாது சரியில்லே''

தோரணி: தோரணை. ''முன்னேக்கிப்போ ஆள் ரொம்பத் தோரணிதான்!''

தோல் தடிச்சிப்போச்சி: சொரணை இல்லே. மழுமாறிப் போதல்

தோவாளம்: கிணற்று கைப்பிடிச்சுவர்.

தோளிலிருந்துக்கிட்டே செவியக் கடிக்கான்: கூட இருந்து கொண்டே தொந்தரவு கொடுக்கிறது. கூட இருந்து கொண்டே குழியைப் பறிக்கிறது.

## ந

நக்கல்: கிண்டல். கெண்டை.

நக்குனஉடையாரு: வசவு. செல்லவசவு!

நகவெதும்பல்: இளஞ்சூடு. ''குளிக்க வென்னீர் நகவெதும் பலா இருக்கட்டும்.''

நகிரி: அரண்மனே. தெலுங்குச்சொல்.

நச்சிட்டான்: நைந்து போக செய்திட்டான். ''அடிநச்சிட் டான்''

நச்சுழி: மாட்டு முதுகிலுள்ள ஒருசுழி. நல்லசுழி.

நச்சுப்பல்: மாட்டுக்கு கடவாய்ப்பல்லில் ஒன்று மற்ற பற்களே விட உயரமாக இருப்பதால் சரியாக அசைபோட முடியா மல் இரை வெளியில் விழும். இரை சரியாகத் தின்னுமல் மாடு மெலியும். அந்தப்பல்லே ராவி விடுவார்கள் அல் லது பற்களுக்கிடையில் கொழுவைக் கொடுத்து அசை போடும் போது நச்சுப்பல் இரும்புக்கொழுவில்பட்டுத் தெரித்துப்போகும்படி செய்து நச்சுப்பல்லே அகற்றுவார் கள்.

நகட்டீட்டான்: அடித்துவிட்டான். ''அடி நகட்டீட்டான்.'' ''பொழிக்கல்லே நகட்டீட்டான்.''

நஞ்சுமுடிஞ்சபய: வசவு.

நட்டஜாதகம்: நிலேயம் கேட்டல். ஜாதகம் இல்லாமல் ஜோதிடம் பார்ப்பது.

நட்டணே: சேட்டை. ''இல்லாத நட்டணேகள் பண்ணிக்கிட் டிருக்கான்.''

நட்டாமுட்டிவேலே: சில்லரைவேலே. நட்டாமுட்டிதனம். வேலேக்கு குறைவிருக்காது; செய்ததில் எத்தனே 'உருப் படி'ன்னு சொல்லமுடியாது.

நட்டுக்குத்தா: நேராக. நேரடியாக.

நட்டுக்கு நடுப்பா: மத்தியில்.

நடந்துட்டா நான் என் உள்ளங்கையிலேயே சோறு பொங்கி போடுறேன்: சபதம் போன்றது.

நடப்புக்கு: எதிராவுக்கு, வரும் ஆண்டு.

நடவாசல்: நடந்து திரியும் பிரதான வாசல்.

நடுஏர்: கழுத்தேர்.

நடுகைதேரிச்சி: நடுகை போட்டவுடன் கொஞ்சம் சம்பி பின் தளுக்க ஆரம்பிப்பதை இப்படிக்கூறுவர்.

நடுச்செங்கல உருவுறுன்: ஒத்துக்கொண்டு பாதியில் நழுவு தல்.

நடுப்பட்டம்: புரட்டாசி 10லிருந்து 20தேதிவரை விழும் விதைப்புப்பட்டம்.

நடை: நிலேப்படி. ''நடையிலே உக்காராதே'' ''குப்பை வண்டி எத்தனே நடைபோயிருக்கும்?''

நடைமாத்து: கடந்துபோகும் போது பாதங்களில் சிறுகற்கள் அழுத்தாமல் இருக்க பாதை நெடுக விரிக்கப்படும்துணி. சில விசேச காலங்களில்.

நடையன்: கழுதை.

நடையாநடந்தான்: பலதடவை. எத்தனையோ தடவை நடந்தான். ஒரு காரியம் முடிய நடக்கும் நடைபற்றி; அலைச்சல் பற்றி.

நண்டுக்கால்: வண்டியின் வில்லையும் அச்சையும் பொருத்துவது. 'அல்லு' என்றும் கூறுவர்.

நண்டுஞ்சுண்டுமா: சிறு குழந்தைகள். ''குஞ்சும் குருவானுமா.'

நண்டுதிங்கற ஊருக்குப்போனா நடுக்கொண்டது நமக்கு: எங்கெங்கு எதுஎது எப்படியோ அங்கு அதுபோல நடந்து கொள்ள வேண்டும் என்பது.

நத்தப் பாழாப்போக: சபித்தல்.

நத்தமண்: மழைக்கு கரையாத சாம்பல் நிறமுள்ளமண். வீடு கட்ட உபயோகிக்கும் மண்.

நத்திக்கிருச்சி: கடிகண்டுக்கிருச்சி. ஆண்பெண் தொடர்பில் ருசி கண்டு கொண்டனர்.

நம்பிக்கைகிரையம்: அவசர ஆத்திரம் காரணமாக சிறிதுபணம் பெற்றுக்கொண்டதால் ஒருவருக்கு நம்பிக்கையாய் தனது சொத்தைக் கிரையம் எழுதிவைப்பது. பின்னால் . தான் பணம் செலுத்தினால் திரும்ப எழுதிக் கொடுத்துவிட வேண்டும் என்று வாய்மொழியாய்ப் பேசிக்கொள்வது.

நம்ம காலடிய சுத்தப்படுத்திக்கிட வேண்டியதான்: அடுத்தவர்களுடைய காலடி எப்படியும் இருந்துவிட்டுப் போகட்டும். நம் காலடி சுத்தத்தை முதலில் கவனிப்போம். ''நம்ம துருத்தியை நாம ஊதவேண்டியதுதான்.''

நமட்டு: நசுக்கு. மெல்லு. ''யப்பா.. வலி நமட்டுதே.''

நமத்துக்கிட்டிருக்கான்: சதா தொந்தரவு கொடுத்துக்கொண்டிருக்கிறான்.

நமந்து: நனைந்து

நமர்த்த: நனைந்த நமர்த்துப் போச்சு.

நரம்புச்சிலந்தி: கம்மாய்த்தண்ணியும் சீனிக்கிழங்கும் நரம்புச்சிலந்திக்குக் காரணம் என்றொரு நம்பிக்கை.

நரிகுளுப்பாட்டிப்பய: பெரிய்யதந்திரகாரன். நரியையே குளுப்பாட்டி சொன்னபடி கேட்க வைக்கும் ஆசாமி!

நரிவால்: மாட்டுவால் வகையில் ஒன்று.

நருங்கல்: குறுக்கு. இடுப்பு. ''இந்தமானைக்கி நருங்கல்ல ஒரு மிதி வச்சம்ண்ணு எப்படி இருக்கும்.''

நருவிசானஆளு: நாஸுக்குத் தெரிந்தவர்.

நருள்: மனிதஇனம். ''நருள் பெருத்துப் போச்சி''

நரை இருட்டு: நிலா இல்லாத வெளிர் இரவு.

நல்ல நாளையிலேயே தில்லைநாயகம்: தில்லைநாயகம் என்பது நபர் அல்ல; நல்ல ஒரு அசமந்தத்தின் பெயர். நல்ல நாளிலேயே அவசரத்துக்குக் கூப்பிட்டால் ஆடி அசைந்து வரும் தில்லைநாயகத்துக்குக் காலில் லேசாக முள் வேறு தைத்திருக்கும்போது எந்த அழகில் வருவார்!

நல்லதுபொல்லது: நல்லது என்பது மங்கலான கலியாணம் சடங்கு முதலியனவும், பொல்லது துக்கம், கருமாதி முதலியனவும்.

நல்லதுபொல்லது வாய்க்கு ருசியா செய்துகுடுங்க: இனி பிழைக்கமாட்டார் எனத் தெரிந்ததும் வைத்தியர் சொல்வது.

நல்லபிள்ளைக்கு அடையாளம் சொல்லாமப் பிரயாமம: துட்டிக்கு வந்தவர்கள் சொல்லிக்கொண்டு—போய்ட்டு வருகிறோம் என்று—போவதில்லை. அப்படி, வருகிறோம் என்று சொல்லிக் கொண்டு போனால் திரும்பவும் ஒரு துட்டிக்கே அந்த வீட்டுக்கு வருவார்கள் என்பது ஒரு நினைப்பு

நல்லமாட்டுக்கு ஒருசூடு நல்லபொண்ணுக்கு ஒருவார்த்தை: நல்லவன் ஒரு சொல்லில் உணர்ந்து கொள்வான் என்று குறிப்பு

நலுங்கி: நசுங்கி. துவண்டு. குலுங்குதல். ''உடம்பெ நலுங்காமெ வச்சிக்கிடணும்ணு நினைக்கா''

நவ்வாப்பழ முடிச்சி: முடிச்சுகளில் ஒருவகை.

நவ்வாமரம்: நாவல்மரம்.

நலுங்கிப்போனான்: வளர்ச்சி குன்றிப் போனான்.

நனைச்சிக்செமக்கிற புத்தி: கோளாறில்லாமல் செய்யும் வேலையை இப்படிக் கூறுவர்.

நனைஞ்சகோழி பிடிக்கிறவரு: எதையும் மலிவாக முடிப்பவன். சமயம்பார்த்து காரியத்தை முடிப்பவன்.

## நா

நாக்கப் பிடிங்கிக்கிட்டுச் சாகவேண்டாம்?: மானத்தை விட்டு வாழ்பவனைக் குத்திக்காட்டி இப்படிச் சொல்வார்கள்.

நாக்கு அழுகிப்போகும்: சாபத்தோடு கூடியவசவு.

நாகடி: வண்டியின் ஆரக்காலை குடத்துடன் இணைக்கும் கழுந்து.

நாங்கிள்: ''சேவை'', இடியாப்பம் போன்று பெரிய அளவு பலகாரம்.

நாச்சாங்காளை: எருதுகட்டில் முதலில் கட்டப்படும் காளை. (நாள் செய்யும் காளை).

நாசுவன். குடிமகன், பண்டிதன், சவரத் தொழிலாளி.

நாட்டுக்கு நாக்காத வழி: தொலை தூரம்

நாட்டுமாடு: மாட்டு வகையில் ஒன்று. அந்த வட்டாரத்துக்கு என்று உள்ள மாடு.

நாடியைத் தாங்குறான்: நல்ல வார்த்தை சொல்கிறான்.

நாண்டுக்கிட்டு: கழுத்தில் நாண் இட்டுக் கொண்டு செய்து கொள்ளும் தற்கொலை. (நாண்—கயிறு).
''நாண்டுக் கோயேம்லே எங்கெயும் போயி இங்கனெ வந்து உசுரெ வாங்குதான்!''

நாத்து: மாடுகளின் உணவுக்காகவே பயிரிடப்படும் இருங்குச் சோளப் பயிரின் காய்ந்த செத்தை.

**நாத்துக்காடாய்:** நெருக்கமாகவும், அதிகமாகவும்.

**நாத்துச்சோளம்:** இருங்குச்சோளம்.

**நாதாங்கி:** நாருங்கி. தாழ்ப்பாள்.

**நாதி:** பொறுப்பு. வேண்டியவர். ''எனக்கு யாரு நாதி இருக்கா?''

''தபால் பெட்டி கிழிஞ்சி போனு
    தக்க நாதியில்லெ
பிச்சிப்பூவு சிதறிக் கிடக்கு
    பெறக்க நாதியில்லெ
ராசா மக வந்து நிக்கா
    அழைக்க நாதியில்லெ''

—அழிப்பாங்கதை பாடல்.

**நாப்பதாமாண்டு:** ரொம்பப்பழைய்ய. வயசான ஆள். ''சுத்த கர்நாடகம்.''

**நாமஞ்சாத்திட்டான்:** ஏமாற்றி விட்டான். ''கடனே வாங் கீட்டு நாமஞ்சாத்திட்டான்.'' இப்படி சாத்துகிறதில் ரெண்டுவகை. 1. குழைத்துச்சாத்துகிறது. 2. குழையா மலே சாத்துகிறது!

**நாய் வந்த வேளேயில் உரி அந்து விழுந்தது:** பொருள் பாழாய்ப் போனது ஒரு வயித்தெரிச்சல்; அது நிகழ்ந்த விதமோ சொல்லி வச்ச மாதரி.

**நாயம்மாரு:** நாயன்மாரு. மேல் குலத்தாரை கீழ் குலத்தார் குறிக்கும் சொல்.

**நாயிலேயும் கொத்தப் பருத்தியா அலேயிறேனே:** நாயைக் கண்டாலாவது யாரும்கொஞ்சம் மிரளுவார்கள்.கொத்தப் பருத்தியை யார் சீந்துவார்கள்? திரும்பிக் கூடப் பார்க்க மாட்டார்கள். அவ்வளவுக்குக் கேவலமாகிவிட்டது.

**நாயைக் குளுப்பாட்டி நடுவீட்ல வச்சாலும்:** கீழ்த்தனமான புத்தியை உடையவர்களுக்கு எவ்வளவு உபசரணைகள் உபதேசங்கள் செய்தென்ன.

**நாயை வாய் கட்டுதல்:** நாய் சில சமயங்களில் குலேக்கவும் செய்யாது, ஆகாரமும் கொள்ளாது. அப்படிச் சமயங்

களில் யாரோ மந்திரவாதி நாயின் வாயைக் கட்டி விட்டார்கள் என்று நம்புகிறார்கள்.

நார்ப்பெட்டி: பனைநார்க் கடகம்.

நாலு உழவு: மாட்டின் வயசு கணக்கிடுதல். ''அந்த மாடு மூணு உழவு இருக்கும்''

நாவட்டை: நாயின் மீது ஒட்டிக் கொண்டிருக்கும் ஒரு வகை ஈ. மிக அழுத்தமாயிருக்கும். நசுக்கினால் நசுக்குப்படாது, ''நா ஒட்டை'' ''நாய் அட்டை''.

நாவுதல்: கற்கள் முதலியன விலகும்படியாக சொளகில் இட்டுப் புடைக்கும் வகை.

நாவு தாங்கிப் பேசு: நாக்கை அடக்கிப் பேசு.

நாவு மேல பல்லுப்போட்டுக் கேட்டுரு வானுக்கும்: பேச முடியாத நபரிடம் பேசமுடியாத விஷயத்தைப் பேச முடியாது என்பது. ''பல்லு மேலே நாக்குப்போட்டு பேசிவிடுவானா அவன்?''

நாவுல பூ ஏறுனது போல: எடுத்த காரியம் விரைந்து முற்றுப் பெறுவதைக் குறிப்பது.

நாள்ச்சென்னா பகை தீரும்: பகையைத் தீர்த்து வைப்பதில் காலதேவனுக்கு உள்ள பாத்திரம் மிகவும்முக்கியமானது.

நாளண்ணைக்கு: நாளை மறுநாள். நாளை நின்று.

நாளா சரியா }: காலபோக்கில். நாளாக நாளாக.
நாளா வட்டம் }:

நாளிகை தூரம்: கால அளவில் தூரத்தைச் சொல்வது. நேரத்தைக் கொண்டே தூரத்தை அளப்பது.

நாளேர்: நாள் ஏர்— சித்திரை மாதம் நல்ல நாள் பார்த்து உழவு தொடங்கும் விழா நடத்துவர். சித்திரை வருடப் பிறப்பன்று அநேகமாக ஏர் வைப்பார்கள்.
''சித்திரை மாத்து உழவு பத்தரை மாத்து தங்கம்''
—சொலவம்.
(மாத்து—மாசத்து)

நானுச்சி: நான் பொறுப்பு அதுக்கு.

**நிக்ருஸ்ஸு:** நிச்சயம். ''இன்னும் ஒண்ணும் நிக்ருஸாத் தெரியலே.''

**நிகார்:** நிலே. நிலேமை. போக்கு. திசை.
''இருட்லெ ஒண்ணும் நிகார்த் தெரியலே''
''நிகார்த் தெரியாம அலேயுருன்''.

**நிப்பாட்டு:** நிறுத்து. ''பாட்டு போறும் நிப்பாட்டு''.

**நிமாண்டு:** தட்டுப்பாடு. பற்றுக்குறை.
''பணத்துக்கு பெரிய நிமாண்டா இருக்கு''.

**நிமுச்சரா:** நேராக. ''கம்பை நிமுச்சரா ஓங்கிட்டான்''

**நிமுண்டுதல்:** நகம் படாமல் கிள்ளுதல். தோலே மட்டும் இழுத்துப் பிடித்து இரண்டு விரல்களால் நகம் விழாமல் அழுத்த நசுக்குதல். நிமுட்டுதல். ''நிமுட்டாம் பழம்.''

**நிமுத்துட்டான்:** தெத்தி விட்டான். ஏமாற்றி விட்டான்.
''கடனே வாங்கிட்டு நிமுத்திட்டான்''.

**நிமுர:** நிறைய. ''கூடை நிமுர மாம்பழம்.''
''குனிய நிமிர முடியலே''. ''நிமிரப் பிடிச்சிட்டான்.''

**நிர் நிமுத்தியமா:** திட்டாந்தரமாய்.

**நிரப்புக் கலப்பு:** பயிர் நெருக்கமில்லாமலும், கலப்பில்லாமலும் ஒன்று போலிருத்தல்.

**நிரை:** களேயெடுப்பு வரிசை. இது சால் சாலாக இருக்கும். ''என்ன உன் நிரை பிந்துது?'' — இது பிஞ்சைக்காரியின் கேள்வி.

**நிரை செலுத்தணுமில்ல:** களேயெடுப்பு வரிசையில் மற்றவர்களுடன் நிரையைக்கொண்டு போக வேண்டும் என்பதில் இருந்து இப்பிரயோகம் வந்துள்ளது. காரியத்தை தொடர்ந்து முடிக்க வேண்டும் என்பது பொருள்.

**நிரைஞ்சா ஒண்ணு குறைஞ்சா ஒண்ணு பேசக்கூடாது:** வயிறு சம்பந்தப்பட்டது! வேண்டும், வேண்டாம் என்பதற்காக ஒன்று பேசக் கூடாது.

**நிரைநாளி:** பிணத்தின் பக்கத்தில் நாளியில் நெல் அளந்து வைப்பர்.

**நிரை மரக்கால்:** பிணம் தூக்கிச் செல்லும் முன் இறந்தவரின் மகனும் மருமகளும் மரக்காலில் நெல்லுடன் சுற்றி வருவர். ''பெரு நாளி''

**நிலக்கடலை:** மணிலா. ''கடலை'' ''மல்லாக் கொட்டை''

**நிலக்காப்பு:** நிலத்து மண்ணையெடுத்து திருநீறு போல் பூசிக் கொள்வது.

**நிலங்கீற:** பொழுது புறப்படுவதற்குச் சிறிது முன்பு.

**நிலச்சூடு:** பகலெல்லாம் நிலத்திலடித்த வெயில், இரவில் கொஞ்சம் கொஞ்சமாக வெளிவரும் சூடு.

**நிலப்பனை:** ஒருவகை களை.

**நிலம் தெளிய:** சூரிய உதயத்திற்குச் சற்று முன்பு.

**நிலமடித்தல்:** மாட்டுக்கு காயடித்தல், நிலை மடிதல் என்ற சொல்லில் இருந்து வந்த சொல்.



**நிலவாளச் சட்டி:** நிலைக்காதுச் சட்டி. பித்தளையாலான பாத்திரத்தில் மேல்புறம் இரண்டு காதுகள் நிமிர்ந்த நிலையில் அசைவில்லாமல் பொருத்தப்பட்டிருக்கும். இரும்புச் சட்டியில் காதுகள் நிலையாகப் பொருத்தப் பட்டிருந்தாலும் அது நிலவாளச்சட்டி ஆகாது. நிலவாளச்சட்டி பல சைஸ்களில் உண்டு — 300 மில்லி முதல் 30 லிட்டர் வரை பிடிக்கக் கூடிய சைஸில் உண்டு.

**நிலாக்கால் வீச:** நிலாப் புறப்பட. நிலாக்கால் வீசிப்புறப்பட.

**நிலாப்பூச்சி:** நிலா வெளிச்சத்தில் ஆடும் ஓர் விளையாட்டு.

**நிலைக்காது:** எய்யாது. ''தண்ணி நிலைக்காது'' ஓர் ஆளம் பரிசத்திற்கு மேலிருக்கும் நீர் நிலையில் ஆளுக்கு நிலைக் காது.

**நிலைக்கொண்டி:** நிண்ணாசிக் கொண்டி.

**நிலையம்:** தொலைந்து போன பொருள் எங்கே இருக்கிற தென்று நிலையம் பார்ப்பவர்களிடம் ஜோசியம் கேட்டல்.

**நிலை விடுதல்:** புது வீடு கட்டும் போது நிலைவாசலை வைத்து அதை விசேஷமாக சொந்தக்காரர்களை அழைத்து நிலை நிறுத்துவார்கள்.

**நிறைய குளிச்சா கூதலில்லை:** காரியத்துக்குள் பூரணமாக இறங்கி விட்டால் அது பற்றிய பயம், தயக்கம், சந்தேகம் அனைத்தும் சரியாகி விடும். (கூதல்—குளிர்).

## நீ



**நீங்காவிட்டம்:** கூரையோ, ஓடோ போடுவதற்கு சுவரின் மேல் அமைக்கும் சட்டம் விலகாமலிருக்க, ஊடே போடப்படும் கம்பு.

**நீச்சுத்தண்ணி:** நீத்தண்ணி -நீராகாரத்தண்ணீர். 'நீத்துப்பாகம்'

**நீய்தல் நீய விடுதல்:** மாட்டை நீய விடுதல் — நீஞ்சவிடுதல்.

**நீயத்தெரியாத மாட்டை வெள்ளம் கொண்டு போகும்:** பிரச்னைகளில் நீந்தி சமாளிக்கத் தெரியாதவன் மூழ்கி அழிந்து போவான்.

**நீர்க்கருவல்:** வெள்ளைக் கருவல் மரம்.

**நீர்க்கானை:** மாட்டின் நோய் வகையில் ஒன்று.

**நீர்க்குத்து:** மாட்டுச்சுழி. மாட்டின் நீர் தாரைக்கு மேல் முதுகில் சுழி இருந்தால் நீர்க்குத்து. இதை தட்டினால் நீர் விடும் என்பார்கள்.

**நீர்மாலை:** இறந்தவர்கள் வீட்டில் நடத்தும் ஒரு சடங்கு.

**நீர்வாய்க்கால்:** வானத்தில் கீழ்மேலாக மேகக் கோடுகளாக

தெரியும். மேகம் நீர்வாய்க்கால் போட்டிருந்தால் மழை வரும் என்பர்.

நீர்வெயில்: காலையில் 8 மணிக்குள் சுள்ளென்று அடிக்கும் வெயில்.

நீராளம்: சுண்ணாம்பு போடாத பதனீர். புளிப்பு இருக்காது. இதில் சுக்கும் ஏலமும் பொடி செய்து பொட்டணமாகக் கட்டி, பாளையில் சொட்டுப்போடு மிடத்தில் வைத்து விடு வர். இதில் ஊறி 'பனம்பால்' இறங்கும்.

## நு

நுள்ளுதல்: சிறிய கிள்ளல். செல்லக்கிள்ளல்.
''ம்க்ஹூம்; நுள்ளாதிங்க வலிக்கி.''
''அடியாத்தா, இது கூட வலிச்சிட்டதா உனக்கு!''

நூதனம்: நவீனம். புதுசு. நாவல்.

## நெ

நெளிக்க முடியல்ல: சமாளிக்க முடியலே.

நெஞ்சுக்கட்டை: கருத்த காளைக்கு நெஞ்சில் வெள்ளை இருந் தால் 'நெஞ்சுக்கட்டை' என்பர். இது ஆகாது.

நெஞ்சுத்தடுமம்: சளி இறுமல் கொண்ட ஜலதோஷம்.

நெட்டி: பொருத்து. உடம்பில் உறுப்புகள் பொருந்திய இடங்கள். ''வேலே நெட்டியெ முறிக்கி.''

நெட்டுஈத்துமாடு: நீண்ட நாள் பால் கொடுக்கும் மாடு.

நெட்டுக்கு நிக்கான்: பிடிவாதமாக இருக்கான். "கைமாத்தாப் பத்து ரூவா கொடுத்தாத்தான் போவேன்னு நெட்டுக்கு நிக்கான். இல்லேண்ணு சொல்லிப் பார்த்தேன். விடுருப்ல இல்ல.'' நட்டுக்கு நிக்கான்—கம்பாய் நிற்கிறுன்.

நெட்டோட்டம்: வேகமானநடை.
நெட்டோட்டம் குட்டோட்டமாப் போனேம்''

நெடுந்தாயம்: ஆண்கள் விளையாடும் தாயம் விளையாட்டு.

நெடுரோமம்: மாடுகளுக்கு உடம்பில் ரோமம் நீண்டு விடுவது. ''நெடுரோமம் பத்தி மாடுரொம்ப மெலிவாயிருக்கு தேறுறது கடுத்தம்''

நெத்திக்கயிறு: கொம்புக்கயிறு. பார வண்டியில் முன்பக்கமிருந்து பின் பக்கமாக போகும் கயிறு.

நெத்திச் சுவரு: அகலப் பக்கத்தின் மேல் பகுதிச் சுவர்.

நெத்திச் சுழி: மாட்டுச்சுழி.

நெமை: இமை. நெமதட்றதுக்கு முன்னுலெ வந்துட்டான்.

நெய்க்கரிசல் : கல்ப் பிறப்பே இல்லாத—ஒரு சிறு கல் தட்டுப்படாத—மழைத் தண்ணீர் விழுந்தவுடன் எள்ளும் பிண்ணாக்கு போல் பொருமுகிற மண்பாங்கு கொண்ட நிலம்.

நெரக்கு: தன்மை. ''அவன் நெரக்கு தெரியலே.'' ''இருக்கிற நெரக்கு அறிஞ்சில்ல-பய கொட்டமுத்துப் போடுருன்''

நெரடு: மன நெருடல். கஷ்டம். சிக்கல். ''கணக்கு நெரடாயிருக்கு''

நெளிர்விடல்: சோம்பல் முறித்தல்.

நெளுசல எடுத்துட்டான்<br>நெளுசலக் கழட்டிட்டான் } : சரியான படி அடித்துவிட்டான்.

நெறசல்: குளிக்க, சட்டிபானே வைத்துக் கழுவ ஒரு மறைவிடம்; ஓலே அல்லது தட்டையினுல் ஆனது.

நெறையம்மணம்: பூரண நிர்வாணம். நெறைஞ்ச வீடு—லட்சுமீகரமான வீடு. ''நெறைஞ்ச வீட்ல இருந்து சொல்றேன்''

நெனேச்சரியாம புறப்பட்டுட்டேன்: என்னேயறியாமலேயே இங்கே வந்து சேர்ந்து விட்டேன்; புறப்பட்டு இங்கே வருவேன் என்று நினேக்கவே இல்லே. திடீரென்று புறப்பட்டேன்.

## நே

**நேக்காய்:** நெளிவு சுளிவாக. ''நேக்காப் போகணும்''

**நேச்சர் சரியில்லே:** படுக்கையாகக் கிடக்கும் நோயாளியின் நிலே சரியில்லே.

**நேஞ்சி:** லேஞ்சி.

**நேத்திக்கடன்:** நேர்ந்து கொண்ட இறைக்கடன். நேமுகம்.

**நேமுகம்:** காணிக்கை செலுத்துவதாக சங்கற்பித்துக் கொள்ளல். நினேத்ததைச் செய்து பழி தீர்த்துக் கொள் ளல். ''அவன் நேமுகத்தை நிறைவேத்திட்டான்.''

**நேர்கொம்பு:** மாட்டுக் கொம்பில் ஒரு வகை.

**நேர்சீராக:** ஒருத்தருக்கு ஒருத்தர் வீட்டுக் கொடுத்துப் போதல்.

**நேரநேரகேக்கான்:** நேரடியாக கெட்ட வார்த்தைகளால் வைகிறுன்.

**நேரம் காலம் வந்திருங்க:** வீட்டுக்கு சீக்கிரம் வந்துவிடுங்க. பொழுதிருக்க வந்திருங்க.

**நேரமிருக்க:** இருட்டுவதுக்கு முன்ஞல். ''நேரமிருக்கப் போயிறலாம்''

**நேரியல்:** ஜரிகை போட்ட துண்டு.

**நேரு சீராகப்போதல்:** நாலுபேரு சொல்றதைக் கேட்டு நல்லபடியாய் நடந்து கொள்வது.

## நை

**நைச்சிவப்பு :** நல்ல சிகப்பு நிறம். ''நச்சிவப்பு''

**நையாண்டி:** ஒரு வகை மேளம். ''நையாண்டி மேளம்'' நக்கல். ''கேலி நையாண்டி பேசுறது''

## நொ

**நொக்கெடுத்திட்டான்**
**நொக்கையை பிதுக்கீட்டான்**
**நொங்க எடுத்துட்டான்** } : பலமாக அடித்துவிட்டான்.

நொச நொசத்தவன்: உபத்திரவமானவன். விடாமல் துன்பம் தருகிறவன். சளசள வென்று பேசிக்கொண்டே இருப்பவன்.

நொட்டாங்கை: இடதுகை. பீச்சாங்கை.

நொட்ன: நொட்டுதல்—புணர்தல். கோபம் வரும் போதும் வாய்ச்சண்டை நடக்கும் காலங்களிலும் இந்த வார்த்தை உபயோகம் சாதாரணம். "எதாவது சொன்னேயண்ணு பல்லே உதுத்துருவேன்—இது ஒருவன். "ஆம; நீ நொட்ன"—இது பதில்!

நொடி: பாதையில் சீர்கேடுகள்.

நொடிச்சிப்போதல்: பொருளாதாரத்திலோ அல்லது உடம்பு ரீதியாகவோ ரொம்ப பலஹீனப்பட்டுப் போகுதல். "செயலா வாழ்ந்த குடும்பம்; இப்போ நொடிச்சிப் போச்சி"

நொண்டி: ஒரு விளையாட்டு.

நொந்து: உலேந்து "சோறு நொந்து போச்சி".

நொம்பலம்: தொடர்ந்து மெம்மேலும் வரும் துன்பம். "ஆள் ரொம்ப நொம்பலப்பட்டுப் போயிட்டாரு... பாவம்".

நொய்யரிசி: உடைந்த, உருவம் சிதைந்த அரிசி. குருணே அரிசி.

நொரண்டுதல்: புஞ்சையில் இடைவிடாது —அங்குலம் அங்குலமாக—தன் புஞ்சையோடு சேர்த்துக் கொண்டு வருதல், கரடு எடுக்கும் சாக்கில்.

நொர நாட்டியம்: கச்சிதமாகச் செய்து முடிக்காமல் காரியத்தில் நொரண்டிக் கொண்டே இருப்பது. "இல்லாத நொரநாட்டியம் பண்ணிக்கிட்டே இருக்காள்."

நொள்ளாப்பு: ஆதாரமில்லாமல் வரும் கோபம். "லொள்ளாப்பு" "விருதா நொள்ளாப்பு"

**நோக்காடு:** பல நோய்கள் ஒரே சமயத்தில் வருதல். நோய்க் காடு! என்ன நோய் என்று தெரியாமல் நோயாளி நீண்ட நாள் அவதியுரும் போது சொல்வது. இது ஒரு வசவும் கூட.

**நோங்குதல்:** விரும்புதல். ''பயலுக்கு அவ மேலெ நோங் கீட்டது''.

**நோட்டம்:** வேவு. ''நோட்டம் பாக்கான்''

**நோண்டுதல்:** விரும்பித்தொடுதல். வேண்டுமென்றே தொடு தல். கையினால் சீண்டி தொந்தரவு செய்தல்.

## ப

**பக்கம்:** சுடுகாட்டில் காரியம் முடிந்தபின் ஒவ்வொரு தொழி லாளிக்கும் கொடுக்கப்படும் பணம் 'சுதந்திரம்'. அப் போது ஒரு தொழிலாளியோடு சேர்ந்து உதவிக்கு வந்த வர்களுக்கும் ஏதாவது கொடுப்பார்கள். அதற்கு 'பக்கம்' என்று பேர்.

**பக்கரை:** வியாபாரப்பை. துப்பட்டி போன்ற மொறட்டுத் துணியில் தைக்கப்பட்டிருக்கும். பையின் நீளம் சுமார் 182 செ.மீ. அகலம் 91 செ.மீ. இருக்கும். வியாபாரப் பொருள்களை அதில் வைத்துக்கொண்டு விற்பதும் வாங்கு வதுமாகப் பயன்படுகிறது.

முக்கியமாக இந்த பக்கரையை உபயோகிப்பவர்கள் இப்போது கிராமத்துக்கு வரும் வளையல் வியாபாரிகள், முஸ்லீம் பக்கிரிகள்.

**பக்கா:** பெரிய நாழி. பட்டணம்படி. முத்திரை நாழி. ''பக்காவுக்கு நாலுபடி போடு''

**பக்கிகள்:** (வசவு) 'விருதாப்பக்கி' ''பக்கியடிச்ச மாதிரி'' ''அந்த பக்கிகள் வந்தால் சேட்டை செய்யும்''. ஒரு சிறு சிறுவர் கூட்டத்தைச் சொல்வது. பக்கி — ஒரு பறவை. பயனற்ற, அழகில்லாத பறவை.

**பக்குவதியாயிருக்கா:** திரண்டு விட்டாள். ''பக்குவவதியா யிருக்கா''.

**பகப்பட்டு:** பகல். ''பகப்பட்டில் திருடன் வரமாட்டான்'' பட்டப்பகல் என்பது பகல்பட்டு என்று.

பகுசு: வாழ்வு. ''அவனுக்கு இப்ப பகுசு வந்துட்டது.''

பகுத்து: பெருமை. ''கோப்பைய நாயக்கருக்கு என்ன பகுத்து, கோழிப் பகுத்து குஞ்சு பகுத்து''— சொலவம்

பகுதி: நிலச்சொந்தக்காரன் அரசுக்கு செலுத்த வேண்டிய ஆறில் ஒரு பகுதி. ''அகதியைப் பிடிச்சி பகுதி கேட்ட மாதிரி'' — சொலவம்,

(அகதி — பிழைக்க வந்தவன்).

பகுந்துகிட்டாக: பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள். பகிர்ந்து கொண்டார்கள்.

பகுரணை: பௌர்ணமி. ''பவரணை''.

பகுரு: தலைக்கனம். கர்வம். ''பகுரு ஜாஸ்தி''

பங்கரை: அவலட்சணம். கெட்ட. அழகில்லாத. ''ஆளு ரொம்ப பங்கரை.'' ''களை வெட்டியால் நிலத்தை பங்கரைத் கொத்தாக் கொத்தணும்.''

பங்கி: ''பங்கி'' அடிச்சிப் போயிருக்கான்''

பச்ச நாவி: நஞ்சு.

பச்சமண்ணு: பச்சைக் குழந்தை, அப்போதுதான் குயவன் செய்து வைத்த ஆருத பாண்டம் போன்ற. 'ஐ' உணராத.

பச்ச வாதம்: பக்கவாதம்

பச்சியா பதறுதல்: பார்த்தவுடன் நடுக்கம் கொள்ளல். கருடனைப் பார்த்தவுடன் கோழிக்குஞ்சு பதறுதல் மாதிரி.

பச்சியாப் பரக்கு: மாட்டின் வேகம். பறவை போல பறக்கு. பறவை போல் வேகம் கொண்ட.

பச்சைப்பன்: பன்னறுவாளை சுட வைக்காமலே பல் வெட்டுதல் பன்னறுவாள் — பல் அறுவாள்.

பச்சைப்பிள்ளை: சிறு குழந்தை. ''பால்குடி மாருத—மறவாத பச்சைப்பிள்ளை.''

**பசக்குண்ணு:** கொஞ்சங்கூட எதிர் பார்க்காத போது. சீக்கிரமாக. அதிவேகமாய். "பசக்குண்ணு கை நீட்டிட்டான்" —திடீர்னு அடிச்சிட்டான். பசக்குண்ணுவா.

**பசை:** வசதி. துட்டு. "பசையுள்ள இடம்".

**பஞ்சட்டை தூத்தல்:** லேசான, பிரயோஜனமற்ற தூற்றல்.

**பஞ்சாரம்:** சிறிய கோழிக்குஞ்சுகளுடன் கோழியை சில நாட்கள் பாதுகாப்பாக அடைத்து வைக்கும் கூடு.

**பஞ்சுக் கருக்கு:** சக்கி முக்கியின் பொரி விழுந்தவுடன் பற்றிக்கொள்ள செய்து வைக்கும் ஒரு ஏற்பாடு. கொட்டை நீக்கிய பஞ்சை பெரு விரல் கனத்தில் உருட்டி வைத்துக்கொண்டு முதலில் எரியும் தீயில் பற்ற வைத்து தீயை அணைத்து அதை பாதுகாத்து வைத்துக் கொள்வார்கள். சக்கி முக்கியிலிருந்து புறப்படும் பொறி சாதாரணப் பஞ்சில் பிடிப்பதைக் காட்டிலும் வேகமாக உடனே இந்தப் பஞ்சுக்கரியில் பற்றிக் கனியும். அதை வேறு தீப்பிடிக்கும் பொருள் மீது வைத்து ஊதி நெருப்பு உண்டு பண்ணிக் கொள்வார்கள்.

**பஞ்சை:** வழி. "அவம் பஞ்சைக்கே நான் போறதில்ல."

**பட்டணக்கரை:** டௌவுன். நகரம்.

**பட்டணம் படி:** பக்கா நாழி.

**பட்டப்பேர்:** மற்றவர்கள் சேர்ந்து ஒருவனுக்கு வைக்கும் பெயர். மற்றவர்களிலிருந்து 'பளிச் சென்று' தெரிந்து கொள்ள வைக்கும் பெயர். பரிகாசப் பேர்.

**பட்டம்:** நிலத்தில் செடிகளின் வரிசை. ஒத்தவயசு.

**பட்டம் போடுதல்:** பருத்தி, கம்பு போன்ற பயிர்களின் ஊடாக உழுந்து, பாசிப்பயறு போன்றவற்றை வரிசையாகப் போடுவது.

**பட்டரை:** தானியக் களஞ்சியம். "பட்டரைக்கு ஒரு ஆளு, பட்டரை வாரியாக இனம்."

பட்டரை: சமகாலத்தவர்கள். பருவம்.
''அவுகள்ளாம் ஒரு பட்டரை ஆள்க்க.''

பட்டரைச்சுழி: மாட்டு சிமிழுக்குப் பின்பக்கமிருக்கும் சுழி.

பட்டரைச் செடி: பருத்திவிதை முளைவிட்டு ஒரே இலை மட்டும் வட்டமாக இருப்பது.

பட்டரைப்பலகை: கமலையிலுள்ள ஓர் உறுப்பு.

பட்டரை வாரியா:'பட்டரைக்கு ஒரு ஆளு' இனத்திற்கு ஒருஆள்.

பட்டா: வண்டி சக்கரத்திற்குப் போடும் இரும்புப் பட்டை. பட்டா — பட்டை.

பட்டியல் கல்லு: தாழ்வாரத்தின் தள விழும்பில் தூண்கள் நிறுத்துவதற்காகப் போடப்படும் ஒழுங்கு செய்யப்பட்ட நீண்ட கல்.

பட்டினிப் பணம்: இழவு வீட்டிற்கு வந்தவர்களுக்கு ஆகார மளிக்க மற்றவர்கள் கொடுக்கும் பணம்.

பட்டுக்கிடாம: அகப்பட்டுக் கொள்ளாமல். ''பட்டுக்கிடாம ஆள் எதிலும் விலகியே நிப்பாரு.''

பட்டை: பொடிப் பட்டை. பனை ஓலையாலாகிய பட்டை.

பட்டை தரித்துப் போடுதல்: சக்கரத்தில் பட்டை சரியாகச் சேராவிட்டாலும், நாள்ப்பட்ட பட்டையானாலும் தரித்து பட்டையை மீண்டும் சேர்ப்பது.

பட்டை போடுதல்: வண்டிச் சக்கரத்திற்குப் புதிதாக பட்டை போடுவது.

படகுருவி: படை படையாகக் கதிரில் விழும் குருவிக் கூட்டம்.

படப்பு: மாடுகளின் தீவனத்துக்காகத் தட்டைகளை ஒழுங்கு பட அடுக்கி மழைக்கு நனையாமல் கூரைபோல் ஒழுங்கு செய்து வைத்துக் கொள்வது.

படம்: கொழுவின் கீழ்நுனிக்கு படம் என்று பெயர்.

படல்: குப்பை, மண் அடிக்க வசதியாக வண்டியில்வைப்பது. பருத்தி மாறு போன்ற மாறுகளாலானது. ''தடுக்கு''

படி
படி அளத்தல் } : படி என்பது நேரடிக் கூலி அல்ல. நியமன வேலைக்காகக் கொடுக்கப்படும் ஊதியம் அல்லது வாழ்க்கைச் செலவு.

''அவரென்ன நமக்கு படியா அளக்காரு''.

''பூவரசங் கட்டை வெட்டி
புது மரக்கால் உண்டு பண்ணி
மாதா மாதம் படியளக்கும்
வல்லத்(து) ஐயா மகராசர்''. —நாட்டார் பாடல்.

**படிக்கம்:** எச்சில் துப்பும் கும்பா. 'பணிக்கம்'. எச்சில் பணிக்கம்'.

**படுக்காளித்தனம்:** அடாவடித்தனம். படுகாலித்தனம். ''படுக்காளிப்பய''.

**படுதா:** கனத்த திரை.

**படுமுடிச்சி:** அவிழ்க்க முடியாமல் போடும் முடிச்சி.

**படுமோசம்:** மிகவும் மோசம். சுத்த மோசம். ரொம்பமோசம். இதைவிட மோசம் வேறு இல்லை.

**படுவா:** வசவு.

**படை:** சுவரின் பகுதி. வீடு கட்டும்போது அதிலும் மண் குழைத்து வீடு கட்டும் போது தினமும் தொடர்ந்து சுவரை எழுப்பிக் கொண்டே போக முடியாது. ஒரு தடவைக்கு $1\frac{1}{4}$ முழம் விதம் உயரம் வைத்து ஆறிய பின்னரே மறுதடவை அதன் மேலே அதே உயரம் சுவர் வைப்பார்கள். இப்படிக்கட்டும் அடுக்குஒவ்வொன்றுக்கும் படை என்று பேர். 'இண்ணிக்கி ஒரு படைவச்சிருக்கு'.

**பண்டம்:** விஷயம். காரியம். 'அவர்ட்ட ஒண்ணும் பண்ட மில்ல'

**பண்டிதன்:** குடிமகன். நாசுவன். சவரத் தொழிலாளி.

**பண்டுவம்:** மருத்துவம். 'பண்டுகம்.'

**பண்ணையடித்தல்:** ஒரு கூலியாள் தினமும் வழக்கமாக ஒருவரின் பண்ணையில் வேலை பார்ப்பது. ''அவன் அங்க பண்ணையடிக்கான்.''

**பணஏர்:** வாடகை ஏர். பணம் கொடுத்து உழச் சொல்லும் ஏர்.

**பணத்தரம்:** தீர்வை விகிதம். நிலத்தீர்வை சம்பந்தப்பட்டச் சொல். நிலத்தின் தாராதரத்துக்கு ஏற்ப விதிக்கப்படும் தீர்வைப் பணம்.

**பத்தடி பத்தடியா:** அடுத்தடுத்து. ''ஒரு பத்தடி குப்பை, ஒரு பத்தடி மண் இப்படியே.'' (பத்தடி என்பது பத்து அடிகளைக் குறிப்பது அல்ல.)

**பத்தணுப்பாட்டில்:** மூட்டைக் கொல்லி மருந்து பாட்டிலைப் பற்றிக் கூறுவது. ''பத்தணு பாட்டில் கூடவா கிடைக் காது எனக்கு''

**பத்தமடை:** கூனையிலிருந்து தண்ணீர் பாயும் இடம்.

**பத்தயம்:** எலியைத் தந்திரமாக ஏமாற்றிப் பிடிக்கும் கூண்டு.

**பத்தரிப்பு:** கட்டிடத்தின் அடித்தளத்தில் சுவர் அகலமாயும் மேலே வரவர ஒடுங்கியும் இருக்கும். அகலத்தைக் குறைத்துக் கழித்து கட்டும் இடத்தைக் குறிப்பது. ''பத் தனப்பு''

**பத்தல்:** நாய் கஞ்சி குடிக்கும் தொட்டி; மரத்தாலானது. பனைமரத்தை இரண்டாகப் பிளந்து நடுவிலுள்ள சோற்றை எடுத்தது. சிறிய ஓடை தாவைக் கடந்து தண் ணீர் கொண்டு போகப் பயன்படுவது.

**பத்தல்ல:** போதவில்லை. கொள்ளவில்லை. ''இடம் பத்தலை'' தெரியவில்லை. ''கண்பத்தல''. ஒட்டவில்லை. ''காட்டுக்கு மாட்டைப் பத்தலை''. பற்றுக்குறை. ''கடேசியாச் சாப் பிட்ட ஆளுக்கு கறி பத்தல்ல.''

**பத்தாசனை:** பற்றும் ஆசைகளும். ''எம் பேர்ல அவருக்குப் பத்தாசனை இல்லாமப் போச்சி.''

**பத்தாம்பசலி:** சுத்த கர்நாடகம். நாப்பதாம்மாண்டு.

**பத்தாயம்:** சிறிய அளவில் தானியம் வைத்துக் கொள்ளும் மரத்தினுலான பெட்டி போன்றது.

**பத்தி:** கட்டு. ''ரெண்டு பத்திகள் கொண்ட வீடு''

**பத்தியம்:** குறிப்பிட்ட உணவு பதார்த்தங்களையும் சுவைகளையும் அனுபவிப்புகளையும் தள்ளி வைத்தல்.

**பத்து:** ஓட்டு. நடத்து. ''மாட்டைப் பத்து''

**பத்து:** மருந்து அரைத்து மேலே அப்புதல். பற்றுபோடுதல். "இந்தப் பச்சிலையை அரைச்சி நெற்றியில் பத்துப்போடு"

**பத்துதல்:** கைக்கொள்ளுதல் ''நல்ல சீருக்கு பத்தீட்டா''.

**பதக்கால் உழவு:** மண்ணில் குறிப்பிட்ட அளவு ஈரம் இருந்தாலே உழவு பதமாக வரும். பதக்கால் உழவு X வெக்கால் உழவு.

**பதக்கு:** முகத்தலளவு. இரண்டு குறுணி அளவு. ''உழக்கு உசுருக்குப் பதக்கு எமன்!''

**பதக்குபதக்குங்கு:** மனத்தவிப்பு. என்னமோ ஏதோ என்ற பதட்டத்தில் அடிக்கும் இதயத் துடிப்பு.

**பதப்பற:** பதட்டமில்லாமல். நிதானமாக. ''பதப்பறப் போ, அவசரப்படாதே''

**பதம்:** வெண்ணெய். கூர்மை. ஈரம். ''கத்தி பதமா இருக்கு'' ''பத உழவு''

**பதம்:** சோற்றைப் பதம் பார்க்கிறுள். (பானைச் சோற்றுக்கு பருக்கை பதம்). ஆழம். நோட்டம். ''ஏலே எங்கே வந்து மெள்ள பதம் பாக்கெ''

**பதவல்:** பொருள்கள் தாருமாருக அடைந்து கிடத்தல். ''இந்த பதவலே ஒதுங்க்க வக்கிறதுக்குள்ளெ உசுரு போயிரும்.''

**பதவலை:** நெறி. ''தேள் கொட்டினுல் பதவலைகட்டும்'' ''தென்னமரத்திலெ தேள் கொட்டின பனை மரத்துலேயா பதவலை கட்டும்?'' —சொலவம்.

**பதவுழவு:** அமைப்பான ஈரம் அமைந்த அருமையான உழவு.

**பதனம்:** பக்குவம். கவனம். ஞாபகம். ''கைபதனம், வாய் பதனம், அசுனம் பதனம்!''—பெரியாள் மொழி.

பதி போடுதல்: பாய்வதற்குமுன் உடம்பை சுருக்குதல்.



பதினஞ்சாம் புலி: "பதினஞ்சாம் பிள்ளை" பதினைந்துகற்களும் மூன்று ஓடுகளும் இரு கட்சிகளாக கொண்டு விளையாடும் கிராமிய விளையாட்டு.

பந்தாரம்: விநியோகித்தல். வாரிவழங்குதல். கூப்பிட்டுக் கூப்பிட்டு சந்தோஷத்தோடு கொடுத்து மகிழ்தல்.

பப்பரப்பாள்ண்ணு: விரிவாக.

பம்பரமுடிச்சு: ஒரு விதமான முடிச்சு.

பம்பாரியா: நிறைய. "பம்பாரியான காடு"— பரந்தகாடு.

பம்பை: ஒத்தையா ரெட்டையா விளையாட்டில் வெறுங் கையை வைத்தால் அதை பம்பை அல்லது பாங்கை அல்லது ஊமைக்கை என்பார்கள்.

பம்பை: சிலிர்த்த முடி. "பம்பத்தலை" "பம்பெ பறட்டே பாப்பாக்குடிச்செரட்டெ"—குழந்தைகள் விளையாட்டுப்பாடல். ஒரு வித வாத்தியம். பம்பை மேளம்.

பம்மாத்து : பொய்யாக அபிநயித்தல். அடக்க ஒடுக்கமாக இருப்பது போல் பாவனை. "பம்மாத்துப் பண்ரான்."

பயணப்பீஸ்: இறந்து போனவர்களுக்கென்றே கடைகளில் விற்கப்படும் மலிவான வெள்ளைத்துணி.

பயிர் உழவு: கம்பம்பயிர் $\frac{1}{2}$ அடி உயரம் வளர்ந்ததும் அதை ஏர் விட்டு உழுதல். "பயிரடிப்பு"

பயிரரித்தல்: பயிரடித்த பின்பு காய்ந்த பயிர்களையும் பளுத்த பயிர்களையும் அகற்றுதல்.

**பயிராகுதல்:** பசுவை காளைதாண்டுதல் ''சினையாக்குதல்''

**பர்மாக்கொண்டை:** ஒரு வித முடியலங்காரம். பிடறியில் ஒட்டாமல் சற்று மேலே தள்ளி வட்டப் பங்காகப் போடப் படும் அழகுக் கொண்டை. ''பிரமாக் கொண்டை''

**பரக்களி:** (வசவு) பெண்ணைப் பார்த்துக் கூறுவது.

**பரசு :** விதைத்த விதைப்பை மண் தள்ளி மூட உபயோகிக் குப் இரும்பினாலான கருவி. ''அவன் வேட்டி கட்டு மானத்தைப் பார் தரையில் பரசும் படியாக,'' ''அரிசி யைச் சிந்தீட்டியா? பரசி அள்ளு''

**பரண்:** உயரமான நான்கு தூண்கள் நிறுத்தி அதன்மேல் நிறுவப்படும் குடிசை; காட்டுக்காவலுக்காக.

**பரதேசம்:** பிறதேசம். அடுத்த நாடு.

**பரபரங்கு போலுக்கு:** ஆண் பெண் உறவு மோகத்தில் இருப் பவர்களைப் பார்த்து கேலியாகக் கூறுவது. முதுகு பர பரங்கு; அடி விழ வேண்டும் என்று!

**பரமான ஆளு**
**பரமேளம்** } :வெள்ளந்தியானவர். கல்மிஷம்இல்லாதவர்.

**பரவச்சட்டி:** அகலமான சட்டி.

**பரளவாக்கியமாப் பிச்சிப் பேசுறான்:** மணி இடை பவளம் என்பதின் பாமர வழக்கு.

**பரிசை கெட்டபய:** பொண்ணுக்கு பரிசம்போட வக்கில்லாதவன்.

**பரிசை கெட்டு:** பரிசமில்லாத பெண். கேவலம். தாழ்வு. ''நீ தானெடி பரிச கெட்டுப் போயி வந்தெ; நானு வந்தென்?''

**பரிதல் ;** பரிய. பிதுங்க. விலக. போக. ''ஆள முன்ன பின்ன பரிய விடல்ல.''

**பராக்கு :** முந்தைய வழக்கம். ''பழைய பிராக்குப்படி அவரு நடக்காரு''. வேறு கவனம். ''பராக்குப்பாக்காமப்போ.''

**பராப்பரக்கி மண்டையோட:** புருக்குஞ்சுக்கு இருப்பது போல ஒன்றிரண்டாக முளைத்த மயிருடைய தலை.

பராபரியா: எப்படியோ காதில் வந்து விழுந்தது. ''யாரு சொன்னு?''... ''பராபரியாக கேள்விதான்''

பருக்கு : குடிக்கச் செய். ''ஆட்டுக்குட்டியைப் பருக்கு.''

பருக்கை: நெல்லு சோறு.

பருகிளி: வசவு.

பருசம்: ஆழம். ''ஓராள்ப் பருசம்''.

பருசு: பெரிசு. ''பரும்பழம்'' ''பருவட்டு''.

பருப்புச் சோறு: கல்யாண நிச்சயார்த்தம். ''எப்படா எங்களுக்கெல்லாம் பருப்புச் சோறு போடப் போறே?''

பருப்புவேகாது: காரியம் பலிக்காது. ''அந்த பருப்பு இங்க வேகாது''.

பருமல்: படகில் பாயுடன் பிணைக்கப்பட்ட அல்லது சேர்ந்துள்ள கம்பு.

பருவட்டு: பெரிய பொருட்களைக் குறிக்கும் சொல். மேலெழுந்த வாரியாக. ''பருவட்டாப் பூசி விடு.'' ''பருவட்டான ஆளு''—நுணக்கமில்லாத ஆளு. கருப்பட்டியில் ...பருவட்டு X பொடிவட்டு.

பருவம்: பதம். ''உழவுக்குப் பருவமாயிருக்கு.''

பல்ப்பாடு: மாட்டின் வயசைக் குறிப்பது.

பல்போடல்ல: காளங்கன்றின் வயதைக் குறிப்பிடப் பயன் படுத்தும் சொல்.

பல்லக்கடி நெல்லக்கடி: சிக்கனத்திலும் சிக்கனமாக. ''சொன்னுப்லெ... இங்கேயே பல்லக்கடி நெல்லக் கடிண்ணு இருக்கு...'' ''பல்லக்கடி....நெல்லக்கடிண்ணு இருந்தாத்தான் முடியும்''

பல கை நாக்கு: துடுப்பு.

பலதிட்டு குல நாசம்: 'ஆயிரம் வசவுக்கு ஓர் ஆனையும் சாயும்.'' திட்டு—வசவு.

**பலப்படுதல்:** சினையாகுதல்

**பலபலண்ணுவிடிய:** வேளையைக்குறிக்கும் சொல். வெள்ளன. அதிகாலே.

**பலம்:** சினை. ''மாடு பலம்பிடிச்சிட்டது''— சினையாகி ் விட்டது. பருத்திச் செடியிலெ பலம் கட்ட ஆரம்பிச்சிட்டது.

**பலவட்டரை:** வேசி. வேசை.

**பலுகிருச்சி:** பெருகி விட்டது. பலவாகிவிட்டது.

**பவுசு:** ''பகுசு'' புதுசாக வந்த வாழ்வு.

**பவுண்டுத்தொழுவு:** கால்நடைகளின் ஜெயில்.

**பழகணும்:** புத்தம் புதிய விதைகள் முளைப்பதில்லை. முளைத்தாலும் பலன்தராது. அவை குறிப்பிட்ட சில நாட்கள் கழித்தே விதைக்க வேண்டுமென்பது.
''அதுக்குள்ளெ நட்டுனு எப்படி; விதை பளகணும் வ்யா?''

**பழந்தின்னு கொட்டையும் போட்ட:** நிறைந்த அனுபவம்.

**பழம்:** காரியம் வெற்றி.

**பழம் போடுதல் :** தாயம். கிந்தான் போன்ற விளையாட்டுகளில் வெற்றி பெறுவதை இப்படிக் குறிப்பர். கர்ப்பசங்கையை தாய் வீட்டுக்கு அழைத்துப் போகும் போது உறவினர்களுக்கு பழம் வினியோகிக்கும் சடங்கு.

**பள்ளையாடு:** ஆடுகளில் ஒரு வகை. குழந்தைப் பாலுக்காக வீட்டில் வைத்து வளர்க்கும் ''ஏழைகளின் பசு.''

**பளுவன்:** பொல்லாதவன். சுயநலக்காரன். கெட்டிக்காரன்.

**பற்று ஆசு:** பத்தாசனை.

**பறக்கத்தான் செய்யுறன்:** கணக்கிலடங்கா அவசரம்.

**பறவைக்கருது :** அழியும் போது ஒன்றிரண்டு இருக்கும் பூட்டையை ஓசியில் பிறக்கிக் கொள்வது. ''பறவைக் கதிர்''

பறவைச்சுழி: மாட்டுச் சுழிகளில் ஒன்று. மாட்டின் முன் கால் தோள் புஜத்தில் இருபக்கமும் சுழி இருப்பின் அது பறவைச்சுழி. வேகமாயிருக்கும்.

பறவை பருத்தி: பருத்தி அழிவதற்கு முன்னால் திடீரென்று ஒரு நாள் இஷ்டத்துக்கு எடுத்துக் கொண்டு போய்விடும் பருத்தி எடுப்பு. இது எப்போதென்று புஞ்சைக்காரர் களுக்கே தெரியாது!

பன்னறுவா: நாத்து, தட்டை அறுக்க உதவுவது. சிறிய்ய பல் பல்லாக இருக்கும் அறுவாள்.

பன்னாடை: பனைக்கு இதுதான் ஆடை. சல்லடை போல அலசலாக மொரட்டுத்துணி போலிருக்கும். சில்லாடை என்றும் சில இடங்களில் சொல்கிறார்கள். பதனீர் வடி கட்ட இதை உபயோகிப்பதும் உண்டு.

பனங்குட்டி : இளம் பனை. வடலி. பனை வடலி.

பனிதாங்கி: ஒருவித களை. மருக்கொழுந்து போலிருக்கும் பார்க்க.

பனிவரகு: ஒரு மழையில் விதைத்த பிறகு பெய்யும் பனி யிலேயே மேல் மழையில்லா விட்டாலும் விளைந்து விடும்.

பனைசீவுதல்: பனையை அனுபவித்தல். பனையைச் சீவி பத னீர் இறக்குவதால் இப்பெயர் ஏற்பட்டது.

## பா

பாக்கு கடிக்கிற நேரம்: கொஞ்ச நேரத்தில். "பாக்கு" என் பது இங்கே களிப்பாக்குகளில் விரவிக் கிடக்கும் கொட் டைப் பாக்கைக் குறிக்கும். அதை வாயில்ப் போட்டு மெதுப்பி சற்று நனைந்த பிறகு கொஞ்சம் நிதானமாகவே கடிக்க வேண்டியதிருக்கும்.

"பாக்குக் கடிக்கிற நேரத்துக்குள் எல்லாமே முடிஞ்சி போச்சி."

பாக்குமுடிச்சி : வடகத்தி முடிச்சி.

பாக்கு முடிப்பு: விசேஷ வீடுகளில் மொய் எழுதுவது வழக்கம். கட்டாயம் போக வேண்டிய வீடுகளுக்கு ஏழைகள் போக நேர்ந்தால் சாப்பிட்டபின் சிறிய கந்தல் துணியில் ஒரு பாக்கை முடிந்து தன் பெயரைச் சொல்லி இவ்வளவு ரூபாய் என்று சொல்லிக் கொடுப்பார்கள். எழுதுகிறவர்களும் அதை வாங்கிக் கொண்டு தொகையை எழுதிக் கொள்வார்கள். கைக்குப் பணம் கிடைத்த பிறகு கொடுத்துவிட்டு பாக்கு முடிப்பை திரும்பப் பெற்றுக் கொள்வார்கள்.

பாக்கு வைத்தல்: கலியாணம் முதலிய விசேஷங்களுக்கு அழைத்தல்.

பாகவிஸ்தி: பாகபிரிவினை.

பாங்கிணறு: பாழான கிணறு. ''எங்காவது பாங்கிணறுலெ போயி விழுந்து சாகேன்...தொலைஞ்சி.''

பாங்கை: ஒத்தையா ரெட்டையா விளையாட்டில் வெறுங்கையை வைத்தால் அதை பாங்கை அல்லது பம்பை என்பர்.

பாச்சா பலிக்காது: காரியம் நடக்காது.

பாச்சோறு: பச்சரிசியில் வெல்லம் சேர்த்து சமைப்பது. ருதுவான வீட்டில் செய்வார்கள்.

பாசிப் பந்து: மாட்டுச் சுழி, மாட்டு பிடரியில், கொம்புக்குப் பின்னால் ஒரு சுழி இருக்கும். இரு கொம்புச் சுழிகளும் சமமாய் இருந்தால் அது பாசிப்பந்து.

பாசிப் பயறு: சிறுபயிறு.

பா(ஞ்)ஈத்தை: மிகவும் ஈத்தை. கதிரில் விளையாதது; பால் கோர்க்காத நிலையிருப்பது ஈத்தை. 'பா(ன்)ஈத்தை'. 'பா(ங்)ஈத்தை'.

பாஞ்சாளி : கூட்டக் கலகத்தின் போது பாய்ந்து பாய்ந்து எதிரிகளை தாக்கி வீழ்த்துபவன். ''யப்பா பொறு, நீ பாஞ்சாளீண்ணு தெரியும் எங்களுக்கு!''

பாட்டம்: பனை குத்தகை. ''பாட்டம் எடுக்கணும்''. ''மழைபாட்டம் பாட்டமா வருது'' ஒரு பாட்டம் நல்ல மழை.''

பாட்டு: படுக்கை வசம். நீளவசம். ''பாட்டு ஜன்னல்;'' VENTILATOR.

பாட்டுக்கு: காரியத்துக்கு. சொந்தத்துக்கு. ''நாம்ம பாட்டுக்கு'' ''அது பாட்டுக்கு''

பாட்டுல: கிடப்பில், சப்பத்தட்டுல மேற்கொண்டு முயற்சி எடுக்காமல் போட்டு விடுதல். ''பாட்டுல போட்டுட்டான்.''

பாட்டையா: தாத்தா ''பாட்டா''

பாடு: வாழ்க்கை. நிலைமை. கஷ்டம். கடின உழைப்பு. '.அரும்பாடு'' ''மீன்பாடு''.

பாடுதாவிப் போச்சி: பணி செழிப்பாக இல்லை;

பாடுவாசி: கழிவு. ''கடலை ரொம்ப பாடுவாசியாக போகும் போல''

பாண்டல்: அடுக்கடுக்காய் சேர்ந்துபோன அழுக்கு.

பாண்டு: ஒரு நோய். வயிறு வீங்கி நோய்.

பாழு அறுதலி: பாழாகி விட்ட அறுதலி.

பாத்தி: தோட்டத்தில் தண்ணீர் பாய ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு ஏற்பாடு.

பாத்துக்கிட: கவனித்துக் கொள்ள. ''குழந்தையைக் கொஞ்சம் பாத்துக்கிடுங்க.''

பாதகத்தி: வசவு. பாதகத்தையே தொழிலாகக் கொண்டவள். ''சண்டாள பாதகத்தி''

பாதரவு: துன்பம். சங்கடம். இக்கட்டு.

''பட்டோ எடுத்(து) உடுத்தி
    பட்டோ எடுத்துடித்தி
பாதை வழீ போனாலும்—என்
    பட்டை விலை மதிப்பார்—என்
பாதரவை யார் அறிவார்.'' —ஒப்பு

பாதாளகரண்டி: கிணற்றில் தவறி விழுந்த வாளியை எடுக்க உதவும் கருவி; நங்கூரம் போன்ற உருவத்தில் மிகச் சிறியதாக இருக்கும்.

பாந்து: சுவரிலோ அல்லது கிணற்றினுள் சுவரிலோ விழுந்த ஓட்டை.

பாப்பரப்பாசி: கம்பளத்தார், மறவர் சாதிப்பெண்கள் கழுத்தில் அணியும் பாசி.



பாம்படம்: காது வளர்த்த பெண்கள் அணியும் காதணி.

பாம்பயகாடு: பாழும் பயகாடு. 'பாம்பரக்காடு.'

பாம்புவிரல்: நடுவிரல்.

பாய்ச்சங்காட்டுதல்: மாட்டை முட்டுமாறு துண்டுதல் அல்லது முட்டுவதற்குப் பழக்கப் படுத்துதல்.

பாய் படுக்கை தள்ளி வைத்தல்: இச்சா பத்தியம். அகப்பத்தியம்.

பார்: கரும்பு நட்ட அமைக்கும் பாத்தி முறை.

பார்வை: விஷம் இறங்க, தேள்கடி, பாம்புகடிக்கு வேப்பங் குழை வீசி மந்திரம் ஜெபித்து பார்வை பார்ப்பது.

பாரக்கயிறு: வண்டியில் ஏற்றிய பாரம் சரிந்து விடாமல் இருக்க வரிந்து கட்டும் கயிறு. ''வண்டிக்கயிறு''.

பாராத்தியம்: கஷ்டம். சங்கடம். ''பெரிய்ய பாராத்தியமாப் போச்சி இவளோட,''

பாரி: பெரிய. நீளமான. ''பாரியான உடம்பு''

பாரிப்போச்சி: ''மழையில்லாமப் பயிர் பாரிப் போச்சி''

பாரௌவு: பெரிய எளவு. வசவு.

பாரௌவுகூட்ட : வசவு.

பால்க்குளக்கட்டை: ஒரு வித பலகாரம்.

பால்காய்ச்சுதல் : புதுமனை புகுதல்.

பால் பீச்சிறநேரம்: காலை 7 மணி (முன்பு).

பாலாட்டங்குலை: காட்டில் முளைக்கும், பால் சொட்டும் ஒரு வகை கலை. ஆட்டுக்குட்டிகளுக்கு நல்ல தீவனம்.

பாலைப்பாக்கலேண்ணாலும் பானையைப் பார்க்கணுமில்லையா:

நல்ல குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையாண்டன். அவன் மாத்திரம் அந்தக் குடும்பத்தில் தப்பப் பிறந்த வன். அவனுடைய அக்ரமங்களைக் கொஞ்சம் சகித்துக் கொள்ளத்தான் வேண்டியதிருக்கிறது கிராமத்துக்கு. ஏன்; என்ன காரணம் என்று கேட்டால் அவர்கள் இப் படிச் சொல்கிறார்கள். அவனுக்காக இல்லையென்றாலும் அவனுடைய குடும்பத்தைப் பார்க்க வேண்டியதிருக் கிறதே என்கிற பொருளில்.

பால் இன்று கெட்டுப் போகலாம்; அதை அப்புறப்படுத்தி யும் விடலாம். அதைத் தாங்குகிற பாத்திரம் இருக்கே, அதைத் தூர எறிந்து விட முடியுமா?

நாங்கள் கொஞ்சம் பொறுத்துக் கொண்டிருப்பது பால் என்கிற அந்தப் பிள்ளையாண்டனுக்காக இல்லை; பாத் திரம் என்கிற அந்த மதிப்புக்குரிய பெரிய குடும்பத் திலுள்ள அவனது பெற்றவர்களுக்கும் மற்றவர்களுக் காகவுமே.

பாவலா: காரியம் செய்வது போல பாவனை. ''என்ன பாவலாப் பண்ணுதான் பாத்தியா!''. சிலம்பாட்டத்தில் போடும் கால்வரிசை. ஒரு காரியத்தை செய்வது போலத் தோற்றம் ஆனால் காரியாம்சத்தில் ஒன்றுமில்லை.

பாவாடை : வகிடு. உச்சி. ''பாவாடை எடுத்துத் தலை சீவி இருந்தாள்.''

பாவு: மேழியிலுள்ள கைப்பிடி.

பாவுகல்: கிணற்றின் ஊடே இருக்கும் நீண்ட கல். இந்த கல்லின் மேல் நின்று கொண்டு தண்ணீர் சேந்து வார்கள்.

பாளையறுவா: பனம்பாளை சீவும் அறுவாள்.

பாறை: களை சொறண்டியிலுள்ள, களை சொறண்ட உதவும் இரும்புத்தகடு.

பானுப்பத்து: வண்டி அச்சோடு கொய்யாக்கட்டை வில்லைக் கீழாக இணைப்பது.

பானைக்கருப்பட்டி: பானையில் பதநீரைக் காய்ச்சி அதிலேயே உறைந்து போகும்படி செய்து அப்படியே உபயோகத்துக்கு வைத்துக்கொள்வது. ரொம்பவும் இறுகி விடாமல் பதமாக காய்ச்சவேண்டும் இதுக்கு.

பானைப்பாத்து: பானைகளில் தானியம் போட்டிருந்து எடுக்கும் போது கடைசியில் சிறிதளவு இருக்கும் தானியம். சமைத்த பானையின் அடியில் ஒட்டிக்கொண்டிருக்கும் ஆகாத உணவு.

## பி

பிக்கல் பிடுங்கல்: குடும்பம் சம்பந்தமாக ஏற்படும் அனைத்துச் செலவுகள். சிரமங்கள். ''அவனுக்கு எந்தவிதமான பிக்கல் பிடுங்கல் கிடையாது''

பிச்சி உதறீட்டான்: பாராட்டுச்சொல். ஒரு விஷயத்தை மற்றவர் பார்க்காத பலகோணங்களில் பார்த்து அதன் குறைகளை அக்கக்காக எடுத்து மற்றவர்களை தன் வாதத்தை ஒப்புக் கொள்ளச் செய்யும் திறமை.

பிச்சி புடுங்கீட்டான்: சரியாக இருந்த ஒன்றைக் கெடுத்து விட்டான், விரைவாக ஓடிவிட்டான்.

பிச்சுழி: மாட்டுச் சிமிழுக்கு பின்னலிருக்கும் சுழி.

பிசகியிருக்கு: கை அல்லது கால் மூட்டு நழுவுதல்.

பிசுக்கொட்டி: கம்மங்கதிரில் விழும் நோய். ''தேன் ஒழுகல் நோய்'' ''கருப்பட்டி நோய்.''

பிஞ்சுபோச்சு: பிய்ந்து விட்டது.

பிஞ்சை அறுதியும்: புஞ்சை பூராவும். ''பிஞ்சை அறுதியும் இப்போ அவந்தான் அனுபவிக்கான்.''

பிஞ்சைஅறுதியும்: பிஞ்சைவரை.

பிட்டு: வலுவந்தமாய் பிரித்தல். ''பிட்டுவைத்தல்''

பிடரிவிலங்கு: மாட்டின் பிடரியில் கொம்புக்குப் பின்னல் ஒரு சுழி இருப்பது இயற்கை. இரு கொம்பு சுழிகளும் முன் பின்னக இருப்பின் பிடரிவிலங்கு.

பிடிஆள்: சொந்த ஆளில்லாத கூலியாள்.

பிடிகயிறு: வண்டி ஓட்டியின் கையிலிருக்கும் மாட்டுக்கயிறு.

பிடிச்சிவிடணுமா?: ''உடம்பு எப்படி இருக்கு? பிடிச்சுவிடணுமா?'' உதைக்கணுமா என்கிற அர்த்தத்தில்.

பிடிசாதனே: பிடிச்ச பிடியை விடாமல் சாதிப்பது; குரங்குப் பிடி.

பிடிமானம்: செட்டு. சிக்கனம். கையிலிருக்கும் பணத்தின் மேல் கவனம்.

பிணையக்கண்ணி: பிணையலில் மாடுகளை இணைக்கும் கயிற்றுக் கண்ணி.

பிணையல்: கதிரடிக்க மாடுகளை இணைப்பது.

பித்தடி: பின்னலெ. பெறத்தாலே. ''இப்பொத்தான் போரான்; பித்தடியிலே போனு பிடிச்சிரலாம்''.

பித்தவிரு: குதிங்காலின் வெளி ஓரங்களில் காணும் வெடிப்பு; ''பித்தவெடிப்பு''

பித்தி: பிந்தி. குறை. தாழ்ச்சி. "ஒனக்கு நாஒன்னும் பித்தி யில்லே" "கெட்டிக்கு பித்தி பாத்திடுவோமா?" பித்தி × கெட்டி.

பித்து: புற்று. "கரையான்பித்து". 'புத்து'.

பிதுங்குதல்: வெளியே போதல். "அக்கம் பக்கம் பிதுங்க முடியலே."

பிப்பாடை: மாட்டின் முதுகுத்தண்டில் இயற்கையிலுள்ள சுழிக்குப் பின்புறம் மற்றொரு சுழி இருப்பின் பிப்பாடை.

பிப்பாரம்: வண்டியில்ப் பாரங்களை ஏற்றியபின் பின்பாரமாக இருப்பது. பிப்பாரம் × முப்பாரம்.

பிரஸ்மட்டம்: கட்டிடத்தின் அடிமட்டம்; அஸ்திவாரத்திலிருந்து வீட்டின் தளம் வரையுள்ள கட்டுமானம்.

பிரசணம்: பிரயோஜனம். "யாருக்கும் என்னாலெ பிரசண மில்லெ"

பிரமத்தி: அதிர்ச்சி. திகைப்பு. திகைப்பு நீங்காமல் அப்படியே நிற்றல். "பேயைப் பார்த்ததும் பிரமத்தி அடிச்சிப் போச்சி"

பிரமித்தேர்: பின்னத்தேர்.

பிராக்கு: பாதையைப் பார்க்காமல் பக்கத்தில் வேறு எதையாவது பார்த்தல். "பிராக்கு பார்த்துக்கிட்டுப் போறான்."

பிராயம்: வாலிபம். வயசு.

பிரிச்சல்: பண இறுக்கம். "ரெம்ப முடையாயிருக்கு, துட்டு பிரிச்சல் இல்லே."

பிரித்தல்: வசூலித்தல். "வரி பிரிக்கணும்." "பணம் நல்லா பிரியுதா?"

பிரியக்கால்: ரொம்ப கிராக்கி. "ரொம்பத்தான். பிரியக்காலம் பண்றானே..." ரொம்ப பிரியம்.

பிரியைக்கட்டி இழுத்திடுவேன்: வைக்கோல்ப் பிரியால் கொடும் பாவி கட்டி தரையிலிழுத்துக்கொண்டு போவது போல.

பிரிவு: விவரம். ''பிரிவு தெரியாதவன்.'' வயசின் ஒரு பருவத்தைக் குறிக்கும் சொல். உலக விஷயங்களின் மர்மங்களைப் புரிந்து கொள்ளும் பருவம் வராத அறியாச் சிறு வயதைக் குறிக்கும் சொல். ''பிரிவு தெரியாத வயசிலேயே அம்மா என்னை விட்டுட்டுப் பொயிட்டா''

பிழைக்க மதியத்த: நன்றாக பிழைக்கக்கூடிய வழியை அறியாத. ''மதியத்த பயல்.'' (வசவு)

பிள்ளை இல்லாதவ அணைச்சேலையை மோந்து பார்த்தாளாம்: குழந்தை இல்லாமையின் சோகம்.

பிள்ளைகொள்ளிஇல்ல: கொள்ளிக்குப் பிள்ளை இல்ல.

பிள்ளைச்சோறு: பச்சைகுழந்தைக்கு என்று வாங்கி ஊட்டப் படும் சோறு; தருமச்சோறு.

பிள்ளைத்தாச்சி: பச்சைப்பிள்ளையை உடைய தாய். தாச்சி— தாய்ச்சி.

பிள்ளைப்பருத்தி: பருத்தி எடுப்பவர்கள் தங்களோடு கைக் குழந்தை அல்லது சிறுபிள்ளைகளை கொண்டு வந்தால் கொடுக்கும் அதிகப்பருத்தி.

பிள்ளையாண்டன்: மகன். பையன். ''இதுயாரு?'' ''நம்ம பிள்ளையாண்டான்தான்''.

பிள்ளையார்சுழி: தொடக்கம்.'' பிள்ளையார்சுழி போட்டாச்சி!''

பிள்ளையார்பந்து: நீள் முக்கோணமுள்ளகல்லை நிறுத்திஅதைப் பந்தால் வீசி வீழ்த்தி விளையாடும் ஒரு விளையாட்டு.

பிளவை: கட்டி.

பிளாச்சிண்ணு: விரிய. விரிந்து. ''கதவு பிளாச்சின்னு திறந்து கிடக்கு''.

பிளாங்கி: ஒன்றுமில்லாமல் போய்விட்டது.

பிளாப்பெட்டி: வாய் அகன்ற மூடியில்லாத பெட்டி.

**பிறவி:** பிறக்கும் போதே இருக்கும் உறுப்புக்குறையுள்ள 'நோய்'களுக்குச் சொல்லப்படுவது. ''என்ன நோய் வந்து விளங்காமப் போச்சி?'' ''அது நோயில்லெ; பிறவி''.

**பிறவிக்குணம்:** இயல்பு. பூனைஎலிபிடிப்பது. பெரிச்சாளி செலவு தோண்டுவது. நாய் வள்ளென்று விழுவது இதெல்லாம்.

**பிறவிப்பயம்:** ஒவ்வொரு உயிரினத்துக்கும் என்று ஏற்பட்ட விரோதிப்பயம். மிருகங்களுக்கு காட்டுத்தீ, எலிக்கு பூனை, கோழிகளுக்குப் பருந்து, நாய்களுக்குப்புலி...இப்படி.

**பிறந்தநாள் கொண்டாடுறது:** வசவு. ''வா இன்னிக்கிதான் உனக்கு பிறந்தநாள் கொண்டாடுறது''— செம்மையாய் அடி வாங்குவாய் என்ற பொருளில்.

**பின்நாகம்:** மாட்டின் வாலுக்கடியில் மாட்டின் உடலில் நாகம் போலிருக்கும். இது வாலுக்கு அடங்கி இருந்தால் குற்றமில்லை. வாலுக்கு அடங்காமலிருப்பின் குற்றம்.

**பின்னத்தம்:** பின்புறம். ''பின்னந்தங்கால்''

**பின்னத்தேர்:** முன்னே உழுதுகொண்டு செல்லுகிற ஏரைப் பின்பற்றி உழுதுகொண்டு போகும் அடுத்தஏர். கடைசி ஏர்.

**பின்னு:** ரோமத்தைப்பறி. "கோழியை ரோமத்தை பின்னிக் கொடுத்திரு".

**பின்னுதல்:** ''பின்னல்''. பாம்புகளின் சேர்க்கைக்காகத் தான் இந்த வார்த்தை பிரயோகிக்கப் படுகிறது என்றாலும். ஆண்பெண் சேர்க்கைக்கும் இதைச் சொல்லுகிறார்கள்.

''என்ன மதினி, இண்ணைக்குப் பின்னுனேளா!''
''சீ, பொம்பளை என்ன பேச்சுப் பேசுதெ''
''நீங்க ஒண்ணு, வயர்க்கூடை பின்னுனேளாண்ணுல்லா நாங்கேட்டேன்!''

## பீ

**பீச்சாங்கை:** இடதுகை, 'அடி கழுவும் கை'.

**பீசம்:** வெதர். விரை.

**பீட்டை:** மணி பிடிக்காத கதிர். ''பூட்டை''. ''பிஞ்சைக் காரன் சும்மா இருந்தாலும், பீட்டை பிடுங்கி சும்மா இருக்கமாட்டான்''—சொலவம்.

**பீடம் தெரியாம சாமியாடுறுன்:** ''யாரோடு வந்து சண்டை போடுகிறோம் என்பது அவனுக்கே தெரியாது பாவம்!. பலத்தில் எளியவன் என்று நினைத்துக் கொண்டு வந்து குதித்துக் கொண்டிருக்கிறுன்.

குடுக்கிற குடுப்பிலெ இந்த திசையிலெயே தலைவச்சுப் படுக்காம ஆகப் போருன்!''

**பீத்தல்:** நைந்து கிழிந்திருப்பது. ''பாய் பீத்தலாயிருக்குது.''

**பீத்துதல்:** தற்பெருமை. சுயதம்பட்டம். வீண்பெருமை பேசிக் கொண்டு திரிதல். ''பய ரொம்பத்தான் பீத்திக் கிட்டு அலையுதான்.''

## பு

**புசல்காத்து:** புயல் காற்று. ''பொசக் காத்து.''

**புட்டா:** புள்ளி; கொஞ்சம் பெரியது; பொட்டு அகலம். ''புட் டாப் போட்ட சேலை.''

**புட்டாணி:** புட்டம். பிட்டாணி. 'பிர்ஷ்டம்'.

**புடலாப் போக:** வசவு.

**புடைதாங்கி:** இரட்டைவடம், மூணு வடம் உள்ள சங்கிலியை பிணைக்கும் முகப்பு.

**புண்ணியமில்லை:** சரியில்லை. ''வெள்ளாமை ஒன்னும் புண்ணி யம் இல்ல.''

**புண்ணியவாட்டி:** சண்டாளி என்ற அர்த்தத்தில், மனக் குமுறலை வெளியிடுவது. ''புண்ணியவாட்டி நல்லா இருக் கணும்'' என்று சொன்னுல் அவள் நாசமாய் போகணும் என்று அர்த்தம்!

புணே: மிதப்பு. அடைக்கலம்.

புத்தி மடிச்சிப் போச்சி: மடிச்சி = மக்கி, கெட்டு. சில சமயம் மூளை வேலை செய்யாதபோது சொல்லுவது. ''அவருக்கு வரவர புத்தி மடச்சிப் போச்சி''

புத்தியை கடன் குடுத்திட்டேன்: அந்த வினாடியில் புத்தி என்னிடமில்லை என்பது.

புத்துப் பெரப்புட: சாபம், வசவு. ''அநியாயமாச் சொன்னால் ஒன்வாயிலெ புத்துதான் பெரப்படும்.'' புத்து—புற்றுநோய். பெரப்படும்—கிளம்பும்.

புதுநிறம்: மாநிறம். பொதுநிறம்; செகப்பும் கருப்புமில்லாத.

புதுமாடு குளுப்பாட்ன கதை: புதிதாக மாடு பிடித்து வந்த உடன் அதீத சிரத்தையுடன் அதைக் குளுப்பாட்டவும், கூளம் போடவும் தடவி கொடுக்கவுமாயிருப்பார்கள். இது அதிகநாள் நீடிக்காது. சிரத்தை நாளாசரியாகக் குறைந்து போகும்!

புரி ஏத்துரான்: தூண்டி விடுரான்.

புரிமணே: சட்டி, பானை வைக்கும்போது சாய்ந்து விடாமல் இருக்க தரையில் போட்டுக்கொள்ளப்படும் சும்மாடு போன்றது.

புருவ: புருவை. ஆடு

புரூ: நிரூபித்தல். ''உன்னால புரூ பண்ண முடியுமா?''

புருடா: பொய். சரடு விடுதல்.

புரையேறுதல்: சிரசிலடித்தல்.

புல்செதுக்கி: புல்செதுக்கும் ஆயுதம்.

புல்வருச்சி: உடை ஆக்கை. உடை விளாரு.

புல்வாக்குழம்புமுடிச்சு: முடிச்சுகளில் ஒருவகை.

புல்லுமரி: மாட்டுக்கு வரும் நோய்.

புல்லே: மாட்டு நிறங்களில் ஒன்று.

புழுக்கப்பய: வசவு. கீழ்த்தரமானவன்.

புழுக்கை: வறண்ட ஆட்டுமலம்.

புழுதின்னி: புழுதியில் இருக்கும் ஒரு வித உண்ணி.

புள்ளி: நபர். நல்லபுள்ளி. ரொக்கப்புள்ளி.

புளிச்சண்ணி: புளித்த தண்ணீர்; நீராகாரம்.

புளுகுணி: நெசமே பேசாதவன். வாய்திறந்தால் நெசம் வராது!

புளுத்த நாய்கூடக் கேக்காது, அவள்(ன்) பேசற பேச்சை: பேச்சின் லெச்சணம்—''அளகு—'' அப்படி. தெருச்சண்டையின் போதும், தேர்தல் காலத்திலும் இப்படியான பேச்சுக்களை இலவசமாய்க் கேட்கலாம்.

புளுபுளுண்ணு பேசிக்கிட்டே: விவரம் தெரியாமலும், பேச்சை நிறுத்த முடியாமலும் பேசிக்கொண்டே இருப்பது. புழுவைப்போல் காதைத்துளைக்கும் பேச்சு.

புளுல்: நீளமான ஆண்குறி. ''கழுதைப்புளுல்.''

புளுவே: புழுவைப்போல் கேவலமானவளே(னே).

''அடி புளுவே, எங்க வந்து...... உம்ம்......''

புறணி: அடுத்தவர்களின் ரகஸ்யங்களை பரஸ்யமாகப்பேசுவது. (பரஸ்யம்—பகிரங்கம்). பொழுதைக்கழிக்க ஒரு சுவாரஸ்யமான வழி!

புறுமுறி: ''பிறவாமுறி.'' உயில் தொந்தம் ஒழிய பொருள் தொந்தமில்லை என்பதையும் தாண்டி எந்தவித தொந்தமும் கிடையாது என்பது. ரத்தஉறவு உள்ளவரிடையே தீராபகைமை தோன்றும்போது கூறுவது.

## பூ

பூக்காம்பு: மாட்டின் பால்க்காம்பு மிருதுவாக இருத்தல்; பூப்போல.

**பூங்கொம்பு:** மாட்டுக்கொம்பிலொருவகை.

**பூச்சாண்டி:** குழந்தைகளை பயமுறுத்தும் ஒரு கற்பனைப்பயங்கரம். திருடன்.

**பூச்சிக் காட்டறான்:** பயமுறுத்துகிறான். ''பூச்சிபிடிச்சிக்காட்றான்''.

**பூச்சொல்லி விளையாடல்:** ஒருவகை விளையாட்டு.

**பூசக்குழப்பம்:** தைப்பூசத்தையொட்டி வானம் எப்பப்பார்த்தாலும் குழப்பமாகக்காணப்படும். எந்த விநாடியிலும் மழை கொட்டலாம் என்பது போலிருக்கும். சிலசமயங்களில் கொட்டிவிடுவதும் உண்டு; சிலசமயம் இப்படி ஒரு குழப்பத்தை உண்டுபண்ணிவிட்டு கலைந்துபோய் விடுவதும் உண்டு. இந்த சமயத்தில்தான் சம்சாரிகள் அறுவடை செய்த வெள்ளாமைகளை களத்தில் கொண்டுவந்து வைத்துக்கொண்டு வானத்தைப்பார்த்துக் கொண்டிருப்பார்கள். இந்தத் தைமழை அவர்களுக்கு உபத்திரவம் தானேஒழிய உபயோகமில்லை. ''தைமழை தவிட்டுக்கும் உதவாது'' என்கிறது சொலவம். இப்படி உண்டாகும் குழப்பத்தை ''பூசக் குழப்பம்'' என்று சொல்லுகிறது. எங்காவது கச்சரா கிளம்பி வெறும் வாய்வார்த்தையோடு ஓய்ந்து போய்விட்டால் ''வெறும் பூசக் குழப்பம்'' என்று வேடிக்கையாகக் குறிப்பிடுவதுண்டு.

**பூசி மெழுகுதல்:** ஒருவர் குற்றத்தை மற்றொருவர் மறைத்து சாதகமாகப் பேசல். மறைத்தல். ''பூசிமொழுகிறான்''

**பூசை:** உதை. அடி. ''பூசை கிடச்சதா?''

**பூட்டு:** ஐந்து இலைகளைக்கொண்ட ஒரு வாழை இலைத் தொகுதி.

**பூட்டை:** வெளிவந்து முற்றாத கதிர்.

**பூண்உலக்கை:** பூண்பிடித்த இலக்கை. உலக்கை முதலில் வைரம் பாய்ந்த புளியில் பூண் பிடிக்காமல்தான் இருந்ததாம். அது தேய்ந்து வரவரத்தான் பூண்பிடிக்க ஆரம்பித்தார்களாம்.

**பூண்டி:** சுருக்கமான இடம்.

பூணும் பூணண்ணு: அதி மெதுவாக. மெள்ள.

பூணைக்கழட்டீட்டான்: கம்பியிலுள்ள பூண் கழறும்படியாக அடித்தல்.

பூத்தல்: புஷ்பவதியாகுதல்.

பூத்துப் போச்சி: கண், அலுப்பின் காரணமாக மங்குதல். ''பாத்துப்பாத்து கண்ணும் பூத்துப் போச்சி''.

பூதக்கண்ணாடி: சிறிசைப் பெரிசாக்கிக்காட்டும் கண்ணாடி.

பூப்போல: பூவைக் கையாளல்போல. ரொம்பமெல்ல. மெதூவாக.

பூப்போலவச்சிக்கிடணும்: மனசு நோகாமல் மென்மையாய் வைத்துக் கொள்ளுதல்.

பூம்பிஞ்சு: பிஞ்சிலிருந்து பூ இன்னும் உதிராத நிலை.

பூமரம்: மற்றவருக்குத் தெரியாமல் தாங்கள் மட்டுமே சந்திக்கும் தங்களுக்கு மட்டுமே தெரிந்த தேர்ந்த இடம்.

பூமாரி: மல்லியில் விழும் நோய்.

பூரணயோக்கியன்: பரம அயோக்கியன். ''சம்பூரண யோக்கியர் வாரார்...செம்பை எடுத்து உள்ள வை''—சொலவம்.

பூரணி: மாட்டில் ஒரு ஜாதி.

பூரான்சுழி: மாட்டுச்சுழி. முதுகின் வலப்புறம் ஒரு சுழியும், நச்சுழியுமிருந்தால் பூரான்சுழி—குற்றமில்லை. இடப்புறம் ஒரு சுழியும் நச்சுழியுமிருப்பின் பூரான்சுழி—குற்றம்.

பூருதல்: புகுத்தல். நுழைத்தல். ''மாட்டுக்கு மூக்கணாங் கயித்தை பூரு''.

பூவால்: மாட்டுவால் நுனியில் ரோமம் வெள்ளையாயிருப்பின் அது பூவால். ''மயிலைக்குப் பூவால் மன்னனுக்கு ஆகாது'' —சொலவம்.

பூ விழுதல் : கண்ணின் கரு விழியில் வெள்ளைப்புள்ளி விழுதல்.

**பூளல்:** பிட்டி. அபானம் உள்ள பகுதி.

**பூளாக்கு:** திறன், புத்தியும் செய்கையும் கலந்தது. கூறு. ''இல்லேண்ணாலும் ஓம் பூளாக்கு எனக்குத் தெரியாதாக்கும்''

**பூளாப்பு :** பொருமை.

**பூனேக்காரப்பெட்டி:** கிராம போன் பெட்டி.

## பெ

**பெடங்கு :** வெட்டு அரிவாளின் மறுபக்கம்.

**பெடதி:** பிடரி.

**பெண்டிழந்தான் சுழி:** மாட்டுச்சுழி. மாட்டின் வாலில் தான வாய் ஓரத்தில் சுழியிருப்பின் அது பெண்டிழந்தான் சுழி. ஆகாது.

**பெண்ணடி:** பெண் வாரிசு. பெண்குழந்தை.

**பெண்முறி:** தேங்காயில் கண் உள்ள முறி.

**பெணே:** அடைக்கலம். பொறுப்பு. ஒப்படைத்துக் கொள்ளுதல். ' நா ஓம் பெணே'' சிறுவர்களில் சண்டை முற்றி அடிதடியில் தோற்று ஓடி பலசாலி ஒருவனிடம் போய் இப்படிக் கூறுதல்.

**பெயகெ:** பயல்கள். 'பயக'.

**பெரகடமான ஆளு:** பெறட்டு உருட்டான ஆளு.

**பெரட்டிப்போடணும்:** கம்பஞ் சோற்றை துடுப்பால்க் கிளறணும்.

**பெரவளிக்கம்:** பிரபல்யம். பிராவல்யம். ''கல்யாணத்தை ரொம்ப பெரவளிக்கமா நடத்தணும்ணு ஆசை''

**பெரளி:** புரளி.

**பெரளி எண்ணெய் :** குழந்தைகளின் வயிற்றுப் போக்குக்குக் கொடுக்கப்படுவது.

பெரிய சீவன்: கிழவர்.

பெரியதடுக்கு : கதிர் பிறக்குவதற்கென்றே பின்னப்பட்டுள்ள உயரமான வண்டித்தடுக்கு.

பெரியநாழி: பக்கா நாளி.

பெரிய மலைக்காத்து: வடமேற்கிலிருந்து வீசும் காற்று. ''பீடைக்காற்று''

பெரிய மனுஷி: தீண்டாத அரிஜன இனத்தைச் சேர்ந்த வய தானவர்களை மேல் சாதிக்காரர்கள் இவ்வாறு கூப்பிடுவர் ''பெரியாளு''.

பெரியமனுஷி ஆயிட்டா: ஆளாகி விட்டாள். பருவமடைந்து விட்டாள்.

பெரியா பெருந்தலைக: வயசான பெரியவர்கள். கிழடுகள். லகுடுகள்.

பெருங்கால் பிடிச்சிருக்கி: ரத்த ஓட்டம் சரியாகப் போகாமல் அந்த இடம் கொஞ்ச நேரம் மதமதத்துப் போதல். ''கால் திமிர் பிடிச்சிருக்கு.''

பெருசுஅஞ்சு : மாட்டிற்கு பெரியதாக இருக்க வேண்டி யவை ஐந்து. அவை; 1. உடம்பு. 2. கால்கள். 3. கண் கள். 4. கழுத்து. 5. எலும்புகள்.

பெருந்தொடை: மேல்த்தொடை.

பெரும்பாடப்போச்சி: பெரிய கஷ்டமாய்ப் போச்சி.

பெரும்பாடு: ஒரு நோய்—''பெரும் பாடை''. பெண்களுக்கு நிற்காமல் போகும் ரத்தப் பெருக்கு. (தீட்டு).

பெரும்பாதை: கிளைபாதை இல்லாத முக்கியபாதை. ஒத் தடிப்பாதை இல்லாத வண்டிப் பாதை.

பெரும்பானை உலைவைக்கிறநேரம்: மாலை சுமார் மூன்று மணி.

பெரும்போடு: பணத்தைப் பணமென்று பாராமல் செலவழிக் கும் போக்கு. எதையும் பெரிசாகவே செய்து பார்க்கும் மனசு.

பெருமைக்கச்சவடம்: பெருமை பேசுவதையே தொழிலாக —வியாபாரமாக!— கொண்டிருப்பது. ''யப்பா, நிறுத்து ஓம் பெருமைக்கச்சவடத்தை''

பெருமை பீத்தக்கலயம்: கலயம் பீத்தல்; பேசுவதோ பெருமை!. பெருமை பீத்திக்கொண்டு அலேயும்நபர்களைக் குறிக்கும் சொல். ''பெருமை பீத்தக்கலயம் அதுலெ ரெண்டு ஒட்டைக்கலயம்!'' —சொலவம்.

பெருவாரி: கணக்கற்ற. அநேகம். அமோகம்.

பெழச்சது மறுபெழப்பு: விபத்திலிருந்து மீண்டாலோ கடும் நோயிலிருந்து மீண்டாலோ கூறப்படுவது.

''பெத்துப் பிழைச்சாயோ செத்துப்பிழைச்சாயோ'' என்பது போல.

பெழந்து போச்சி: சலிப்பாகக் கூறுவது.

பெழப்பு நாயம்: வாழ்க்கை.

''வண்டீ யடிச்சிப் பாத்தேன்
வயக்கா டுழுது பாத்தேன்
பெண்டுகளை மேச்சிப் பாத்தேன்
பெழப்பு நாயம் கட்டலேயே''—நா. பாடல்.

பெறகாட்டிக்கு: அப்புறமாக. கொஞ்ச நேரம் கழித்து. ''பெற காட்டிக்கு வாயேன் யாரும் இருக்க மாட்டாக.''

பெறங்கை: புறங்கை ''பெறங்கையெ மடக்கி இளிச்சாக் கட்டுகட்டிக்கொண்டு போனுக அவனெ''

பெறத்தாலெ: பின்னல். பின்பக்கம். ''போய்ட்டே இருக்கிறப்பொ பெறத்தாலெ என்ன பார்வை?''

,பெறந்தாம்பெறப்லேயும்: பிறந்ததுலேயிருந்து இதுவரையும். ''அந்த மாதரி ஒருத்தியெ அவன் பிறந்தாம் பிறப்லேயும் பாத்திருப்பானு மூதேயி!''

பெறப்பாடு: கட்டி. சிலந்தி.

பெற மட்டை: பிள்ளையார் பந்து விளையாட்டில் எறியும் பந்து சுவரில் மோதித் திரும்ப வந்து பிள்ளையாரை வீழ்த்தினுல் அது பிறமட்டை.

பெறவாசல்: புழக்கடை வாசல்.

பெறு பெறக்கி: ஒரு செடி. மண்டையில் ரோமம் இல்லாத வர்களை இப்படிச் சொல்வார்கள்.

பெனை: பிசை. ''சோற்றை பெனைஞ்சி மோரை விட்டுக்கோ''

## பே

பேக் கொண்டு: அதே வெறியாய். பைத்தியமாய். ''பேக்கொண்டு அலையுருன்கள்''.

பேச்சுப்பிராக்கல: பேசிக் கொண்டிருக்கும்போதே தவறி. பேச்சின் கவனம் தப்பி, ''பேச்சுப் பிராக்கிலெ என்னமோ சொல்லிட்டேன் மனசுலெ வச்சிக்கிடாதெ.'' ''பேச்சுப் பிராக்கிலெ நீ வந்ததை கவனிக்கல''

பேசாம: சும்மா. சத்தங்காட்டாமல். மூச்சுக் காட்டாமெ. ''ஸ்... பேசாம''

**பேத்தனம்:** பேய்த்தனம். மடத்தனம்.

**பேத்தியா:** பாட்டி.

**பேத்து அடைக்கணும்:** கிடையில் படுத்துக் கிடக்கும் ஆடு களை எழுப்பி இடம் மாற்றி அடையச் செய்தல்.

**பேத்துமாத்து:** அவசரநிமித்தம். பணத்தை ஒரு இடத்தில் இருந்து பெயர்த்து இன்னொரு இடத்தில் மாற்றி அடைத்து சரிக்கட்டுவது.

**பேதிக்குக் கொடுக்கான்:** மனக்கலக்கத்தை உண்டு பண்ணு கிருன்.

**பேதியில போக:** வசவு.

**பேப்பந்து:** விதிகள் என்று ஏதுமில்லாத ஒரு விளையாட்டு. பேத்தனமாக ஒருவர் மேல் ஒருவர் வீசி விளையாடும் ஒரு முறட்டு ஆட்டை. ''எறி பந்து''

பேப்போடு: பாராட்டுச்சொல். ''பயல் பேப்போடு போடு ருன்!''

**பேமாலம்:** கிறுக்கு.—பேமாலீம்.

**பேமுஷ்டை:** உடம்பில் தடுப்புத்தடுப்பாய் விழுந்து ஊரலெடுக்கும். அதற்கு முறைமையுள்ள சிறு பெண்களின் மூத்திரத்தில் சாம்பலைக் குழைத்துப் பூசுவார்கள்.

**பேர்காலம்:** பிரசவம். 'பேறு காலம்' ''மகப்பேறுகாலம்''

**பேர்சொல்லாதது:** சாதாரணமாய் கண்ணில் தட்டுப்படும் சில பச்சிலைகள்—உதாரணம் குப்பை மேனி இலைவசம்பு—, ராத்திரி வேளைகளில் உப்பு, சுண்ணும்பு—மருந்தாகப் பயன்படும் நாய்மலம் இவைகளின் பெயர்களைச் சொல்லுவதில்லை, முக்கியமாக நோயாளிகளின் முன்பாக!

**பேர்சொல்லாதவன்:** நாசுவன்

**பேர்போன :** பெயர் பெற்ற. கியாதி உள்ள. ''பேர்ப்போக வாழ்ந்தவரு''

**பேர்வாதி:** சரி பாதி. கண்டதில் பாதி. 'பேர்பாதி'

**பேரன் பிறந்திருக்கானுமே! மகள் புஷ்பவதியாயிருக்காளாமே** என்பதை இப்படிக் கேட்பர்.

## பை

**பைக்கட்டு:** பை; பெரியது. ''பைக்கூடு''

**பைங்கால்:** பண்படுத்தப்பட்ட நிலம். ''அந்த நிலத்தைப் பைங்கால் படுத்திருந்தான் பயிர் நல்லா வரும்''

**பைசல்:** முடிவு. ''என்ன பைசலாயிருக்கு கூட்டத்திலெ?'' அபராதம். ''ஒனக்கு அஞ்சி ரூபா பைசல் போட்டிருக்கு.''

**பைதா:** வண்டிச் சக்கரம்.

**பைதாப்பட்டை:** வண்டிப் பட்டை.

**பைய்ய:** ரொம்ப மெதுவாக.

**பைய:** மெதுவாக.

பொக்கு: அரைச்சாவி. ''பொக்கு புல்லே கண்டாலும் பய தக்கு புக்குண்ணு குதிச்சாலும்''— சொலவம். ''கடலே ரொம்பப் பொக்காயிருக்கு''.

பொக்குண்ணு: சீக்கிரமாய். "பொக்குண்ணு போயிட்டாரு"

பொக்கு நிலம்: சத்தில்லாத நிலம். சாரமில்லாத புஞ்சை.

பொக்குப்பய: ஆண்மை இல்லாதவன். பெருமை பீத்திக் கொண்டு அலேகிறவன்.

பொகைச்சல்: தொரத்தல். இறுமல். 'புகைச்சல்'.

பொங்கல்தடை: காப்புத்தடை. ஒரு கிராமத்தில் கொடைக்கு சாட்டும்போது வேத்து ஊர்க்காரர்கள் இருந்தால் அவர் களும் கொடையில் கலந்துகொண்டுதான் போக வேண் டும் என்பது. கொடைசாட்டிய பிறகு கிராமத்தார் யாரும் வெளியூர் பயணம் மேற் கொள்ளக்கூடாது — தடை— என்பது.

பொங்குத்தனம்: தற்பெருமை.

பொங்குதல்: மகிழ்ச்சிப் பெருக்கு.

பொச்சக்காப்பு: மற்றவர்களின் வசதியை நினேத்து வயிற் றெரிச்சல் படுதல். ''பொச்சாப்பு.''

பொசப்பத்தவன்: பிழைப்பு அற்றவன். பொழைப்பு அற்ற வன்.

பொசுக்குண்ணு: சீக்கிரம். ''பொசுக்குண்ணு போயி பொசுக் குண்ணு வா பாப்பாம்.''

பொசும்பல்: கனம் குறைந்த மழைத்தூற்றல்.

பொசை: புகலிடம். ''பொசை கெட்டுபோயி அலேயிருன்''

பொட்டக்கிறுக்கன்: உரலுக்குச் சேலேயை சுற்றி வைத்தா லும் அதையும் சுற்றிச்சுற்றி வருகிறவன். பொம்பளேப் பொறுக்கி.

பொட்டச்சி: பொம்பளே. பெண். ''பொட்டை''

பொட்டத்தரை: எதுவும் விளேயாத காடு. "பொட்டல்தரை"

**பொட்டரட்டு:** வெத்து அரட்டு. பொட்டைகளை அரட்டும் அரட்டு.

**பொட்டியாரு:** ஒருவரை இளக்காரமாகக் குறித்துச் சொல்லப்படும் சொல். ''பொட்டியாரு என்ன செய்வாரு இனி!'' ''பட்டுக்கிட்டாரே பொட்டியாரு!''

**பொட்டு:** துளி. ''ஒரு பொட்டுத்தண்ணி இல்லே.''

**பொட்டு:** கம்மங்கருதில் அன்னம் பிடிப்பதற்கு முன்னுள்ள நிலே. கம்மங் கருதில் அப்பியுள்ள மகரந்தம்.

**பொட்டு:** பாசி, தட்டை முதலிய பருப்பு நெத்துக்களை மூடிக் கொண்டிருப்பது.

**பொட்டை:** குருடு. ''ஒரு கண்ணு பொட்டை''.

**பொட்டைநாழி:** கைநாழி.

**பொடலாப் போக:** வசவு.

**பொடவு:** பொந்து.

**பொடிசு:** சிறுசு. இளநங்கை. ''பொடுசு''

**பொடிவட்டு:** சிறிய சைஸ். பொருட்களை குறிப்பது. பொடிவட்டு × பருவட்டு.

**பொடிவிதைப்பு:** புழுதி விதைப்பு.

**பொடி வைத்தல்:** டக்கு வைத்து பேசல்.

**பொடுகு:** ரோமத்தலேயில் புறப்படும் சிறுபுண்.

**பொடுதலே:** பசளேக்கீரை இனம்.

**பொண்டான்:** எலியின் கள்ளவழி. ''எறைக்கான்''

**பொண்டான் வைக்கி:** புண் புரையோடியிருக்கு.

**பொண்டு:** பெண்.

**பொண்டு சட்டி:** பெண் இயல்பு கொண்ட ஆண் தோற்றம் உடையவன். எப்பவும் பெண்களோடு ஒட்டுதலாய் இருக்கும் ஆண்மை இல்லாதவன். இயல்பும் அசைவும் பெண்மையைப் போலிருக்கும்—அலி.

பொதி: நிறுத்தலளவை. (பொதி; துலாம்; வீசை).
வண்ணான் பொதி. ''துணிமூட்டை பொதியாக இருக்கு''
பொதிப் பருவம்; கதிரை பயிர் வயிற்றுக்குள் வைத்துக் கொண்டிருக்கும் பருவம். ''பொதி தள்ளீரிச்சா?'' ''நல்ல பொதிப்பருவம்!''

பொதிமாடு: சாமான்களைப் பொதி சுமக்கும் மாடு.

பொதிவு: பயிர் பொதியை வெளியே தள்ளும் பருவம்.

பொம்பரசு: பெண்ணரசு. பொம்பளை ராச்சியம். ''பாவம் பொம்பரசு'' —பெண்

பொம்பொரணி: பெண்களைப்பற்றி இளவட்டங்கள் தங்களுக்குள் பேசிக் கொள்ளும் சுவாரஸ்யப் பேச்சு.

பொம்மலாட்டுப் பண்றான்: படம் காட்றான்.

பொரணி: ஆட்கள் இல்லாதபோது அவர்களைப் பற்றி குறை பேசுதல். காணாமல் பேசுதல். அடுத்தவர்களின் அந்தரங்கங்களை தங்களுக்குள் பேசி மகிழ்தல்.

பொரதவண்ணான்: ஹரிஜனங்களுக்காக வெளுக்கவும், சவரம் செய்யும் உள்ளவன்.

பொரிக்கஞ்சட்டி: பொரியல் செய்வதற்கான சட்டி.

பொரி விளங்கா: பலகாரவகை

பொருக்கக் குடுத்திட்டான்: நையப்புடைத்தல்.

பொல்லம் பொத்துதல்: ஓட்டையான நார்ப்பெட்டி. கடகப் பெட்டிகளை செம்மை செய்தல்.

பொலி: களத்தில் தானியத்தின் குவியல்.
கதிர் வட்டத்தில் பிணையலைப் பத்தும்போது சம்சாரிகள் 'பொலி பொலி' என்று சொல்லுவார்கள். தானியத்திலிருந்து பதர், தூசி முதலியன போவதற்காக சுளகில் எடுத்து வீசும் போதும், 'பொலி பொலி' என்று சொல்லுவார்கள்.

வானவில் வடிவில் வீசுதலுக்கு 'வீசு பொலி' என்றும் மேல் கீழாக வீசுதலுக்கு 'குத்துப் பொலி' என்றும் சொல்லுவார்கள்.

தைமாதம் முதல்நாள் சூரியோதயத்துக்குமுன் கண்ணிப் பிள்ளையையும் தும்பைச் செடியையும் அல்லது குழையையும் சேர்த்து வீட்டு வாசல்கள் அனைத்திலும் கட்டித் தொங்க விடுவார்கள். இதற்கு 'பொலி கட்டல்' என்று பெயர். ''காப்பு கட்டல்''

பொலிச்சல்: ஆடுமாடுகளின் ஆண் பெண் சேர்க்கை.



பொலிப்பலகை: பொலி வார உதவும் பலகை. ''பொலிவாரிப் பலகை''

பொலிப்பாட்டு: பிணையல் அடிக்கும்போது களத்தில் வந்து கவிராயர் பாடும் பாட்டு.

பொலிமாறு: வாளிப்பு மாறு.

பொலிவாருதல்: பிணையலில் சுற்றிவரும் மாடு பொலியை அள்ளித் தின்பது.

பொலையாட்டு: சொன்னதையே மாறிமாறி திரும்பவும் சொல்லிக் கொண்டு இருப்பது. ''பொலையாட்டுப் பண்ருன்.''



பொழிதண்டு: இருபுறம் பாத்திகளாக ஊடே வெறும் வரப்பாக மட்டுமுள்ளதற்கு பொழிதண்டு எனப்பெயர்.

பொழுதண்ணைக்கும்: சதா. அடிக்கடி. ''இது என்ன சும்மா பொழுதண்ணைக்கும் நோண்டிக்கிட்டு ஆமா...''

பொழுது: சூரியன்.

பொழுதுஅடைய: சூரியன் அஸ்தமிக்க.

பொழுதுஇருக்க: நேரமிருக்க. ''பொழுதிருக்க வா''

பொழுது இல்ல: நேரம் கிடைக்கல.

பொழுதுசாய: சூரியன் அடித்திரும்ப

பொழுதுபெறப்புட: சூரியன் உதிக்க.

பொழுதுமுகம்: சூரிய உருவம்.

பொழுதோடபொழுதா: நாள் முழுவதும்.

பொளி: எல்லை.

பொளிக்கல்: புஞ்சையின் எல்லையைக் காட்டும் கல்.

பொளிமிதித்தல்: அடுத்தடுத்துள்ள இரு கம்பம்பிஞ்சைகளில் ஒருவர் கதிர் பெறக்கும்போது இரண்டு புஞ்சைகளுக்கும் ஊடே உள்ள கதிர்களை எந்தப்பக்கம் சேரும் எனப் பார்த்து அந்தப் பக்கம் சாய்த்து மிதித்துவிடுதல்.

பொறப்பாடு: உடம்பில் தோன்றும் கட்டி. 'பெறப்பாடு.'

பொறுக்க: நிரைய்ய. சரியானபடி. ''பொறுக்க வாங்கி கட்டிக்கிட்டான்.'' தாள. ''வலிபொறுக்க முடியல.''

பொன்னப்பய: பெண்ணுக்கு அடிபணிந்தவன். பெண்களின் அதிகாரத்துக்கு உட்பட்டவன்.

பொன்னம் போல: மெதுவாக. ஓசையெழாமல். ''பொன்னம் போலஒரு முத்தம்.''

## போ

போக்கத்தப்பய: வாழ்க்கை நடத்த ஒவ்வொருவருக்கும் ஒரு தொழில்ப் போக்கு இருக்கிறது. இவனுக்கோ ஒரு போக்கும் இல்லை.

**போக்கழிஞ்சி:** போய்கழிந்து ''எங்கே போக்கழிஞ்சி போனுன்.?''

**போக்காட்டி:** இறந்தவள்.

**போக்காட்டு:** இறந்தவர்களைக் குறிப்பிடுவது.

**போக்காலம்:** போகும்காலம். ''போங்காலம்'' ''போக் காலம் அடுத்திருச்சா?''

**போக்காளன்:** இறந்தவன். ''போக்காளி''.

**போகிணி:** குடிக்கத்தண்ணீர்மொள்ளும் ஏனம். ''போணி'' ''போகிணி.'' ''போகாணி ''

**போங்காலம்:** மரணம்.''ஏலே ஒனக்கு போங்காலம் வந் திருச்சி!''

**போட்டுத்தள்ளீட்டான்:** காரியத்தை வெற்றிகரமாக முடித்து விட்டான்.அடிச்சிநகட்டீட்டான்.

**போட்டுவச்சாத்திம்பான்,தூக்கிவிட்டாச் சுமப்பான்:** சொந்த புத்திஇல்லாதவன்.உடம்புதான்;மனசு கிடையாது.

**போடுசு:**''ஆள்ரொம்ப போடுசாக்கும்இப்போ.''

**போடுபருத்தி:** கொசுரு;பருத்தி பகிர்ந்து கொடுக்கையில் கடைசியில்கொஞ்சம் போட்டுக் கொடுக்கும் பருத்தி,

**போண்டி:** யாவும்இழந்து சட்டியெடுக்க வேண்டிய நிலே.

**போணி:** அன்றைக்குமுதல்முதலில் ஆகும் வியாபாரம்.

**போத்து:** கால்நடைகளில் ஆண்.

**போர்மை:** பெருமை.

பொரியை பொரிச்சி வச்சி- அத்தை நீங்க
பொழுதிருக்கச் செத்தீராஞல்
போர்மையுள்ள அண்ணன் மகள்—நான்
போக வரத்திண்ணுமுவேன்

—நாட்டார் பாடல்.

**போல்:** வண்டியின் உறுப்பு. ''போல் மரம்''.

**போன இடம் புல் முளைச்சிப் போச்சு:** இறந்து போய் எத்தனையோ ஆண்டுகளாகி விட்டது.

**போனேம் வந்தோண்ணு:** சீக்கரமாகப் போய் வருதல். ''போய்ட்டு சீக்கிரமா போனேம் வந்தோண்ணுவா.''

## ம

**மக்கர்:** தகராறு. புரியாத, விளங்காத தகராறு. ''மக்கர் பண்ணுது.''

**மக்கனக்கேடு:** மானக்கேடு.

**மக்காளிக்கணக்க:** கட்டபொம்மு சண்டையில்வரும் வெள்ளைக் காரன். மக்காளி. (மெக்காலே)

**மக்குவாய்:** கீழ்ப்பல் வரிசை மேல்வரிசையை விட முன்தள்ளி அமைந்த வாய். உதடுகள் மலர்ந்து அமையாமல் வாயினுள் புகுந்து அமைந்திருப்பது.

**மக்யாநாள் :** மறுநாள்.

**மகரம்:** ஆண்களுக்கு 16 வயதில் வரும் தொண்டைக்கட்டு. ''மகரக்கட்டு''. வீட்டைக்கட்டும்போது ஜன்னலையோ, வாசலையோ 'புனல்போல' விரித்துக் கட்டுதல்; அடிப் பாகம் சிறுத்தும் நுனிவிரிந்தும்.

**மகுட்டுரம்:** திமிர். தலைக்கனம்.

**மகுடிக்கி:** மழைத்தண்ணீரை நிலம் வேண்டிய மட்டும் 'குடித்த' பிறகு மீதியை வெளியே விடுவது. மகிழிக்கி.

**மகுந்திரிச்சி :** சோறு வெந்து கொண்டிருக்கும் போதே மண் பானை இரண்டாகப் பிரிந்து விரிந்து விடுவது.

**மகுமை:** ஊர்பொதுப்பணம். ''ஊர் மகுமை.'' ''மகுமைப் பணம்'' ''இனமகுமை''.

**மங்காளா:** மண்காலை. வசவு. ''நல்...ல மங்காள கணக்க''

**மச்சம்:** தடயம்.

**மச்சாவி:** மச்சான் என்பதில் 'ன்' மரியாதை இல்லையென்று மச்சாவி எனப்படுகிறது.

மச்சு: மாடி.

மச்சுவீடு: கூரைக்கடியில் தீயினால் பாதிக்கப்படாதவாறு மண் தட்டட்டி அமைத்த அறை.

மசக்கை: இளங்கர்ப்ப காலத்தின்போது உடம்பில்த் தோன்றும் இன்ப அவஸ்த்தை.

மசகு: வண்டிக்குப் போடும் மை. ''வண்டிமை'' ஆமணக்கு விதைகளைக் கரிக்கி மையாக ஆட்டியது.

மசணை: சண்டி. ''மசணப்பயல்.''

மசிஞ்சிருச்சி: நன்ருக வெந்து விட்டது.

மசியமாட்டான்: இடங்கொடுக்க மாட்டான். மசிதல்—வசப்படுதல்.

மசுர்: ரோமம். ''மசுரு ஒண்ணு போச்சுபோ.'' ''மயிரு.''

மஞ்சக்காப்பு: மஞ்சளும், வேப்பங்கொழுந்தும் சேர்த்து அரைத்தது. (அம்மை போன்ற புண்களுக்கு மருந்தாக.)

மஞ்சக்குளிக்கான்: அடுத்தவன் பணத்தை செலவழித்து ஆனந்தங்கொள்வது.

மஞ்சமணக்காது: காரியம் ஆகாது. ''ஒன் மஞ்ச மணக்காது அங்கே''

மஞ்சளைத்தொட்டாலும் கரியாப்போகும்: ராசி இல்லாதவன்.

மஞ்சி திருப்புதல்: கூடத்தின் ஒரு கடைசியில் கோப்பாளச் சுவர்க்கு பதில் சாய்வாய் மறைத்தல்—தண்ணிப் பாத்தியதை இல்லாவிட்டால் கோப்பாளச் சுவர் வைப்பது.

மஞ்சுவால்: மாட்டு வால்வகைகளில் ஒன்று.

மட்டங்க: ஒத்த வயசு. இளவட்டங்கள். ''நாட்டுக்கு நாட்டு மட்டம்; நாம ரெண்டும் சோடி மட்டம்'' —நாட்டார் பாடல்.

மட்டத்தரம்: ஒரே சோட்டு. ஒரே அளவுள்ள, ''மட்டத்தரத்துப் பிள்ளைகள்.''

மட்ட மல்லாக்க: மல்லாந்த படியே. 'மக்க மல்லாக்க' ''மட்ட மல்லாக்க விழுந்து கிடக்கான்''

மட்டாந்திரிச்சி: குறைந்து விட்டது. ''காற்று மட்டாந்திரிச்சி''

மட்டி: உதடு. ''மட்டியக் கடிக்கான்.'' வசவு. ''மட்டிப்பய''

மட்டிக்கொம்பு: மாட்டுக்கொம்பில் ஒரு வகை.

மட்டை: மட்டைக்கொம்பு. பந்து எழும்பாமல் உருண்டு திரும்பினுல் மட்டை என்பார்கள்.

மட்டையடி: எறியும் பந்து தரையோடு ஒட்டி உருண்டு வருவது. இதையும் எடுக்கலாம் அப்படி எடுத்தால்; எறிந்தவர் அவுட். (பிள்ளையார் பந்து விளையாட்டில்).

மடக்குஏர்: பொன்னேர். (தங்க ஏர்) நாள்ஏரன்று இரண்டாம் முறையாகச் சென்று உழுதல்.

மடக்குவரி: முதலில் போட்ட வரி காணுமல் இரண்டாவது போடும் வரி.

மடக்கு வால் சுழி: மாட்டின் வாலுக்குள் சுழி இருப்பின் மடக்குவால் சுழி. ''மடக்கு வால் சுழி மன்னனுக்கு ஆகாது''—சொலவம்.

மடம்: கொழுவின் மேல் நுனி.

மடி: கட்டு மரத்திலும், தோணியிலும் சென்று மீன்பிடிக்க உதவும் ஒரு வகை வலே. ''மடிமீன்'' ''இன்னிக்கு மடி போகலே.''

மடிச்சிலேப்பை: ரூபாய்த்தாள் வருவதற்கு முன் வியாபாரிகள் நாணயங்களே போட்டு வைக்க இரண்டு மூன்று அறைகளேக் கொண்ட துணிப்பை வைத்திருப்பார்கள். அதை ஒரு நூல் கயிற்ருல் சுற்றி அருநாக்கயிற்றில்சுற்றி இடுப்பில் சொருகிக் கொள்வார்கள்.

மடிப்பருத்தி: பகிர்வதற்குப் போடும் போது கொஞ்சம் மடியில் வைத்துக்கொள்வது.

**மடுப்போட்டிருச்சு:** ஆடு, மாடு ஈனுவதற்கு முன்பு முலைக்காம்பில் ஏற்படும் மதர்ப்பு. மடுப்போட்ட ஒரு மாதத்தில் மாடு ஈன்றுவிடும்.

**மண்டாடி:** வள்ளத்தை ஓட்டும் தலைவர்.

**மண்டாளம்:** நல்லபாம்பு தானாகப்படமெடுத்து ஆடி விளையாடுவது.
''பண்டாரம் புஞ்சையிலே
பருத்திகளை வெட்டயில
சண்டாளம் பாம்பு வந்து
மண்டாளம் போடு தடா''

—நாட்டார் பாடல்

**மண்டியும் மகிளியுமாய்:** தூர்வை. சேறும் சகதியும்.

**மண்டீட்டான்:** ''மண்டியைக் கூட விட்டு வைக்கலே. கஞ்சியை மண்டீட்டான்''—திருப்தியாகக் கஞ்சி பூராத்தையும் குடித்துத் தீர்த்து விட்டான்.

**மண்டீட்டு:** ''அங்கேயே மண்டீட்டுக்கிடக்கான்''—காரியம் முடியாததால் அங்கேயே சுற்றிக்கொண்டு கிடக்கிறான்.

**மண்டை உள்ளளவும்:** உயிர் உள்ளளவும். ''அவன் மண்டை உள்ளளவும் அப்பிடித்தான் இருப்பான்''

**மண்டைக்கனம்:** கர்வம். ''பயலுக்கு மண்டைக்கனம் ஜாஸ்தியாயிட்டது''

**மண்டைப் புழு உளத்துது:** முடிவு காலம் வந்தாச்சி. ''ஏலே ஒனக்கென்ன மண்டைப்புழு உளத்துதா?''—
தாங்க முடியாத சேட்டை செய்ய ஆரம்பித்து விட்டான் என்பது.

**மண்டையைப் போட்டுட்டான்:** செத்துப் போனான்.

**மண்டை விலங்கு:** மாட்டுச்சுழி. மாட்டின் முன்நெற்றியில் இரண்டுசுழிகள் இடவலமாயிருந்தால் மண்டை விலங்கு.

**மண்ணள்ளிப்போடு:** காரியம் உருப்படாது என்று தெரிந்து வெறுப்பில் கூறுவது.
புதைகுழியை மூடும் முன் பாத்தியப்பட்டவர்கள் போடும் கை மண்.

மண் தாங்கி: வாசல் நிலைக்கு மேல் வைக்கப்படும் நீண்டகல். அதன்மேல் வைக்கப்படும் மண்ணை அது தாங்குகிறது. ''மந்தாங்கி''

மணிக்குடல்: சிறுகுடல். ''இரு உன் மணிக் குடலை உருவீருரேன்''

மணிகொண்டடிச்சதுமாதிரி: கணீரென்ற குரல் ஒலியைக் குறிக்க.

மணிப்பிரண்டைக்கிழங்கு: இது கரிசல் காட்டில் கிடைக்கும் ஏர்கிழங்கு. மாட்டுக்கு கழுத்து வீங்கி இருந்தால் இதை உரசிப் பூசுவார்கள்.

மணியம் பண்றான்: அதிகாரமில்லாமலேயே செய்யும் வல்லதிகாரம். ''இல்லாத அட்டமணியம் பண்ணிக்கிட்டு அலையுதான்''

மணியாச்சிப்பலகை: தீத்துப்பலகை. பூசியமண்ணை தீற்றி மிருதுவாக்கும் பலகை.

மணியாப்போச்சி: அருமையாய் ஆகிவிட்டது.

மத்தி: யோசனை. ''என் மத்தி மண்ணுப் போச்சி'' மதி. 'மத்தி மிரண்டு போயி அலையுதான்''.

மதக்கம்: மந்தநிலை.

மதித்தல்: உத்தேசமாகச் சொல்லும் அளவு. ''நாலு கோட்டைக்கு மதிச்சோம். மூணு கோட்டைக்குத் தான் இருந்தது.'' ''மதிப்பு.''

மதிப்பு: ஒரு வேலையைச் செய்ய இத்தனை ஆட்களாகும் எனப் பேசி, செய்து முடிப்பது.

மதிப்புவேலை: காண்ட்ராக்ட்வேலை. மதிப்புவேலை × நேர்வேலை.

மதியம்: புளியம் முத்துக்களைக்கொண்டு விளையாடும் ஒரு விளையாட்டு. (புளியம்முத்து—புளியம் விதை).

மதியம்: நடுப்பகல்.

மதினி: அண்ணி. அண்ணனின் மனைவி.

மதுக்குடம்: கோயில் பொங்கலுக்குப் பல நாட்களுக்கு முன்பு பலவகைத் தானியங்களை இடித்து ஊறவைத்துப் புளிக்கச் செய்வார்கள். இதற்கு மதுக்குடம் எனப்பெயர். பொங்கலன்று இரவு மதுக்குடம் போடப்பட்ட இடத்திலிருந்து மேளதாளங்களுடன் வாண வேடிக்கைகளுடன் மதுக்குடம் கோயிலுக்குக் கொண்டுவரப்படும்.



மந்தி: ஒரு விளையாட்டு. உட்கார்ந்து கால்களுக்குள் கைகளைக் கொடுத்துக் கொண்டு விளையாடும் ஒரு விளையாட்டு.

மந்தைப்புஞ்சை: ஊரையடுத்துள்ள புஞ்சை. ''மந்தையடி புஞ்சையும், மதகடி நஞ்சையும்''—சொலவம்.

மப்பு: திமிர். சேட்டை. மதக்கம். பயலுக்கு மப்பு ஏறிப் போச்சி. ''திண்ணமப்பு. தீவாளிக்கொழுப்பு.''

மப்புக்காட்டிப்பத்து: மாட்டை ஓட்டுவதற்கான ஒலி. மாட்டைத் திசை திருப்பும் போது ஒலிக்க வேண்டியது. இரு உதடுகளையும் மடக்கிக் கொண்டு அழுத்தி, காற்றை சுவாசப்பைக்குள் போகாமல் வாய்க்குள் மட்டும் போகுமாறு கனஅழுத்தம் கொடுத்து எழுப்பும் ஒலி.

மம்மல்ல: பொழுது விடியுமுன்பு.

மம்மா: ஈடு இணை இல்லாத, தோற்கடிக்க முடியாத வெற்றியாளி. அசைக்க முடியாதவன். நெருங்க முடியாதவன்.
''ஏலே நீ என்ன பெரிய மம்மாவோ?''
''ஓம் மனசுக்குள்ளார பெரிய மம்மாண்ணு நெனப்போ?''

மயிலை: மாட்டின் நிறம்.

மரப்பாம்பிள்ளை: பிள்ளைகள் விளையாட மரத்தாலான பொம்மை.

மரம்தடவுதல்: பரம்படித்தல்.

மரவணே: பெரிய காரைவீடுகளில் நிரந்தரமாகப் போடப்பட்டிருக்கும் திருமணமேடை.

மரவை: மரத்தாலான ஏனம். உப்பு மரவை. சாப்பிடும் மரவை.

மருகு: 2-ஆம் முறை பிறக்கும கதா. மருகைககதா.

மருகுதல்: ஏங்குதல். தீராத ஏக்கம்.
''நினேச்சு நினேச்சு மருகிருன்.''
''தொங்குதடி முந்தி
தொவளுதடி கொங்கை
மங்குதடி சாயம்
மருகுதடி கண்ணு'' —நாட்டார்பாடல்.

மருகை-பொதி: பருத்தி மருகை.

மருந்து வச்சிட்டா: ஆண் தன்னிடம் பிரியமாயிருப்பதற்காக பெண் வைக்கும் வசிய மருந்து.

மருவாதி: மரியாதை. ''மருவாதியாச் சொல்லிப்போட்டேன் ஆமா.''

மரை கழண்டு போச்சி: பைத்தியம் ஆரம்பமாகிவிட்டது.



மல்: கைமரங்களே இணேக்கும் மரம். மாருப்பு மல். கத்திரிமல்.

மல்பீசு: ஒரு ரக வெள்ளேத்துணி.

மல்லாரி: விவஸ்தை கெட்டவள். காமி. ''மானங்கெட்ட மல்லாரி மத்தியானஞ் சவ்வாரி''—சொலவம்.

மல்லுக்கு மாகாணிப்பங்கு: மல்லுக்கு தயாராகி விட்டவனுக்குக் கொஞ்சம் கூடவே பங்கு கிடைக்கும் என்பது.

மல்லே: தீப்பூடு. ஒட்டுண்ணி இனம். முக்கியமாக குதிரை வாலிப் பயிரில் தோன்றும்.

மல்லேயங்கூத்தாடி: ஒருகம்பள ஜாதி. கொரளிவித்தை போல் தொழில் செய்வார்கள். கழைக் கூத்தாடி அல்ல.

மலட்டுப்பயிர்: பலன் தராதபயிர்.

மலத்திட்டான்: நிமுத்திட்டான். மறுத்துவிட்டான். ''ரூபாயை வாங்கிட்டு மலத்திட்டான்''

மலரணை: சொத்தை ஒருத்தரின் பேரில் நம்பிக்கையாய் எழுதி வைத்தல்.

மலுவுதல்: கால்நடைகளில் அதிகப்படியாய் வளர்ந்து விட்ட ரோமத்தைக் கத்திரியால் அல்லது வளைந்த கத்தியால் ஒழுங்கு பெறத் துண்டிப்பது.

மலேப்பு: ஒரு காரியத்தை நினைக்கும் போதே அதை செய்ய முடியாது என்று தோன்றிவிடுதல். சோர்வு. திகைத்து நிற்றல். கஷ்டப்படுதல். ''காரியத்தில் இறங்க யோசித்தல் ''மாடு வேலேக்கி ரொம்ப மலேக்கி.'' மலே போல்த் தோன்றுதல்.

மவுசு: கிராக்கி. மதிப்பு.

மழுங்கிப்போனுன்: கூறு மழுங்கிப்போனுன். சுணைமாறிப் போனுன்.

மழுமாறி: கூர்மைமழுங்கிய. கூர்மைமாறிப்போன. ''மழு மாறிப்பய.''

மழைஅற்பம்: (ஐப்பசி,கார்த்திகை மாசங்களில்)
''கமலே மேகமும் கழுதை வாடையும்
மாலே உப்பும் மழை அற்பம்.''
கழுதை வாடை=வடவாடை. உப்பு=உப்பங்காத்து.

மழைக்கஞ்சி: மழை பொய்த்துப் போகும் போது ஊர்கூடி வீடுவீடாய்ப்போய் பிச்சைக்கஞ்சி போல் எடுத்துவந்து பொது இடத்தில்கூடி அனைவரும் துக்கத்தோடு குடிக்கும் கஞ்சி.

மளிக்கிட்டான்: கம்பால் அடித்து விட்டான்.

மறி: வெள்ளாட்டின் ஈனாத பருவம். ஆடு.

மறித்தல்: அமர்த்துதல். போகக் கூடாதென்று சொல்லல். ''கிடை மறிச்சிருக்கு'' ''ஆடுமறித்தல்''— ஆடு அமர்த்துதல். ''ஆடு மறிச்சவன் பிஞ்சை விளையுமா; வெறுமனே அங்கலாச்சிக்கிட்டிருக்கிறவன் பிஞ்சை விளையுமா?''

—சொலவம்.

மறுகால்: குளம் நிறைந்து கலுங்கு வழியாக தண்ணீர் ஓடுவது.

மறுபேச்சு: முடிவுக்குப் பிறகு பேசும் பேச்சு. ''நான் சொன்னேண்ணு சொல்லுங்க... மறுபேச்சுப் பேசமாட்டான்''

மறுமாடு கட்றநேரம்: ரெண்டாவது தடவை மதியத்துக்கு மேல் உழவுக்கு மாடு கட்றநேரம். சுமார் 3 மணி. (மாலை)

மறுவட்டம்: முதல் தடவைப் பிணையலில் சரியாக விடாத கதிர் மணிகளை இரண்டாவது தடவையாகப் போட்டு பிணையல் அடிப்பது. ''மறுகளம் பாய்ச்சுதல்''

மறுவீடு: புதுத்தம்பதிகள் பெண்வீட்டிற்கு விருந்துக்குப் போதல்.

மன்னபுலி: பாராட்டுச் சொல். புலிகளில் தலைமையானது. மன்னன் போன்றது. ''அடிச்சாண்டா மன்னபுலி''

மன்னளை: முதல் தாம்பூலம். முதல் மரியாதை. ஊர்ப்பொது நிகழ்ச்சிகளில் திருநீர், பிரசாதம், வெற்றிலை கொடுப்பதில் உள்ள முதல், இரண்டாவது வரிசைமுறை.

மன்னுதல்: தானியமுள்ள கோனிச்சாக்கை வெளிப்புறமாகச் சுருட்டுதல் ''சாக்கை மன்னு.''

மனஅக்கியானம்: எதன் பேரிலும் ஒரு அசூயை. சந்தேகப் பட்டுக்கொண்டே எதையும் நம்பாமல். ''மனஅக்யானம் புடிச்சவன்.''

மனசிலேயே நீத்திட்டான்: வேதனையை வெளியில் சொல்லா மல் மனதிலேயே வைத்து, தன்னைப் பாதிக்காத வகை யில் அவ்வேதனையில் இருந்து விடுபட்டவன்.

மனம் விட்டுப் போச்சி: தோல்வி கண்டு துவண்டு விடுதல். வெறுப்பின் மிகுதியால் கைவிட்டு விடல்.

மனமனச்சாட்சியா அப்பிடி அப்பிடி: அவுக கூடச் சண்டையா? —கேள்வி. பதில்:- சண்ட ஒண்ணுமில்ல...சும்மா... மன மனச் சாட்சியா... அப்பிடி அப்பிடி. அவுகளும் பேசுற தில்லை. நாங்களும் பேசுறதில்லை.

மனமாத்தச் செலவு: குடும்பச் செலவு.

மனுச மக்க வருவாக போவாக: ''பெரிய மனிதர்கள் வருவார் கள், போவார்கள். இப்படியா தலைய விரிச்சிப் போட்டுக் கிட்டு இருப்பாக.'' கண்டித்து புத்தி கூறுதல்.

மனுசரண்டாத மனக்குரங்கு: குணங்கெட்டவன். ஆதரவு காட்டி அணைத்துச் செல்ல முடியாத சிடுமூஞ்சி. சள்ளு புள்ளுண்ணு எரிஞ்சு பேசுபவன். யாருடனும் சௌஜன்ய மாய் பழகத் தெரியாத இயல்புடையவன். மனுசரையே அண்டாத குரங்கு மனத்தவன்.

மனுசவாடை: கால்நடைகளுக்கு மோப்பசக்தி அதிகம். ஒவ் வொரு மனித உடம்பும் ஒவ்வொரு விதமான வாடை (நாற்றம்) வெளியிட்டுக் கொண்டே இருக்கும். சில பசு மாடுகளுக்கு சிலருடைய வாடை பிடித்துப் போகும். அவர்கள் கரந்தால் பாலை குணமாக சுரந்து கொடுக்கும். பிடிக்காத வாடையுடையவர்களைக் கண்டாலே வெருளும்.

மனுசனை மனுசனறிவான் மடநாயைத் தடிக்கம்பு அறியும்: மனுசனாய் இருப்பவர்கள் மனுசரை அறிந்து கொண்டு விடுவார்கள்; சிரமமில்லை அதில். மடையனை — மட நாயை— அறிந்து கொள்ளும் ''திறமை'' மனுசருக்கு இல்லை. அடி தடிக்கம்புக்குத்தான் உண்டு!

மனுஷியாயிருக்கா: பெரிய மனுஷியாயிருக்கா.

மனுவாதல்: மனு—உடம்போடு சேர்ந்து மனோ வளர்ச்சி. ''அப்படி இப்படி மனுவாய்க்கிட்டான்.''

மனுவாய்க்கிருச்சு: தானே பிழைத்துக் கொள்ளுமாறு வளர்த்து விடுதல். ''மனுவாக்கி விட்டிரணும்.''

## மா

மாகை: ருசி இனிமை. மோகம்.
''இளயவடியாள் மாகையும் ஏகாதசித் தோசையும்''
—சொலவம்.

மாச்சல் : கூச்சம். ''அங்க போக மாச்சலா இருக்கு''

மாசமா இருக்கிருள் : உண்டாகி இருக்கிருள். கர்ப்பவதி.

மாசூல். மகசூல். விளைச்சல்.

மாட்டுக்கால் தாண்டுதல்: ஒரு விளையாட்டு.

மாட்டுநிறங்கள்: 1 அத்திக்காய்ப்புல்லை. 2 கண்ணுடி மயிலை. 3 கரிசமால். 4 கருங்குரால். 5 கருஞ்செவலை. 6 கருத்த செம்பரை. 7 கருப்பு. 8 கருமயிலை. 9 கருவெள்ளை. 10 குரால். 11 சந்தணப்புல்லை. 12 சுத்தவெள்ளை. 13 செந்தாரைமயிலை. 14 செம்பரை. 15 செவலச்செம் பரை. 16 செவலை. 17 நாவெள்ளை. 18 பஞ்சகல்யாணி. 19 புல்லை. 20 புளியம் போர்செம்பரை. 21 மயிலை. 22 வெள்ளை.

மாடக்கொம்பு: மாட்டுக் கொம்பில் ஒரு வகை. மாடனுக்கு ஊட்டுக் கொடுத்த மாதரி:- பெரும் தீனி.

மாடுமிதிச்சிட்டது: சம்போகிக்க இயலாத ஆணைக்குறிப்பிடும் சொல்.

மாடு வெரட்டீருக்கு: பசு சினைப்பட்டிருக்கிறது.

மாண்டாம் : வேண்டாம்,

மாணி: ஆண்குறி. ''அவனுக்கென்ன, மல்லாக்கப் படுத்தா மாணி, குப்புறப்படுத்தாக்குண்டி''—சொலவம்.
ஒன்றுமில்லாதவனையும், பொறுப்பில்லாதவனையும் குறிப்பிடும் சொலவம்.

மாத்து: வெளுத்த உடுக்கை. சலவைத்துணி. 'உருமாத்து.'

**மாதாந்தம்:** மாதாமாதம். ''மாரியம்மா கோயிலுக்கு கடைசி வெள்ளிக்கு மாதாந்தம் போகிறேன்''

**மாந்தம்:** அஜீரணம். சிறுகுழந்தைகளுக்கு எற்படுவது.

**மாப்பிள்ளை:** மைத்துனனை மாப்பிள்ளை என அழைப்பார்கள்.

**மாப்பிள்ளைமினுக்கி:** இருங்குச் சோளத்தில் ஒரு வகை; பருராசியாகவும், மினுமினுப்பாகவும் இருக்கும்.

**மாப்பு:** மன்னிப்பு. ''இந்த ஒருதரம் ஒனக்கு மாப்பு; போ"

**மாம்புளி:** கார்த்திகைக்குச் சூந்து கொளுத்துதல்.

**மாமு:** துலுக்கர்களைப் பொதுவாக இந்து ஜாதியினரும், குறிப்பாகத் தெலுங்கர்களும் இப்படி அழைப்பார்கள்.

**மார்:** மார்பு. ''மாரடிச்ச கூலி மடிமேலெ''— சொலவம். பருத்திச் செடியின் காய்ந்தமார். பருத்திமார்.

**மாராணி:** பெண்களின் மார்பில் ஏற்படும் சிலந்தி.

**மாராப்பு:** மாராப்புச் சேலை.

**மாரிமூலை:** வடகிழக்கு மூலை.

**மால்:** எல்லை. ''நான்குமால்''

**மால்கட்டிட்டான்:** பேய் பிசாசு நெருங்காமல் எல்லை கட்டிட்டான்.

**மாலைக்கயிறு:** நூல் நூற்கும் ராட்டினத்தில் சக்கரத்திற்கும் கதிருக்கும் சேர்த்து—இணைக்கப்—போடப்படும் கயிறு.

**மாலைப்பதினி:** மாலை நேரத்தில் பனையிலிருந்துஇறக்கப்படும் பதநீர்.

**மாலை பூத்திருச்சி:** மாலை பூத்தல். கல்யாணயோகம் வந்து விட்டது.

**மாவத்திண்ணுப் பணியாரமில்லெ:** ஏதாவது ஒன்றுக்குத் தான் ஆசைப்படணும் என்பது.

மாறல்: 'மாத்து'. கைமாத்து. பொறுப்பில். "உன் மாறல்லெ ஒரு அம்பது ரூபாய் பார்த்து கொடு"

மாருட்டம்: மனக்கோளாறு. கிறுக்கு. "புத்தி மாருட்டம்."

மாறுகால், மாறுகை வாங்கிட்டான்: ஒரு குரூரமான பழி வாங்குதல். இடதுகாலேயும், வலதுகையையும் அல்லது வலது காலேயும், இடது கையையும் வெட்டி விடுதல்.

மான்சூர்: மானேஜர். "மான்சூர் கிட்ணப்ப நாயக்கர்"

மானுங்காணியாக: தாறுமாருக. முறை கேடாக. மானுவாரி நிலத்தைப்போல கேள்வி கேட்பாடில்லாமல். "மானுங் காணியாய் பேசீட்டான் என்னெய"

மானுமருகுருன்: மான் போல மிரண்ட பயந்த சுபாவத்துடன் கெஞ்சுகிருன்— இதை செய்து கொடுத்தால் ஒழியத் தீராது என உருக்கமாகப் பார்த்தவர்கள் இரக்கப்படும் படி மருகிமருகி, அதாவது போவென்று சொன்னுலும் போகாமல் மீண்டும் மீண்டும் தன் இக்கட்டான நிலேயை எடுத்துக்கூறி உதவி வேண்டி நிற்றல்.

## மி

மிச்சம் மிஞ்சாடி: மீதி. "ஏதாவது மிச்சம் மிஞ்சாடி இருக்குமா?" "மிச்ச சொச்சம்."

மிஞ்சி: காலில் அணியும் அணி; கால் பெருவிரலுக்கு அடுத்த விரலில்.

மிஞ்சி: அதிகமாய். "என்ன பேச்சு ரொம்ப மிஞ்சிப் போகுது?"

மிஞ்சி: மிச்சம். "சாப்பாடு மிஞ்சிப் போச்சி"

மிதிகல்: கமலேயைத் தாங்கிக் கொண்டிருக்கும் கல். கமலே இறைப்பவன் இதில் மிதித்துக் கொண்டுதான் போகணும். "கமலேயின் பாதங்கள்."

மிதிகொப்புமில்ல பிடி கொப்புமில்ல: அனுதரவு.

**மிராட்டிப்பய:** வசவு. அந்தக்காலத்தில் குளிக்காமச் செய்யா மலிருக்கும் மராத்தியர்களைப் பார்த்த தமிழன் அவர்களை இழிவாகக்கருதி அதையே ஒரு வசைச்சொல் ஆக்கியிருக் கிறான். 'இதுபோல் ''கொங்கணப்பய'' என்பதும்; இங் கேயேயுள்ள ஜாதிகளைப் பற்றியும் கூட நிறைய்ய உண்டு இப்படி!. காலம் இப்போது எவ்வளவோ மாறிவிட்டது. ஆனாலும் வசவுகள் அப்படியேதான் இருக்கின்றன இன்னும்!

**மின்னி:** பயத்தங்காய் போன்று சிறியதாய் காட்டில் தானாக முளைத்திருப்பது.

**மின்னுக்கு:** முன்னுக்கு. முன்னாலே. ''மின்னுக்கு வாயேம்லெ இப்பிடி''

**மினுக்கழிவு:** நத்தம் புறம்போக்கு, என்பது போல.

## மீ

**மீறீட்டான்:** ஆள் உண்டாயிட்டான்.
''இப்ப ஆளு நல்லா மீறீட்டான்''

**மீன்பாடு:** மீன்பிடிப்பு. மீன் கிடைத்தல். மீன் அறுவடை.
''மாபாவி போன இடம் மீன்பாடு அத்துப் போச்சி''
—சொலவம்.

## மு

**முக்கணமுடிச்சி:** முக்கணியில் போடும் முடிச்சி.

**முக்கணி:** காளைமாடுகளுக்கு மூக்கணங்கயிறு போடுவது போல பசுமாடுகளுக்கு மூக்கைக் குத்தாமலேயே வாயை சுற்றி ஒரு வட்டக்கயிறும் அதிலிருந்து கன்னம் வழியே கொம்பைச் சுற்றி ஒரு இணைப்புக் கயிறும் வரும். ''முக் குணி''.

**முக்களிக்கி:** தொட்டியிலுள்ள தண்ணீருக்கடியில் ஏதாவது இருக்கா என்று வாயை முக்கித்தேடுவது.
''மாடு ஊறத்தண்ணியை முக்களிக்கி''

**முக்காட்டுப் பொண்ணும் வல்ல வெட்டு மாப்பிள்ளையும்:** ஒரே சமயத்தில் ஒருவரை ஒருவர் சாமர்த்தியமாக 'நினைத்து

ஏமாற்றிக் கொண்டதும் இருவருவமே ஏமாந்ததும்! இது ஓர் கதையை அடிப்படையாகக் கொண்ட சொல்ப் பிரயோகம்.

முக்கா முக்கா மூணுதரம்: ஒரே தடவையில் பலிக்காதபோது மூன்றுதரம் முயற்சி செய்து பார்க்கிற போது சொல்லிக் கொள்வது!

முக்கு: திரும்புமுனை. திருப்பம். ''முக்கு மொடங்கிகள்ளெ பாத்து வண்டியெப் பத்தணும்'' மடக்கு. ''இந்தத் தெரு முக்குத் திரும்பிப்போ''

முகட்டுப்பாம்பு: கழுத்தில் கயிறு மாட்டிக் கொண்டு இறப்பது.

முகடு: தட்டை அல்லது ஓலையால் வேய்ந்த கூரை உச்சியில் மழைநீர் புகாமலிருக்கத்தட்டையால் நீளமாகப் போட்டுப் பின்னப்படுவது. ''முகடு போடணும்''

முகத்தாட்சண்யத்துக்கு முண்டச்சி முந்தி விரிச்ச மாதிரி: முகத் தாட்சண்யத்துக்கும் ஓரளவுதான் மதிப்புக் கொடுக்க வேண்டும்; அதுக்கு அடிபணிந்து விட்டால் ஆபத்து. (முந்தி விரித்தல்—கூடப்படுக்க சம்மதித்தல்.)

முகத்தாட்சண்யம்: பார்த்தவுடன் ஏற்படும் மரியாதை. தட்டிச் சொல்ல முடியாமை.

முகத்துல அடிச்சிப் போச்சு: செழிச்சுப் போச்சி. ''முட்டையாத்தின்னு முகத்தில அடிச்சிப் போச்சி''

முகத்துல முழியாதவன் கெனக்கப் பேசுறான்: நாளைப் பின்னெ அந்த ஆள் முகத்தைப் பார்க்க வேண்டி வருமே என்று நினைக்காமல் பேசிவிடுவது. இதுவரை பார்த்தே இல்லை என்பதுபோலப் பேசுவது.

முகத்தை மாற வச்சுக்கிட்டான்: பார்த்தவுடன் முகத்தை மறு பக்கம் திருப்பிக்கொண்டு விடுதல்.

முகத்தை முறிச்சிப் பேசுறான்: முகத்தைப் பார்த்தும் கூட தாட்சண்யம் காட்டாமல் பேசுவது.

முகவண்டல்: முகத்தில் வெள்ளைப்புள்ளிகள்.

முகவால்: குத்தியின் முனை.

முகுரணி: ஊருணி. கண்மாய்.

முங்கக் குளிச்சிற் வேண்டியது தான்: அரைகுறையாக இல்லாமல் காரியத்தில் முழுசாக இறங்கிவிட வேண்டியது தான்.

முச்சூடாய்: முழுவதும்.

முசுட்டு: முசுடு. உம்மணாமூஞ்சி. சிடுசிடுத்தவன்(ள்). ''அது ஒரு முசுட்டுக் குணம்ங்கே''

முட்ட: நிறைய்ய. அதிகம். நெருங்க. ''வயிறுமுட்ட'' ''முட்டப் பிடிச்சிவுழு.''

முட்டாசு :பச்சரிசி மாவினால் எண்ணெயில் வளையம் வளையமாய்ச் சுடப்பட்டு சீனிப்பாகில் ஊற வைக்கப்பட்ட பண்டம்.

முட்டிப்பு: இடைஞ்சல்.

முட்டு: பெண்களுக்கு வரும் மாதவிலக்கு. ''முட்டுத்துணி'' ''முட்டுவீடு''.

தாங்கல், ''படப்புகீழே சாயாமல் ஒரு முட்டுகொடு''. நெருக்கடி. 'முட்டுவெட்டுலெ வந்து நின்னா என்ன செய்ய முடியும்''

முட்டை ஓதுதல்: ஒரு மந்திர தந்திரச் செயல். ஒரு பொருள் காணாமல் போய் விட்டால் சிறுவர்களையும், (முற்காலத்தில் பெரியவர்களையும்கூட) மிரட்டி, எடுத்தவர்கள் கொடுத்து விடுங்கள். இல்லா விட்டால் முட்டை ஓதிஎறியப்போகிறோம் எனக் கூறுவர்.

முட்ல கட்னதாலிதான்: நிலை இல்லாதது.

முடக்குவால்: மாட்டுவால் வகையில் ஒன்று.

முடிச்சுக்கட்டைக்கு முரட்டுக் கோடாலி: முடுச்சு விழுந்த மரக் கட்டை சாமான்யமாக பிளவுபடாது. முரட்டுக்கோடாலி தான் வேண்டும்; முறண்டும், முறட்டுத்தனமும் கொண்டவர்களுக்கும் இப்படி ''ஒரு கோடாலி'' தான் வேண்டும் என்கிறது.

**முடிவான்:** பெற்றவரின் வயிற்றெரிச்சலை சம்பாதித்துக் கொண்டவன். வசவு.

**முடுக்கு:** விரட்டு. ''மாட்டை முடுக்கு.'' ''முடுக்குத் தெரு''

**முடை:** காளையை நினைத்து மாடுகளின் ''அறை''யில் கசியும் திரவம். ''பசுமாடு முடையடிச்சிருக்கு — காளைக்குப் போடணும்.''

முடைஞ்சல்—பற்ருக்குறை.

**முடைதல்:** பின்னுதல்.

**முண்டக்கண்ணு:** திரட்டு முழி. பிதுங்கு முழி. (முழி—விழி)

**முண்டம்:** நிர்வாணம். அம்மணம். ''முண்டமா வந்து நிக்கா!'' தலை நீக்கப்பட்ட உடம்பு. ''நடு ஓடைப்பாதையிலே ஒரு முண்டங் கிடக்காமே?'' வசவு. ''முண்டம் விருதா முண்டம்'' சாமான்களாகச் செய்வதற்கு முன்னுள்ள மரத்துண்டு. ''இந்த முண்டத்திலெ நல்ல கலப்பைக் குத்தி ஆகும். அதை தனியா எடுத்து வை''

**முண்டாசு:** கட்டும் தலைப்பாகை.

**முண்டாப் பனியன்:** கையில்லாதது.

**முத்தட்டுப் பாஞ்சிட்டான்:** காரியத்தை சாதித்து விட்டான். கிளித்தட்டு விளையாட்டில் கூறுதல்.

**முத்தம்:** முற்றம்.

**முத்தம் தெளிக்கிற நேரம்:** அதிகாலை நான்கு மணிக்குமேல் சூரிய உதயத்துக்கு முன்னல்.

**முத்திருச்சு:** தானியம் விளைந்து விட்டது. ''பயலுக்கு கொட்டை முத்திரிச்சு.''

**முத்துப் போட்டுப் பார்த்தல்:** இது ஒரு வகை ஜோஸியம்.

**முதகோசுல:** ஆரம்பத்திலேயே. முதல்லயே. ''முதகோசுல செய்திருக்கணும்''.

**முதுக்கங்காய்:** மிதுக்கவற்றல். ''மிதுக்கங்காய்''

**முந்தி:** முன்னல். ''இதெ நீ முந்தியே யோசிச்சிருக்கணும்'' முந்தானை. (மாராப்புச் சேலையின் முன் பகுதி.)

முந்திரிக்கொத்து: ஒரு வகைப் பலகாரம்.

முந்தி விரிச்சேன்: அவனுக்கு இணங்கினேன் (பெண் கூற்று).

முப்பாடை: மாட்டுச்சுழி. மாட்டின் முதுகந்தண்டில் இயற்கையிலுள்ள சுழிக்கு முன்புறம் மற்றொரு சுழி இருப்பின் அது முப்பாடை.

முப்பாரம்: வண்டியின் முன்பகுதியில் பாரம் அதிகமிருத்தல்.

முரசக்குணம்: முரட்டு அணுகல் முறைக் குணம்.

முரசல்: முற்டு. ''வெத்தலே ரொம்ப முரசலா இருக்கு''

முரண்டு: வீண்பிடிவாதம். இணங்காமை. எதையோ நினைத்துச் சொல்லாமல் குமுறுவது. ''அவுக அம்மா வந்துட்டுப் போனதில் இருந்து குழந்தை இப்படித்தான் முரண்டு பிடிச்சி அழுதுக்கிட்டே இருக்கு.''

முருக்கந்தடி: பனைமரத்தில் சாத்தியபடியே பாளை அறுவாளைத் தீட்டவும், அதை மிதித்து மரம் ஏறவும் பனையேறிகள் உபயோகிப்பது.

முருசல்: முருசல் பாத்தி—தோட்டத்தில் பாத்தியமைக்கும் போது எந்த வரிசையிலும் சேராத பாத்தி. ''அந்த முருசல் பாத்தியில எல்லாரும் சேர்ந்து களைப்பறிக்கணும்.''

முழங்கை சொரிதல்: ஏதாவது தப்புச் செய்துவிட்டு வந்து, இப்படிச் செய்து விட்டோமே என்று நினைத்து வருந்தி நிற்பது. காரியம் ஆகவேண்டியதிருந்தாலும்இப்படியே.

முழங்கையக் காமிக்கான்: கொடுக்க முடியாதுங்கான். ''வாங்கித் தின்னுட்டு இப்ப... முழங்கையக்காமிக்கான்.''

முழுகாம இருக்கா; பிள்ளை உண்டாயிருக்கா.

முழங்குருன்: மனசிலிருந்து நாக்குக்கு வரும் பேச்சை சொல்லாமல் முழுங்கி விடுவது. ''சொல்ல மாட்டேங்கான்... ஒரே முழுங்கா முழுங்குருன்.''

முழுப்போடு போடுறுன்: தெரிந்து போன — வெளியே— ஒன்றை இல்லையென்று சாதிப்பது தைரியமாக. ''அவன் கறி சாப்புடுவானு?'' சாப்புடுருனுவாவது...முழுப்போடு போடுறுன்.''

முழுமாடு: தடியன். ''முழு மாடு கெனக்கா வந்து நிக்கான்''

முள் ஏர்வை: கவை. அடித்துச் சேர்த்து வைக்கப்பட்டுள்ள முள்தொகுதி.

முள்ளடிச்ச கம்பு முள்மேல: விறகடிச்ச கம்பு விறகுமேல. எது செய்கிறோமோ அது தான் கிடைக்கும் என்பதை அறிவுறுத்துவது.

முள்ளாங்கி: முள் எடுக்கும் கருவி. முள்வாங்கி.

முள்ளுல விழுந்த சேலையப் பையத்தான் எடுக்கணும்: வசபெச கில்லாத காரியத்தில் போய்த் தெரியாத்தனமாக ஒருவர் மாட்டிக் கொண்டு விட்டால் பக்குவமாய் எடுத்துச் சொல்லித்தான் திருத்தணும் அவரை.

முளைக்கட்டுதல்: ஊறப் போட்டு விதைத்தல்.

முளைக்கொட்டு: முளைப்பாரியைச் சுற்றி அடிக்கும் கும்மி.

முளைப்பாரி: சட்டியில் மண்ணும் எருவுமிட்டுபல வகை தானிய வகைகளைப் பரப்பி நீர் தெளித்து இருட்டில் வைப்பர். அது நெருக்கமாயும் வெண்ணிறமான அழகோடும் முளைத்து நிற்கும்.

முளைப்பிடித்தல்: வீடு கட்ட நல்ல நாள் பார்த்து ஆரம்பித்தல்.

முளைப்பிடுங்கி: மாட்டுச்சுழி. மாட்டின் முன்காலில் ஒன்றிலோ இரண்டிலுமோ குழம்பிற்கு மேல் சுழி சுழித்து மேனோக்கி இருந்தால் ''முளைப்பிடுங்கி''—குற்றம்.

முளையரிசி: கம்பரிசியை முளைப்பூரச்செய்த தின்பண்டம்.

முறிமுக்கால்: பெறுமானத்தில் கால்விலை. ''முறிமுக்காலா வித்துத் தொலைச்சிட்டான்.''

முறுக்கித் தள்ளுதல்: கண்டபடி வைதல்.

**முறைப்பு:** பிடிக்காதவரை நோக்கும் பார்வை.

**முன்கொம்பு:** மாட்டுக்கொம்பிலொருவகை.

**முன்தடுக்கு:** மண், குப்பை முதலியன சுமக்கும் போது, வண்டியில் முன்பக்கம் வைக்கும் தடுக்கு.

**முன்னடியில:** எதுப்புல.

**முன்னத்தேரு:** முன் ஏர். ''முன்னத்திஏர்''

**முன்னப் பின்னத் தெரியாது:** பார்த்ததே இல்லே.

**முன்னிருட்டு:** பாதி இரவுக்குப் பின்னால் நிலவு வரும் இரவு நாட்கள்.

**முனி:** நுனி.

**முனியனுக்கு வாக்கரிசி போட்ட மாதரி:** பார்க்கும் போதெல்லாம் ஏதாவது கொடுத்துக்கொண்டே இருந்தாலொழியக் காரியம் நடப்பதில்லே என்பது.

**முனே:** வேகம். ''முனேயான மாடு'' ''தொடுமுனே''.

## மூ

**மூக்க உரிக்கான்:** மானத்தை வாங்குறான்.

**மூக்கால அழுகிறான்:** அழுதுகொண்டே செய்வது. காரியத்தைக் கேட்டவுடனே மூக்கை தூக்கிக் கொண்டு முக்கி முணங்கி சிணுங்குதல்.

**மூக்குப் போனவ:** மானங்கெட்டவ.

**மூக்கு முட்ட ஆசை:** அபரிமிதமான ஆசை. ஆசையானஆசை. ''அவன் பேரிலெ அவளுக்கு மூக்குமுட்ட ஆசை''

**மூச்சுக்குத்து:** ஒரு வித வாயு சம்பந்தமானநோய்.

**மூச்சுப் பேச்சில்லே:** தன் உசார் இல்லே.

**மூச்சு விடல்ல:** ஒன்றும் பேசவில்லே.

**மூஞ்ரி:** முகம். ''முகரக்கட்டை''

மூஞ்சி இம்புட்டாப் போய்ச்சி: தாக்கப்பட்ட விஷயத்தின் காரணமாக முகம் சுருங்கிப் போதல்.

மூட்டுப் பெருத்த: பெரிய. வளர்ந்துவிட்ட. ''மூட்டு பெருத்த ஆளு.''

மூடாக்கு: மழை மேகமாயிருத்தல். மப்பு பந்தாரமாயிருத்தல் ''இன்னைக்கு ஒரு மாதிரியா மூடாக்கா இருக்கு''

மூணும் பனி: பனிமூட்டம். மூடும்பனி. புகை மாதிரி சூழும் பனி.

மூணுமாச விருந்து: கல்யாணம் முடிந்தவுடன் பெண்வீட்டில் மாப்பிள்ளைக்கு வைக்கப்படும் மூன்றுமாத விருந்து.

மூத்தவடியா: முதல்த்தாரம். முதல்மனைவி.

மூத்தவளே: பெண்களைப் பெண்கள் கண்டித்தல். ''ஏ... மூத்தவளே சும்மா இரு''. ''மூதேயி!''

மூந்திக் கருக்கல்: கருக்கலுக்கு முந்தி. 'மூஞ்சிக்கருக்கல்.'

மூப்பு: தலைமை. ''பொட்டச்சிக' மூப்பாப் போச்சி''



மூலக்கை: மூலக்கையில் இணைவது. ''மூளிக்கை.''

மூலம்: ஏற்றத்தின் பின்புறம் வைக்கப்படும் சுனம்.

மூளாது; காரியம் ஆகாது. ''ஒன் பெயரைச் சொன்னாலும் மூளாது''

மூளி: கொறு வாய். நகை அணியாத காது. கொம்பில்லாத கிடா (மோளி). அங்கம் இழந்த சிலை.

**மூளிநாய்க்குப்பட்டதுதான் அறிது:** வழக்கமாகக் குற்றம் செய்கிறவனுக்குக் கிடைக்கும் அடி உதையில் ஆச்சரியப் படுவதற்கு ஒன்றுமில்லை.

## மெ

**மெக்கட்டாளு:** கூலியாட்களை ஏவி வேலை வாங்குபவர்.

**மெகால்:** மெகால் பிடிச்ச பய.

**மெச்சக் கொட்டுதல்:** நாக்கைச் சப்புக் கொட்டுதல், ருசியுள்ளதை நினைத்து,ருசியுள்ளதைத் தின்று முடிந்தவுடன்.

**மெட்டி;** பெண்களின் காலணி.

**மெட்டு மெட்டா:** பகுதி பகுதியாக.

**மெத்தனம்:** மெதுவாக இயங்குதல். அஜாக்ரதை. உஷார் தன்மை இல்லாமை.

**மெத்தீட்டான்:** ஜெயித்துவிட்டான்.

**மெத்துப் போட்டுக்கிட்டிருக்கு:** தரை அழுங்காமல் மேலே கிளம்பிக் கொண்டிருப்பது.

**மெத்தைவீடு:** மாடி வீடு.

**மெதந்துபோனுன்:** வேலையில் அக்கரை இல்லாதவனுகி விட்டான். ''ஆளு ரெம்ப மெதந்து போனுன்.''

**மெதம் :** மட்டம். ''நான் தான் அவனுக்கு மெதம்.'' மெதம் × நயம்.

**மெய் மறந்து போயி:** மெய் மறந்து போய்.

**மெய்க்க:** மெச்சும்படியாக. ''பொம்பளைக மெய்க்கப் பேசுவான்.''

**மென்னி:** கழுத்து. ''மென்னியைப் பிடிச்சி வெளியே தள்ளு''

**மென்னை:** செப்பை—காதுக்கடியிலுள்ள பகுதி.

மெனக்கிட்டு: மத்த வேலேகளையெல்லாம் நிறுத்தி வைத்து விட்டு இதே வேலேயாய். ''மெனக்கிட்டு உங்களைப் பார்க்க வந்தேன்'' ''கிழவி தண்ணிக்குப் போக எட்டு ஆள் மெனக்கிட்டு.'' —சொலவம்.

## மே

மேக்காச்சுழி: மாட்டுச்சுழி. சிமிழுக்கு முன்பக்கம் சுழி இருந்தால் அது மேக்காச்சுழி.

மேக்காப் பூட்டு: ''இரண்டு வண்டியும் மேக்காப் பூட்ல போகுது''—இரண்டு வண்டியும் சமமாக போகிறது.

மேக்கால்: நுகந்தடி. ''மோக்கால்.''

மேக்கோப்பு: சட்டம், நீங்காவிட்டம், கைமரம் போன்றவை. ''மேக்கோப்புசம்.''

மேகஞ்சாயிது: வாலிபவயதில், மூத்திரத்துடனே, சொப்பன ஸ்கலிதமாகவோ வெளியாதல். இது அதிகமானுல் உடல் மெலியும். அப்போது வைத்தியரிடம் 'மேகஞ்சாயிது' எனச் சொல்லி சிகிச்சை பெறுவார்கள்.

மேச்செலவு: சில்லரைச்செலவு. ''தீப்பெட்டிக் குச்சி அடுக்குற அது ஒரு மேச்செலவுக்கு ஆகும்''.

மேசர்: ''நம்மபொண்ணு மேசராயிட்டா'' புஷ்பவதி ஆகி விட்டாள்.

மேசைக்கறி: நல்ல கொழுத்த இளம் கறி.

மேஞ்சி பிழைக்கிற கோழியை மூக்கறுத்து விட்ட மாதிரி: குரூரமான பழிதீர்ப்பு.
எது வாழ்க்கையோ அதைக் கெடுப்பது.

மேட்டுமை: உயர் வர்க்க கர்வம். ''அவ முந்தி மாதரியா; இப்பொ மேட்டுமெ வந்திட்டது.'' ''மேட்டுமைக்கார பய'' ''மேட்டுமை ஜாஸ்தி.''

மேப்பிராது: ஒருவன் தவறு செய்ததுமல்லாமல் மேற்கொண்டு மற்றவர்கள் தவறு செய்து விட்டார்கள் என்று புகார் செய்வது. ''மேல்க்குதிரை'' ஏறுவது.

மேமழை: மேல் மழை. அடுத்து மீண்டும் பெய்கிற மழை. இரண்டாவது மழை. துணை மழை.

மேய்சல்: வீட்டை ஓலை, தட்டை கொண்டு வேய்தல்.

மேல்: உடம்பு. 'மேலு'. ''மேலுக்குச் சீரில்லை.''

மேல்க்குதிரை: அவனை இவன் முதுகில் அடித்ததுமில்லாமல் அவன்தான் அடித்தான் என்று சொல்வது.

மேல்தாயம் போடுறான்: குற்றம் செய்ததோடு நில்லாமல் மேல்ப்பிராது கொடுத்தல்.

மேல்வாங்கிப் பேசுறான்: ஒருவனுக்காக மற்றவன் அவனுடைய வழக்கை நியாயமாக்கிப் பேசுதல். பணம் வாங்காத வக்காலத்து

மேலாவ்ல: மேலிடத்திலிருந்து. மேல் அதிகாரிகளிடமிருந்து, மேலாவ்— மேலிடம், மேலதிகாரி.

மேலிடு: காது வளர்த்த பெண்கள் அணிவது. (தண்டட்டி மாதரி சதுரம் சதுரமாய் இருக்கும்)

மேலுக்கு ஊத்தணும்: குளிக்கணும்.

மே வீடு: மாடி வீடு

மேவீடுகாலி: மூளையில்லை. (கேலியாகச் சொல்வது).

மேழி: கலப்பைக்கைபிடி.

மேழிக்கிழங்கு: கார்த்திகை மலரின் கிழங்கு. கலப்பைக் கிழங்கு.

மேழிக்குச்சி: மேழியைக் கலப்பையோடு இணைக்கும் குச்சி.

மேளம் கட்டுதல்: கிணற்றின் பக்கம், காரக் கட்டிடத்தின் பக்கம் மேளக்கச்சேரி வைத்தால் நன்கு மேளம் கட்டும். வெட்ட வெளியில் கச்சேரி வைத்தால் மேளம் கட்டாது.

மேனத்து: வேலை செய்யாமல் உடம்பை அலட்டிக் கொள்ளாமல் சிங்காரித்துக்கொண்டு திரிவது. ''மேனத்தாக இருந்தவரு.''

மேனி: வளர்ப்பு. உடல்சதை. ''மாடு நல்ல மேனியாயிருக்கு; விலை போகும்.''

## மை

மைக்கண்: மாட்டுக்கண். கண்ணைச்சுற்றி கருநிறம்.

மைக்கூரு: காலில் வரும் சிலந்தி.

மைநாட்டாய்: அதிநுட்பமாக.

மையம் பறந்தான்: ரொம்பக் கெஞ்சினான். ''ரெண்டாயிர ரூபா மாட்டெ ஆயிரத்தி எண்ணூறு வரை கேட்டு, கொடுக்கச் சொல்லி மையம் பறந்தான்.''

மையவாடி: மயானம். இடுகாடு.

மையோட்டம் பார்த்தல்: இலையில் பைசாஅளவு மை வைத்து தீபவெளிச்சத்தில் பார்ப்பது. நடந்த விஷயங்கள் தெரியும் என்பது. இப்படி திருட்டுப்போன அல்லது காணமல்போன பொருளைக் கண்டு பிடிக்கப் பார்க்கும் குறி.

## மொ

மொக்குறான்: அதிகம் சாப்பிடுகிறான்.

மொக்கை: தடியான. தண்டியான. நாய்களின் புணர்ச்சி.

மொகச்சியம் முயற்சி, தொடக்கம்.

மொகஞ்செத்துப் போச்சு: அவமானத்தால் ஏற்படும் முகச் சுருக்கம்.

மொகத்துல ஈ ஆடல: அவமானத்தால் ஏற்படும் முகச் சுருக்கம்.

மொகம் இம்புட்டாப் போச்சு: அவமானத்தால் ஏற்படும் முகச் சுருக்கம்.

மொகரை: முகம். ''முகரை''. மூஞ்சி.

மொகாசு: தலைமை. முன்னின்று நடத்துதல். ''அவரு தான் அங்கே மொகாசான ஆளு''

மொகான்மை: முதன்மை.

மொங்கான்: கொடுத்த பொருளை திருப்பிக் கொடுக்காமல் அமுக்கிக் கொள்ளுதல். முழுங்கீட்டான். ஆத்தீட்டான். ''மொங்கான் போட்டுட்டான்.'' (தளத்தை இருகச் செய்ய உதவும் கட்டை.)

மொச்சிக்கம்புல வில்லேத்துனுப்போல: முறை தவறிச் செய்த காரியம்

மொச: முயல். ''மொசக்கடிக்கிற நாயெ மூஞ்சியெப் பார்த்தாத் தெரியும்''—சொலவம்.

மொசரை: முகம். மூஞ்சி. ''முசரை,'' ''உங்க மொசரைக்கு அது ஒண்ணு வேணும்? இல்லாட்ட என்னவாம்?''

மொட்டைக்கூழு: கேப்பை மாவு மட்டும் போட்டு ஆக்கிய கூழ்.

மொட்டை வண்டி: கூடாரமில்லாத வண்டி.

மொடக்கத்தான் தோசை: முடக்கத்தான் இலையை சேர்த்து கம்பரிசியில் செய்வது.

மொடா: பெரிய மண் தாழி. ''மொடாக்குடியன்.''

மொடுகு: பெரிசு. மிகப் பெரிசு. லகுடு: செல்வாக்குள்ள பெரிய மனிதர்களைக் குறிப்பது அல்லது உருவத்தில் பெரியதாக இருக்கக் கூடியதை குறிப்பது.

''அடுத்த தொகுதி தேர்தல்ல ஒரு பெரிய மொடுகு ஒன்னு நிக்குதாம்''

''அந்தப் பானை பெரிய மொகுடா இருக்கு''

மொடையடிக்கி: சினைமுடை. மாடு சினைப்பட்டு 9 மாசத்திற்கு மேல் மாட்டின் பெண்ணுருப்பிலிருந்து இரத்தமும் சீளும் பசை போன்ற ஒன்று வெளி வரும்.

மொத்து: வெறும் கையினுல் அடிப்பது. ''நல்லா மொத்தி விடு பயலை''

மொத்துக்காப்பு: அடி.

மொந்தை: தடியான கலயம்.

மொப்பத்தனம்: முறட்டுத்தனம். ''மொப்பப்பய''

மொய்: நல்லது பொல்லதுகளுக்கு ஏற்படும் செலவை சுற்றத்தாரும், பக்கத்தாரும் ஒரு சிறிய தொகை கொடுத்து உதவுவதன் மூலம் சம்பந்தப்பட்டவர்களின் பாரத்தைக் குறைப்பது. இது அப்படியே, செய்தவருக்கு அவர் வீட்டு விசேஷத்தின் போது திரும்பி செய்யப்பட்டு விடுகிறது. இதை ஒரு வட்டி இல்லாக்கடன் என்றும் சொல்வதுண்டு. ''மொய் முறை செய்யணும்''

மொய்: 20 ஆடுகள் கொண்ட தொகுதி.

மொய்யாளு: செய்த வேலைக்குக் கூலி வாங்காமல், உழைப்புக்கு பதில் உழைப்பாகவே திருப்பிச் செய்துவிடல்.

மொய்யேர்: கொடுத்த ஏருக்கு பதில் ஏர் கொடுத்தல்.

மொலுங்கு: மோட்டா—பெரியது

மொள்ளமாரி: சமய சந்தர்ப்பம் போல் மாறிமாறி பேசுபவன். மூக்குப் போனவன். ரோஷமில்லாதவன்.

மொளகுசாரு: 'மொளகுதண்ணி'—மிளகுரசம்.

மொறையைக் கழிச்சிட்டுவா: முறையைக் கழித்தல். சம்பிரதாயத்திற்காக, மனம் ஒப்பாமல் செய்யும் காரியம்.

மொன்னி ஓலை: விரியாமலிருக்கும் ஓலை.

மொன்னை: மொட்டையாய். மழுங்கல். "மொண்ணை" முகவாய்க்கட்டை.

மொனை: வேகம்,

## மோ

மோக்கால்: மேக்கால், நுகந்தடி.

மோட்டிப்பு: எசலிப்பு.

மோடப்பய: மூடப்பயல்.

மோதா: "அந்த ஓட்டுப்போட்ட மோதாவுல ரெண்டு பேருக்கும் புழுக்கம்."

மோதாக்கட்டை: } வண்டியின் முன்பக்கம் அமைந்த தாங்கு
மோதாமுளை: } கட்டை.

மோந்தாயம்: முகட்டுவளை.

மோளை: கொம்பில்லாதது. "மோளைக்கிடாய்"

## ய

யவர்ணமானசிறை: யௌவனமான பேரழகி.

**யாருக்கு வந்த விருந்தோண்ணு:** கவனமின்மை. ஆர்வமில்லா மலிருத்தல். அக்கறையில்லாதிருத்தல்.

**யாவாரி:** வியாபாரி. ''ரேவாரி''

**யாவுகம்:** ஞாபகம். ''நல்லா யாவுகப் படுத்திப் பாரு''

## ர

**ரட்ணக்கால்:** அட்டணேக்கால்

**ரணவேலே:** உடம்பை ரணமாக்கிக் கொண்டு செய்யும் காரியம்.

**ரப்பு:** திமிர். ''ரப்பேறிப் போச்சி முண்டைக்கு''

**ரவணப்பித்தை எடுத்துருவேன்:** எச்சரித்தல்.

**ரவணம்:** உப்பு.

**ரவை:** ராவு—ராத்திரி.

**ராங்கித்தனம்:** பிகு. கர்வம் நிரம்பிய பிகு. பெண்களே நோக்கிச் சொல்லப்படுவது.

**ராசடி:** களத்திலடித்துக் குவிக்கப்பட்ட தானியத்தைத் துப்புரவாக தூத்து அள்ளக் கூடாது. சிந்திச் சிதறிக் கிடக்கும் தானியத்திற்குப் பொலி என்று பெயர். இது பகடையைச் சேரும்.

**ராசப்பிளவை:** முதுகில் வரும் புறப்பாடு. சிலந்தி வகை.

**ராசாச்சுழி:** மாட்டுச்சுழி. மாட்டுச் சிமிழுக்கு பின்னல் இருப்பது.

**ராசி:** திரட்சி, பருமன்.

**ராட்டுப்பூட்டு ராவணஞ்சீட்டு:** ஒரு விளையாட்டு.

**ராப்தா:** பயிற்சி. பழக்கம். அனுபவம்.

**ராப்பட்டினிக்காரப்பய:** வசவு.

**ராப்பாடி:** இரவில் பாடிப் பிச்சை எடுப்பவன்.

**ராமப்பயிர்:** இதைப் பிடுங்கி நிலச் சொந்தக்காரர் முன் போட்டு குலவையிடுவர் பெண்கள். ஏதாவது நன் கொடை தரவேண்டும் அவர்களுக்கு.

ராமேஸ்வரம் போகும்போது பாம்பறுறு குறுக்கிட்ட மாதிரி: நல்ல காரியத்துக்குப் போகும் போது வரும் குறுக்கீடு.

## ரு

ருசு: நிரூபணம். ''புரூ''

## ரெ

ரெங்குப் பெட்டி: ட்ரெங்குப் பெட்டி. ''தங்கத் தகரப்பெட்டி—நீங்க தாளடைக்கும் ரெங்குப் பெட்டி'' —ஒப்பு.

ரெட்டியைக் கெடுத்த வெள்ளி: விடி வெள்ளியைப் போலவே அதற்கு முன வரும் வெள்ளி. ''சக்களத்திவெள்ளி''

ரெட்டு: படுதா. அமுத்தமான கனத்த துணி.

ரெட்டைக்கலப்பை: ஒரே நுகந்தடியில் இரண்டு கலப்பைகள் போட்டு உழுவது.

ரெட்டைக்குடவண்டி: ஒரே சமயத்தில் இரண்டு முறை குடை சாய்ந்து வண்டி குப்புற விழுந்து கிடத்தல்.

ரெடி: தயார். ''ஆல் ரெடி'' ''திருநெவேலி சின்னமுத்தம்மா அதுலே கொஞ்சம் கோவக்காரி பெரியமுத்தம்மா''—நாட்டார் பாடல்.

ரெண்டாப் போச்சி: பாறையை உடைத்து ரெண்டாக்குவதில் உள்ள கஷ்டம். ''அவரு படிச்சி ரெண்டாப் போச்சி... இன்னி இவரு படிக்காரு''

ரெண்டுக்கு: வெளிக்கு. மலங்கழிக்க.

ரெம்ப: நிறைய. அதிகம். ''ரொம்ப''

## ரே

ரேக்ளாவண்டி: கூண்டு இல்லாத இரண்டு பேர் உட்காரும் சிறியவண்டி.

ரேஸ் வண்டி: பந்தயத்தில் கலந்து கொள்ளும் ரேக்ளாவண்டி.

ரொக்கம்: கேலிச்சொல். ''யப்பா ரொக்கப்புள்ளி வா'' ''நீ ரொம்ப ரொக்கமில்லெ?''

ரோசனே: யோசனே. ''நல்ல ரோசனேயில்லா!''

ரோசு: உரசு. ''மஞ்சளே ரோசு''

## ல

லகுடு: பெரிசு. ''மொகுடு''



லங்கோடு: கோமணமும் கால் சட்டையும் சேர்ந்தாற் போன்றதொரு உடுக்கை.

லச்சை பண்ருன்: அவன் நடந்து கொள்வது லச்சைப்படும் படியாக இருக்கிறது.

லண்டமாறினசிருக்கி
லண்டமாறின பய } : வசவு.

லண்டி: சண்டை போட்டு அவளிடம் மிச்சம் கொண்டு போக முடியாது; உருவத்திலும் நல்ல கனம்.

லத்தி: யானேயின் சாணம்.

லப்புதல்: அடித்து நசுக்குதல். வேகமாக நாகரீகமில்லா மல் சாப்பிடுவது. வண்டி ஆட்டம் கொள்ளுதல்..

லம்பல்: பாதையில் ஏற்படும் குழிமேடு. வண்டியின் ஆட் டம். வயசான ஆளின் தடுமாற்றம்.

லம்பாடி: மாடுகளில் ஒரு ஜாதி. வளர்ந்த உருவம்.

லம்பீட்டான்: பொருளாதாரத்தில் குறைந்து விட்டான், தடு மாறி விட்டான்.

லயன்கலப்பை: கொருக் கலப்பை.

லயன்குச்சி: லயன்கலப்பையின் மேக்கால் குச்சி.

லவ்வா லவ்வான்னு: ஓய்வில்லாமல்.

லவி: விதி. பிரமன் எழுதிய லிபி.

லவுக்கை: ரவிக்கை.

## லா

லாஞ்சனை: ''ராஞ்சனை'' சங்கோஜம். வெட்கம். தயக்கம்.

லாட்ரி: கஞ்சிப் பாட்டுக்கே திண்டாட்டம். ''கஞ்சிக்கு லாட்ரி கையிலெ பேட்ரி!''

லாடஞ் செம்பு: போகணி மாதிரி ஒரு வகை செம்பு. (வடநாட்டிலிருந்து ராமேஸ்வரத்திற்கு யாத்திரை வரும் லாடதேசத்தவர் பயன்படுத்தும் செம்பு).

லாடிப்பு: தொள தொளண்ணு. (லூசாக).

லாத்தல்: சாவகாசமாய். ''அப்படியே லாத்தலாப் போயிட்டு வாரேன்.''

லாத்துதல்: அசைதல். ''புதுசா கம்மல் பண்ணீட்டாளாம். போட்டுக்கிட்டுலாத்துதா.''

லாந்தர்: விளக்கு, ''லாந்தல்''

லாந்திருச்சி: தடுமாறீருச்சி.

லாந்துதல்: மெதுவாகத்திரிதல். வட்டமிடுதல். நெருங்குதல். ''பயல் அங்கயே லாந்திக்கிட்டு அலையிருனே என்ன விசயம்?'' ''அங்கெ அவகிட்ட லாந்த முடியுமா?''

லாயக்கு: பொறுத்தம். சரி ''நீ தான் அதுக்குலாயக்கு''

லூத்தப்பய: வசவு.

லூட்டி; உரிமையுடன் செய்யும் சேட்டை. ''என்ன லூட்டி அடிக்கிருங்க இந்தப் பிள்ளைக."

லெக்கு: இடம். திசை. ''அவபோன லெக்கு எதுண்ணு தெரியலே " 'லெக்குத் தெரியாத காட்டில்''

லெவல் பண்றது: கோபமாய் இருக்கும் ஆளை சாந்தப் படுத்தறது.

## லே

லேஞ்சி: மேல் வேஷ்டி அல்லது அங்க வஸ்திரம் கொண்டு தலையில் தலைப்பாகையாக கட்டிக் கொள்வது. ''நேஞ்சி''

லேடுபாடாப்போச்சி: பழுதாகிப் பயனற்றுப் போச்சி.

## லொ

லொக்கோட்டம் : ஓட்டத்துக்கும் நடைக்கும் இடைப்பட்டது.

லொங்குதல் : லச்சைக்கு அஞ்சுதல்.

லொட்டு லொசுக்கு: சிறியசிறிய சாமான்கள். தட்டுமுட்டு சாமான்கள்.
''அண்டாகுண்டா கொப்பரைச் சட்டி அடுக்குப் பானை லொட்டு லொசுக்கு''—பிரயோகம்.

லொண்டாம்: லொண்டான். திண்டாட்டம்.
''இப்பொப் பத்துநாளா சாப்பாட்டுக்கே லொண்டான் போடுது''

லொத்தக்காப்பு: அடித்தல். ''அடிலொத்தி விட்டான்''

லொள்ளாப்பு: வருத்தத்தோடு கூடிய சிறு கோபம்.
''சொல்லப் போனா லொள்ளாப்புதான் வரும்''
''போகட்டும் லொள்ளாப்பு; நமக்கெதுக்குப் பொல்லாப்பு.''

லோட்டா: தம்ளர்.

லோல்: தீராத அல்லல்.
''ஒன்னோடெ லோல் படணும்ண்ணு எந்தலையில எழுதீட்டான்''

லோலாயம் : துன்பத்தில் அலைபடுதல். ஏழ்மையில் துடித்தல். ''அய்...யோ அந்த லோலாயத்தெ ஏங் கேக்கெ; லோலாயமான லோலாயமா......''

## வ

வக்கணை : வகை. முறை. குறை. ''வக்கணை சொல்லிக்கிட்டேயிருப்பாள்.'' ''கட்டுறவீட்டுக்கு எட்டுவக்கணை''
''வக்கணையாப் பேசமாத்ரம் தெரியுது நடக்கிற புத்தியக் காணோம்''

வக்களம்: அழகுகாட்டல். வலிச்சிக் காட்டுதல். வலிப்புக் காட்டுதல்.

வக்கு: வசதி ''எல்லாத்துக்கும்வக்கு வேணுமில்லெ''

வகுடு: உச்சி. ''பாவாடை''

வகுத்துவாய்: பொலியில் நல்ல மணிக்கும், பொக்குக்கும் நடுவில் உள்ளது.

வகுப்பாயிருக்கு: அழகாயிருக்கு! (இகழ்ச்சிக் குறிப்பு).

வகுப்புரெம்ப: அழகாயிருக்கு; சிறப்பாயிருக்கு! கேலி செய்வது. லெச்சணம்!

வகுறு: வயிறு. ''ஓம் வகுத்திலே வண்டுகுடைய''—வசவு

வகைப்பூட்டு: சரியான விளைவு.
''உளுந்து வகைப்பூட்டுப் பூட்டித்தள்ளீரிச்சி''

வகையா: சரியானபடிக்கு. ''வகையா மாட்டிக்கிட்டான்.''

வங்கடவலே: மீன்பிடிக்க உதவும் ஒருவித வலே.

வங்கணம்: வைப்பாட்டி.

வங்கத்துக்கு வராது: சரிக்கு வராது. ''வங்கத்துக்கு வராத களுதையை ரெங்கத்துக்கு அனுப்பு.'' (ரெங்கம்-ரங்கூன்).

வங்கம்: பொருள் பயனில்லாமல் போவது.''ஒரு வங்கமில்லாமலப் போயிட்டான்''



வங்கி: ஒருவிதசிறிய குத்துவாள். வளைவு கொண்ட சூரிக்கத்தி.

**வங்கு:** சொறி. ஒரு தோல் வியாதி. ''யானை வங்கு.''

**வங்கொடுமை:** உவமையில்லாக் கொடுமை. கொடுமையின் உச்சி. ''அந்த வங்கொடுமையை ஏங்கேக்கெ போ''

**வச்ச ஆள்:** கைப்பக்கத்திலிருந்து கொண்டு சொன்னபடி கேட்கும் ஆள். ''நானென்ன உனக்கு வச்ச ஆளா?''

**வச்ச உலெ இறக்கிப் பய:** வசவு. 'வைத்த உலையை கீழே இறக்கும்படி செய்து விட்ட பாவி.

**வச்சது வரிசை:** அவர் பாத்து என்னமும் செய்யலாம்; ''வச்சாக் குடுமி செரச்சா மொட்டை''

**வச்சம்:** குறை. பழுது. ''ஒச்சம்''

**வச்சாங்கட்டு:** பிடிவாதம். ''வச்சாங்கட்டாப் பேசுரான்''

**வச்சி மூடி:** ராச்சாப்பாட்டுக்குப் பிறகு சமையலறையை ஒதுங்க வைத்தல். ''எல்லாம் வச்சி மூடியாச்சி.''

**வச்சி வைக்க மாட்டான்:** ''இவர் மட்டும் பிரஸிடென்டா ஆயிட்டான் நம்மளெ வச்சி வைக்க மாட்டான்''

**வசக்குதல்:** மாட்டை வேலெக்குப் பழக்குதல்.

**வசங்கும்:** பணியும், வயப்படும், சொன்னபடி கேட்கும்.

**வசம்:** நிறைய, சரியானபடிக்கு. ''பயலுக்கு வசமாக் கிடைச்சது இண்ணிக்கி''

**வட்டக் காய்ச்சல்:** மிளகு வற்றலெத் தின்னமாகக் காயப் போடுதல். மிளகு வற்றலெக் காயப் போடுவதில் 3-ஆம் நாள் சில நன்கு காய்ந்தும் சிலது மெதுக்கு பழமாகவும் இருக்கும். இதைக் கூட்டித் தின்னமாகப் போட்டால் ஒன்று போல் காய்ந்துவிடும்.

வட்டகை: குறிப்பிட்ட அளவுள்ள சுற்றுவட்டாரம். ''இந்த வட்டகையிலேயே இப்பிடி மாடு கெடையாது''

வட்டம்: தடவை, தபா. ''எத்தனை வட்டம் சொல்றது''

வட்டம் இழுத்தல்: கதிரை பிணையலுக்காக வட்டமிழுத்தல்.

வட்டி: கருப்பட்டி வட்டி ஓலையாலாகியது. 10 கிலோ கருப் பட்டி பிடிக்கும் அளவு இருக்கும்.

வட்டிப்பெட்டி: சதுரவடிவத்திலுள்ள ஓலையாலான பெட்டி. அளவான உயரத்தோடு இருக்கும். மேல் விளிம்பைச் சுற்றி இளைக்கப்பட்ட பனை மட்டை வைத்துக் கட்டப்பட் டிருக்கும்.

வட்டில் விடுதல்: திருடியவரைக் கண்டுபிடிக்க வட்டிலை மந்திரம் சொல்லி விடுவது. ஒருவர் வட்டிலை தொட்டு கொள்ள வட்டில் தானாக நகர்ந்து ஓடும்.

வட்டு: கமலையின் மேலே பயன்படும் உருளை.

வடக்கத்திநோய்: முட்டு வீட்டுப்பிள்ளைகளுக்கு வரும் இனந் தெரியாத நோய்.

வடக்குத்திமுடிச்சு: முடிச்சுகளில் ஒரு விதம்.

வடகம்: தாளிதத்திற்கானது. (தாளிதவடகம், வெஞ்சன வடகம் என இரண்டு வகை உண்டு).

வடஞ்சுருட்டிமூலை: தென்மேற்கு மூலை. இம்மூலையில் மின்னி னால் உடனே மழை வந்து விடும். அதாவது பூட்டிய ஏரை அவிழ்த்து வடத்தை சுருட்டும் முன்பு மழை வந்து விடும்.

வடம்: கமலைவடம். கூனை வடம்.

வடமுடிச்சு: ஒருவித முடிச்சு.

வடவாடை: வடக்கிலிருந்து வீசும் வாடைக் காற்று.

வடலி: பனங்குட்டி.

வடிக்காக: இகழ்ச்சி. ''ஆமா... உங்களுக்குத்தான் ... வடிக் காக''

**வடிகட்னகஞ்சன்:** வடிகட்டினல் சுத்தமானதாகக் கிடைக்கும். கஞ்சன்களையெல்லாம் திரட்டி எடுத்து வடிகட்டினல் கிடைப்பவனே வடிகட்டின கஞ்சன்.



**வடி பலகை:** சோறு வடிப்பதற்காக உபயோகிக்கும் ஒரு விதப் பலகை, வடிமாறுபோல.

**வடி மாறு:** நாணல் போன்றதோர் பிரம்புகளால் ஆனது. சோறு வடிக்க உதவும்.

**வண்டு கட்டுதல்:** பெண்கள் தலையை உணர்த்தக் கட்டுவது. புட்டு அவிக்கும்போது வண்டு கட்டுவர்.

**வண்டி ஓடுதல்:** வாழ்க்கை சீராகப் போதல். ''ஒரு மாதரி வண்டி ஓடிக்கிட்டிருக்கு''

**வண்டிக் கயிறு:** வண்டியில் ஏற்றும் பாரங்களை இறுக்கிக் கட்ட உதவும் கயிறு. ''பாராக் கயிறு''

**வண்டிக்குச்சி:** மோக்காக் குச்சி.

**வண்டித்தும்பு:** மோக்காக்குச்சியோடும் மோக்காலோடும் மாட்டை இணைத்துப் பூட்டும் கயிறு.

**வண்ணும் பொதி:** ஒரு விளையாட்டு.

**வத்த வக்காய்:** சாப்பிட உதவுவது. இனிப்பாயிருக்கும்.

**வத்திக்காது:** இருந்து நன்மை தராது. நிலை கொள்ளாது. ''அப்படி மோசடியாச் சம்பாதிக்கிற பணம் வத்திக்காது''

**வத்தித்தல்:** இருந்து நல்ல முறையில் பயன்படுதல். சேருதல். பொருந்துதல். செரித்தல். ''வாங்குறகூலி வத்திக்கணுமில்லே?''

**வத்திப்பெட்டி:** தீப்பெட்டி.

வத்திவைக்கான்: குசும்பு செய்கிறான். தூண்டி விடுகிறான். சிண்டுமுடியுறான்.

வத வதத்துப்போச்சி: ஏராளமாப் போச்சி. சவத்துப் போச்சி.

வதியளியுது: ஏராளமாய் வந்து குவிந்து கண்ட இடமெல் லாம் கிடந்து சீரழிதல். ''சந்தையிலே கத்திரிக்காய் வதி யழியுது'' ''வதிகழியுது''

வந்தட்டி: புதிதாக வந்து குடி ஏறியவன்.

வந்த மணியம்: வந்த வண்ணமாய்.

வந்தா வந்த இடம் போனா போன இடமா?: பேச்சுப் பேய் பிடித்த பெண்டிர் எங்கே போனாலும் பேச்சு அவர்களை விடாது. அவர்கள் வந்தா வந்த இடம் தான்; போனால் போன இடம்தான். ஒரு ஆள் போய் 'மீட்டிக் கொண்டு' தான் வரணும்!

வந்துபார்: மல்லுக்குக் கூப்பிடுதல். ''திடீர்ண்ணு வந்து பார்ங்கான்!''

வப்பாட்டி: ஆசைநாயகி. ''வைப்பாட்டி''

வம்சம்: குலம். பரம்பரை. ''வம்முசம்''

வம்படி: அநியாயம். ''வம்படியா வந்து வரி கேக்கான்''

வம்பாடு: ரொம்ப கஷ்டப்பட்டு. அரும்பாடு. ''வம்பாடு பட்டு வாங்கின சொத்து''

வம்பு தும்பு: வம்பும் அதன் வழியும். ''ஒரு வம்புதும்புக்கும் போக மாட்டான்''

வம்மங் கூறுதல்: இரு உன்னைப் பார்த்துக் கொள்கிறேன் என்று. சபதம் செய்தல்.

வம்மை வரிசை செய்யணுமில்ல: *சீர் செனத்தி—சீர் சீராட்டு* என்பதுபோல. பெண் குழந்தைக்கு முதல் பிரசவச் செலவு செய்தல். முடியெடுக்கும் போது காதணி, கோடி வஸ்திரம் கொடுப்பது, தலைக்குழந்தைக்கு சங்கிலி செய் வது, பெண்ணைக் கட்டிக் கொடுத்த மூன்றும் மாதம் பல காரம் செய்து கொடுத்தல்...போன்றவைகளை செய்தலே 'வம்மை வரிசை செய்தல்'.

**வயணம்:** முறை. நேர்த்தி.

**வயணம் காத்தல்:** குறிப்பிட்ட நாட்கள் கோவிலிலேயே சென்று வசிப்பது. 20 நாள் நாப்பது நாள் என்று; நோய் பரிசுத்தமடைய.

**வயித்த ஒதுக்கு:** களத்தில் தானியத்தை தூற்றிய பின் பொலியோடு கட்டியுள்ள தெளிவில்லாத பொலியை சுத்தப்படுத்தி ஒதுங்க வைக்கச் சொல்வது.

**வயிறாதி:** கம்மங்கதிரில் விழும் நோய்.

**வர்ணம்:** ஜாதி.

**வரகு:** கரிசலில் விளையும் அரிசித் தானியம்.

**வரட்டுக்கறி:** வருவல்.

**வரட்டுமா:** போய் வருகிறேன்.

**வரவாசி:** வரவு

**வரிக்கால்:** தோட்டம், புன்சை இவற்றின் பொழிஓரம். புல் வளர்ந்துள்ள சுற்றுப்புற விளிம்பு.
''வரிக்கால்லயே மாட்டைப் பிடிச்சிமேயி"

**வரிச்சி போல:** ஒல்லியான. ''ஆள் வரிச்சி போல''.

**வரிமுறுத்துவது:** பயமுறுத்துவது.
''வரி முறிச்சிக்கிட்டா அலையுதெ இரு ஒன்னே''.

**வரியில:** உடனே. இப்போதே. ''ஒத்தவரியில வச்சிட்டு போகணும்"

**வருசம் திரும்ப மின்ன:** ஒரு வருடம் முடிவதற்குள்.

**வருத்தி:** வரவழைத்தல். ''மேளம் அடிச்சி சாமி வருத்தி''

**வருதி:** எதிர்காலத்தைப் பற்றி, வரப் போவதைப்பற்றி சாமியாடிக் கொண்டு வருபவர்களிடம் ''மழை பெய்யுமா'' என்பது போன்றவற்றைக் கேட்பது.

**வரும் விதி ராத்தாங்காது:** வருவது வந்தே தீரும்; நடப்பது நடந்தே தீரும் என்பது.

வருவுக்கட்டை: தச்சாசாரிகளின் ஒரு ஆயுதம்.

வரைச்ச: திரும்பி வரும்போது.

வல்ருட்டி: பெண்ணிடம் பலாத்காரம். வலுவந்தம். வல்லூட்டி.

வல்லங்கம்: குற்றம் செய்ததுமின்றி அப்படிதான் என்று பேசுவது.

வல்லடி வழக்கு: அப்படித்தான் என்று—நியாயமில்லாமல் பேசும் வழக்குத்தனம்.

வல்ல வட்டு: ஏத்தாப்பு.

வல்லா தொல்லியா இழுத்துப் பறிச்சி: ஒப்புக் கொள்ளவே மாட்டோம் என்றவர்களை வலுவந்தமாய் இழுத்துப் பிடித்து ஒரு மாதரியாய் ஒப்புக் கொள்ளச் செய்வது.

வல்லினம் மெல்லினமில்லாமப் பேசுதல்: விதமறிந்து பேசாமல். இதம் பதமில்லாமல் முறட்டுத்தனமாகப் பேசுகிறது.

வல்லொடக்கட்டு: கூரையின் கீழ்ச்சரிவில் தட்டை நழுவி விடாமலிருப்பதற்காக முதலில் தட்டையை தொடைத் தண்டி நீளமாகக் கட்டி நெட்டுவசத்தில் வைத்துக்கட்டு வார்கள். இதற்கு 'வல்லோடக் கட்டு' என்பர்.

வலசைக்காரர்கள்: வரத்துக்காரர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு வந்திருந்து தங்கி விட்டு சொந்த இடத்துக்கு மீண்டும் திரும்பிச் சென்று விடுகிறவர்கள்.

வலவன் அடி: புஞ்சையின் ஓரத்திலுள்ள மண்.

வலவன் அடிமேடு: புஞ்சை விளிப்பு மேடு

வலி அமட்டுது: மெல்லுவது போல் வலி.

வலுவந்தம்: பலாத்காரம்.

வழுக்கக்குட்டி: ஆடு சினையாக இருக்கும்போது குறிப்பிட்ட காலத்துக்கு முன்பாகவே பிரசவிக்கும், இறந்த, சரியாக வளர்ச்சி பெறாத குட்டியை இப்படிக் கூறுவர்.

**வள்ளிசா:** துப்பரவாக, பூராவும், துடைத்த மாதிரி சுத்த மாய்.

**வளசல்:** தனித்தனிக் குடும்பமாக இருந்தாலும் பக்கம் பக்க மாக வசிக்கும் தாயாதிகள், வகையரு. பகுதி. ''நாயக்க மாரு வளசல்'' ''தேவமாரு வளசல்". குடும்பதொடர்பு முறை.

**வளத்தம்மை:** எடுத்து வளர்த்த தாய்.

**வளமை:** வழக்கம்.

**வளவி:** வளையல். சேவலின் நிறம். ''கரு வளவி'' ''செவ் வளவி''

**வளைச்சிட்டான் வளைச்சி:** வசப்படுத்தி விட்டான். சாப்பிட் டான். அடித்து விட்டான்.

**''வளையம்'':** முயல் ஒரு புதரிலிருக்கும்போது இப்படிக் கூறி ஞல் முயல் அதை விட்டுப் போகாது என்றொரு நம் பிக்கை.

**வற்றுப்பாட்டு நேரம்:** கோடை காலம். (நீர் நிலை வற்றும் நேரம்.)

## வா

**வாக்கப்படுறது:** வாழ்க்கைப்படுதல். திருமணம்.

**வாக்கரிசிக்கு வழியில்ல:** செத்துப் போனுல் வாய்க்கரிசி போடும் அளவுக்குக் கூட வசதி இல்லாத நிலைமை. 'வசவு.'

**வாக்கா:** வாக்காக-வாக்காய்-தோதாக.

**வாக்கு:** சாபம், ''வாக்கு விட்டுறுவான்"—சாபம் கொடுத்து விடுவான். பிடிக்காமல் மனசுக்குள் கருவிக் கொண்டே பார்த்துக் கொண்டிருப்பது. ''வாக்கு விட்டுக்கிட்டே இருக்காள்"

**வாக்குடுக்கான்:** வாய்ச்சண்டைக்கு இழுக்கான்.

**வாக்கு வழி இல்லாமல்:** முறை இல்லாமல். பேசத்தெரியா மல்.

வாக்கூடு: மாடு வேலையில் இயங்கிக் கொண்டிருக்கும் போது அதன் தீனி கவனம் வேறு பக்கம் திரும்பாமலிருக்கவும், மேயாமல் இருக்கவும் மாட்டும் வாய்க்கூடு.

வாக்கெட்டு: பிணத்துக்குக் கட்டும் நாடிக்கட்டு.

வாகடம்: கால்நடை மருத்துவ ஏட்டுப்பிரதி.

வாகு: பிறவி. அமைப்பு. ''அந்த மாட்டின் வாகு அப்பிடி''

வாங்கல்: நெடுந்தூரம். ''ஒரே வாங்கல்.''

வாங்கா: ஒருவகை ஊதுகுழல். எக்காளம்.

வாங்கிக் குடிச்ச பய: வசவு.

வாங்கித்திங்க: கடைகளில் தின்பண்டம் வாங்கித் தின்பது.

வாங்கு: அடி. ''வாங்கு வாங்குண்ணு வாங்கிட்டான்.''

வாச்சஆளு: பெரிய ஆகிருதி பெற்ற ஆள். (வாச்ச-வாய்ப்பான. பெரியதாக அமைந்த.)

வாச்சாத்து: காட்டில் செடி வெட்ட உபயோகிக்கும் கருவி. மரம் செதுக்கி இழைக்க உதவும் கருவி.

வாசி: அதிகப்படி. இரண்டு பக்கா கம்மம்புல்லுக்கு மூணு பக்கா குதிரைவாலி கொடுப்பது. தானியத்தை வட்டிக்கு விடுவது. 1க்கு $\frac{1}{4}$.

வாஞ்சனை: அன்பு, பாசம், உறவின் பாசம், பிரியம். ''வாஞ்சனையுள்ள ஆளு; வாஞ்சனையாப் பழகுவாரு சும்மா சொல்லப்படாது.''

வாஞ்சி: கூரையின் கீழ் விளிம்பில் நீட்டிக் கொண்டிருப்பது.

வாட்டம்: கூர்ந்து கவனித்தால் தெரியும் சாய்ந்த அமைப்பு. வீட்டில் தளம்—தரை—அமைக்கும் போது தண்ணீர்—கழுவி விடும் போது தேங்கி நில்லாமல் சீராகப் போவதற்கு அமைக்கும் தளச்சாய்வு. சரிவு. தடவை. ''இப்படிச் செய்யணும்ண்ணு உனக்கு எத்தனை வாட்டந் தான் சொல்றது''

வாட்டி: தடவை. ''எத்தனை வாட்டிச் சொல்றது''

**''வாட விளக்கு'':** விளக்கைப் பொருத்தாமல் வைத்திருப் பது; இழவு வீட்டில்.

**வாடாவளி:** பயன் ஏதுமில்லாமல் வெறுமனே ஊர் சுற்றுகிற வன். ''வாடாவளிப்பயல்.'' ''வாடாவளியா சுத்திட்டு அலேயுதான்.'' (வாழாவழி).

**வாடை:** குளிர். மணம்.

**வாடைக் காத்து:** வடகிழக்குப் பருவக் காற்று.

**வாணக்கால்:** வீடு கட்டத் தோண்டும் அஸ்திவாரப் பள்ளம். சுவர் கட்டுவதற்கு தரையில் தோண்டப்படும் நீளமான குழி.

**வாணல்:** கஷ்டப்படல். ''வாணலேக் கொடுத்து வாண தீர்த்தம் ஆடுகிறது''—சொலவம்

**வாணல வாங்குருன்:** பிராணனே வாங்குகிருன்.

**வாதிக்கி:** கஷ்டப்படுது. பாதிக்கி. ''அவ பேச்சைக் கேட்ட திலேந்து ரொம்ப மனசு வாதிக்கி'' மனவேதனே.

**வாது:** பரந்த பள்ளம். தாவு. ''அந்தப் பிஞ்சையில மேற்கே ஒரு வாது இருக்கு''.

**வாப்பாறுதல்:** சொல்லி சொல்லி அதிசயப்படுதல். ஆற்ரு மைப்படுதல்.

**வாப்பு:** விசேஷ காலங்களில் நிறையச் சோறு பொங்க உபை யோகிக்கும் பாத்திரம்.

**வாப்பெறப்பு:** வாயிலிருந்து உதிரும் சொல். நம்ம வாப் பெறப்பை அறியிறதுக்குத்தான்...அவன் அப்படிப் பேச் சுக் கொடுக்கான்.

**வாம்புரி:** விளிம்பு. வாகரை.

**வாமடை:** பெருவாய்க்காலிருந்து கைவாய்க்காலுக்கும், கைவாய்க்காலிருந்து பாத்திக்கும் நீர் பாய்வதற்கு திறந்து மூடும் வழி.

வாய்+மடை அதாவது மடைவாய். தோட்டத்தில் வாய்க்காலில் இருந்து பாத்திகளுக்கு தண்ணீர் திறக்கு மிடம்.

**வாய் அடம்:** வாய் நிறைய கூளம் எடுத்துத் தின்னுவது அதாவது கொரிக்காமல். ''அது நல்ல வாய்அடமுள்ள அருமையான மாடில்லா''

**வாய் இழக்கலாமா:** ஒருவரிடம் ஒன்றை வாய்விட்டுக் கேட்க லாமா?

**வாய்க்கு ஒண்ணும் விளங்கலே:** நாக்கு ருசி இழந்து விடுவது நோய் காரணமாக. பண்டங்கள் பக்குவமாக, ருசியாகத் தயாரிக்கப்படாத போது கூறுவது.

**வாய்க்கு வருதல்:** வசவு தொண்டைக்குழி வரை வந்து 'வெளியே வருவமா உள்ளே போய் விடுவமா' என்ற தயக்க நிலே. ''எனக்கு எப்பிடித்தான் வாய்க்கு வருது'' ''எப்படித்தான் வந்துட்டுப் போகுது''?

**வாய்க்குள்ளே இருக்கு வரமாட்டெங்கு:** ஞாபகப் பொறி சரி யாக வேலே செய்யாதது. ஒரு பெயர் ஞாபகத்துக்கு வரு வது போலிருக்கும்; வராது. ஞாபகக்கடுப்பு அல்லது ஞாபகச் சிக்கல்.

**வாய் கருப்பட்டி கை கருணேகிழங்கு:** வாயிலிருந்து உதிரும் வாக்குகள் கருப்பட்டியாய் இனிக்கும்; செய்கையோ பச்சைக் கருணேக்கிழங்கின் ஒரு துண்டை வாயில் போட்டு மென்ற அனுபவம் தான்.

**வாய்ச்சா நமக்கு வாயாட்ட பிள்ளே யாருக்கு:** பந்து விளேயாட் டில் முதலில் எறியும் போது இப்படிச் சொல்லி எறியும் உரிமையுண்டு.

காரியம் வெற்றியானல் நமக்கு, தோல்வியானல் அது பிள்ளேயாருக்கு.

**வாய்த்தக்கம்:** சும்மா பேச்சால்த் தொந்தரவு கொடுப்பது. நச்சரிப்பது. ஒரு வித வாய்ச் சிலுகை. ஒருவரை பேச் சின் மூலம் வம்புக்கிழுப்பது. அடுத்தவன் தொண்டைத் தண்ணியை வற்ற வைத்து வேடிக்கைப் பார்ப்பது.

வாய் நீளம்: வாயாடி.

வாய்ப்பு: மாசூல் நன்ருக வாய்த்து விட்டால் சொல்வது. ''வாழை நல்ல வாய்ப்பு வாச்சிருக்கு."

வாய் புளிச்சதோ மாங்கா புளிச்சதோண்ணு: அர்த்தமில்லா மல் ஒன்று கிடக்க ஒன்று பேசுவது. பேச்சு தரும் பலன் கருதாது பேசுவது.

வாய் விடலாமா: வாய் விட்டு அழாதே (ஆண்களைச் சொல் வது). ' வாய் விடலாமா...அப்படியே மனசில வச்சி நீத்துவியா''

வாயக்கட்டி வயித்தக்கட்டி: சிக்கனம்.

வாயில இருக்கப்படாது: அதுவாயில விழப்படாது. ஒன்றும் இல்லாததற்கெல்லாம் ஊரைக் கூட்டுபவள். அவளுடன் நாம் வாக்குடுக்கக் கூடாது.

வாயில கஞ்சிய காய்ச்சி ஊத்து: வசவு.

வாயில கொளக்கட்டாயிருக்கு: எவ்வித பதிலும் கூருமல் மௌனம் சாதிப்பவர்களை பார்த்துச் சொல்லுவது.
''ஏதாவது சொல்லேன்; வாயிலெ கொழுக்கட்டையா இருக்கு.''

வாயுக்குத்து: வாயு சம்பந்தமான நோய்.

வாயும் வயிறுமா: கர்ப்பிணியாக.

வாயுள்ள பிள்ளை பிழைக்கும்: சவடால் பேர்வழி எந்த வகை யிலும் எந்தக் காலத்திலும் பிழைத்துக் கொள்வான்.
ராஜாவின் தோட்டத்தில் ரோஜாப் பூக்களைப் பறித்த தெனலிராமனுடைய பிள்ளையை சேவகர்கள் பிடித்து அவனையும் ரோஜாப்பூக்களையும் ஒரு பெட்டியில்ப் போட்டுக் கொண்டு போனுர்களாம். பிள்ளையைத் தேடிக் கொண்டு வந்த தெனலிராமன் செய்தியைக் கேட்டுத் தெரிந்து கொண்டான். அப்போது அருகில் இருந்த ஒருவர் ''உங்கள் பையன் இப்படி இருக்கிருனே இவன் எப்படிப் பிழைக்கப் போகிருனே'' என்று கேட் டார். அதுக்கு தெனலிராமன் சத்தம் போட்டு—பெட்டிக் குள் இருக்கும் மகனுக்குக் கேட்கும் படியாக—''என்

மகன் எப்படியும் பிழைத்துக் கொள்வான்; வாயுள்ள பிள்ளை பிழைக்கும்'' என்று சொன்ஞன். இந்தக் குறிப்பைத் தெரிந்து கொண்ட தெனுலியின் பிள்ளை ரோஜாப் பூ பூராத்தையும் தின்று விட்டாஞம்! வெறும் பையனை மட்டும் பிடித்துக் கொண்டு வந்த சேவகர்களை ராஜா கோபித்துக் கொண்டாராம்!

**வாரம்:** விளைச்சலில் ஒரு பகுதியை நிலச் சொந்தக்காரருக்கு அளித்தல்.

**வாரி:** நல்ல நீளமும், ஓரளவு கனமும் கொண்ட கம்பு. வாரிக்கம்பு வாரிவளை. வண்டி வாரி.

**வாரியக் கொண்டை:** வசவு.

**வாரேன்:** போய் வருகிறேன். போய்வாரேன்.

**வால்:** கூனையின் வால்; தோலாலானது; கமலை இறைக்கப் பயன்படும் சாதனம்.

**வால்க்கயிறு:** வாலில்கட்டப்பட்டு கமலை வடத்துடன் வந்து இணைவது.

**வால்க்காது:** வாலும் கயிறும் இணையும் இடம்.

**வால்த்தனம்:** குரங்குச் சேட்டை.

**வாலம்:** வாலோடி. நீளமான. ''கிழ மேல் தாரு...ஒரு வாலம் போல.''

**வாலை மிதிச்சி விடுருன்:** கிளப்பி விடுகிருன். கோபப் படுத்துகிருன். பிரி ஏத்துகிருன்.

**வாலை முறுக்கி விடுகிருன்:** கோபப்படுத்துகிருன்.

**வாலோடி:** நீளவாக்கிலுள்ள.

**வாவரிசி:** சுமங்கிலி,

**வாவளையம்:** கூனையின் வாயிலுள்ள வளையம். மண்பானையின் வாயிலுள்ள வட்டமான வளையம்.

வாழ்கிற பிள்ளையைத் தாயார் கெடுத்த மாதிரி: புருஷனோடு வாழவிடாமல்—மாமியார் அல்ல—பெண்ணின் தாயாரே கெடுத்தால் எப்படி?

வாளாவலை: மீன் பிடிக்க உதவும் ஒருவிதமான வலை.

வாளிப்பு: ஒருவித கயிற்றுகட்டு. ''வாளிப்புப் போட்டுக் கெட்டு''. திக்கு போட்டுக் கட்டுதல். சொத்தை வாளிச் சிட்டாங்க. கோர்ட் தீர்ப்பின் பேரில் வாளிப்பு. தானியத் திலிருந்து கொம்மையை வாளித்தல்.

வாளிப்புமாறு: தென்னை ஈக்கியினாலான மாறு. தானியத்தில் இருந்து கொம்மையைப் பிரிக்க உதவுவது.

## வி

விக்கலும் கக்கலுமாயிருக்கு: சினைப்பயிரில் பொதி தள்ளியும் தள்ளாமலும் இருக்கும் நிலை.

விசனிப்பு: விசனம், கோபம்.

விசும்பேத்துரான்: தனக்கு வேண்டாதவர்கள் மீது, கோபத் தைக் கிளப்பி விடுதல். தூண்டிவிடுதல்.

விசை: தடவை. ''போன விசை நீங்க வந்தப் போ''. ''எத்தனை விசை சொல்றது''

விட்டாத்தியாய்: ஒய்வாக. சாவகாசமாக.

விட்டியடிச்சிருக்கு: பயிரை விட்டில்கள் அரித்து விட்டன.

விட்டுண்ணு விடிஞ்சி போச்சி: நன்றாகவிடிந்து விட்டது.

விட்டுப் போச்சி: உலைஞ்சி போச்சி. ''முந்திக்கிப்பொ ஆள் விட்டுப் போனார்.''

விடாந்தொடாண்ணு: தொட்டுத் தொடர்ந்து. விடாமல் தொடர்ந்து.

விடிஞ்சிப் போச்சி: விடிஞ்சதுபோ. சலிப்பில் கூறுவது. நேர மாய் விட்டது. தாமதமாகிறது என்பதைக் குறிப்பது.

விடிஞ்செந்திரிச்சி...: இது தானா பாடு?: காலையில் வழக்கம் போல் தொடரும் தொல்லைகளைப் பற்றிக் கூறுவது.

பிடித்தமானதுக்கு இப்படிச்சொல்வதும் உண்டு. படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்ததும் வாங்கித் திங்க பருத்தி கொடுக்கும்படி கேட்கும் குழந்தையைப் பார்த்துத் தாயும், வேலைத் தலத்தில் வேலை செய்யத் தொடங்கின கொஞ்ச நேரத்தில் கெட்ட வார்த்தைக் கதை சொல்லத் தொடங்கிய பெண்ணை பொய்க் கோபத்துடன் மறப் பெண்ணும் காலையில் மேலே வந்து விழும் புருஷனைப் பார்த்துப் பிரியமுள்ள மனைவியும் சொல்லுகிற வார்த்தை இது.

விடிதல்: நல்ல காலம் பிறத்தல். ''ஊம்...நமக்கு எப்ப விடியப் போகுது''

விடியங்காட்டி: விடியக் காலம்.

விடிலி: விடுதி.

விடுதல்: விட்டுத் தோன்றுதல்.
''சரக்கு ரொம்ப விடுதலாத் தெரியுதே''

விடுப்பு: இடைவேளை. ''விடுப்பு நேரம்'' ''ஒண்ணுக்குத் தண்ணிக்கி''.

விடுமாடு: தற்காலிகமாக். உழவுக்கோ, பாலுக்கோ,உபயோகத்துக்கு வராத மாடு.

வித்துச்சுட்டு வாயிலெ போட்டுட்டான்: எல்லாத்தையும் சுருட்டி விற்றுத் தின்றுவிட்டான்.

விதர்ப்பம்: விகல்ப்பம். ''விதர்ப்பம் பண்ணிக்கிட்டிருக்கான்''

விதிச்சது: ஏற்பட்டது. எதுஎது எப்படி நடந்து முடியுமோ அப்படி. ''அவனுக்கு விதிச்சது அவ்வளவு தான்.''

விதியத்தபய: வசவு.

விதைக் கொட்டான்: எடுத்து விதைப்பதற்கும் பிடித்துக் கொள்ள வாக்காகவும் உள்ள பனைநார்ப்பெட்டி. ''விதைப் பெட்டி''

விதைப்புக் கொடுப்பது: கோயிலுக்குப் பூசை கொடுப்பது.

**விதை போடுறுன்:** கெடுதல் முளைக்கட்டும் என்று போடுகிற விதை. ''எங்கிட்டே வந்து விதை போடுறுனே!''

**விப்புக்குழி:** நிலம் காய்ந்து பாளம் பாளமாகவிடும் ஆழமான விரிசல். ''விருவு''

**விபூதி போடுதல்:** பேய்—பிசாசு என்று பயந்தவர்களுக்கு பூசாரிகள் திருநீறு பூசுதல்.

**விரதம் விட்டாச்சி:** சாப்பிட்ட பின் விரதம் தீர்ந்து விடுகிறது.

**வீராயி:** திமிர்.

''அவங்கறிவிராய்ல்ல அப்படிப் பேசுரூன்''

**விரி கொம்பு:** மாட்டின் கொம்பு வகையில் ஒன்று. 'காடு பார்த்த கொம்பு' என்றும் இந்த வகைக்கு பெயர்உண்டு.

**விரிதாழ் சங்கிலி:** மேக்காலே வண்டிப் போலோடு சேர்க்கும் சங்கிலி. ''விருதாச்சங்கிலி.''

**விருசம் பழம்:** உபயோகமில்லாதவன். பிரயோஜன மில்லே.

**விருத்தி:** உண்டாக்குதல். பெருக்கம். ''விருத்தி கெட்ட பயல்.'' வசவு.

**விருதலி ஆடு:** குட்டி இல்லாத ஆடு.

**விருதா:** வீண். ''விருதாப் பய''

**விருந்தாடி:** விருந்தாள். விருந்தாளி.

**விருவு:** விப்பு. ''விருவுக்குழி". கீறல். வெடிப்பு.

**விருளி:** தன் உணர்வின்மை.

''திடீர்ண்ணு தூக்கி யடிச்சாம் பாருங்க...பிள்ளைக்கு விருளியத்துப் போச்சி."

**விரைச்சி:** செத்து ரொம்ப நேரமாகி.

**வில்பூட்டு:** கோப்பாக, தயார் நிலையில். ''ரெண்டுதரப்பும் வில்பூட்லநிக்கி''

**வில்லங்கம்:** தகராறு. விவகாரம்.

**வில்வண்டி:** அச்சில் வில்ப்பட்டை பொருத்திய கூடார வண்டி.

**விலக்கம்:** வீட்டு விலக்கம். முட்டு. மாதவிடாய்.

**விலங்கடி:**



**விலாசமா:** விசாலமாய். சலாவத்தாய்.

**விலுக்க எடுத்திடுவேன்:** ஏசுதல்.

**விலையாடுது:** விலை சொல்லப்படுகிறது. விலைக்கு வந்து விட்டது.

**விழியாங்காடை:** காடையில் பெரிய சைஸ்.
''முழிக்கதெப்பாரு விழியாங்காடைக் கெணக்கா''
(கெணக்கா—மாதிரி)

**விழுந்தாம் மேலெ விழுந்தான்:** ஒருத்தன் சொன்னதை யோசிக்காமல் 'ஓஹோ' என்று ஆதரித்து விடுவது. கண்ணை மூடிக் கொண்டு ஆதரிப்பது. ''செம்மறியாட்டுக் கூட்டம்.''

**விளக்கு நாச்சியா:** திருவிளக்கை அம்மனாக வழிபடுவது.

**விளக்கு மாத்துக் கொண்டை:** வசவு.

**விளக்கு மாத்துக்கொண்டைக்குப் பட்டுக் குஞ்சம்:** அனாவசிய ரசனைக் குறைவாகும்; ஒரு பொருத்தம் வேண்டும் அலங்காரத்துக்கும்.

**விளக்கைப் பெரிசாக்கு / விளக்கை வளர விடு:** விளக்கை அமர்த்து. விளக்கை அணை (மங்கலச் சொல்).

**விளங்கல்ல:** முடியவில்லை. ''அவளுக்கு வேலை செய்ய விளங்கல்ல'' நன்றாக இல்லை. ''வாய்க்கு விளங்கல்ல''— ருசியாக இல்லை.

**விளங்குவியா நீ:** விளங்கமாட்டாய் ஒழிந்து போவாய் என்பது.

**விளம்புதல்:** வினியோகித்தல். கொடுத்தல். ''சந்தனம் விளம்புதல்''

**விளாசு:** விளாரினுல் அடித்தல். ''அடி விளாசித் தள்ளீட்டான்''

**விளாரு:** மிலாறு. மிளாரு. புளியமிளார்.

**விரும்பு :** திடகாத்திரமாய். ''காளங்கண்ணு நல்ல விரும்பாயிருக்கு''

**வினயம்:** ''வினயமான ஆளு'!—சூட்சுமமான ஆளு. நுட்பங்கள் அறிந்தவர்.

**வினைப்பூண்டு:** மண்ணெண்ணெய் குழை. களை.

## வீ

**வீங்கி வீராந்து போதல்:** கோபமும், பொருமையும் சேரப் பொறுமிப் போதல்.

**வீச்சு:** வேகத்தைக் குறிக்கும் சொல். ''ஒரு வீச்சிலே போய்ட்டு வந்துருவேன்.''

**வீசம்படி:** மாகாணிப்படி.

**வீசை:** மீசை.

**வீட்டுக்காரர்:** கணவன். வீட்டை வாடகைக்குத் தந்த வீட்டின் சொந்தக்காரர்.

**வீட்டுக்காரி :** மனைவி.

**வீட்டுக்குத் தூரம்:** மாதவிடாய்.

**வீட்டு மேல்:** ''வீட்டுக்கு மேல்''. வீட்டிலிருப்பவர்களை எல்லாம் விட மேலான மதிப்புக்கும் உபசாரத்துக்கும் பாத்திரமானவர். ''வீட்டு மேல் வந்த மாப்பிள்ளை.''

**வீடு கூடுதல்:** பிள்ளை பெத்த 16 ஆம் நாள் குளித்து முழுகிய பின் வீட்டில் சேர்வது.

**வீடு நெரைஞ்ச பொம்பளே:** லட்சுமீகரமான பெண்.

**வீடு விட்டுப் போச்சி:** அதிகச் செலவாய் விட்டது.

**வீரீர்ன்னு இருக்கு:** நிறைந்திருந்த இடம் காலியாகி விட்டது. "அவரு இல்லாதது, வீரீர்ன்னு இருக்கு." "விரோர்ண்ணு இருக்கு."

## வு

**வுடு:** விட்டு விடு.
"வுடு கழுதயெ; விட்டு தள்ளு."

## வெ

**வெக்கக்கேடு:** நினைக்கும் தோறும் நாணப்பட வேண்டிய காரியம்.

**வெக்கரிச்சாப்புல இருக்கு:** லட்சணக் குறைவு.

**வெக்களங் காட்டுறான்:** வலித்து காட்டுகிறான். 'அழகு' காட்டுகிறான். வக்கணையடிக்கான்.

**வெக்கால் உழவு:** கட்டியடிக்கும் உழவு.

**வெக்கைக் காணே:** மாட்டுநோய்.

**வெங்கணத்தி:** கையில் காசில்லாத வெங்கன் அல்லது வெங்கி.

**வெங்கருது.** வயல் முழுவதும் விளைந்திருக்கும். ஊடே ஊடே ஒரு சில கதிர் விளையாமலிருக்கும்.

**வெங்கலக் கொண்ட:** வசவு.

**வெங்கலமுக்கு:** ரோசமில்லாத பிறவி.

**வெங்கன்:** ஒன்றுமில்லாதவன். வெறும்பயல்.

**வெஞ்சணம்:** தொடு கறி.

**வெட்டவெளி குட்டிச்சுவரு:** ஒன்றுமில்லே. பூச்சியம் என்பது.

**வெட்ட வெளிச்சமாப் போச்சி:** விஷயம் துலாம்பரமாகி விட்டது. தெளிவாகி விட்டது. தெரிந்து போய் விட்டது.

வெட்ட வெளியாக்கிட்டான்: அனைத்தையும் அழித்துவிட்டான்.

வெட்ட வெளியாப் போச்சி: எல்லாம் காலியாய், பொட்டல் தரையாய் விட்டது.

வெட்டி: வேலை இல்லாத வெட்டி. 'வெட்டிப்பய'

வெட்டிப்பேச்சி: அறட்டை. வீண்பேச்சு.

வெட்டு விலக்கு தெரிஞ்சி பேசணும்: பேச்சில் எதைத் தள்ள வேண்டும், கொள்ள வேண்டும் என்று தெரிந்து பேசுவது.

வெடலை: வாலிபப் பிள்ளை. இளவயசு. ''வெட்டிவேர் வாசம் விடலைப் பிள்ளை நேசம் ''—நாட்டார் பாடல். சிதர் தேங்காய்.

வெடவு: வெடிப்பு. கீறல்.

வெடிச்சபய: வயிற்றிலிருந்து பிறக்காத, விலாவில் இருந்து வெடித்து வந்தவன்! சிங்கக்குட்டி இப்படிப் பிறக்கிறது என்று ஒரு நம்பிக்கை.

வெடிசு: மண்வெட்டி, களைகொத்தி போன்றவை சற்று நிமிர்ந்து காணப்படுதலுக்கு.

வெடிப்பு: திடமாக அலையுதல். 'வெடிப்பாப் பேசுறான்' ''ஆள் நல்ல வெடிப்பா அலையிருரு.''

வெடிவால்:<br>வெடிவால்சுட்டி: } மேலுக்குப் பார்க்க கறுப்பாகவும், மாட்டு வாலை பிரித்துப் பார்த்தால் வெள்ளையாயிருப்பின் வெடிவால். இது ஆகாது. இதை 'மஞ்சுவால்' என்றும் கூறுவர்.

வெடுசு: நிமிர்ந்து.

வெடுவாச்சுட்டி: மனசை அள்ளும் பேச்சை வேகமாய் வுதிர்க்கிற, வேகமான வாய்ச் சுட்டித்தனம் கொண்ட, பட்பட்டென்று பதில்ச் சொல்லுகிற, குழந்தைகளை நோக்கிச் சொல்லும் சொல்.

வெடை: முட்டையிடப் போகும் கோழியின் பருவம். ''கோழி விடை''. ''விடைப்பருவம்''

வெண்டெடுத்துட்டான்: உடம்பிலுள்ள வளசல்-வளைவு-களை அடித்து நிமிர்த்து நேராக்கி விட்டான் என்பது.

**வெண்ணலேயிலே விட்டுட்டான்:** நிர்க்கதியாய். கை விட்டு விட்டான். கானலில் கைவிட்டுச் சென்ருன்.

**வெத்தரட்டு:** வெறும் அரட்டு.

**வெம்பரப்புல விட்டுட்டான் :** அழைத்துக் கொண்டு வந்து வெட்ட வெளியில் நிறுத்தி விட்டுப் போய்விட்டான். நிர்க்கதியாய்.

**வெம்பாப் பெய்தல்:** காலேயில் புகை போன்று பனி சூழ்ந்து இருப்பது.

**வெம்பிப்போச்சு:** அவிந்து போதல். ''பிஞ்சி வெம்பிப் போச்சி''

**வெம்போடு:** வெற்றுஆள். ஓட்டாண்டி. வெற்றுடாம்பீகம்.

**வெயில்இடி:** வெப்ப மரணம். வெப்ப மயக்கம்.

**வெயில்த்தாள:** வெயில் உக்ரம் தாழ்ந்த பிறகு. ''என்ன அவசரம்; கொஞ்சம் வெயில் தாளப்போலாமே''

**வெயிலுக்கு எட்டாம:** வெயில் உறைக்கும் முன்—சுடுவதற்கு முன். ''வெயிலுக்கு எட்டாமப் போயிடணும்''

**வெரசா:** விரைவாக. ''அய்யோ வெரசா வாங்களேன்!''

**வெரசுதல்:** சொல்அடி. சொல்த்தாக்குதல். ''பயலே வெரசு வெரசுண்ணு வெரிசிட்டேன்''

**வெரட்டுதல்:** துரிதமாக வேலே வாங்குவது. மாட்டை வெரட்டுவது.

**வெரட்டுருரு :** கண்டிக்கிருர். சத்தம் போடுகிருர்.

**வெருகு :** காட்டுப் பூனே (ஆண்).

**வெருச்சி :** வேகம். ''ஒரே வெருச்சிலெ வந்து சேந்துட்டோம்'' ''வெறி''

**வெருசனு:** விரைவாய். வேகமாய். ''வெருசனுப்போ.''

**வெரைக்கி:** குளிருது. வாடை அடிக்கிறது.

வெள்ளங்காட்டி: விடியற்காலை.

வெள்ளந்தி: கபடமில்லாத. சூதுவாதில்லாத.
''வெள்ளந்தியான ஆளு''

வெள்ளரிப்பழமா விரிஞ்சிட்டார்: அதிவயதின் காரணமாக உடம்பு தளண்டு விட்டதைக் குறிக்கும். ''தீப்பட்ட உருப்பு வெடித்துப் புண்ணுவதை வெள்ளரிப் பழமா விரிஞ்சிரிச்சி'' என்பர்.

வெள்ளனே: அதிகாலை. விரைவாக. நேரத்தோடு.
''கீழ்வானம் 'வெள்' என்று...'' (''திருப்பாவை'')
''வெள்ளனே எந்திரிச்சதும் ஓடிவா''

வெள்ளாமை: மாசூல் (மகசூல்).

வெள்ளிக்கால் தராசு: துலாக்கோல் தராசு.

வெள்ளிடி விழுந்திரும்: மேகமோ மின்னலோ எதுவும் இல்லாமல் அக்கிரமங்கள் செய்கிறவர்களின் தலையில் நேராக வந்து விழும் இடி.
வயிறு எரியக் கொடுக்கும் சாபம்.

வெள்ளி முளைக்க: விடி வெள்ளி முளைத்ததும். அதிகாலையில்

வெள்ளுரியா உரிச்சிட்டான்: எலும்பு வெளியே தெரியும்படியாக அடித்து விட்டான்.

வெள்ளையான ஆளு: கபடமில்லாதவன். ''வெள்ளந்தி''

வெள்ளை வீச்சு வீசுறான்: சக்டாலாகப் பேசுறான். (சவடால்) வெளிப்பக்ட்டாய் பேசுறான்.

வெளங்க: நிறையவே. ரெம்ப.
''கொஞ்சம் வெளங்கவே எடுத்து வையேன்!''

வெளம்: தாள முடியாத ஆத்திரம்.
''வெளமெடுத்து அடிக்கி''

வெளிக்கு: கொல்லைக்கு. மலங்கழிக்க.

வெளு: அடி.

வெளுத்துவாங்கிட்டான்: பிரமாதமாகச் செய்து முடித்து விட்டான்.

வெறிச்சிருச்சி: ஓய்ந்துவிட்டது. ''மழை வெறிச்சிருச்சி''

வெறுக்கு வெறுக்குண்ணு: உறுத்தும் தனிமை உணர்வு. ''வெறுக்கு வெறுக்குண்ணு இருக்கு''

வெறும்பய: சொத்து இல்லாதவன். உடமை அற்றவன். வெங்கன். ''வெறும் பய காவடிக்கு வெங்கம்பய தன்னுனை!''—சொலவம்.

வெறுவாக்கலங்கெட்ட: பயனில்லாத. வெறும் வாய்க்கு இலே—வெற்றிலே—கூட இல்லாத. பிரயோஜனமில்லாத. ''மூதி மூதி வெறுவாக்கலங்கெட்ட மூதி''—வசவு.

வென்னியரசி: வென்னீரில் ஊறப்போட்ட சுவையான கம் பரிசி.

வென்னிலேப் பத்திரம்: ஸ்டாம்ப் ஒட்டி, ரிஜிஸ்டர் ஆகாமல் வெறும்தாளில் எழுதிக் கொடுப்பது.

## வே

வே: ஓய். ''சரிதான்வே இரும் போகலாம்; பறக்கீறெ''

வேக்காடு: சூழ்நிலே இறுக்கம். புழுக்கம்.

வேகாரி: கவனிப்பற்று. பொறுப்பில்லாமல்.
''தொழுவிலே பால்மாடு கவனிப்பார் இல்லாமெ வேகாரியா இருக்கு''

வேசடை: மனக்கஷ்டம்.

வேண்டணும்: வாங்கணும். ''வீட்டுப் பாட்டுக்கு கொஞ்சம் கருவாடு வேண்டணும்.

வேத்தாளு: அந்நியன்.

வேதநாயகம் பிள்ளே சடச்ச மாதிரி: இது மாயூரம் வேதநாயகம் பிள்ளேயைக் குறிப்பதாகத் தெரியவில்லே. தகுந்த காரணமில்லாமல் தங்களேப் பற்றி தாங்களே சொல்லி சடைத்துக் கொள்ளும் போது, ''என்னப்பா நீ, வேதநாயகம் பிள்ளே சடைக்கிற மாதிரி ரொம்பத்தான் சடைச்சி

ம்: கிருஸ்துமதம். ''வேதக் கோயில் சாமியார்''
'' அவன் வேதத்திலெ சேந்துட்டான்.''
''அவுகள்ளாம் வேதத்திலெ போயி விழுந்துட்டாக

தா விதி: அவசியம் செய்து தீர வேண்டிய காரியம்
' நான அதைச் செய்யணும்ணு எனக்கென்ன
விதியா? '

லைக்காரருக : உத்தியோகஸ்தர்கள்

லை பெனக்கிட்ட வேலை: அவசியமில்லாத காரியம்.

லை வெட்டி : பல வேலைகள்.

றவெயில்: கடுமையான சுடு வெயில்.

## வை

க்கப் பரி: வைகோலினல் திரிக்கப்பட்ட கயிறு.
''வழியே போற குதிரைக்கு வைக்கப்புரி கடிவாள

ப்பு: ஆசைநாயகி.

# பிற்சேர்க்கை

## விளையாட்டுகள்

இந்த விளையாட்டின்பேரில் இருக்கிற பிரியம் வேற எதன் பேரிலும் மனுசனுக்கு இல்லை என்று சொல்லிவிடலாம். அப்படி ஒரு விலகாத மோகம்.

''பாத்துச் சாப்பிடேன்; சாப்பிடும்போது என்ன விளையாட்டு'' என்று கோபிக்கிருள் அம்மா.

''விளையாட்டுக்குச் சொன்னேன்'' என்கிருன் ஒருத்தன். சொல்றதிலும் கூட ஒரு விளையாட்டு இருக்கு!

''என்ன வெளையாடுறயா?'' என்று கேட்கிருன் ஒருவன் கோவமாக.

''ப்ச்சு; என்ன வெள்ளாட்டு, ஆம'' என்று ஒரு செல்லச் சிணுக்கட்டம் வளையல் ஒலியோடு கேட்கிறது. மேலும் அந்த ''வெள்ளாட்டு'' தீவிரம் கொள்ளவில்லையே என்ற குறைபாடுதான் அது என்கிறதை அறிந்தவர் அறிவார்கள்!

கூட வந்து கொண்டிருக்கும்போதே பட்டென்று மறைந்து கொண்டுவிட்டு நாம் திகைத்துத் தேடும்போது 'களுக்' கென்று சிரிக்கிறது ஒரு குரல். எதிர்பார்க்காதபோது பின் பக்கமாக வந்து கண்களைப் பொத்துகிறது ஒரு ஜோடிக் கை.

மனுச வாழ்க்கையில் விளையாட்டுப்பருவம் என்று ஒரு பூரணப் பருவமே உண்டு என்றாலும்—வயித்துக்கு உழைக்கும் நேரம் தவிர—வாழ்நாள் பூராவும் விளையாடிக்கொண் டிருக்கலாம்; ஆட்சேபணை ஏது இதுக்கு.

துணை கிடைக்காத போது தனியாகவும் விளையாடத் தெரிகி றது மனித மனசுக்கு. தனிமையில் விளையாடக்கூட விளை யாட்டுகளைக் கண்டு பிடித்திருக்கிறான் மனுசப்பயல்.

○

குழந்தை பேச ஆரம்பிக்கும்போது இந்த ஆட்டை தொடங்கு கிறது. எதிர்க்கெ ஒரு பொம்மைகூட வேண்டாம்; ஒரு கல் இருந்தால்ப்போதும். அந்தக் கல் பொம்மையாகத் தெரிந்து, பிறகு ஒரு குழந்தையாகி தனக்கு ஒரு விளை யாட்டுத் துணையாகிவிடும்!

வீட்டுக்குள்ளே வீடுகட்டி விளையாடி முடித்து தெருவுக்கு வந்த பிறகுதான் நாம் இங்கே குறிப்பிடப்போகிற விளையாட்டு கள் தொடங்குகின்றது.

வேறே எதுக்குப் பஞ்சமானாலும் கிராமங்களில் விளையாட்டு களுக்குப் பஞ்சம் வந்ததே கிடையாது.

குழந்தையிலிருந்து கிழவர்வரை விளையாடுகிற விளை யாட்டுகள் இருக்கின்றன.

குழந்தைகள் விளையாட்டு: இதில் பெண்குழந்தைகள் விளையாடு கிற, ஆண்குழந்தைகள் விளையாடுகிற என்று இரு பிரிவு கள் உண்டு. சிறுவர்கள் விளையாட்டு, இளவட்டங்கள் விளையாட்டு, வயசானவர் விளையாட்டு இப்படிப் பல மாதரி.

தரையில் விளையாடுகிறதைப்போல தண்ணீரிலும் விளையாடு கிற விளையாட்டுகள், மரங்களில் ஏறி விளையாடுகிற விளை யாட்டுகள் இப்படி உண்டு.

எல்லா கிராமிய விளையாட்டுகளைப் பற்றியும் இங்கே விபரமாகச்சொல்ல ஆரம்பித்தால் இதுவே ஒரு தனி சுவாரஸ்யமான புத்தகமாக ஆகிவிடக் கூடும் என்பதால் சில விஷயங்கள் சில ஆட்டைகள் என்பதோடு இதை ஆரம்பித்து முடிப்போம்.

O

ஒவ்வொரு விளையாட்டுக்கும் ஒரு குழு அல்லது பல குழுக்கள் என்று பட்டணக்கரைகளில் இருப்பது போல பட்டிகளில்க் கிடையாது;அவர்களேதான் ரண்டுகுழுக்களாகப் பிரிந்து, மோதவேண்டும்.

குழுக்கள் அல்லாதவர்கள் ரண்டு குழுக்களாக தங்களை எப்படிப் பிரித்துக்கொள்கிறார்கள் என்று பார்ப்போம் முதலில்.

யாருமே தேர்ந்தெடுக்காமல் சரியான ஜோடியான இரண்டு நபர்கள் தங்களைத் தாங்களே நியமித்துக் கொண்டு, மற்றவர்களை உத்திகட்டி வரும்படி சொல்லுவார்கள். மற்றவர்களும் அவர்களுக்குப் பொருத்தம் என்று நினைக்கிற ஒரு நபரோடு ஜோடி சேர்ந்து ஒருவர் தோள்மீது ஒருவர் கையைப் போட்டுக்கொண்டதும் ''உத்தி''யாகி விடுகிறார்கள்.

இப்படி உத்திகட்டி வருகிறவர்கள் முதலில் தனியாகப்போய் தங்களுக்குள் ஆலோசித்து ஆளுக்கு ஒரு புனைப்பெயரை வைத்துக்கொண்டு, தலைமை உத்தியிடம் வந்து ''உத்தி யார் உரியார்?'' என்று கேட்பார்கள். அதுக்கு அவர்கள் ''நாங்கதான்'' என்று பதில்ச் சொல்லுவார்கள். "வேலியைத் தாண்டுகிற வெள்ளைக்குதிரை வேணுமா மானத்தைத் தாண்டுகிற மயிலைக்குதிரை வேணுமா?" என்று கேட்பார்கள். தலைமை உத்தியில் ஒருவன் ''எனக்கு மானத்தைத் தாண்டுகிற மயிலைக் குதிரைதான் வேணும்'' என்கிறான்; உடனே 'மயிலைக்குதிரை' அவன் பக்கமும் 'வெள்ளைக் குதிரை' எதிர்ப் பக்கமும் போகிறது.

அடுத்து இன்னொரு ஜோடி உத்திகட்டி வருகிறது. ''உத்தி யார் உரியார்?'' ''நாங்கதான்'' ''வானத்தை வில்லாக வளைச்சவன் வேணுமா; மணலைக் கயிருகத் திரிச்சவன் வேணுமா?'' தலைமை உத்தி இதில் எதையாவது ஒன்றைக கேட்பான. கயிருகத் திரிச்சவன் ஒரு பக்கமும் வில்லாக வளைச்சவன் ஒரு பக்கமும் சேர்த்துக் கொள்ளப் படு

கிருர்கள். இப்படியாக ஒரு விளையாட்டுப் போல—இதுவுங்கூட ஒரு சந்தோஷமான விளையாட்டாகவே இருக்கும்—இரண்டு கட்சிகள் பிரியும்.

○

வாழ்க்கையில் எந்தப் பகுதியிலும் அந்தரங்கங்கள் என்று மறைந்திருப்பது போலவே விளையாட்டுகளிலும் இருக்கிறது. (புத்திவான் எப்போதும் பலவான்தான்!) தாங்கள் சூட்டிக்கொண்ட புனைப்பெயரை தலைமை உத்தியிடம் சொல்லும்போது, சொல்லுகிறவன் தனது பெயரை முதலிலும் தனது ஜோடியின் பெயரை அடுத்தும் சொல்லி இதில் எது வேண்டும் என்றுதான் கேட்பான்; இதுவே இயல்பாக இருக்கிறது. தலைமை உத்தியில் தந்திரசாலியாக இருப்பவனுக்கு இது தெரியும். அதனுல் அவன் தனக்கு வேண்டிய திறமைசாலிகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதில் சிரமமில்லை!

மற்றத் தலைமைஉத்தி இவனைவிட புத்திகூர்மை உள்ளவனுக இருந்தால், உத்திகட்டி வருகிறவர்களை ஒருவரே கேட்கக்கூடாது மாறிமாறிக் கேட்கவேண்டும் என்று ஒரு புதுச் சட்டம் ஒன்றைப் பிரரேபித்து, இப்படிச் செய்யாவிட்டால் திறமைசாலிகள் ஒருபக்கமே சேர்ந்துவிட ஏதுவாகும் என்று காரணம் கூறி விளக்குகிருன். அன்றிலிருந்து இதுவும் ஒரு ஏற்றுக்கொண்ட விளையாட்டுச் சட்டங்களில் ஒன்ருகிவிடுகிறது.

காலம் ('கலி') முற்றிக்கொண்டே வருகிறது. முந்தையர்களைவிட இப்போதையக் குழந்தைகளின் புத்திசாலித் தனமும் வளர்ந்துகொண்டு வருகிறது. (விவரம் தெரிந்த பெரியவர் இக்காலத்துப் பிள்ளைகளைப் பார்த்து, இந்த வயசில் நான் இவ்வளவு புத்திசாலியாக இருந்ததில்லை என்று சொல்லுகிற காலம் இது.)

இப்படியாக இரண்டு கட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு விளையாட்டு ஆரம்பமாகிறது.

சில குழந்தைகள் அங்கஹீனர்களாக இருப்பார்கள்—இளம் பிள்ளைவாதம் அல்லது 'பிறவி'க் காரணங்களால்—அவர்களும் வந்து விளையாட்டில் தாய்ச்சிகளாகவோ நடுவர்களாகவோ இருந்து ஆட்டத்தை உத்ஸாகப்படுத்தி இயக்குவதின் மூலம் கலந்துகொள்கிருர்கள்.

தேர்ந்தெடுக்கும் மற்ற முறைகள்:

கண்ணம்பூச்சி, நிலாப்பூச்சி, நொண்டி போன்ற விளையாட்டில் ''பிடித்துவர''—பொத்திவர— ஒருவனைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பிடித்துவருவது என்பது கொஞ்சம் கஷ்டம். யாரும் விரும்பமாட்டார்கள் இதை.

யாருக்கும் பாதகமில்லாமல் தேர்ந்தெடுக்கும் ஒரு முறை கையாளப்படுகிறது. தலைவனை நெருங்கி எல்லோரும் வட்டமாக நின்றுகொள்வார்கள். அவன் ஒவ்வொருவனை யும் சுட்டி இப்படிச் சொல்லிக்கொண்டு வருவான். ''அத்தலி, புத்தலி, மகா, சுகா, பால், பரங்கி, ராட்மா, பூட்மா, சீ, ஸல்.''

''ஸல்'' என்ற சீர் யார்மேல் வந்து முடிகிறதோ அவ னுக்கு ''பிடித்துவரு''வதிலிருந்து விடுதலை!

இப்படியே திரும்பத் திரும்பச் சொல்லி, கடேசியில் மிஞ் சும்ஒருவன்தான் ''பொத்தி'' —பிடித்து—வரவேண்டும்.

இப்படித்தேர்ந்தெடுக்க "சங்கு,சக்கரம்,இந்து,நாகம்,பால்..." என்ற பாட்டையும் சொல்லுவதுண்டு.

இன்னொரு சொல்முறையும் உண்டு; நல்ல தமிழில். ''பச்சைத் தவக்கா, பளபளங்க, பழனிமச்சான், மினுமினுங்க, செங் குழலி, செவத்தப்புள்ளெ, கிண்ணவந்தான்,கிணுக்கட்டி'' கிணுக்கட்டி என்று யார்மேல் வருகிறதோ அவர்களைத் தள்ளிவிட வேண்டும்.

O

வெள்ளையா கருப்பா?:

விளையாட்டில் இரண்டு கட்சிகளில் யார் முதலில் தொடங்கு வது என்ற கேள்வி எழும். முதலில் தொடங்குகிறவர் களுக்குச் சில விளையாட்டுகளில் சில சாதகங்கள் உண்டு. சில விளையாட்டில் பாதகங்களும் உண்டு.

உடைந்த ஒரு ஓட்டாஞ்சல்லி (நாணயம் அளவுள்ள ஒரு உடைந்த ஓடு) எடுத்து, எந்தக் கட்சிக்கு எந்த நிறம் என்று கேட்டுக் கொண்டு—ஓட்டாஞ்சல்லியின் வெளிப் புறம் கருப்பாகவும் உள்பக்கம் வெளிர் சாம்பல் நிறமாக வும் இருக்கும்—தலைக்குமேலே சுண்டிவிட்டு தரையில் விழுந்தவுடன் பார்த்து தீர்மானிப்பார்கள் எந்தக் கட்சி

முதலில் ஆட்டையைத் துவக்க வேண்டும் என்று. (ஓட்டின் வெளிப்பாகம், உட்பாகம் சரியாகத் தெரியாத பொழுது ஒரு பக்கத்தை எச்சிலாக்கி வித்தியாசப்படுத்திக் கொள்வார்கள்!)

கால்த்தூக்கிக் கணக்குப்பிள்ளை:

இருவர் ஒரே திசையில்த் திரும்பி நின்றுகொண்டு ஒருவனது வலது கையுடன் மற்றவன் இடது கையைக் கோர்த்துக் கொள்வான். மூன்றுமவன் அந்த இருவருக்குப் பின்புறமாக வந்து இருவரது தோள்களிலும் தனது இரு கைகளையும் போட்டுக்கொண்டு வலது முழங்காலை கோர்த்த கைகளில் ஊன்றி இருந்து கொள்வான். அவனது மற்றொரு காலை நாலாவது ஒருவன் ஏந்திப் பிடித்துக் கொள்வான். சவாரி செய்பவனைத் தாங்கிய வண்ணம் ''கால்த் தூக்கிக் கணக்கப் பிள்ளைக்கு மாதம் பத்துரூவா'' என்று எல்லோரும் சொல்லிக்கொண்டே நடந்து போவார்கள்! (மேலே இப்படி ஏறிச் சவாரி செய்கிறவனுக்கு சந்தோஷமாக இருக்கும்.) இப்படி ஒருவர் மாறி ஒருவராக சவாரி செய்து மகிழ்வார்கள்.

பம்பரம்:

ஒருவனுடைய பம்பரம் குறிப்பிட்ட வட்டத்தினுள் வைக்கப்படும். மற்றவர்கள் தங்கள் பம்பரங்களால் அதைக் குத்திக் கிளப்ப வேண்டும். அப்படிக் கிளப்பியவுடன் எல்லோரும் பம்பரங்களை ஆடவிட்டுக் கயிற்றினுல் சுண்டி மேலே எடுத்து உள்ளங்கையில் ஆடவிட வேண்டும். இதுக்குக் ''கோஸ்'' எடுத்தல் என்று சொல்லுகிறது.

கடேசியாகக் கோஸ் எடுப்பவன் வட்டத்தினுள் பம்பரத்தை வைப்பான். மற்றவர்கள் முதலில் செய்ததுபோல் அதை பம்பரங்களால் வீசிக் குத்துவார்கள்.

இந்த விளையாட்டின் இடையில் சிறிதுநேரம் விலகிக் கொள்ள நிற்பவன் ''சாட்டை'' என்று குரல் கொடுத்தால்ப் போதும். இதற்குத் ''தூ...சிய்யான்'' என்று அர்த்தம்.

கோஸ் எடுப்பதை சில இடங்களில் ''சிங்கோஸ்'' என்றும் ''லங்கோஸ்'' என்றும் சொல்லுவதுண்டு.

தவிட்டுக்குஞ்சி:

இரு குழுக்களாகப் பிரித்துக்கொண்டபிறகு, ஒருகுழு மறைவாகப் போய் நின்றுகொள்ளும். மற்றொரு குழுவினர் தங்களுக்குள் ஒருவனைப் படுக்கப்போட்டு, சட்டை துண்டுகளால் மூடிவிடுவார்கள். மறைந்துகொண்ட கூட்டத்தை குழுவை— ''கழுதைக் கூட்டம்'' என்று சொல்லுகிறது. இதற்கு மத்தியில் ''குஞ்சி'' போய்த் தொடுவதற்கு என்று ஒரு எல்கையை நிர்ணயித்துக் கொள்வார்கள்.

இப்போது மத்தியஸ்தனை ஒருவன் சத்தம்போட்டு ''தவிடு தவிடு தவிடு செந்தவிடு'' என்று கூவுவான். மறைந்திருந்த கூட்டம் வந்து படுத்திருப்பவன் யாராக இருக்கக் கூடும் என்று ஆராயும். தொட்டுப் பார்க்கவோ, மிகவும் அருகேபோய் உற்றுப் பார்க்கவோ கூடாது. மத்தியஸ்தன் ''தொட்டுப் பார்த்தால் சங்கு; உத்துப் பார்த்தால் சங்கு'' என்று எச்சரிப்பான்.

யாராக இருக்கும் என்று தங்களுக்குள் ஒரு முடிவு செய்து படுத்திருப்பவனின் உத்தியை விட்டு ''என் உத்தி இன்னார்'' என்று பெயரைச் சொல்லி முதுகில்த் தட்டுவான். அவன்சொன்னது சரியா தப்பா என்று மத்தியஸ்தனுக்குத்தான் தெரியும். தவறு என்றால் தவறாகச்சொன்னவன் பெயரைச் சொல்லி ''இன்னார் சங்கு'' என்று உரத்துக் கூவுவான். அப்படிக் கூவுவது மறைந்திருக்கும் குழுவினருக்குக் கேட்கும் படியாக இருக்கும்.

''சங்கு''என்றால் அவன் விளையாட்டிலிருந்து தள்ளிவைக்கப்பட்டுவிட்டான் என்று அர்த்தம்.

ஒருவன் கூறியது தவறாகப் போனபின் மீண்டும் ஆராய்ந்து யாராக இருக்கும் என்று தீர்மானித்து அவனது உத்தியைவிட்டு பெயர் சொல்லி முதுகில் தட்டச் செய்வார்கள். அதுவும் தவறாகிவிட்டால் மத்தியஸ்தன் ''இன்னார் சங்கு'' என்று தீர்ப்பளிப்பான். சரியாகச் சொல்லிவிட்டால், சொல்லியவனின் பெயரைச் சொல்லி ''இன்னார் குஞ்சி'' என்று கூவுவான். படுத்திருந்தவன் தனை மூடியிருந்த சட்டை,துணிகளை உதறிவிட்டு வெளிப்படுவான்; ஆனால் அவன் விளையாட்டில் பங்கெடுத்துக்கொள்ளக்கூடாது. சரியாகச் சொன்ன ''குஞ்சி" குறிப்

பிட்ட எல்லையை—மரமோ, சுவரோ, குத்துக்கல்லோ—ஓடிப்போய் தொடுவதற்கு முயற்சிப்பான்; அப்போது மறைந்திருக்கும்எதிர்த்தரப்பினர் பாய்ந்துவந்து "குஞ்சு" எல்லையைப்போய் தொடுவதற்குள் அவனைப் பிடிக்க முயலுவார்கள். அவர்கள் குஞ்சைப் பிடித்துவிடாமல் குஞ்சைச் சேர்ந்த குழுவினர் எதிரிகளைத் தடுத்து அவர்களைப் பிடிக்க முயற்சிப்பார்கள். இதுதான் இந்த விளையாட்டின் உச்சகட்டம்.

குஞ்சி பிடிபடாமல் ஓடி எல்லையைத் தொட்டுவிட்டால் குஞ்சி தரப்பினர் வெற்றியாளர்களாவார்கள். இல்லையானால் தோற்றவர்கள்.

வெற்றிபெற்றதை எல்லே என்று கூறுவார்கள். குஞ்சி யார் கையிலும் படாமல் எல்லையைத் தொட்டுவிட்டால் அவன் "தனிக்குஞ்சி" எனப் பாராட்டப்படுவான்.

துப்பு ஆராய்ந்து கண்டுபிடிக்கவும் எதிரியை மடக்கிப் பிடிக்கவும் பயிற்சி தருவதுபோல் அமைந்தது இவ்விளையாட்டு.

**சடுகுடு**

இந்த விளையாட்டு "கபடி" என்ற பேரில் நவீனப்படுத்தப்பட்டிருக்கிறது. சடுகுடு விளையாட்டில் ஒருவன் பிடிபட்டு விட்டால் அல்லது பாடி வருபவனால் தொடப்பட்டுவிட்டால் அவனை "பட்டுப்போனான்" என்று சொல்வார்கள். பட்டவன் தரப்பினரே மீண்டும் பாடிவரவேண்டும். "பட்டவன் படையெடுத்துவா" என்று அழைப்பார்கள்.

"பட்டான் பட்டான் என்தம்பி
படையிலே பட்டான் என்தம்பி
நெத்திமேலே குண்டு வச்சி
நேரே வாடா என்தம்பி......"

என்று பாடுவதுபோலவே அமைந்திருக்கும் இவன் பாடிப் போகும்போது.

எதிரிகளைச் சுற்றி வந்துவிட்டால் "கொம்பு சுற்றிப் பாடுனான்" என்று சொல்வார்கள். வெற்றி பெறுவதை எல்லே வைப்பது என்பார்கள்.

''பட்டாளுக்காய் படையெடுத்து வாரேன்
துட்டாளெல்லாம் தூரப்போ தூரப்போ......''

என்றும் பாடிவருவார்கள்.

சடுகுடுவுக்கு இன்னொரு பேர் ''குடட்டி''. இதில் மூச்சுக் குடட்டி, மல்லுக்குடட்டி என்று வகைகள் உண்டு.

கிளித்தட்டு



மேலே கண்டவாறு தரையில் கோடுகள் போடப்பட்டு (ஒவ்வொரு சதுரமும் 6 அடி நீளம் 6 அடி அகலம் சுமார்.) ஒரு தரப்பினரில் தட்டுக்கு ஒருவராக (இரண்டு சதுரம் கொண்டது ஒரு தட்டு) நின்று கொள்வார்கள்.

அவர்களில் ஒருவன் ''கிளி''யாக ஊடு கோட்டிலும் சுற்றுக் கோட்டிலும் ஓடி வருவான்.

எதிர்த்தரப்பினர் தட்டுகளுக்குள் இறங்கி கடேசித் தட்டுக்குப் போக முயற்சிப்பார்கள். அப்படிப் போய்விட்டால் ''முத்தட்டு பாய்ந்தாகி விட்டது'' என்று சொல்வார்கள்.

முத்தட்டுப் பாய்ந்தவன் மீண்டும் தட்டுக்குள் நுழைந்து முகப்பை நோக்கிப் பாய்வான். அப்படிப் பாய்ந்துவிட்டால் பழம்

முத்தட்டுப் பாயவிடாமலும், பழம்போக விடாமலும் எதிர்த்தரப்பினரும் கிளியும் மறிப்பார்கள். கிளியின் கைகளுக்குத் தப்பி விலகிக் கொள்ள வேண்டும். மற்றவர்கள் ஒரு தட்டைவிட்டு மறுதட்டுப் பாயும்போதே எதிரியை அடிக்கலாம்—அதாவது தொட்டுவிடலாம்.— ''இழுத்துக்கட்டு'' ''திருப்பிக்கட்டு'' ''காடுபாயுது'' ''சப்பை நாறிப்போச்சி'' என்கிற பல சொற்கள் இவ்விளையாட்டில் கூறப்படும்.

பதினைஞ்சாம் பிள்ளை (பதினைஞ்சாம் புலி)

இது கிராமத்தின் ஊரிய விளையாட்டு—தேசிய விளையாட்டு என்கிற மாதரி—என்று சொல்லலாம். வயசாளிகளுக்கு உயிர்ப் பொழுதுபோக்கு! வேலையில்லாத காலங்களில் இளவட்டங்களும் ஆடுவார்கள். களிப்பாக்கு அளவுள்ள பதினைந்து கற்கள், 5 பைசா அளவுள்ள மூன்று ஓடுகள் (ஓட்டாஞ்சல்லி) மூன்று கிடைத்தால்ப் போதும். கட்டம் வரைய கரித்துண்டோ ஏதாவது ஒரு பச்சை இலையோ வேண்டும்.

சில ஊர்களில் கரைமரத்து நிழலில் உட்கார்ந்து ஆடுவதற்கு வசதியாய்க் கல்லில் நிரந்தரமாகவே கல்த்தச்சனைக் கொண்டு செதுக்கி வைத்திருக்கிறார்கள்.



இப்படியுள்ள இந்தக் கட்டிடத்தின் உச்சியில் ஒரு ஓடும் நேர்கீழே இரண்டு ஓடும் ஃ மாதரி வைத்துக்கொள்ள வேண்டியது. இப்போதுபுலிகள் தயார். நாய்கள் வந்து புலிகளைக் கட்டவேண்டும். கட்டத்தில் எங்கெல்லாம் கோடுகள் சந்திக்கிறதோ அங்கெல்லாம் நாய்களை அதாவது கற்களை வைக்கலாம்.

தரையில் ஈ உட்கார்ந்தவுடன் ஈப்புலி அதைப்பார்த்து நகருவதைப்போல புலி அந்த நாயைப் பார்த்து நகரும். அடுத்தகட்டத்தில் அதாவது அடுத்த சந்திப்புக்கோட்டில் மேலும் ஒரு நாயை வைத்து விட்டால் புலியால் ஒன்றும் செய்ய முடியாது; இப்படிச் செய்யாவிட்டால் புலி, நாயை 'வெட்டி' விடும்.

தந்திரமாக வெட்டுக்கொடுத்து, மூன்று புலிகளையும் நகரவிடாமல் நாய்களைக் கொண்டு அடைத்துவிடுவதுதான் இந்த ஆட்டத்தில் வெற்றி.

வெட்டு வரும்போது ''வெட்டு'' என்று சொல்லி எச்சரித்து ஆட வேண்டும்; செஸ் விளையாட்டில் ''செக்'' என்று சொல்வதுபோல.

தெல்லு.

இது ஆண்கள் விளையாட்டு.

ஒவ்வொருதெல்லை ஒவ்வொருவரும் வரிசையில் நட்டி நிறுத்துவார்கள். முதலில் இருக்கும் தெல்லின் பக்கத்தில் நின்றுகொண்டு, தங்களுக்குள் ஏற்படுத்திக் கொண்ட வரிசைப்படி கடைசியிலிருக்கும் தெல்லுக்குப் பக்கத்தில் தங்கள் தெல்லைப் போடுவார்கள். கடைசியில் இருப்பவன் தெல்லைக்கட்டாமல் ''பித்தி'' என்று சொல்லி முதலில் இருக்கும் தெல்லுக்குப் பக்கத்தில் நாலுவிரல் த்தூரம் விட்டு தனது கைத்தெல்லை நட்டிக் கொள்ளலாம். (இவன் 'பித்தி'') கடைசித் தெல்லைத் தாண்டி கட்டியவன் ''கெட்டி''

கெட்டிதான் ஆட்டையில் முதலில்த் தெறித்து ஆடவேண்டும். தெரித்த தெல்லுகள் அவனுக்கு. தெரிப்பதில் அவன் குறி தவறிவிட்டால் அடுத்தவன் தெரிப்பான். இப்படியே கடைசியில் 'பித்தி'க்காரன் தெரிப்பான். எல்லாத்தெல்லுகளையும் தெரித்தபிறகு, மற்றவர்களுடைய கைத் தெல்லையும் தெரிக்கவேண்டும்; அப்படித் தெரித்துவிட்டால் அந்த கைத்தெல்லுக்கு உரியவன் ஒரு தெல்லைக் கொடுத்துவிட வேண்டும்.

தெரிக்கும்போது தெல்லு குப்பை கூளத்திற்குள் போய் விழலாம். அப்படி விழுந்தது அதேபடியே கிடக்கவேண்டும் என்கிற பொருளில் ''கடக்கோ'' என்பார்கள். இதுக்குப் பதிலாக சம்மந்தப்பட்டவன் ' மலையக்கிலேயப் பேர்த்துக் கிடுவேன்'' என்று கூறலாம். யார் இதில் முந்திக் கூறுகிறார்களோ அதுதான் ஒப்புக்கொள்ளப்படும். (தெல்லைக் கட்டும்போதும் ''கடக்கோ'' என்று சொல்லிக் கட்டுவார்கள்.)

கைத்தெல்லு தவிர மற்றவற்றைத் தோற்றுவிட்டவன் கைத் தெல்லை ஈடுகட்டி அதற்குப் பதிலாக ஒரு ஓட்டாஞ்சல்லியை நட்டிக்கொள்ளலாம். இந்த ஓட்டாஞ்சல்லிக்கு ''சிங்கிலி'' என்று பெயர். ஆட்டையில் இவன் வெற்றி பெற்றாலும் பெறலாம்; தோற்றுவிட்டால் அவனது கைத் தெல்லைக் கொடுத்து விடவேண்டும்.

கோலி.

கோலி தெரிப்பதற்கு வலதுகைப் பெருவிரலைத் தரையில் ஊன்றி இடதுகைப் பெருவிரலோடு மற்றுமிரு விரல்களைச் சேர்த்துக் கோலியைப் பிடித்துக்கொண்டு, வலதுகை நடு விரலால் அழுத்திக் கோலியைத் தெரிப்பார்கள்.

குழிகள்-சிறியதாக, இட்லி பதியும் படியாக-தோண்டி, அதில் விழுமாறு செய்வார்கள். உருட்டும்போதே குழியில் முதலில் விழுந்துவிட்டால் ஐந்து. இல்லாவிட்டால் ஒவ்வொரு குழியாகப் போட்டு, ஒண்ணு, ரண்டு என்று பத்து வரை போட்டுப் பழம் ஏறவேண்டும். இரு கோலிகள் பக்கத்திலிருக்கும்போது ஒன்றைப் பார்த்துத் தெரிக்கிறன். தெரிக்கப்படும் கோலிக்கு உரியவன் 'ஈரடிப்பழம்' என்று சொன்னபின் இரண்டு கோலிகளிலும் அடிபட்டு விட்டால் அக்கோலிக்குரியவன் பழம் ஏறிவிட்டதாய்க் கொள்ளப்படும். அந்த சமயத்தில் தெரிபடும் கோலிக்குரியவன் ''ஈரடிக்காய்'' என்று சொல்லலாம். முதலில் யார் கூறுகிருர்களோ அதுதான் உறுதி.

கடைசியில் பழம் ஏருமல் பட்டுக்கொண்டவன் விரல்களை மடக்கி மொழியை தரையில் ஊன்றிக்கொள்ளவேண்டும். வெற்றியாளர்கள் தோற்றுனின் கைமொழியில் கோலியால் 'முக்காமுக்கா மூணுதரம்' தெரிப்பார்கள். தெரிக்கப்பட்ட கோலியை இத்தனைதேக்கு, இத்தனை சுண்டில் கொண்டுவா என்று எண்ணிக்கையைத் தெரிவிப்பார்கள். அதை விரலால்ச் சுண்டியும் முழங்கையினுல் தேய்த்தும் கோலியைக் கொண்டுவருவதற்குள் கைவலி எடுத்து விடும்.

வண்ணும்பொதி.

எல்லோருடைய மேல்ச்சட்டைகளேயும் ஒரு பொதியாகக்கட்டி ஒருவனை உட்கார்த்தி அவன் முதுகில் பொதியை வைத்துப் பிடித்துக் கொள்ளச் சொல்வார்கள். காவலுக்கு ஒருவன் நிற்பான். மற்றவர்கள் எல்லோரும் ஓடி மறைந்து கொள்வார்கள். ஓடியவர்களில் ஒருவனை காவல்காரன் பிடிக்கவேண்டும். அப்படிப் பிடித்தவுடன் பொதி சுமப்பவன் பொதியைக்கீழே போட்டு விடவேண்டும்; பிடிபட்டவன் பொதியைச் சுமக்க வேண்டும்.

காவல்காரன் சற்று அகன்றதும் ஒளிந்திருப்பவர்களில் ஒருவன் ஓடி வந்து பொதியின் மேல் ''சோ...சோ'' என்று துவைப்பதுபோல் அடிப்பான். இப்படி அடித்துக் கொண்டிருக்கும்போது காவல்காரன் அவனைத் தொடக்கூடாது. பொதியை விட்டவுடன்தான் தொட வேண்டும். பொதியைப் பிடித்து அடித்துக்கொண்டிருப்பவன் காவலாளிக்குப் பிடிபடாமல் ஓடமுயல்வான். அவனைப் பிடிக்கத் துரத்தும் போது ஒளிந்திருப்பவர்களில் இன்னெருவன்

வன் வந்து பொதியின் மேல்த் துவைப்பான். யாராவது ஒருவன் பிடிபடும்வரை பொதி சுமக்கும் ''கழுதை''க்குக் கஷ்டம்தான்!

காலத்தாண்டி

இந்த ஆட்டையை வேறு பகுதிகளில் ''பச்சைக்குதிரை'' என்பார்கள். ஒருவன் காலைநீட்டி உட்கார்வான். எல்லோரும் தாண்டிச் செல்வார்கள். பிறகு கால்மேல்கால் வைப்பான்; அதையும் தாண்டுவார்கள். பின்பு கால்மேல் விரல்களை அகலித்து சாண்வைப்பான்; அப்புறம் அதே போல் மற்றொரு கை. பின் மண்டியிட்டு... இப்படியான ஒவ்வொருமுறையும் தாண்டிக் கொண்டே இருப்பார்கள். பிறகு அவன் குனிவான். தாண்டுகிறவர்கள் அவன் முதுகில் கையூன்றியும் தாண்டலாம். இந்தக் குனிவும் கொஞ்ச கொஞ்சமாக உயர்ந்து கொண்டே வரும். தாண்டும் போது அவன் மேல்ப்படக்கூடாது; அப்படிப் பட்டுவிட்டால் இவன் குனிந்து நிற்க வேண்டும்.

குனிந்துநிற்பவன் தலையை வசதியாகக் கவிழ்த்தி வைத்துக் கொள்ள வேண்டும். தலைநிமிர்ந்தாலப் போல்க் குனிந்து கொண்டு இருந்தால் ''தலையை வெட்டி நாய்க்குப் போடு'' என்பார்கள்!

மந்தி ஓடுதல்

குத்துக்கால் வைத்து உட்கார்ந்து கொண்டு வலது கையை வலது காலிடை வழியிலும் இடதுகையை இடதுகால் இடைவழியிலும் நுழைத்துக் கொண்டு ''ஓடும்'' பந்தய விளையாட்டு.

சில்லாங்குச்சி

''கிட்டிக்குச்சி'', ''கிட்டிப்புள்'' என்ற பெயர்களைக்கொண்ட ஆட்டை. ஒன்றரை முழ நீளத்தில் ஒரு குச்சியும், முக்கால்சாண் நீளத்தில் ஒரு குச்சியையும்வைத்துக்கொண்டு விளையாடுவது.

வெற்றி பெற்றவனை பழம் ஏற்றி விட்டான் என்பார்கள். தோற்றவன் ''எடுத்துஊற்ற'' வேண்டும் என்பார்கள்.

துணியை நன்ருக இறுகச் சுருட்டி மேலே பொடீக் கயிறு களால் அழகாகவரிந்து கட்டுப் போட்டுப் பந்தாகப் பயன் படுத்துவர். உள்ளே ஒரு காக்காமுட்டையை வைத்து துணியைச் சுருட்டி பந்துசெய்தால் வலுவுள்ளதாய் இருக் கும் என்று சொல்லுகிருர்கள். பலவித ரப்பர் பந்துகள் புழக்கத்துக்கு வந்தபிறகு துணிப்பந்து குறைந்துவிட் டது.

பந்து விளையாட்டுகளில் ''பேப்பந்து'', ''குழிப்பந்து'', ''பிள்ளையார் பந்து'' என்ற மூன்று வித ஆட்டைகள் உண்டு.

குழிப்பந்து, பிள்ளையார் பந்து விளையாட்டுகளில் ஆட ஆரம் பிக்கும் போது ''வாச்சால் நமக்கு வாய்க்காவிட்டால் பிள்ளையாருக்கு'' என்று சொல்லி பந்தை எறிவார்கள்.
பிள்ளையார்ப்பந்தில் பிள்ளையாராக இருப்பது ஒரு நீண்ட முக் கோணமுள்ள கல்தான். ஒரு சுவரை அடுத்து அந்தப் ''பிள்ளையாரை'' நிறுத்தி அந்தப் பிள்ளையாரை வீழ்த்த பந்து எறியவேண்டும். எறியும்போது எழும்பிய பந்தை எதிர்தரப்பினன் எவனுவது பிடித்து விட்டால் எறிந்தவன் ஆட்டையிலிருந்து விலகிக்கொள்வான். எறிந்த பந்து தரையோடு உருண்டுவந்தால் ''மட்டை'' என்று சொல் லுவது. அதையும் மற்றவன் எடுத்தால் ஆடியவன் ஆட்டை இழந்துவிடுவான்.

பந்து சுவரில் பட்டு திரும்பி வரும்போது பிள்ளையாரைச் சாய்த்தால் அது சேர்த்தி இல்லை. அப்படிச் சாய்ப்பதற்கு பெயர் ''பிரமட்டை''.

முறைப்படி அடித்து பிள்ளையாரும் சாய்ந்துவிட்டால் எதிர் தரப்பினர் இரண்டாகப் பிரிந்து—இரண்டு திசைகளில்— ஓடிவிடுவார்கள். எறிந்த தரப்பினர் பந்தை மடியில் ஒளித் துக்கொண்டு (இந்த ''ஒளித்துக் கொண்டு'' என்பதில் தான் சுவாரஸ்யம் இருக்கிறது!) இருப்பதோ ஒரு பந்து; ஆனல் எல்லோரும் கையில் பந்திருப்பதாக கையை மடி யால் மூடிக்கொண்டு வருகிருர்கள்! இதில், மத்தியில் மத்தியில் பந்தை ஒருவர் மடியிலிருந்து ஒருவர் மடிக்கு மாற்றிக் கொள்கிருர்கள். நிஜமாகவே மாற்றிக்கொண் டானு அல்லது அவனேதான் வைத்துக் கொண்டிருக்கி ருனு என்பது தெரியாது. இப்போது ஓடியதரப்பினரில்

யாராவது ஒருவன்வந்து எறிந்த தரப்பிலுள்ள யாரையாவது தொடவேண்டும். அவன் தொடவரும்போது இவன் மடியில் நிஜமாகவே பந்து இருந்தால் தொடவருபவனை அதைக்கொண்டு ஒரு ''குடுப்பு''க் கொடுப்பான்!

இதில் பந்து வைத்திருப்பவன் இல்லாதது போலவும், இல்லாதவன் பந்து இருப்பது போலவும் காட்டிக்கொள்வதைப் பார்க்க ரசமாக இருக்கும். தொட்டுவிட்டால் இவர்கள் தோற்றவர்கள்; தொட முன்னால் பந்தெறி கொடுத்து விட்டால் அவர்கள் தோற்றவர்கள்.

பேப்பந்து

இது ஒரு பேத்தனமான விளையாட்டுத்தான். எடுத்தவன் பந்தை அடுத்தவன் மேல் வீசி எறியலாம்! பந்தை எடுக்கும் போது வீசிஎறியும் அளவுக்கு இல்லாமல் மிக நெருக்கமாக இருந்தால் எறிய வசதி இருக்காதல்லவா? அதற்காக இவன் பந்தை மேலே சூரை போட்டுப் பிடிப்பான். அந்த இடைவெளி நேரத்துக்குள் அவன் தப்பி விடலாம்.

இந்த விளையாட்டின் அடித்தாத்பரியம் எறியும் குறி உடம்பில்படாமல் விலகிக் கொள்ளும் பயிற்சி ஏற்படுத்துவது தான்.

மாக்குளக்கட்டை

ஒருவன் இருகைகளையும் குவித்து வைத்துக் கொள்வான். மற்றவன் தனது வலது கைமுஷ்டியால் ''மாக் கொளக் கட்டை மஞ்சக்குளக்கட்டை; பிள்ளையார் கோயில்லெ பிடிக் கொளக்கட்டை'' என்று சொல்லி ஒவ்வொரு சீருக்கும் ஒவ்வொரு குத்தாக மற்றவனது குவிந்த இரு கைகளுக்குமிடையில் குத்துவான். ''பிடிக்குளக்கட்டை'' என்று சொல்லிக் குத்தும்போது பிடிக்கவேண்டும். அப்படிப் பிடித்துவிட்டால் குத்தியவன் கையை ஏந்த வேண்டும். இப்படியே மாறி மாறி.

பூசணிக்காய் விளையாட்டு

இது குழந்தைகளின் பிரியமான விளையாட்டு. இருபால் குழந்தைகளும், முக்கியமாக பெண் குழந்தைகளுக்கு ரொம்பப் பிடிக்கும்.

தரையில், கால்களை அகலித்து ஒருவர்முன் ஒருவராக வரிசையாய் உட்கார்ந்து ஒருவர் இடுப்பை மற்றவர் பிடித்துக் கொள்வார்கள். வரிசையின் முன்னால் இருக்கும் நபர்தான் தோட்டக்காரன்; கடேசியில் இருக்கும் நபர் பூசணிக்காய். கொஞ்ச தூரத்தில் ஒரு பிள்ளை ராஜாவாக உட்கார்ந்திருக்கும். பக்கத்தில் ஒரு பிள்ளை சேவகனுக கையை கட்டிக் கொண்டு நின்றிருக்கும்.

இப்போது ராஜா, சேவகனைப் பாத்து உத்தரவு போடுகிறார்." அந்தத் தோட்டக்காரனிடம் சொல்லி ஒரு பூசணிக்காய் வாங்கி வா."

சேவகன் கொஞ்சம் நடந்துவந்து தோட்டக்காரனிடம் "ராசா மகளுக்குக் கலியாணமாம்; ஒரு பூசணிக்காய் வேணுமாம்" என்பான்.

"இப்பொத்தான் விதை நட்டீரிக்கு" என்பான் தோட்டக்காரன்.

"இப்பொத்தான் விதை ட்டீரிக்காம்" என்று ராசாவிடம் போய்ச் சொல்வான்.

"அதையும் வாங்கிட்டுவா" என்பான் ராசா.

"அதையும் வாங்கீட்டு வரவாம்."

"இப்பொத்தன் ஒரு இலைவிட்டிருக்கு" என்று தோட்டக்காரன் சொன்னதை ராசாவிடம் போய்ச்சொல்ல "அதையும் வாங்கீட்டு வா" என்கிறான் ராசா. "இப்பத்தான் ரண்டெலை விட்டிருக்கு" "அதையும் வாங்கீட்டுவா" "இப்பத்தான் கொடிவீசீருக்கு" "அதையும் வாங்கீட்டு......" இப்பத்தான் பூப் பூத்திருக்கு" "அதையும்........."

இப்படியாகஒரு பூசணிச்செடியின் முறையான வளர்ச்சியை வர்ணணையாக சொல்வார்கள். கடேசியாக "இப்பத்தான் ஒரு காயாகி இருக்கு" என்று சொல்லி "தண்ணீர் விட்டு, வேலி அடைத்து, ஒரு பூசணிக்காயைப் பிடுங்கிட்டுப்போ"" என்று தோட்டக்காரன் சொல்லி விடுவான்.

சேவகன் தண்ணீர் விடுவதுபோல ஒவ்வொருவரையும் தாண்டுவான். வேலி அடைப்பதுபோல நொண்டி வருவான். உட்கார்ந்திருக்கும் பிள்ளைகள் நாய் போல் அவனைப்பார்த்துக் குரைப்பார்கள்.ஒருவன் சேவகனின்காலில்

நறுக்கென்று ஒரு கிள்ளு வைப்பான். ''ஐயோ தேள் கொட்டிருச்சே'' என்று சேவகன் சொன்னதும் ''ஓம் பீயும் ராசாபீயும் சேத்துப்போடு தாவலேயாப் போகும்'' என்று சொல்லி பிள்ளைகள் சிரிப்பார்கள்! (ராசா பேரிலே யும் சேவகர்கள் பேரிலேயும் அவ்வளவு ''பிரியம்'' சம் சாரிகளுக்கு!)

கடேசியில் உட்கார்ந்திருக்கும் பூசணிக்காயைப் பிடித்து சேவ கன் இழுப்பான். ஒவ்வொருவரும் எதிரே உட்கார்ந் திருக்கும் பிள்ளைகளின் வயிற்றைச் சேர்த்துப் பிடித்துக் கொண்டிருப்பதால் ஒன்றை ஆட்டி இழுக்கும்போது அனைவருமே சாய்ந்து ஆடுவார்கள். இப்போது பார்க் கிறவர்களோடு அந்தப் பிள்ளைகளும் சிரிப்பதில் சேர்ந்து கொள்வார்கள். கடேசியாக ஒரு மட்டுக்கும் ஒரு பூசணிக் காய் பிடுங்கி சேவகன்தூக்கிக்கொண்டு போய் ராசா முன்னால் இறக்குவான். ''இது அழுகி இருக்கு இன் னொரு காய் பிடுங்கிக்கொண்டுவா'' என்று சொல்லுவான் ராசா. திரும்பவும் தோட்டக்காரனிடம் வருவான் சேவ கன் நொண்டிக்கொண்டு (தேள் கடித்திருக்கிறதல்லவா!)

''எருத்தட்டிவிட்டு தேங்காய் உடைத்துவிட்டு பிடுங்கிட்டுப் போ'' என்று சொல்லுவான் தோட்டக்காரன்.

சேவகன் இன்னொரு பூசணிக்காயை கஷ்டப்பட்டு(!) பிடுங்கிக் கொண்டுபோய் ராசா முன்னால் இறக்கி வைப்பான். ''ம்ஹூம்; இது சரியில்லே இன்னொரு காய் பிடுங்கிக் கொண்டுவா'' என்பான்.

இப்படியாக அந்தத் ''தோட்டத்தி''லுள்ள அத்தனை ''காய்'' களையும் ராசா பறித்துக்கொண்டு வரச்சொல்லி விடு வார்.

ஓச்சியான்

நாலு ஐந்து பேர் வட்டமாக உட்கார்ந்து கொள்வார்கள். ஒவ்வொருவரும் 5, 10, 15, 20 என்று எண்ணைத் தங் களுக்கு வைத்துக் கொள்வார்கள். எல்லோரும் இரு கைவிரல்களையும் விரித்தாற்போல் ''ஓச்சிய்யான்'' என்று கூவிக்கொண்டு தரையில் வைப்பார்கள். வைப் பதுபோல பாவலாக்காட்டி வைக்காமலும் இருப்பார்கள்! தன் எண் வருவதற்காக ஒரு கையையும் வைக்கலாம்.

கைக்கு 5 விரலாக எண்ணிப் பார்த்து அந்த எண்ணிக்கை உள்ளவன் விலகிக் கொள்வான். கடைசியில் அகப்பட்ட வன் இரு கைகளையும் கூப்பி எதிராளியை நோக்கி நீட்டிக்கொள்வான். வெற்றி பெற்றவர்கள் ஒவ்வொரு வராக வந்து இடதுகையாலும் வலதுகையாலும் மாறி மாறி கூப்பிய கையில் அடிப்பார்கள் இப்படிப் பாடிக் கொண்டே ''வண்ணான் வண்ணாங்கீரைத்தண்டு வயத் தைப்புரட்டுது; கொப்பளிக் கொப்பளிக் கீரைத்தண்டு குடலைப் பொரட்டுது''

அவர்கள் அடிக்கும்போது அடிபடாமல் தந்திரமாக கையை விலக்கிக்கொள்ள வேண்டும். அடிபடாவிட்டால் அடிக்க வந்தவன் விலகிக் கொள்வான். வரிசைப்படி மற்றவன் வருவான். வரிசை முடிந்ததும் மீண்டும் ஆட்டம் தொடங்கும்.

**உப்பு வைத்து விளையாடுவது**

இரு கட்சிகளாகப் பிரிந்து எதிர் எதிர் திசைகளில் போய் ஒரு கட்சிக்குத் தெரியாமல் ஒரு கட்சி, மண்ணை அள்ளி ''உப்பு'' குவித்து வைப்பார்கள். உப்பு வைத்தது போதும் என்ற நிலையில் ''கல் கல்; கல் கல்'' என்று வாயினால் ஒலி எழுப்புவார்கள். இந்த ஒலியைக் கேட்ட எதிர்க்கட்சியினரும் உப்பு வைப்பதை நிறுத்திக்கொண்டு ''கல் கல்; கல் கல்'' என ஒலி எழுப்பிக்கொண்டு வரு வார்கள்.

இரு கட்சியினரும் ஒரு இடத்தில் சந்தித்தபின் எதிர் எதிர் திசையில் போய் எதிர்கட்சியினர் எந்த எந்த இடங்களில் உப்பு வைத்திருக்கிறார்கள் என்றெல்லாம் கண்டுபிடித்து அழிப்பார்கள்.

இந்த வேலை முடிந்ததும் இருகட்சியினரும் கூட்டாகச்சென்று அழிக்கப்படாமல் இருக்கும் உப்புகளை எண்ணி வெற்றி தோல்வியை கணக்கிட்டு, ஒருவர்பேரில் இத்தனை உப்பு வைக்கப்பட்டிருக்கிறது என்று தீர்மானிப்பார்கள்.

**ஒத்தையா ரெட்டையா**

''ஒத்தையா ரெட்டையா'', ''சுண்டி மதியம்'' ஆகிய விளை யாட்டுகள் புளியமுத்துக்களை வைத்து விளையாடும் விளையாட்டுகள். ஒத்தையா ரெட்டையாவில் வெறுங்

கையை வைத்தால் பம்பை என்று பெயர். பனேடயைக் ''கண்டு'' சொல்லா விட்டால் ''பம்பைக்குப் பத்து முத்து'' என்று வாங்கிவிடுவார்கள்)

பெரியவர்கள் சிறுவர்களோடு சேர்ந்து விளையாடும் ஆட்டை.

ஓம் பெண்டாட்டி பெயரென்ன?

சிறுவர்கள் வளர்த்திப்பிரகாரம் ஒருவர் கொடுக்கை-குடங்கையை ஒருவர் பிடித்துக் கொள்வார்கள். வேறு இரண்டு சிறுவர்கள் தங்கள் கைகளைக் கோர்த்து உயர்த்திப்பிடித்துக்கொள்வார்கள். கொடுக்கையைப் பிடித்துக்கொண்டிருக்கும் சிறுவர்கள் ''ஒரு குடம் தண்ணி எடுத்து ஒரு பூப் பூத்தது. ரெண்டு குடம் தண்ணி எடுத்து ரெண்டு பூப் பூத்தது" என்று பத்துவரை சொல்லிக்கொண்டே அந்த இருவர் உயர்த்திப் பிடித்திருக்கும் கைகளினூடே நுழைந்து நுழைந்துவருவார்கள். அப்படி நுழைந்துவருவது ''8'' என்ற எண்வரைவது போலிருக்கும். பத்துவரை சொல்லி முடிந்தவுடன் ''கடைசியிலெ வாரவனைக் கண்ணிபோட்டுப் பிடிச்சிக்கோ'' என்பான். கடைசியில் வருபவனைக் கைகளுக்குள் சிக்கவைத்துக் கொள்வார்கள். தலைவன், ''இம்புட்டுப் பணம் தாரேன் விடுடா துலுக்கா'' என்று கைகளைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பெரிதாக்கிக் காட்டிக் கேட்பான். அதற்குப் பதிலாக பிடித்துவைத்திருப்பவன் ''விடமாட்டேன் மலுக்கா'' என்பான், ''ராசாமகளைக் கட்டித்தாரேன் விடுடா துலுக்கா'' என்றும் ''மந்திரி மகளைக் கட்டித்தாரேன்...' என்றும் கேட்பான். எல்லாத்துக்குமே விடமாட்டேன் மலுக்கா என்றே பதில் வரும்.

கைக்குள் சிறைப்பட்டவனை பிடித்துவைத்திருப்பவன்''தோசை சுடு'' ''பாய் சுருட்டு'' ''பூப்பறி'' என்று அதட்டுவான். சிறைபட்டவன் அவ்வேலைகளைச் செய்வதுபோல பாவனை செய்வான். சிறைப்பட்டவனை ''உன் பொண்டாட்டி பெயரென்ன?'' என்று கேட்பான் சிறைப்பிடித்தவன். அதற்கு அவன் ''நிலா'' என்றும் ''மரம்'' என்றும் ஒவ்வொன்றுகச் சொல்லச் சொல்ல, ஒப்புக்கொள்ளாமல் ஏதாவது ஒரு பெண்ணின் பெயரைச் சொல்லும்வரை விடமாட்டார்கள். ஏதாவது ஒரு பெண் பெயரைச் சொல்லும் போது ''ஓகோ, அவதான் ஓம் பெண்டாட்டியா!" என்று சொல்லிச் சிரிப்பார்கள் எல்லோரும்.

பூச்சொல்லி விளையாட்டு

இது பெண்கள் விளையாட்டு. இரு குழுக்களாகப் பிரிந்து கொள்வார்கள். குழுவிலுள்ள ஒவ்வொரு பெண்ணுக்கும் ஒரு பூவின் பெயரை வைப்பார்கள். யாருக்கு என்ன பெயர் என்பதை எதிர்க்குழுவுக்குத் தெரியாமல் ரகசிய மாகப் பாதுகாப்பார்கள்.

ஒரு குழு வட்டமாக உட்காரும். அடுத்தகுழு உட்கார்ந்திருக் கும் ஒவ்வொருவருக்குப் பின்னாலும் ஒருவராக உட் கார்ந்துகொண்டு முன்னால் உட்கார்ந்து கொண்டிருப் பவரின் கண்ணைப் பொத்திக் கொள்வாள். அக்குழுவின் தலைவி ஒரு பூவின் பெயரைச் சொல்லி ''மெல்ல வந்து மெல்லக்கொட்'' என்பாள். உதாரணமாக ''மல்லிகைப் பூ மெல்லவந்து மெல்லகொட்'' என்பாள். மல்லிகைப்பூப் பெயருக்கு உரியவள் மெல்ல எழுந்துவந்து பொத்தப் பட்டிருப்பவர்களில் யாரையாவது ஒருத்தியை வந்து கொட்டிவிட்டுப்போய் பழைய இடத்தில் உட்கார்ந்து கொள்வாள்.

தலைவி ''கையாட்டம் காலாட்டம்'' என்ற உடன் எல்லோரும் பொத்திய கையை விலக்கிக் கொள்வார்கள். கொட்டுப் பட்டவள், தன்னைக் கொட்டியது யார் என்று சொல்ல வேண்டும். சரியாகச் சொல்லிவிட்டால் அவளைச்சேர்ந்த குழு எழுந்து அடுத்த குழுவைப் பொத்தும். சொல்லா விட்டால் அந்தக் குழுவே மீண்டும் பொத்தப்பட வேண் டும். (முகக்குறிப்பை அறிய இந்த ஆட்டம் ஒரு நல்ல பயிற்சி)

பல்லாங்குழி

பன்னாங்குழி என்றும் பாண்டி என்றும் இதைச் சொல் வார்கள். அனேகமாய் இரண்டுபேர் சேர்ந்து விளையாடு வார்கள். ''ராஜாப்பாண்டி''யை மூன்று பேர் விளை யாடலாம்.

வெற்றி பெற்றவள் தோற்றவளுக்குக் ''கூழ்ஊத்திவிட்டாள்'' என்பார்கள். வெறுமையாக உள்ள குழிக்குத் ''தக்கம்'' என்று பெயர். தக்கக்குழியில் முத்து விழாமல் இருக்க அடையாளமாக குச்சி, தாள் ஏதாவது போட்டு வைப் பார்கள்.

### தட்டாங்கல்

மூன்று நான்கு பெண்கள் சேர்ந்து ஆடலாம். சிறுகற்களைப் பரப்பி, ஒரு கல்லை மேலே போட்டுப்பிடித்ததும் இடையில் கீழே கிடக்கும் கற்களை எண்ணிக்கைப் பிரகாரம் அள்ளியும் பாடிக்கொண்டே ஆடுவார்கள். ஒன்றுமுதல் பத்து வரை எண்ணிக்கை உண்டு. ஒவ்வொரு எண்ணிக்கைக்கும் ஒவ்வொரு பாட்டு உண்டு. வெற்றிபெறுவதைக் ''கட்டை'' வைத்தல் என்பார்கள்.

### கிந்தான்

மழைபெய்த ஈரமான தரையில் கோடு கீய்த்து ஓட்டாஞ்சல்லியால் குறிதவருமல்ப் போட்டு நொண்டியடித்துப் போய் அந்த ஓட்டாஞ்சல்லியை மிதித்து, எடுத்து பின் பக்கமாக ஓட்டாஞ்சல்லியைக் குறிப்பிட்ட கட்டத்தில் போடுவது. அப்படிப்போட்டுவிட்டால் அந்தக்கட்டத்தில் × குறி போட்டுத் தனது 'பழமாக' வைத்துக் கொள்ளலாம்; அதோடு அந்தக்கட்டத்தில் இரண்டு கால்களையும் 'இஷ்டத்துக்கு' ஊன்றிக்கொள்ளலாம்!

பழம் போடும்போது எதிரியிடம் ''பூவா; குடையா?'' என்று கேட்டு குடை என்றால் தலைக்கு மேலாகப் பின்பக்கமாகவும் பூ என்றால் இரண்டு கால் இடுக்கு வழியாகவும் ஓட்டாஞ்சல்லியை வீசிப்பழம் போடவேண்டும்.

### தாயம்.

இதில் நெடுங்கட்டம், சதுரக்கட்டம் என்று இருவகை உண்டு. முதலில், ஒன்று என்பதற்குத் தாயம் என்பார்கள்; ஆறு சோவிகளில் ஒன்று மட்டும் மல்லாந்தும் மற்றது குப்புற விழுந்தால் அதுதான் தாயம். இந்த தாயம் விழுந்தால் தான் ''நாயை''—காயை—இறக்கவேண்டும். (நகர்த்த வேண்டும்) இரண்டு அல்லது மூன்று விழுந்தால் ஆட்டை போய் விடும்!

நாவில் 'சோநாலு' 'பாநாலு' என்று உண்டு. சோனாலு விழுந்தால் தொடர்ந்து ஆடலாம். எதிரியின் காயைக் ''கொத்தி'' விட்டால் ''கொத்தாட்டை'' என்று தொடர்ந்து ஆடலாம். கொத்தாமல் பழம் ஏறக்கூடாது—கொடி ஏறக்கூடாது—ஒரு முறை நாய் சுற்றி வந்தபிறகு பழத்தைநோக்கி கோட்டின் வழியாக முன்னேறுவதற்குக்

கொடியேறுதல் என்று பெயர். கொடி ஏறும்காயைக் கொத்த முடியாது; |X| இந்தக் குறியுள்ள கட்டத்திலுள்ள காயையும் கொத்த முடியாது. காய் இறங்காமல்க் கிடப்பதை ''சவம் கிடக்கிறது'' என்பார்கள். சவம் கிடந்தால் பழம் போடமுடியாது. கொத்தாவிட்டால் முந்திய கட்டத்திற்குமேல் காயை நகர்த்தக்கூடாது. தொடர்ந்து ''தாயம்'' நன்றாக விழுந்தால் விருத்தம் நன்றாக விழுகிறது என்பார்கள்.

இது பெண்கள் ஆட்டம் என்றாலும் முறைப்பெண்களோடு ஆண்கள் விளையாடுவது உண்டு, சுவாரஸ்யம் கருதி!

''ஒருத்தாயம் ஈரஞ்சி நாலு......: ஒரு ஈரஞ்சி நாலுதானா...'' என்று ராகம்போட்டுச் சொல்லுவது இனிமையாக இருக்கும். ''சோனாலுண்ணும் போகலாமா?—'' என்று உருக்கத்தோடும் கெஞ்சுதலோடும் பாடுவது அனுபவிக்கும்படியாக இருக்கும்.

## ஒருப்பத்தி இருப்பதி

சிறு பெண்கள் வட்டமாய் உட்கார்ந்து தங்கள் கைகளைத் தரையில் வைத்துக்கொள்வார்கள். தலைவி ஒவ்வொரு கையையும் தொட்டு இப்படிப் பாடிக்கொண்டு வருவாள். ''ஒருப்பத்தி, இருப்பத்தி, ஓரியமங்கலம், சீப்பு, சினுக்கவலி'' என்று முடித்து. அடுத்த கை வரும்போது அவளிடம் ''உங்க ஐயா பேரென்ன?'' என்று கேட்பாள். ''முருக்கந்தண்டு'' என்று பதில் சொல்வாள். தலைவி பாட்டைத் தொடர்ந்து ''முருக்கந்தண்டு திண்ணவரே, முள்ளிச்சாரு குடிச்சவரே, தார்தார் வாழைக்காய், தமுர்குத்தி வாழைக்காய், பூப் பூ மண்டலம், பூமாதேவி கையெடு'' என்று முன்போலவே ஒவ்வொரு கையின்மேலும் விரலைவைத்துக்கொண்டே வருவாள். பூமாதேவி கையெடு என்ற வரி யார் கைமேல் வருகிறதோ அவள்தனது ஒருகையை மலர்த்தி வைத்துக்கொள்வாள். தலைவி மீண்டும் பாட்டைத் தொடருவாள். மலர்த்திய கையின்மீது ''பூமாதேவி கையெடு'' என்ற தொடர் வரும்போது அவள் கையை எடுத்துக் கொள்ளலாம். இப்படி இருகைகளையும் எடுத்துக் கொண்டவள் விடுதலை பெற்றவளாக நிற்பாள். இப்படி ஒவ்வொருவராக விலகியபின்பு கடேசியில் இருப்பவளிடம் தலைவி ''மானம் வேணுமா? பூமி

வேணுமா? என்று கேட்பாள். அவள் இதில் எதையாவது சொல்லுவாள். அவள் கூறியதிலிருந்து மேல்ப்படி பாட்டை வானத்துக்கும் பூமிக்குமாகச் சுட்டிப்பாடுவாள். கடைசி ஆளும் விடுதலை அடைந்தபின் தலைவி தவிர மற்ற வர்கள் எல்லோரும் ஏழுஎட்டுப் பாகத் தூரத்துக்கு அப் பால்ப்போய் வரிசையாக நின்று கொள்வார்கள்.

தலைவி ''ஏ முதல் பூனைக்குட்டியோவ்...'' என்று நீட்டி அழைப் பாள். முதலில் விடுதலை அடைந்தவள் ''ஓய்'' என்று பதில்க் கொடுப்பாள். ''மாரியம்மா கோவிலுக்கு நெல் குத்த வாரியா?'' என்று கேட்பாள் தலைவி. ' என் பிள்ளை அழுகுது'' என்று பதில் வரும். ''பிள்ளையெ உங்க அம்மா கிட்டெ விட்டுட்டுவா'' ''போகமாட்டேங்கு'' ''உங்க ஐயா கிட்ட விட்டுட்டுவா'' ''போகமாட்டேங்கு'' உங்க அக்கா கிட்ட விட்டுட்டுவா, பாட்டிகிட்ட, தாத்தாகிட்ட, மாமா, அத்தை இப்படி வரிசையாய் தலைவி சொல்ல போகமாட்டேங்குது என்றே பதில்வரும். கடேசியில் தலைவி ''காலைக்கையை முறிச்சி அடுப்பிலெ வச்சிட்டுவா'' என்பாள். ''அடுப்புலெ வச்சாச்சி'' என்று பதில் வரும்! உடனே தலைவி சந்தோஷமாய் ''மாக்குளிச்சி வாரியா? மஞ்சக்குளிச்சிவாரியா? பூவச்சிவாரியா; பொட்டுவச்சி வாரியா? யானைமேலெவாரியா; குதுரைமேலெ வாரியா? கயத்துலெவாரியா; கம்பிமேலெவாரியா?'' என்று கேட் பாள். ஒவ்வொரு கேள்விக்கும் எதையாவது பதிலாகச் சொல்லுவாள் பூனைக்குட்டி.

கடேசியில் ''எத்தனை எட்லெ வாறே எங்கிட்டெ?'' என்று கேட்பாள் தலைவி. பத்து எட்லெ அல்லது பதினஞ்சி எட்லெ என்று பதில்வரும். சரி; வா என்றவுடன் அத்தனை எட்டில் நடந்துவந்து, உள்ளங்கை இரண்டையும் தேய்த் துத் தலைவியின் கன்னங்களில் வைப்பாள். தலைவி அவ ளது கைகளைப்பிடித்து ''சுடுது'' என்று தலையை ஆட்டி திருப்தி தெரிவித்து போகச்சொல்லுவாள். சிலரது கைகளை சுடவில்லை என்று கூறி அவர்களது கையில் ''தூ'' என்று துப்புவது போல பாவனைசெய்து போகச் சொல்லுவாள்.

இப்படி எல்லோரையும் அழைத்தபின் விளையாட்டு முடியும்.

குச்சுக் குச்சு ராக்கம்மா.

இதுவும் பெண் குழந்தைகள் விளையாட்டே.

இரண்டு பக்கங்களில் பக்கத்துக்கு இருவராக ஒருவருக்கொரு வர் தோள்மேல் கைபோட்டுக்கொண்டு நின்று கொள் வார்கள்.

ஒரு பக்கத்திலிருக்கும் ஜோடி, இப்படிப் பாடிக்கொண்டே எதிர்ஜோடியைச் சுற்றி வருவார்கள். ''குச்சுக் குச்சு ராக்கம்மா பொண்ணுண்டோ? கூசாலி ராக்கம்மா பொண்ணுண்டோ? சாதிச்சனமெல்லாம் பொண் ணுண்டோ? உங்க, சம்மந்த வழியெல்லாம் பொண் ணுண்டோ?'' சுற்றிவந்து இருப்பிடம் திரும்புவார்கள்.

எதிர் ஜோடி இவர்களைச் சுற்றிவந்து இப்படிப் பாடி பதில் கூறுவார்கள்.''

''குச்சுக்குச்சு ராக்கம்மா பொண்ணில்லே.
கூசாலி ராக்கம்மா பொண்ணில்லே
சாதிச் சனமெல்லாம் பொண்ணில்லே—எங்க
சம்மந்த வழியெல்லாம் பொண்ணில்லே.''

மீண்டும் முதல் ஜோடி

''குச்சுக்குச்சு ராக்கம்மா பத்து ரூபா
கூசாலி ராக்கம்மா பத்து ரூபா
சாதிச் சனமெல்லாம் பத்து ரூபா—உங்க
சம்மந்த வழியெல்லாம் பத்துரூபா''

என்று பாடிக்கொண்டே 2வது ஜோடியை சுற்றி வருவார் கள்.

இதுக்கு பதிலாக 2வது ஜோடி பதில் பாடிக்கொண்டே முதல் ஜோடியை சுற்றி வருவார்கள் இப்படி.

''குச்சுக்குச்சு ராக்கம்மா அதுவேண்டாம்
கூசாலி ராக்கம்மா அதுவேண்டாம்.
சாதிச் சனமெல்லாம் அதுவேண்டாம்—எங்க
சம்மந்த வழியெல்லாம் அதுவேண்டாம்''

இப்படியே பத்துரூபா, நூறுரூபா, ஒட்டியாணம், பதக்கம், கம்மல் என்று சொல்லி பெண்கேட்பதும், அதற்கு அவர் கள் மறுப்பதுவுமே இந்த விளையாட்டு.

சொல்ப் பழக்கமும் கற்பனை வளமும் ஏற்படுகிறது குழந்தை களுக்கு.

என் ஆட்டைக்குவராதவள்

விளையாட்டில் ஒவ்வொருவருக்கும் அனுகூலமான சமயங்கள் உண்டு; பாதகமான சமயங்களும் உண்டு. ஒருத்தி விளையாட்டிலிருந்து விலகிக்கொள்ள நினைத்தால் தனக்குசாதகமான சமயத்தில்தான் விலகிக் கொள்ளவேண்டும். பாதகமான சமயத்தில் விலகிக்கொள்ள நினைத்தால் எதிராளி விடமாட்டாள். அதைமீறி விலகிக் கொண்டால் அவள் இவளை இப்படி ஏச்சிக் காட்டுவாள்.

"என்னுட்டைக்கு வராதவள் எண்ணெக்காரன்பொஞ்சாதி
என்னுட்டைக்கு வராதவள் எண்ணெக்காரன்பொஞ்சாதி"
என்றும்,

''தோத்தோ நாயி, தொட்டியக்குடி நாயி
வாவா நாயி வண்ணக்குடி நாயி...'' என்றும் பாடுவாள்.

(தொட்டியர்கள் வேட்டைப் பிரியர்கள். நல்ல நல்ல நாய்களை வைத்துக் கொண்டிருப்பார்கள். வண்ணக்குடியிலும் நாய் முக்கியமாக இருக்கும். ஊர்க்கஞ்சி நிறைய்யக் கிடைப்பதால் அவர்களுக்கு நாய்வளர்ப்பது சுலபம். ஒதுக்குப்புறமாக அவர்கள் வீடுகள் இருக்கும். அதைவிடத் தள்ளித்தான் வெள்ளாவி வைக்கும் இடம், தண்ணீர்த் துறை இருக்கும். ஊர்த்துணி மணிகளெல்லாம் அவர்கள் பொறுப்பில் இருப்பதால் காவலுக்கு நாய் அவசியம் )

நொண்டி.

(ஆண், பெண் குழந்தைகள் இருபாலாரும் சேர்ந்தோ, தனித் தனியாகவோ ஆடும் விளையாட்டுகள்.)

ஒரு வட்டத்தினுள் எல்லோரும் நிற்க, ஒருவன் அல்லது ஒருத்தி நொண்டியடித்துக் கொண்டேவந்து யாரையாவது தொடுதல். தொடப்பட்டவள்(ன்) நொண்டியடித்து மீண்டும் யாரையாவது தொடவேண்டும்.

நிலாப்பூச்சி.

நிலாக் காலங்களில் விளையாடும் விளையாட்டுக்களில் ஒன்று. ஒருவன் அல்லது ஒருத்தி பிடித்து வருவாள். பிடித்து வருபவள் நிலா வெளிச்சத்தில் நின்றுகொள்வாள். மற்றவர்கள் நிழலில் நின்று கொள்வார்கள். வெளிச்சத்திற்கு

வந்தால் பிடித்துவருபவள் தொடுவாள். வெளிச்சத்தில் விழும் அவர்களுடைய நிழலைத் தொட்டாலும் போதும்! ''தொடு''பட்டவன் பிடித்துவர வேண்டும்.

### கிறுகிறு மாம்பழம்

10 வயசுக்குட்பட்ட பெண் ஆண் குழந்தைகள் கையைப் பக்கவாட்டில் நேராய் நீட்டிக்கொண்டு ''கிறுகிறு மாம்பழம், கிய்யாக்கிய்யா மாம்பழம்'' என்று சொல்லிக்கொண்டே தன்னைத்தானே சுற்றுவார்கள். கொஞ்சநேரம் சுற்றியதும் அதற்குமேல் சுற்றமுடியாமல் தள்ளாடி தொப்பென்று உட்கார்ந்து முன்பக்கம் கைகளை ஊன்றிக்கொள்வார்கள். பூமியும் வானமும் சுற்றுவது போலிருக்கும். இன்பமாக அனுபவித்து மகிழ்வார்கள்.

### ராட்டுப்பூட்டு

ஆண் பெண் குழந்தைகள் இரண்டு பேராகச் சேர்ந்து தமது கைகளைக் கோர்த்து, பிறகு ஒவ்வொருவருடைய இடதுகையும் மற்றவரது பிடரியில்பட்டு அவருடைய வலதுகையைப் பற்றிக்கொள்ளும். ஒவ்வொருவருடைய வலதுகையும் தலைக்குப் பின்புறமாக மற்றவனது இடது கையைப் பற்றிக்கொள்ளும். இருவரும் இப்போது எதிர் எதிர் திசையைப்பார்த்து நிற்பார்கள். அப்படியே ''ராட்டு பூட்டு, ராவணஞ்சீட்டு'' என்று சொல்லிக் கொண்டே வேகமாகச் சுற்றுவார்கள்.

### தைத்தக்காதை

மூன்றுபேர் வட்டமாய் வெளிப்பக்கம் பார்த்து கைகளைக் கோர்த்துக்கொண்டு நிற்பார்கள். ஒருவன் தனது ஒரு முழங்காலை ''ட'' போல் பின்பக்கமாக மடக்கி நீட்டிக் கொண்டிருப்பான். இரண்டாமவனும் அதேமாதரி தனது காலை பின்பக்கமாக மடக்கி முதலில் நீட்டிக் கொண்டிருப்பவனின் கால்மீது வைப்பான். மூன்றுமவனும் இதே மாதரிசெய்து முன் இருவரது கால்களுக்கிடையில் நுழைத்துப் பின்னிக்கொள்வான். இப்போது, கோர்த்திருந்த கைகளை விட்டுவிட்டு ''தைத்தக்காதை; ஒரு பக்கா நெய். செட்டியாரு சொன்னதெல்லாம் பொய் பொய் பொய்'' என்று கைகொட்டிப் பாடிக்கொண்டே தாம் ஊன்றியிருக்

கும் ஒரு காலால் நொண்டியடித்துக்கொண்டு மூவரும் வலமாகச் சுற்றுவார்கள்.

கண்ணும் பூச்சி.

நிலாப்பூச்சி, நொண்டி போன்ற விளையாட்டிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதுபோல இவ்விளையாட்டிற்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவனை பொதுஆள் அதாவது ''தாச்சி'' கண்ணைப் பொத்திக்கொள்வான். மற்றவர்களெல்லாம் ஓடி ஒளிந்துகொள்வார்கள். ஒளிந்தபின் ''தாச்சி'' இவனை விடுவிப்பாள்.

ஒளிந்து கொண்டிருப்பவர்களைக் கண்டுபிடித்துத் தொடவேண்டும். ஒளிந்திருப்பவர்கள். பொத்தி வருபவன் கையில் பிடிபடாமல் தப்பிஓடிவந்து தாச்சியைத் தொடவேண்டும். அப்படி வரும்போது பொத்திவருபவனிடம் பிடிபட்டு விட்டால், பிடிபட்டவன் பொத்தி வரவேண்டும். யாரையும் தொடமுடியாமல் போனால் அவனே மீண்டும் பொத்திவர வேண்டும்.

திரித்திரிப் பொம்மக்கா.

ரண்டு பேராக மட்டும் விளையாடும் விளையாட்டு இது. புழுதி மண் அல்லது மணலில் எதிர் எதிராக உட்கார்ந்து கொண்டு, இருவருக்கும் நடுவில் வரப்புபோல் மணலைக் கையால் கூட்டிக்கொள்வார்கள்.

ஒரு துணித்திரியை—சிறியது—ஒருவன் மணல் வரப்பினுள் சொருகி சொருகி எடுப்பான். இப்படிச் சொருகி எடுக்கும் போது திரி மற்றவர் கண்ணுக்குப் படாமல் இருக்கவேண்டும். அப்படிச் செய்யும்போது இப்படிச் சொல்லிக் கொண்டே செய்வான்,

''திரித்திரி பொம்மக்கா
தீயக்காளி பொம்மக்கா
மார்மாறு பொம்மக்கா
மந்திரகாளி பொம்மக்கா''

இப்படிச் செய்துவிட்டு அவன் மணலிலிருந்து கையை எடுக்கும் போது திரியை எங்கே வைத்தோம் என்பது வைத்தவனுக்குத்தான் தெரியும். எதிராளி திரி இருக்கும் இடத்தை உத்தேசமாக யூகித்து இரண்டு கைகளையும் கோர்த்து அந்த வரப்பின்மேல் பொத்துவான்.

சரியான இடத்தில் எதிராளி பொத்திவிட்டான் என்று தெரிந்தால் இருபக்கத்திலும் கிளைத்துப் பார்த்துவிட்டு, ''யானைக்குக் கொஞ்சம் இடம் கொடு'' என்று கேட்டுக் கை விளிம்பின் பக்கத்தில் கொஞ்சம் கிளைத்துப் பார்க்க உரிமை உண்டு. கையின் மறுபக்கத்தில் ''பூனைக்குக் கொஞ்சம் இடம் கொடு'' என்று கேட்டு கொஞ்சம் கிளைத்துப் பார்க்கலாம். இதிலெல்லாம் திரி கிடைக்காவிட்டால் தோல்வியை ஒப்புக்கொண்டுவிடுவான்!

தோற்றவன் இருகைகளிலும் மணலை அள்ளிக்கொள்வான். அதில் திரியை மறைத்து வைத்து எச்சில்துப்பி ஒரு துரும்பையும் நட்டுவான். பின்பு தோற்றவனது கண்களை வெற்றியாளன் பொத்திக் கொண்டே நடத்திக் கொண்டு வலமாகவும் இடமாகவும் நடத்தி இழுப்பான். பொத்தப்பட்டவன் இடத்தை யூகித்துக் கொண்டே நடப்பான். யூகத்தைத் தகர்ப்பதற்காக மத்தியில் பேச்சுக் கொடுப்பார்கள்! அதற்கு சரியான படி பதில் சொல்ல வேண்டும்.

பொத்தப் பட்டிருப்பவனுக்கு திசை மாற்றம் ஆகிவிட்டது என்று தெரிந்தபின் ஒரு அடையாளமான இடத்தில் கையிலுள்ள மணலோடு திரி, துரும்பு முதலியன விழும்படியாக போடச் சொல்லுவான் கண்பொத்தியவன். போட்டதும் கண்பொத்திய அதேபடியாக பல திசைகளிலும் அவனை இழுத்தடித்து பழைய இடத்திற்கு வந்ததும் மூன்று சுத்துகள் சுற்றி பிறகு கண்ணை திறந்து விட்டுவிடுவான். பொத்தப்பட்டவன் கண்ணைச் சரிசெய்துகொள்ளவே கொஞ்சநேரம் ஆகும்! பிறகு அவன் மணலையும் திரியையும் போட்ட இடத்தைத்தேடி கண்டு பிடிக்க வேண்டும்.

வட்டத்திரி

வட்டமாகப் பிள்ளைகள் உட்கார்ந்து கொள்வார்கள். முறுக்கப்பட்ட திரியை ஒருவன் மறைவாக வைத்துக்கொண்டு சுற்றி வருவான். அப்படி வரும்போது ''குலை குலையாய் முந்திரிக்காய்'' என்பான். மற்றவர்கள் ''நிறைய நிறையக் கொண்டுவா'' என்பார்கள். இப்படியே இருதரப்பும் சொல்லிக்கொண்டே இருக்கும்போதே திரியை ஒருவனுக்குப் பின்னால் போட்டுவிட்டு சுற்றி வருவான்.

திரி தனக்குப் பின்னால் கிடக்கிறதா என்று யாரும் திரும்பிப் பார்க்கக் கூடாது. கையால் தடவியோ அல்லது வேறு

முறை மூலமோ தெரிந்து கொண்டு திரியை எடுத்து, முன்னால் செய்ததைப்போல சொல்லிக் கொண்டு சுற்றிவர வேண்டும். தவறினால், திரியைப் போட்டவன் திரியை எடுத்து, கவனிக்காமல் உட்கார்ந்திருப்பவனை அடிப்பான். அவன் எழுந்திருந்து வட்டத்தை ஒருமுறை சுற்றி ஓடி மீண்டும் தனது பழைய இடத்திலே வந்து உட்கார்ந்து கொள்ளலாம். அப்படி உட்காரும்வரை திரிவைத்திருப்பவன் திரியால் அடிப்பான்.

நீர் விளையாட்டுகள். I

மழை காலங்களில் நீர் நிலைகளில் நீர் நிறைந்திருக்கும். சிறுவர் சிறுமியர் அப்போதுதான் நீச்சல் பழகுவார்கள். மத்தியான வேளைகளில் நீர்த்துறைகளில் இறங்கி சேக்காளிகளுடன் சேர்ந்து விளையாடுவார்கள். கண்கள் சிவந்து விரல்களின் உள்பக்கம் சுரிந்து உடம்பும் மனசும் குளிரும்வரை நீராடுவார்கள்.

நீர் விளிம்பில் நின்று கொண்டு

''ஆலமரம் சாயுது அத்திமரம் சாயுது
அக்கா வீட்டுப் புளியமரம் சாயுது...''

என்று சொல்லி பின்னால் திரும்பி நீரில் சாய்ந்து விழுவார்கள்.

II தண்ணீரில் மூழ்கி மூழ்கி விளையாடும்போது சுள்ளென்று வெயில் அடித்தால்தான் உடம்புக்கு இதமாக இருக்கும். இதற்காகப் பிள்ளைகள் பொழுதைப் பார்த்து ''ஒட்டாங்கனி தட்டித்தாரேன் ஓடி ஓடி வெயிலடி சுக்காங் கல்லு தட்டித்தாரேன் சுள்ளுச் சுள்ளுண்ணு வெயிலடி''
என்று சத்தம்போட்டுக் கத்துவார்கள்!

III நீரில் மிதக்கும் ஆட்டாம் புழுக்கை (ஆட்டின் சாய்ந்த புழுக்கை) போன்ற பொருளைத் தலைமைக்காரன் கைக்குள் வைத்துக்கொண்டு ''மோர் மோர்'' என்று சொல்ல, மற்றவர்கள் ''என்னமோர்?'' என்பார்கள். ''கழுதை மோர்'' என்பான். ''வேண்டாம் வேண்டாம்'' என்பார்கள். இப்படியாக ஒவ்வொன்ருகக்கூறிக் கழித்து கடேசியில் ''பசுமோர்'' என்று சொன்னதும் ''வேண்டும் வேண்டும்'' என்பார்கள். உடனே தலைமைக்காரன் தன் கைக்குள்ளிருக்கும் ஆட்டாம் புழுக்கைகளைத் தண்ணீரில்ப்

போட்டு, கைகளால் தண்ணீரை அடிப்பான். மற்றவர் களும் இப்படியே செய்வார்கள். தண்ணீரின் அலம்பலில் புழுக்கையைப் பார்க்க முடியாது. தண்ணீரை அலப்பு வதை எல்லோரும் நிறுத்திவிட்டு புழுக்கைகளை போட்டி போட்டு எடுக்க முயற்சிப்பார்கள்.

IV தண்ணீரின் மட்டத்தில் விரலைவைத்து சுண்டுதல். ''டுப்'' என்று சத்தம் கேட்டால் பழம்! இல்லையானால் காய். (நினைப்பது நடக்குமா என்று பார்க்க)

V ஆழமான நீர் நிலைகளில் முங்கி ''தரைமண்'' எடுத்துக் கொண்டு வருவது. இதில் யார் முதலில் எடுத்துக் கொண்டு வருகிறார்கள் என்று பார்ப்பது.

VI முங்கு நீச்சில் பிடித்து — தொட்டு — விளையாடுவது.

சோளப் பொரி சொங்குப் பொரி

திருக்கார்த்திகை ஒட்டி மூன்று நாட்கள் நெருப்பில், நெருப் பால் விளையாடுவது என்று இருக்கிறது. கன்னிப்பெண்டு கள் தீபம் பொருத்தி நீரில் மிதக்க விடுவது; இதில் யாரு டைய தீபம் பெரிதாகவும் நீண்ட நேரம் மிதந்துபோய்க் கொண்டே எரிந்துகொண்டிருக்கிறது என்று பார்ப்பது. கொளுத்தி அமர்ந்த மாம்புளியின் தீ அகலத்தை இள வட்டங்கள் போட்டிபோட்டுத் தாண்டுவது, இப்படி நிறைய்ய.

சிறு குழந்தைகள்—பெண் குழந்தைகள்—காய்ந்த இரண்டு கனமான அகத்திக் கம்புகளை தீப்பற்ற வைத்து கங்கு உண்டுபண்ணி கங்கால் மற்றொரு கங்கைத் தட்டுவார் கள். அப்படித் தட்டும்போது "சோளப்பொரி சொங்குப் பொரி நாளை வார மாப்பிள்ளைக்கு நாழிப்பொரி...'' என்று சொல்லிக்கொண்டே தட்டுவார்கள். கட்டிக் கங்கு கள் ஒன்றோடு ஒன்று மோதும்போது அவைகள் ரவைக் கங்குகளாக இருட்டில் இறங்கிவருவது கண்ணுக்கு விருந்து.

ராஜமுஜ தண்டட்டி

சிறு குழந்தைகளாக இருக்கும்போதே, இதுதான் புருஷன், இதுதான் பெண்டாட்டி என்று முடிவு செய்து விடுவார்

கள். மாமன் மகள் அல்லது மகன், அத்தை மகள் அல்லது மகனாக இருக்கக் கூடியவர்களிடையில் இதுதான் கணவன்—மனைவி என்று உத்தேசிக்கப்பட்டிருக்கும். இந்த முறைமையைத் தெரிந்துகொண்ட சிறுமிகள், சம்மந்தப்பட்ட சிறுமியைக் கேலிசெய்து மகிழ்வார்கள்.

முறை மாப்பிள்ளைக்காரன் பெயர் ராமசாமி என்றிருந்தால், சிறுமிகள் ''ரானாமூனா தண்டட்டி ராமசாமி பெண்டாட்டி'' என்று பாடுவார்கள். சம்மந்தப்பட்டவளுக்கு வெட்கமாகவும் இன்பவேதனையாகவும், அளவு மீறும் போது சங்கடமாகவும் இருக்கும். அவளும் திரும்ப பதிலுக்கு இப்படிச் சொல்லி பதிலடி கொடுப்பாள்! "பொனா மூனா தண்டட்டி பொன்னுச்சாமி பொண்டாட்டி"!

மாப்பிள்ளைப் பெயரின் முதல் எழுத்தோடு--மூனா தண்டட்டி என்று சொல்லி, பெயரைச் சொல்லி பெண்டாட்டி என்று சேர்த்தால் பாட்டு போல இசை சரியாக இருக்கும்.

பெயர் சிறியதாகஇருந்தால் ஜாதியைசேர்த்துக்கொள்ளலாம்; ''ரானா மூனா தண்டட்டி ராமுக்கோனார் பெண்டாட்டி''

ஓம் பெண்டாட்டி எட்டி எட்டிப் பாக்கா

இரு கைவிரல்களையும் கோர்த்து மூடும் போது நடுவிரலை மட்டும் உள்ளங்கைக்குள்வரும்படியாக வைத்துகோர்த்து மூடிக்கொள்வார்கள். ஒரு சிறுபையனைக் கூப்பிட்டு, ''இதைத் திறபார்ப்போம்'' என்பார்கள். அவன் வஞ்சகமில்லாமல் மூடியகையைத்திறப்பான். கையினுள் தனியே இருக்கும் நடுவிரலை ஆட்டி ஆட்டி ''ஓம் பெண்டாட்டி எட்டி எட்டிப் பாக்கா; ஓம் பெண்டாட்டி எட்டி எட்டிப் பாக்கா'' என்று கேலி செய்வார்கள். கையைத் திறந்தது பெண் குட்டியாக இருந்தால் ''ஓம் புருஷன் எட்டிஎட்டிப் பாக்கான்; ஓம் புருஷன் எட்டிஎட்டிப் பாக்கான்'' என்பார்கள்.

ஒன்னையா கூப்ட்டேன்.

பெயர் சொல்லாமல் ஒருவனைக் கூப்பிடுவது. அவன் நம்மைத்தான் என்று நினைத்து ''உம்'' என்பான். ''உன்னையா கூப்ட்டேன்; காரவீட்டுக் கருத்த நாயைக் கூப்ட்டேன்!'' என்று கேலி செய்வது.

அதொரு ஆளுதலேயிலெ ஆடுமேயுதாம்

பலர் கூடியிருக்கும் போது ஒருவன் தலேயில் ஏதாவது துரும்பு கிடந்தால் ''ஒரு ஆளுதலேயிலெ வெள்ளாடு மேயுது'' என்று மாறி மாறிக் கூவுவார்கள். ஒவ்வொருவரும் நம் தலேயில்தான் ஏதாவது கிடக்கிறதோ என்று அவரவர் தலேயை தட்டிப் பார்த்துக் கொள்வார்கள். குறிப்பிட்ட துரும்பு கீழே விழும்வரை கூப்பாடு ஓயாது. கூப்பாடு ஓயும்வரை ஒவ்வொருவரும் அவரவர் தலேயைத் தடவிப் பார்த்துக் கொள்வது வேடிக்கையாக இருக்கும்.

வேண்டுமென்றே ஒரு துரும்பை ஒருவரின் தலேயில்ப் போட்டு விட்டு 'ரகளே' செய்வதும் உண்டு.

யாருக்கு வேட்டை?

ஏதாவது ஒரு பொருளேக் கையில்த் தூக்கி வைத்துக் கொண்டு ''இது யாருக்கு வேட்டை?'' என்று ஒருவன் கூவுவான்; இது யாருக்கு வேணும் என்கிற பொருளில் அப்புராணிப் பிள்ளேகளில் யாராவது ஒரு பிள்ளே அது எனக்கு வேட்டை'' என்று கையை உயர்த்தும். முதலில்க் கூவியவன் ''ஒங்க மாமியா பல் ஓட்டை'' என்பான். எல்லோரும் சிரிப்பார்கள்.

நா வளர்த்த பூனேக்குட்டி!

சிறு குழந்தையைத் தூக்கி வைத்துக்கொண்டு, ''நா வளர்த்த பூனேக்குட்டியைத் தொட்டுரு பார்ப்போம்'' என்று மற்றவர்களிடம் சொல்லுவார்கள். அவர்கள் ஓடிவந்து குழந்தையைத் தொடுவார்கள். குழந்தையை வைத்திருப்பவர் உடனே ''அப்பொ எனக்கும் சக்கரையா?'' என்று கேட்டு செல்லமாக ஒருஅடி குழந்தைக்குக்கொடுப்பார். இது மீண்டும்மீண்டும் நடைபெறும். குழந்தைக்கு. முதலில் தன்னேப் பிரியத்தோடு கொஞ்சுவது போலவும் பின்னர் அடிப்பது போலவும் மாறி மாறி உணர்வு ஏற்பட்டுத் திண்டாடும். அதைப் பார்த்து அனுபவித்துச் சிரிப்பார்கள்!

கள்ளனுக்குக் காயாய்ப் போ...

நெய்த்தக்காளி பிடுங்கி ஊதி சொடக்குப்போட்டு விளேயாடு

வது குழந்தைகளுக்குப் பிரியமான விளையாட்டு. சொடக்குப் போட்டதும் தக்காளியின் தோலி உடைந்தபின் உள்ளே இருக்கும் காயை உள்ளங்கையில் வைத்துக் கொண்டு

''தக்காளீ தக்காளீ நெய்த்தக்காளி
கள்ளனுக்குக் காயாய்ப்போ
எனக்குப் பழமாய் வா......''

என்று சொல்லி உருட்டுவார்கள்.

காக்காய் வீட்டிலே தீ--!

குதிரவாலீ போன்றவற்றை அவித்துக் காயப்போட்டு குழந்தைகளைக் காவல் வைத்து விடுவார்கள். காக்கா வந்து குதிரைவாலியைத் தின்று தொல்லை கொடுக்கும். காக்கா மிகவும் தந்திரமுள்ளது. மனிதக் குழந்தைகளோ அதைவிட தந்திரசாலிகள்! அவர்கள் காக்காயை விரட்டுவதற்காக ''காக்காவீட்லெ தீ எரியுது; கள்ளப்பிராந்தே சொல்லாதே'' என்று மாறிமாறி பலமாகக் கூவியதும் காக்காவும் ஓடிப்போய்விடும்!

காத்தட்டான் கள்ளத்தட்டான்....

தட்டான் பூச்சியை பிடித்துவிளையாடுவது குழந்தைகளுக்குப் பிரியமான விளையாட்டு. போட்டி போட்டுக்கொண்டு பிடிப்பார்கள். அடிமேல் அடிவைத்து மெதுவாகக்கையை நீட்டி தட்டானைப் பிடிக்கவேண்டும். அப்படியும் அது தொடப்போகும் சமயம் பறந்துவிடும்; இதற்குரொம்ப பொறுமையும் சாமர்த்தியமும் வேண்டும். தனக்குக் கிடைக்கவேண்டிய தட்டானை அடுத்தபிள்ளைகள் பிடிக்கப் போவதைப் பொறுக்காத பிள்ளைகள் தட்டானைப் பிடிக்கப் போகும் சமயம் பார்த்து இப்படிச் சத்தம்போட்டுக் கூவுவார்கள். ''காத்தட்டான் கள்ளத்தட்டான்,கள்ளனுக்கு அம்புடாதே''!

குன்னுங் குன்னுங்குர்...

காய்ந்த ஓலையில் முள்ளால்க் குத்தி ''காத்தாடி'' செய்து விளையாடுவார்கள். காத்தாடி சரியாகச் சுற்றுதபோது அதன்இரண்டு பக்கங்களையும் பிடித்து காதின்பக்கத்தில் வைத்துக் கொண்டு

''குன்னுங் குன்னுங் குர்ர்ர்
கோழி முட்டை சர்ர்ர்
பச்சைப் பாம்பு செத்துக்கிடக்கு
குன்னுங் குன்னுங் குர்ர்ர்...'' என்று சொல்லி

கொஞ்சமாக ஓலையின் விளிம்புகளைத் திருகி, பின்பு சுற்ற விடுவார்கள்.

**கச்சியா? கூட்டா?**

இரண்டு குழந்தைகளுக்கிடையில் சண்டை ஏற்பட்டு, நீண்ட நேரம் சமாதானமாகாவிட்டால் அவர்கள் மனசு மிகவும் சங்கடப்படும்.

ஏதாவது ஒரு தரப்பிலிருந்து தானே முதலில் சமாதானக் கோரிக்கை வர வேண்டும். சமாதான எண்ணமுள்ள குழந்தை தனது வலது கை மோதிர விரலின்மேல் பாம்பு விரலின் நுனியைப் பதித்து விரல்களை அகலவளைத்துக்கொண்டு ''காயா, பழமா?'' என்று கேட்கும். பழம் என்றால் உடனே சமாதானம் ஏற்பட்டுவிடும். காய் என்றால் 'சண்டை' நீடிக்கும். அனேகமாய் ''காய்'' என்று வராது. பழம் என்று சொல்லி இரண்டுவிரல்களையும் அமுக்கிச் சேர்ப்பார்கள். காய் என்றால் இரண்டு விரலையும் பிரித்துவிடுவார்கள்.

**அங்கிட்டும் இங்கிட்டும் சங்கிலி...**

வரிசையில் உட்காரும்போது நடுவில் இடம் கிடைக்காமல் ஓரத்தில் இடம் கிடைத்து உட்கார நேரும் குழந்தை தன் ஏமாற்றத்தை ஆற்றிக்கொள்ளும் வகையில் ''அங்கிட்டும் இங்கிட்டும் சங்கிலி, ஊடாலெ பீ விட்டை'' என்று சொல்லும்!

**என் தலைக்கு எண்ணெய் ஊத்து**

நான்கு மூலையிலும் நான்கு பெண்கள் நின்றுகொள்வார்கள். ஐந்தாவது ஒருத்தி நடுவில்—மத்தியில்—நின்றுகொண்டு இடது கையைத் தலையில் வைத்துக்கொண்டும் வலது கையை முன்னால் நீட்டிக்கொண்டும் உள்பக்கமாக நான்கு மூலைக்கும் ''என் தலைக்கு எண்ணெய் ஊத்து, எருமை மாட்டுக்குப் புல்ப்போடு'' என்று பாடிக் கொண்டே சுற்றி வருவாள். நான்கு மூலையிலும் நிற்பவர்கள் இடம்மாறி ஓடிநிற்பார்கள். அப்படி இடம் மாறும்போது பாடி வருபவள் அவர்களைத் தொட்டுவிட்டால் தொடப்பட்ட அவள் பாடி வர வேண்டும்.

விளையாடும்போது வேட்டி அவிழ்ந்து விடுதல், முள் தைத்து விடுதல் போன்ற எதிர்பாராத சமயங்களில் ''தூ--ச்சி'' என்று சத்தம் போட்டுச் சொல்லி விளையாட்டிலிருந்து தற்காலிக விலகுதல் பெறலாம்.

விளையாடும்போது மூன்று தடவைகள் ஒன்றைச் செய்யவேண்டும் என்பதை ''முக்கா முக்கா மூணுதரம்'' என்று சொல்லுவார்கள்.

கண்ணைக் கட்டிக்கொண்டு பிடித்துவரும் விளையாட்டில், கண் கட்டப்பட்டிருப்பவனை ஜாக்கிரதையுடன் நெருங்கி மற்றப் பிள்ளைகள் ''இந்தா இந்தா வாழைப்பழம் இனிச்சிக்கிடக்கும் வாழைப்பழம்'' என்று சொல்லி ஏச்சம் காட்டுவார்கள்.

'அசிங்கத்தை' மிதித்துவிட்டவன் அல்லது முடிவெட்டிக் கொண்டு குளிக்காமல் இருப்பவனை மற்றப் பிள்ளைகள் கிட்டே வரவிட மாட்டார்கள். வம்புக்காவது இவன் அவர்களைத் தொடுவதற்காகத் துரத்துவான். அப்போது மற்றப்பிள்ளைகள் ' என்பேர் மானம்; என்னைத் தொட்டால் பாவம்'' என்று சொல்லி எச்சிலைத் தொட்டு தொப்புளில் வைத்துக்கொள்வார்கள். இவனும் அவர்களைத் தொடமாட்டான். தொட்டால் பாவம் என்று தெரியும் இவனுக்கு!

விளையாட்டில் ஏதாவது ஒரு தவறு நிகழ்ந்துவிடும். அதைத் தொடர்ந்து பதிலுக்குப் பதிலாக தவறுகள் செய்யப்பட்டு விளையாட்டின் நோக்கமே பாழ்பட்டுப் போகும்.

பேசிச் சீர்திருத்த முடியாதபோது, ''அழிச்சிக் குளிச்சி (முதலெயிருந்து) விளையாடுவோம்'' என்று சொல்லப்படும். எல்லோரும் விளையாட்டு நின்று போய்விடக்கூடாதே என்ற ஆர்வத்தில் உடனே இதை ஏற்றுக்கொள்வார்கள். ஆட்டை முதலிலிருந்து தொடரும்.

வெகுநேரம் விலையாடியாகி விட்டது. இனி வீட்டுக்குத் திரும்ப வேண்டியதுதான். பிள்ளைகள் இப்படிக் கூவி விடைபெற்றுப் போவார்கள்.

''அவுக அவுக வீட்டுக்கு
அவரைக் கஞ்சி குடிக்கப் போங்க
பிள்ளை பெத்த வீட்டுக்கு
புளியங்கஞ்சி குடிக்கப் போங்க!''

# கிராமிய விளையாட்டுகள்

1 அவுட்டு
2 இருபத்தஞ்சாம் பிள்ளை
3 உப்பு
4 எட்டாளந்தட்டு
5 ஒத்தையா இரட்டையா
6 ஒருச்சம்பா இருச்சம்பா
7 ஒருப்பத்தி இருபத்தி
8 ஓச்சியயான்
9 கண்ணும்பூச்சி
10 கால்த்தாண்டி. "பச்சைக் குதிரை"
11 கால்த்தூக்கிக் கணக்கப் பிள்ளை
12 காலாட்டம் கையாட்டம் "பூச்சொல்லி"
13 கிட்டிக்குச்சி
14 கிளித்தட்டு
15 கீச்சட்டி பூச்சட்டி
16 குச்சுக் குச்சு ராக்கம்மா
17 குலை குலையாய் முந்திரிக்காய் "வட்டத்திரி"
18 குளிப்பந்து
19 கோட்டைக்குள்ளே எத்தனை பேர்
20 கோலி
21 கோவில்பட்டிப் பாண்டி
22 சடு குடு
23 சில்லாங் குச்சி
24 சுண்டி
25 செதுக்கு முத்து
26 தட்டாங்கல் (பலவகை)
27 தட்டிக்கட்றது
28 தவிட்டுக்குஞ்சி
29 தாச்சி
30 தாயம்
31 திரித்திரி பொம்மக்க
32 தெல்லு
33 தைத்தக்காதை
34 நாலுமுக்குச் சாத்தரம்
35 நாவளத்த பூனைக்குட்டி
36 நிலாப் பூச்சி
37 நொண்டி. "கிந்தி"
38 பதினைஞ்சாம் பிள்ளை
39 பம்பரம்
40 பன்னாங்குழி
41 பிள்ளையார் பந்து
42 பூனைக்கிழவி
43 பேப்பந்து
44 மதியம்
45 மந்தி
46 மல்லுக்குடட்டி
47 மாக்கொளக்கட்டை மஞ்சக்கொளக்கட்டை
48 மூச்சுக் குடட்டி
49 ரயிட்டாப் பாண்டி
50 ராஜாவீட்டுக்கலியாணத்துக்கு பூசணிக்காய்
51 ராட்டு பூட்டு
52 ராஜ மூஜ தண்டட்டி
53 வண்ணும்பொதி
54 வரகந்தட்டு
55 வரகு வரகு. "கிறு கிறு மாம்பழம்"

# ஆடுகள்

**வெள்ளாடுகளின் நிறம், வகைகள்**

வெள்ளாடுகளும், பொதுவாக உரத்துக்கும் சமைப்பதற்குமே பயன்பட்டாலும் அதில்ச் சில ஜாதி வெள்ளாடுகள் பால்ச் சாரம் அதிகம் உள்ளவையாகவும் இருக்கின்றன. வீட்டில் பசுமாடு கட்டிப் பராமரிக்க முடியாத ஏழைகள், குழந்தைப்பாலுக்காக வெள்ளாடுகளை நம்பியே இருக்கிறார்கள். ஏழைகளின் பசு இது, என்று சொல்வதுண்டு. கீழ்க்கண்ட வெள்ளாடுகள்— பள்ளை ஆட்டு இனங்கள்— பால்ச்சாரமும் ஒரு ஈத்தில் இரண்டு மூன்று குட்டிகளும் ஈனுபவை.

ஓங்கோல் ஆடு.

நரிப் பள்ளை ஆடு.

பள்ளை ஆடு.

வேலி ஆடு.

ஓங்கோல் ஆடு நீண்டு தொங்கும் காதுகளைக் கொண்டது.

**வெள்ளாடுகளின் நிறங்கள்**

கருத்தாடு: பூரணமாகக் கருப்புநிறம் உடையது.

கன்னி: கண்பட்டை, அடிவயிறு, கால்கள் முதலியதில் வெண் கோடுகள் இருக்கும்.

கோட்டைமறை: உடம்பைச் சுற்றி ஒரு வேற்று நிறவட்டம்.

சாம்பல்ப்போர்: கலந்த இரண்டு நிறங்களில் சாம்பல்நிறம் ஓங்கித்தெரிவது.

சுட்டி: நெற்றி அல்லது முகத்தில் அகலப்புள்ளி.

சுணக்கி: புள்ளிமான் மாதரியான நிறம்.

செவலைக்கண்ணி: கன்னிக்கு சொல்லப்பட்டதுபோல்; சிவப்பு நிறம்.

செவலைப்போர்: இருநிறங்கள் கலப்பில் சிவப்பு எடுப்பாகத் தெரியும்.

தவிட்டுப்போர்: தனீஒரு நிறத்தில் நாலுநாலு ரோமங்களாய் வெள்ளை.

தொடைமறை: தொடைகளில் அடுத்த நிறம் சுற்றி இருப்பது.

நரை: கருப்பு, வெள்ளை ரோமங்கள் கலந்து இருப்பது.

நெத்திச்சுட்டி: நெற்றியில் துலாம்பரமாகத் தெரியும் வெள்ளைப்புள்ளி.

பால்க்கன்னி: வெண்மைநிற ஆட்டில், கண்பட்டை, அடிவயிறு, கால் முதலியவற்றில் வேற்று நிறங்கள் இருப்பது.

புளியம் போர்; புளியம் பூவைப் போல நிறம்; பார்ப்பதற்கு.

பூவால்: வாலின் முனையில் வெள்ளை.

பூலி: கருப்புநிறக் காதுகளில் வெள்ளைப்புள்ளிகள்.

மச்சை: தனீ ஒருநிறத்தில் வேற்றுநிறம் மச்சம்போல் விழுந்திருப்பது.

மறை: அகலமாக பட்டையாக வேற்றுநிறம்.

மூஞ்சிவெள்ளை: உடம்பு வேறுநிறமாகவும் முகம் கழுத்து மட்டும் வெள்ளை நிறம்.

கொம்புகளில் உச்சிக்கொம்பு, குடைக்கொம்பு, மாடக்கொம்பு என்று உண்டு. கொம்பு இல்லாதவைகளை ''மொட்டை'' என்றும், இளம் வயசு உடையதுகளை ''குரா'' என்றும் சொல்லுவார்கள். ஒரு கண் பொட்டையாக இருந்தால் ''குருட்டாடு'' என்பார்கள். சிறிய சுருங்கியதுபோல்—காதுகளை ''சொட்டைக்காது'' என்பர்.

செம்மறி ஆடுகளின் நிறம், வகைகள்

அரியாடு: தனீ சுத்தச் செகப்பு.

கண்ணுடிப்போர்: கருப்பு மிஞ்சின சிகப்பில் வெள்ளைப்போர்.

கம்பளியாடு: கருப்புமிஞ்சின சிகப்பில், துடைகளிலும் முன் சப்பையிலும் முதுகு, எலும்பு, புருவங்களிலும் தாரை தாரையாகக் கருப்புக்கோடுகள்.

கரிசையாடு: கருப்புமிஞ்சினசிகப்பு.

கரிசைப்போர்: இருநிறக்கலப்பில் கருப்பு மிகுதி.

கருங்காத்துவெள்ளை: உடல்பூராவும் வெண்மை; காதுகள் மட்டும் கருமை.

கார்த்திகை மாத்த முருங்கை காம்பெல்லாம் இனிக்கும்.

கார்த்திகை மாதக்கீரையைக் கணவனுக்குக் கூடக் கொடுக்க மாட்டாள்.

காலுல ஒட்டுன கரிசக்காட்டு மண்ணு? சேலையில ஒட்டுன செவக்காட்டு மண்ணு?

கிழவி செத்ததுல பாரமில்ல. இழவு கொடுத்து முடியலே.

குடப்பால் கறந்தாலும், கூரைபிடுங்கிற மாடு வேண்டாம்.

குப்பமேனி பூப்பூத்துக் கொண்டைக்கு ஆகாது. கூத்தியா பிள்ளைப் பெத்துக் காணிக்கு ஆகாது.

கூத்தாடிக்குக் கீழே கண், கூலிக்காரனுக்கு மேலேகண்.

கூழுசுட்டா சுண்டைக்காயிக்குக் கேடு.

கூறுகெட்டமாடு ஏழுகெட்டு வைக்கல் திண்ணதாம்.

கெட்டிக்காரன் புஞ்சையிலதான் எட்டுப் பாதை.

கொடுக்காதவன் சினை ஆட்டைக் காமிச்ச மாதிரி.

கோப்பைய நாயக்கருக்கு என்ன பகுத்து? கோழிப் பகுத்து, குஞ்சிப்பகுத்து.

கோவணத்தில் ஒரு துட்டு முடிந்திருந்தால் கோழி கூப்பிட ஒரு பாட்டு வருமாம்!

சாண் உழவு முழஎருவுக்குச் சமம்.

சுள்ளுண்ணிச்சாம் மிளகுதண்ணி, சுருச்சிக்கிச்சாம் வரகம் பருக்கை.

செட்டிக்கும் பயிருக்கும் சென்மப் பகை.

செல்வத்துல பிறந்த வாரியக் கொண்டைக்கு வண்டியிலே வருதாம் வரை ஓடு.

தட்டான் தாழப் பறந்தால் தப்பாமல் மழை.

தம்பி தலையெடுத்தான், வெள்ளாட்டுக்கு ஆள் தேவையில்லே.

தனக்குண்ணு ஒரு பொண்டாட்டி இருந்தால் அபக்கென்று ஒரு அடி அடித்துக் கொள்ளலாம்.

தனக்குதனக்கென்ருல் தாச்சலும் பதக்குக் கொள்ளும்.

தான்திண்ணி பிள்ளைவளக்காது, தவிடுதிண்ணி கோழி வளக்காது.

நேத்துப் பிறந்த பய.
கடுத்த ஆளு.
முந்தநா பேஞ்சமழையிலெ நேத்துமொளெச்ச சிறுகீரை
மொளெச் மூணு இலெ விடலே.
மஞ்சளைத் தொட்டா கரி ஆயிரும்.
மொழங்கைவரை அறுத்தாலும் ரத்தம் வராது!
ஆயிரத்தைக் காலேமாகாணி ஆக்கினவன்
தவிச்சவாய்க்குத் தண்ணிதர மாட்டா.
அறுத்தகைக்கு சுண்ணாம்பு தரமாட்டான்.
எச்சிக்கையாலெ காக்கா விறட்டமாட்டான்.
பூந்து விளாசுவான்.
தவிச்சமுயல் அடிக்கிறவரு.
நனெஞ்சகோழி பிடிக்கிறவன்.

## சொலவடைகள்

ஆக்கங்கெட்ட பொம்பளெ சந்தைக்கு வந்தாளாம், அங்கேயும் ஆம்பளெக்குப் பஞ்சமாப் போச்சுதாம்!

கடல் மீனுக்கு நுழையான் இட்டதே பெயர்.

கடுங்காத்து மழை கூட்டும்; கடும் நேசம் பகை கூட்டும்.

கடைந்தெடுத்த மோரிலும் குடைந்துஎடுப்பாள் வெண்ணெய். கலப்புல்த் தின்றாலும் காடை காட்டுலெ.

கலெயும் மேகத்தைக் கண்டு, கட்டியிருந்த விதையை வட்டிக்கு விட்டானாம்.

கழுதை உழவுக்கு வந்தால் காடு ஏன் தரிசாய்க் கிடக்கு?.

காஞ்சமாடு கம்புல விழுந்த மாதிரி.

காணாத கழுதை கஞ்சியைக் கண்டதாம், ஓயாம ஓயாம ஊத்திக் குடிச்சதாம்.

காணாது கண்ட கம்மங்கஞ்சியை சிந்தாமல்க் குடியடி சில்லுமூக்கி.

கார்த்திகை மாசம் கடுமழை பெய்தால், கல்லின் மேலிருக்கும் புல்லும் கதிர்விடும்.

## காலநேரம் பற்றிய சொற்கள்

ஒரு கண்ணுக்கு உறங்கி
சாம ஏமத்திலெ
சாமக் கோழி கூப்பிட
தலைக்கோழி கூப்பிட
வெள்ளி முளைக்க
வெள்ளென
முத்தம் தெளிக்கிற நேரம்
பலபலண்ணு விடிய
காலம்பற
நிலங்கீற
விடிஞ்சி
பொழுது புறப்பட
மூந்திக் கருக்கல்ல
கருக்கல்ல
மம்மல்ல
வெயிலுக்கு எட்டாம
காலங்காத்தாலெ
நேரமிருக்க
சங்கூதுற நேரம்
பால்கறக்கிற நேரம்
பனைமர உசத்துக்குப் பொழுது.
இளமதியம்
கிடையெழுப்புற நேரம்
கழுதைக்குப் பொதியேத்துற
நேரம்
மதியம்
உச்சி
நிழல்ச்சரிய
விடுமாடு விடுறநேரம்
மறுமாடு விடுறநேரம்
ஒரெடுப்பு
சாயலச்ச
மஞ்ச வெயிலடிக்க
செங்கமங்கல்ல
கருகருண்ணுமசங்க
விளக்குப்பொருத்த
ரவை
ஊரடங்க
நிலாப்புறப்பட
நடுச்சாமம்
அத்தராத்திரி

## நபர்களைப்பற்றிய சொற்றொடர்கள்

கதை காரணமெல்லாம் படிச்சிக்கிட்டவரு.
நாலெழுத்து தெரிஞ்சிக்கிட்டவரு.
சுத்த அப்புராணி.
வெள்ளந்தியான ஆளு.
தெக்கெவடக்கெ போயிவந்து பழக்கம்.
தெளியக் கடைஞ்ச ஆள்.
ஆனுங்கிற அச்சரம் தெரியாது.
உழக்கரிசிச் சீவன்.
கண்ணைத் தொறக்கச் சொன்னு வாயைத் தொறப்பாரு.

இப்பொ வயசு ரெண்டு உழவு இருக்குமா?'' என்று கேட் பார்கள்.

## சந்தையில் மாட்டை விலே பேசும்போது....

சம்சாரிகளின் மாட்டை (அல்லது எந்த மாட்டையுமே) தரகர் களும்வியாபாரிகளும் ''கைபோட்டு'' விலே ''பேசு''வார் கள்; கைகளை துணியால் மூடிக்கொண்டு !

ஐந்து விரல்களைக் கூட்டிப் பிடித்தால் 500 ரூபாய் என்றும், அதையே ஒரு குலுக்குக் குலுக்கினுல் 1000 ரூபாய் என் றும் விரல்களிலுள்ள ஒவ்வொரு வரையும் 10 ரூபாய் என் றும் அவர்களுக்குள் ஒரு நிர்ணயம் உண்டு.

''இவ்வளவுண்ணு கொடுத்துறலாமா?''
''இல்லெ; இதுக்குக் குறைஞ்சி முடியாது''
''சரி; இதெ இப்பிடிவச்சி முடிங்க''

இந்தமாதரி பேச்சொலிதான் மற்றவர்களுக்குக் கேட்குமே தவிர விலே தெரியாது!

இப்படி இவர்கள் மாட்டின் விலேயைப் ''பேசும்'' போது உச் சரிக்கும் சில ஒலிக்குறிப்புகள்:

தட்டை
தாளு
சவடு

இவைகள் என்ன தொகையைக் குறிக்கும் என்பது அவர் களுக்குத்தான் தெரியும்!

## கோழி இனங்களில் சில

ஆமைக் கோழி.
கடக்கோழி.
கம்பான் கோழி.
கருங் கோழி.
கழுகுக் கோழி.
கானுங்கோழி.
கிண்ணிக்கோழி.
சம்பங்கோழி
சிலுப்பாக் கோழி.
சைனக்கோழி (வெள்ளை இனம்) ''சீமைக்கோழி''
தாராக் கோழி
நாட்டுக்கோழி'குப்பைக்கோழி'
நீர்க்கோழி
வான் கோழி.

பூரான்சுழி !!: முதுகில் இடதுபுறம் ஒரு சுழியும் நச்சுழியும் இருத்தல். (குற்றம்.)

பெண்டிழந்தான்: வாலின் அடியில் தானவாய் ஓரத்தில் இருக்கும் சுழி. (திருமணமாகி தாரம் இழந்தவர்களுக்குக் குற்றமில்லை.)

மண்டை விலங்கு: முன் நெற்றியில் இரு சுழிகள் இடவலமாக இருப்பது.

முளைபிடுங்கி: முன்கால் ஒன்றிலோ இரண்டிலுமோ குளம் பிற்கு மேலே சுழி சுழித்து மேல்நோக்கி இருப்பது. (குற்றம் )

மேக்காச் சுழி: சிமிளுக்கு முன்பக்கம் இருப்பது.

நீர்க்குத்து: நீர்த்தாரைக்கு நேராக முதுகில் இருப்பது. இதைத் தட்டினால் மாடு நீர்விடும் என்பார்கள். (குற்றம்)

நெத்திச்சுழி: நெற்றியில் ஒரு சுழி இருப்பது. (நல்லது.)

குறிப்பு: வீட்டில் பிறந்த மாடுகளுக்கு எந்த இடத்தில் எப்ப டிச் சுழிகள் இருந்தாலும் குற்றமில்லை.

## மாட்டின் வயசு பற்றி

காளைக்கன்று மூன்று வருடங்கள் கழித்துப் பல்போடும். ''பல்ப் போட்டிருச்சா?'' என்று கேட்பார்கள். இது காளை யின் ஒரு பிராயத்தைக் குறிப்பது.

கீழ்வாயில் ''பால்ப்பற்கள் உதிர்ந்து இரண்டு பற்கள் முளைக்கும். இதைத்தான் ''பல்ப் போட்டிருக்கிறது''என் பது. பிறகு அதை ஒட்டி வருசத்துக்கு இரண்டு இரண்டு பற்கள் முளைக்கும். நாலு வருசங்களில் எட்டுப் பற்கள் போட்டுவிடும்; இதை ''கடை தேறீச்சி'' (கடேசிப் பல்லும் முளைத்துவிட்டது.) என்பார்கள்.

இதன்பிறகு, ஒவ்வொரு வருஷத்தையும் ஒருசோடு அல்லது ''உழவு'' என்று குறிப்பிடுவார்கள். ''ஒங்க மாட்டுக்கு

பெரியவை ஐந்து: கண், நெஞ்சு, கழுத்து, எலும்புகள், கால்கள்.

## சுழிகள் ("சுழிசுத்தம்")

அசைவுச்சுழி: சிமிலுக்கு—''திமில்''—உச்சியில் இருப்பது. (குற்றம்)

அஞ்சிசுழி: முன்மண்டையிலிருந்து வால்வரை நடுமுதுகையொட்டி ஐந்து சுழிகள் இருப்பது விசேஷம்.

''அஞ்சிசுழி மாடு கெஞ்சினலும் கிடையாது'' என்கிறது சொலவம்.

இடிமேல்இடி கொடைமேல்க் கொடை: இந்தச்சுழி நெற்றியில் கீழும் மேலுமாக இருப்பது. இந்த மாடு வைத்துக்கொண்டிருப்பவர்கள் சிலருக்கு கஷ்டத்துக்குமேல் கஷ்டங்கள் தொடர்ந்து வருகிறது; சிலருக்கோ அதிர்ஷ்டத்துக்கு மேல் அதிர்ஷ்டமாக வந்து குவிகிறது என்கிருர்கள்.

கால்விலங்கு: முன்முழங்காலின் அடிப்பாகத்தில்இருக்கும்சுழி.

டமானச் சுழி: முதுகில் இரண்டு சுழிகள் இட வலப்புறமாக இருக்கும்.

நச்சுழி: முதுகில் ஒருசுழி. நல்ச்சுழி.

பட்டரைச்சுழி: சிமிலுக்குப் பின்பக்கம் இருக்கும். (நல்லது.)

பறவைச்சுழி: முன்கால்களின் "தோள்புஜத்தில்" இருபுறமும் இருக்கும். இந்தமாடு வேகமாய் இருக்கும்.

பாசிபந்து: கொம்புக்குப்பின்னல் பிடரியில் ஒரு சுழி இருப்பது இயற்கை; இதில் இரண்டு இருந்தால் பாசிபந்துச்சுழி.

பாடைச்சுழி: முதுகில் இரண்டு சுழிகள் முன்னும் பின்னுமாக இருப்பது.

பிடரிச்சுழி: கொம்புக்குப் பின்னல் இருக்கும் இயற்கைச்சுழி.

பிடரி விலங்கு: கொம்புக்குப் பின்னல் இரு சுழிகள் முன்னும் பின்னுமிருப்பது.

பூரான்சுழி !: முதுகில் வலதுபுறம் ஒருசுழியும் நச்சுழியும் இருப்பது. (குற்றமில்லே.)

# மாடுகள்

**நிறம் வகைகள்**

அத்திக்காய்ப்புல்லை.
கரிசமால்
கருஞ்சிவலை
கருத்தச்செம்பரை
கருப்பு.
கருமயிலை.
கருவெள்ளை.
காரி.
குரால்.
சந்தனப்புல்லை
சுத்தவெள்ளை.
செந்தாரை.
கண்ணாடிமயிலை.
கருங்குரால்·
செந்தாரைமயிலை.
செம்பரை.
செவலைச்செம்பரை
செவலை
நாவெள்ளை
பஞ்சகல்யாணி
புல்லை
புளியம்போர்ச்செம்பரை
மயிலை
வெள்ளை

**காளைமாட்டுக் கொம்பு வகைகள்.**

அலைகொம்பு.
ஆட்டுக்கொம்பு. (மெல்லிசாக இருந்தால்)
காடுபார்த்த கொம்பு.
கிளிக்கொம்பு
குத்துக்கொம்பு
கூடுகொம்பு
கொக்கரிக்கொம்பு. (ஒன்று நேராகவும் மற்றது வளைந்தும் இருப்பது.)
கொள்ளிக்கொம்பு (நுனிவெள்ளையாகவும்வெடிப்பும்இருத்தல்)
சுருட்டைக்கொம்பு.
பூங்கொம்பு. (நுனிமட்டும் வெள்ளையாக இருப்பது)
பொத்தைக்கொம்பு.(தடியாகஇருப்பது)
மட்டிக்கொம்பு.
மாடக்கொம்பு.
முன்கொம்பு.(முன்பக்கம் பார்த்து வளைந்தவை.)
விரிகொம்பு.

# மாட்டின் லட்சணங்கள்

சிறியவை ஐந்து : தலை, கொம்பு, தாடி, கோசம், வால்.

கரும்போர்: பின்னிக்கலந்த இரண்டு வண்ணங்களில் கருப்பு தூக்கல்.

கருவி: உடல் முழுவதும் சிகப்பு; அடிவயிறு மட்டும் கருப்பு.

கிடா: ஆண்.

கூளி: வளர்ச்சி குன்றிய குள்ளம்.

கொச்சைக் கிடா: பிறவியிலேயே 'விதை' இல்லாதது.

கொப்பாடு: கொம்பு உள்ள பெண் ஆடு.

சுட்டி: தலையில் வெண்புள்ளி.

செங்காத்துவெள்ளை: செங்காது; உடல் வெள்ளை.

செம்போர்: இரு நிறக்கலப்பில் சிகப்புநிறம் அதிகம்.

செவ்வாடு: தூக்கலான தனிச்சிகப்பு.

சென்றுயாடு: சிகப்பு உடம்பில், அடிவயிற்றுக்கருப்பில் செம்போர்.

தவிட்டுப்போர்: கலந்த இருநிறங்களில் தவிட்டுநிறம் அதிகம்.

தாலி: கழுத்தின் கீழே இரு தொங்கட்டான்கள் தொங்குவது.

போர்: இரு வண்ண—நிறங்கள்—கலப்பது சமமாக.

மூளி: காது குறைபட்டு இருத்தல்.

மோளைக்கிடா: கொம்பில்லாத ஆண்.

மறை: தனிஒரு சுத்தநிறத்தில் ஒருபட்டை வேற்றுநிறம்.

ராயாடு: உடம்பு சிகப்பு; அடிவயிற்றுக் கருப்பில் வெள்ளைப் போர்.

வெங்காலாடு: தனிஒரு நிறத்தில் காலில்மட்டும் ஒருபுள்ளி

வெந்தலை: தலைமட்டும் வெள்ளை.

வெள்ளைப்போர்: கலந்த இருநிறங்களில் வெள்ளை பளிச்சென்று தெரியும்.

தைமாத மழை தவிட்டுக்கும் உதவாது.

தையில் முளைக்காத புல்லுமில்லை. மாசியில் விளையாத மரமுமில்லை.

தோட்டக்காரனும் கள்ளவாளியும் சேர்ந்து கொண்டால் விடிய விடியக் களவாங்கலாம்.

நல்ல மாட்டுக்கு ஒரு சூடு, நல்ல பொண்ணுக்கு ஒரு வார்த்தை.

நல்ல மாடுண்ணுத்தான் உள்ளூருலயே விலை போகுமே.

பங்குனி என்று பருப்பதுமில்லை, சித்திரையென்று சிறுப்பதும் இல்லை.

பட்டம் தவறினல் நட்டம்.

படப்போடு திங்கற மாட்டுக்குப் பிடுங்கிப் போட்டால் காணுமா?

பனிக்கண் திறந்தால் மழைக்கண் திறக்கும்.

பெருமைக்கு மாவிடிச்சாக் குலுக்கப் புல்லுக்குச் சேதம்.

பொக்குப் புல்லைக் கண்டானும்—பய தக்குப் புக்குண்ணு குதிச்சானும்.

மாடு முக்கி வர வீடு நக்கிவர

முன்னத்தேர் கோணினல் பின்னத்தேர் என்ன செய்யும்?

மேனி மினுக்கியைக் கட்டினவன் கெட்டான்;
மேட்டுப் புஞ்சையை உழுதவனும் கெட்டான்.

வஞ்சகமில்லாத மகராசனுக்கு வறுத்த காணமும் முளைக்கும்.

வடக்கே பிறைசாய்ந்தால் வரப்பெல்லாம் நெல், தெற்கே பிறைசாய்ந்தால் தெருவெல்லாம் பெட்டி.

வந்தட்டிக் காக்கா வரப்புல,காணிகாக்கா கரையில.

வளமைக்கொத்தமல்லி வறுக்கப்போயிருக்கு, சீமைக் கொத்தமல்லி சிமிட்டவந்திருக்கு.

வித்தாரக்கள்ளி விறகொடிக்கப் போனளாம், கத்தாழைமுள்ளு கொத்தோட தச்சுதாம்.

வித்துச் சுரைக்காய் பிஞ்சுல தெரியும்.

விளக்கிட மழை கிழக்கிட.

வெங்கம் பயலுக்கு ஒரு மாடு, அதைப்பிடிச்சுக் கட்ட ரெண்டு ஆளு.

வெங்கனுக்கு வங்கணம் வாச்சதைப் பாரு, வீடு கட்டித் தாரேண்ணு ஏச்சதப்பாரு.

வெறும் காதுக்கு ஓலைக் காது மேல்.

வெறு வாக்கலங் கெட்டவன் விறகுக்குப் போனால் விறகு சிக்குனாலும் கொடி சிக்காது.

## ஆபரணவகைகள் சில

பாதம்:

கால் விரல்களில் அணிவன:

| | |
|---|---|
| பெருவிவிரல் முடிச்சி | பெரு விரலில் |
| தடை<br>மிஞ்சி<br>மெட்டி | 2வது விரலில் |
| பீலி | 3வது விரலில் |
| பில்லணை | 4வது விரலில் |

பாதசரம் — கால்க் கொலுசு

தண்டை :

குழல்த் தண்டை
முறுக்குத் தண்டை
தரிசுத்தண்டை (சிலும்பு போல் இருக்கும்)

கை:



வங்கி: புஜத்திற்குக் கீழாக ஒரு கையில் அணிவது.
நாகவத்து: வங்கிக்கு கீழ் அணிவது.
வளவி: வளையல்கள்-எத்தனையோ தினுசுகள். கங்கணம்
மோதரம்: மோதிரங்கள்

இடுப்பு:

ஒட்டியாணம்
அரைமுடி (சிறு பெண் குழந்தைகளுக்குப் போடுவது)

அரைச்சலங்கை
அரைஞாண்கொடி

கழுத்து:

சங்கிலி வகைகள்:

அட்டியல்
உட்கழுத்துச் சங்கிலி (இதில் பதக்கம் கோர்த்தும் போடுவார்கள்.)
கண்டசரம்
காசு மாலை
கெச்சப் புரச்சை
கெவுடு (ஆண்கள் அணிவது)
சரடு
சுத்துமணி: கழுத்தை ஒட்டினாற்போலிருக்கும். இதில் சுமார் 25 எண்ணங்கள் உண்டு.

| | |
|---|---|
| காசு மாலை | குவலை |
| தாயத்து | பவளம் |
| பீங்காந்தட்டு | புடைதாங்கி |
| மணி | மூணடுக்கு மணி |

வெத்திலைச் சுருட்டு.
தாலி.
பதக்கம்.

மூக்கு:

மூக்குத்தி.
ஒத்தக்கல் மூக்குத்தி.
பேசரி.
முத்தும் தளுக்கும்.
பில்லாக்கு. ''புல்லாக்கு''
கல் வைத்தது.
கல் வைக்காமல்.
முத்துத் தொங்கல்.
தொறட்டி.

காது:

பூடி: பெண்கள் மேல்க் காதில் அணிவது



குருத்தட்டு: டைமன் வடிவில் காதின் குருத் தட்டில்ப் போடுவது.

முருகு: பூடி அணியும் இடத்திற்கு சற்று கீழாக பெண்கள் அணிவார்கள். ஆண்களும் அணிவார்கள். பெரும்பாலும் ஒரு காதில்.



பச்சைக்கல்: முருகுபோடும் இடத்தில் அதற்குப்பதில் போடுவது; கம்பியில் கட்டித்தொங்கும்.

அலுக்கு: மகமதியப் பெண்கள் காதில் அணியும் வளையம். வாளி என்றும் சொல்வர்.

ஒன்னப்பு: காது வளர்த்த பெண்கள் நடுக்காதுமடலில் அணிவது.

கம்மல்: (பலவகை).

கடுக்கன்: ஆண்கள் அணிவது; ஒருகல் வைத்தது.

வில்கடுக்கன்: மேற்படியில் காதுக்குக் கீழாக வளைந்த இணைப் பாலானது.

மரைக்காத்தோடு.

முக்கட்டு: மூன்று கல் பதித்தது. பெண்களும் சிறுவர்களும் அணிவது.

லோலாக்கு.

மாட்டி: காதணியிலிருந்து ஒரு மெல்லிய சங்கிலி கொக்கியுடன் போய் கூந்தலில் மாட்டிக்கொள்வது.

குணுக்கு: பெண்கள் ''காது வளர்ப்பதற்காகப்'' போடும் வளையம்—கனமானது—பித்தளையிலும் உண்டு.

தண்டட்டி: காதுவளர்த்த பின் அணிவது.

மேலிடு: தண்டட்டி மாதிரியில் சதுரம் சதுரமாயிருக்கும்.

பாம்படம்.

முடிச்சி: தங்கக் கம்பியில் பின்னிய வளையம்; 2 அரும்பும் ஒரு சதுரக் கட்டையும் ஓடாணியும் இருக்கும்.

காது ஓலை: கம்மவார் போன்ற தெலுங்கு இனப் பெண்கள் அணிவது.

தலை :

நெத்திச்சுட்டி.

சுத்துப் பரிஞ்சி: நெத்திச்சுட்டிக்கு இரு பக்கமும் இருப்பது.

உச்சி ராக்கடி: தலை உச்சியில் வைத்துப் பின்னுவது.

கொண்டைத்திருக்கு:

தாமரைப்பூக் கொண்டைத்திருக்கு



தாழம்பூக் கொண்டைத்திருக்கு. ''சடைவில்லை''

திருக்கு ராக்கடி: ஜடையில் வைத்துப் பின்னுவது.

ஜடைநாகம்: ஜடை பூராவும் நெடுக, கீழே நுனிவரையில் வருவது.

குஞ்சம்.

## முடிச்சுகள்

ஆட்டுக்கொள முடிச்சு
கொட்டை முடிச்சு
சங்கிலி முடிச்சு
சுத்து முடிச்சு
சுருக்காங்கணி

திக்போட்டுக் கட்டுதல்
திராசுப் பின்னல் முடிச்சு

நவ்வாப்பழத்து முடிச்சு
படுமுடிச்சு
பம்பரமுடிச்சு
பாக்குமுடிச்சு
பால் முடிச்சு
பிரம்ம முடிச்சு
புல்வால்குழச்சி முடிச்சு
முக்கணி முடிச்சு

வடக்கத்தி முடிச்சு
வட முடிச்சு.

## களை வகைகள் சில:

அமளை
அரிசிக்குழை
அருகு
ஆடுதின்னுப்பாளை
எருதிணிக் குழை
காக்கா மூஞ்சிப்புல்
காணப்பயிர்
கொக்கராளி
கோரை
சட்டிக்கிழங்கு
சாணக்கிழங்கு
சாணிப்புல்
சாரணத்தி
துடுப்புக்கீரை
தொட்டாச்சிணுங்கி
தொயில் கீரை
நிலப்பனை
பாலாட்டங்குழை
பூச்சிப்புல்
மல்லே (தீப்பூடு)
மேழிக்கிழங்கு.

## காட்டில் விளையும் பருப்பு வகைகளும் மற்றதும்:

காணம் (கொள்ளு)
கொத்தமல்லி
தட்டப்பயிறு
துவரை
நிலக்கடலை

பருத்தி: பருத்தி வகைகள்.

நாடு உப்பன் கருங்கண்ணி
லச்சிமி புளிச்சி
பாசிப்பயிறு
மின்னி
மொச்சி (மொச்சை)

நவதானியம்: [கரிசல் மானாவாரியில்]

கம்பு
குதிரைவாலி
கேப்பை (மானாவாரிக் கேப்பை).
சாமை
செஞ்சோளம்
தினை
நாத்துச்சோளம் (இருங்குச் சோளம்)
மாப்பிள்ளைமினுக்கி சோளம்
வரகு.

## வண்டி சம்பந்தப்பட்ட சொற்கள்

| | | |
|---|---|---|
| அச்சு | அச்சு திரட்டுதல் | அண்டை |
| ஆரக்கால் | ஆரம்பிடித்தல் | இருப்புச் சட்டம் |
| உள்வாய் | ஊணிக்கம்பு | கிட்டி |
| குடப்பூண் | குடம் | கொடவண்டி (குடைவண்டி) |
| கொய்யாக்கட்டை | சட்டம் | சாவி |
| தடுக்கு | தரித்துப்போடுதல் (பட்டை) | தாங்குகட்டை |
| தெப்பக்கட்டை | பட்டை | பட்டைபோடுதல் |
| பெரியதடுக்கு | பைதா | போல் |
| | | மை (மசகு) |
| முட்டுக்கட்டை | முன்தடுக்கு | மோதாக்கட்டை |
| ரெட்டைக்குடவண்டி | வண்டிக்கயிறு | வண்டிக்குச்சி |
| வண்டித்தும்பு | வாங்கு | வாங்குச்சட்டம் |
| வாரி | விரிதாச்சங்கிலி (விரிதாள் சங்கிலி) | |

## நிலம், ஏர் சம்பந்தமான சொற்கள்

| | | |
|---|---|---|
| அகணிவடம் | அத்தக்கொத்து | உழவுத்தும்பு |
| உழவுவடம் | உறை | எழுப்படித்தல் |
| கஞ்சிக்கலயம் | கடும்பட்டம் | களஞ்சியம் |
| குண்டு | குலுக்கை | கூளம் |
| கையாள் | கைவிதைப்பு | கொட்டாங்குழல் |
| கொட்டான் | கொத்தன் | கொத்து |
| கோட்டேர் | சால் | சால்குழி |
| சால்விதை | தட்டை | தன்கைமேழி |
| தாள் | நடுப்பட்டம் | நாத்து |
| நாளேர் | பட்டம் | பட்டம்போடுதல் |
| பட்டரைச்செடி | படப்பு | பதவுழவு |
| பரசு | பறவைப் பருத்தி | மதிப்பு |
| ராமப்பயிர் | ரெட்டைக்கலப்பை | லயன் கலப்பை |
| லயன்குச்சி | வலவனடி | வலவனடி மேடு |
| விதைப்பெட்டி | விப்புக்குழி | |

## காற்று வகை

உப்பங்காத்து
தென்னல் (தென்றல்)
பொசல்க்காத்து
மேகாத்து

சூராளி (சூருவளி)
பெரியமலேக்காத்து
(புயல்காற்று
வாடைக்காத்து

## நம்பிக்கைகள்

- தலேஈத்துப் பசுங்கிடாரியின் சாணியில் ஒளிவு (மின்னல்) தாக்கினுல் அது தங்கமாக மாறிவிடும்.
- பிணைசலாடிக்கொண்டிருக்கும் நல்ல பாம்புகளின் மீது கோடித்துணியைப்போட்டு அதன் விந்தின் கறைபட்ட அந்தத் துணியை எடுத்து மடியில் கட்டிக்கொண்டு போனுல் எடுத்த வழக்கெல்லாம் ஜெயமாகும்.
- அரையாப்பு நோய் வந்தவன் கழுதையோடு'சேர்ந்'தால் நோய் குணமாகும்.
- அந்தி வேளேயில் நம் வீட்டுக்கு வருகிற சம்மந்தகாரர்கள் விளக்குப் பொருத்திய பிறகேதான் போக வேண்டும். இல்லேயென்ருல் நம்ம வீட்டு ''லட்சுமி'' அவர்களோடு போய்விடுவாள்.
- இரவு நேரங்களிலும் வெள்ளிக்கிழமைகளிலும் ஒரு பொருளேக் கொடுக்க மாட்டார்கள்.
- திங்கள் கிழமை பிரயாணம் கூடாது. (திங்கள் பயணம் திரும்பாப் பயணம்).
- புதன் கிழமை ஈன்ற மாட்டை சம்மந்தகாரர்களுக்குத் தானமாகக் கொடுத்துவிடவேண்டும்.
- வெள்ளி, செவ்வாயில் 'கருத்து கருப்பு' லாந்தும்.
- இழவுக்கு வந்தவர்களே வா என்று கேட்கக்கூடாது. வந்தவர்களும் போகும்போது சொல்லிக்கொள்ளாமல் போய்விட வேண்டும். (நல்ல பிள்ளே அடையாளம் சொல்லாமல் போகிறது).

○ தட்டானைப் பிடித்து (தட்டான் என்பது பறக்கும் பூச்சி) தலையைக்கிள்ளி புதைத்து வைத்தால் பணம் முளைக்கும் என்பது சிறு குழந்தைகளின் நம்பிக்கை.

○ இளங்கொடியை (மாடு கன்று ஈன்றவுடன் போடும் நஞ்சுக்கொடி) நாய் தின்றுவிட்டால் மாட்டில் பால் இராது. இளங்கொடியை ஆலமரம் முதலிய பால்மரங்களில் கட்டி வைத்தால் மாட்டில் பால் நிறைய ஊறும்.

காகம் முதலிய பறவைகள் இளங்கொடியை தின்றுவிடாமல் இருக்க இலந்தை மரத்திலும் கட்டிவைப்பது உண்டு.

○ தலைச்சன்கள் இறந்துபோனால் சுடுகாட்டில் நம்முடைய நம்பிக்கையான ஆட்கள் கூட இருந்து பிரேதத்தைஎரிக்க வேண்டும். இல்லையென்றால் மந்திரவாதிகள் வந்து ''தொழில்'' செய்ய மண்டையோட்டை கொண்டுபோய் விடுவார்கள்.

○ பச்சைப்பாம்பின் வாலை பெண்கள் உருவி விட்டுவிட்டு குழம்பு வைத்தால் குழம்பு ருசியாக அமையும்.

○ தோல் முட்டையிட்ட கோழியை‡, ''அடித்து''விட வேண்டும்.

○ இரும்பு கையில் இருந்தால் பேய் பிசாசு கிட்டே வராது.

○ 'கைராசியான ஆளை'க் கூப்பிட்டு கோழியை அடை சேர்த்து (அடைகாக்க) வைக்கச் சொல்வார்கள்.

○ முயல், நட்டிய வேலியைத் தாண்டாது; வெட்டிய குளத்தில் தண்ணீர் குடிக்காது.

○ ஐந்தாவது பெண்குழந்தை பிறந்தால் விசேஷம். (அஞ்சாவது பொண்ணு அடுக்கெல்லாம் பொன்னு.
எட்டாவது ஆண்; வெட்டும் சேவகன் (புலி).
நாலாவது பெண்; †நடையைப் பெயர்க்கும்.

○ கோழி அடைகாக்கும் போது அதை மிதித்த சேவலை ''அடிக்க''க் கூடாது. அப்படி அடித்து கறி சமைத்து உண்டால் அதன் குஞ்சுகள் தக்காது.

---

‡ அடித்துவிடல்: கொன்று கறி சமைத்துவிடல்.

† நடை: வீட்டுவாசல் நடை.

- கர்ப்பிணிகள் மசக்கையாக இருக்கும்போது அவர்கள் விரும்பும் தின்பண்டங்களை வாங்கிக் கொடுக்கவேண்டும். இல்லையென்றால் பிறக்கும் குழந்தையின் காதில் இருந்து சீழ் வடிந்துகொண்டே இருக்கும்.

- உபயோகிக்கும் சமயத்தில் பச்சிலைகளின் பெயர்களைச் சொல்லக்கூடாது. சொன்னால் நோய் குணமாகாது.

- 'தினவு' எடுத்த சில எருமை மாடுகள் பருத்திமார்ப் படப்பில் 'உறசி'னாலே போதும் சினை தங்கிவிடும்.

- ஒருவரையுமே கடிக்காத, ஆயிரம்வருஷம் ஆயுளையுடைய நல்லபாம்பில் நாகரத்தினம் இருக்கும். அது நீளமாக இருக்காது. ஒருமுழம் அல்லது ஒரு சாண் என்று குறுகி விடும். கண் தெரியாது;வயசாகி விட்டதல்லவா? நடுச் சாமத்திலே நாகரத்தினத்தை கக்கும். அந்த வெளிச்சத் திலேதான் அது இறை தேடும். நாம் ஒருகூடை நிறைய மாட்டுச்சாணி கொண்டுபோய் அதன்மேல் போட்டு விட்டால் சாணிக்குள் நாகரத்தினம் பொதிந்துவிடும், பாம்புக்குக் கண் தெரியாது. அது கோபமாக தரையைக் கொத்திகொத்தி உயிரை விட்டுவிடும். பிறகு நாம் அதை வீட்டுக்கு எடுத்துக்கொண்டு வந்து விடலாம் லேசாக. தேன் இறுகி கல்கண்டு ஆகிறதல்லவா அது மாதரி அத னுடையவிஷம் தான் நாகரத்தினமாக ஆகி விடுகிறதாம்!

# பிழை திருத்தங்கள்

| பக்கம் | பத்தி | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 7 | 2 | 1 | உழும் சால்க்குடி | உழும்சால்க்குழி |
| 19 | 11 | 2 | சுமந்தாள் | சுமந்தால் |
| 37 | 15 | 1 | உண்டாகியிருக்கிருள் | உண்டாயிருக்கா |
| 56 | 17 | 1 | நினைத்தாதே | நினைத்தாலே |
| 57 | 7 | 1 | ஒருகை பாத்துட | ஒருகை பாத்துற |
| 60 | 8 | 1 | ஓட்டைவாவ் | ஓட்டைவாய் |
| 65 | 10 | 1 | தட்டான் கல் | தட்டாங்கல் |
| 74 | 9 | 1 | மனமில்லாதவன் | மானமில்லாதவன் |
| 75 | 7 | 1 | கழுதை பெரண்டகளமா | கழுதை பெரண்டகளம் |
| 82 | 10 | 1 | காலநிழல் | கால் நிழல் |
| 85 | 18 | 1 | ஆமா. அவருஉ | ஆம; அவரு |
| 86 | 12 | 1 | குக்கிப்போதல் | குங்கிப்போதல் |
| 88 | 8 | 1 | அசாத்ய போகமறதி | அசாத்யஞாபகமறதி |
| 91 | 16 | 1 | அம்மைநோய் காரணமாக இறந்துவிட்டது. | அம்மை நோய் இறங்கிவிட்டது. |
| 96 | 15 | 1 | கெத்துகு | கெத்துது |
| 100 | 15 | 1 | கொக்காட்ட | கொக்காட்டம் |
| 101 | 8 | 1 | இது ஆட்டினுல் | இது ஆட்டில் |
| 102 | 3 | 3 | நிரக்கரிஞ்சில்ல... | நிலையநிஞ்சில்லெ |
| 102 | 9 | 1-2 | ''கெட்டுப்படாத ஆளு'' | ''கொட்டுப் படாத ஆளு'' |
| 123 | 1 | 2 | தெளித்துமுழுகுவதும் | தெளித்துமெழுகு வதும் |

| பக்கம் | பத்தி | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 129 | 6 | 2 | அட்சரம் | அச்சாரம் |
| 133 | 15 | 1-2 | ஒண்ணே எண்ண | ஒன்னே என்ன |
| 155 | 8 | 1 | மாவ்வுதல் | தாவுதல் |
| 160 | 9 | 1 | துருள: | துருசு: |
| 163 | 6 | 1 | 'துவா' | துலா |
| 187 | 9 | 2 | ஒட்டவில்லே | ஓட்டவில்லே |
| 188 | 15 | 2 | அசுனம் | சுசுனம் |
| 190 | 12 | 1 | பரிசமில்வாத | பரிசமில்லாத |
| 205 | 12 | 1 | உயில்தொந்தம் | உயிர்த்தொந்தம் |
| 206 | 10 | 1 | இலக்கை | உலக்கை |
| 228 | 8 | 5 | அடிதடிக்கம்புக்குத் தான் | அது தடிக்கம்புக் குத்தான் |
| 229 | 8 | 1-2 | முதல்வரியில், மாடனுக்கு என்கிற வார்த்தையும் இரண்டாவது வரியும் தள்ளுபடி | |
| ஷை | 18 | 1 | 'உருமாத்து' | ''உடுமாத்து |
| 236 | 13 | 1 | முழங்குருன்: | முழுங்குருன்: |
| 280 | 5 | 2 | கொள்ளநிற்பவன் | கொள்ளநினைப்பவன் |
| 284 | 3 | 1 | இந்தக் கட்டிடத்தின் | இந்தக் கட்டத்தின் |
| 295 | 5 | 1 | நாவில் | நாலில் |